

1876 2001

# பாதுகாவலன்
# 125வது ஆண்டுமலர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1/800/10031

# பாதுகாவலன்
# 125ஆவது ஆண்டு மலர்

**1876** **2001**

பாதுகாவலன் பணிமனை
புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
யாழ்ப்பாணம்
04.08.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60.161

# பாதுகாவலன் 125 ஆண்டுகள் மலரில் மலர்பவை


1. திருத்தந்தை உம் அருளப்பர் சின்னப்பரின் ஆசி
2. பாப்பரசரின் பிரதிநிதியின் ஆசிச்செய்தி
3. இதழாசிரியரின் இதயத்திலிருந்து
4. மண்ணோடும் மக்களோடும் – 125 ஆண்டுகள் பாதுகாவலன்
(பாதுகாவலன் ஆசிரியர் – அருள்திரு. ஞபன் மரியாம்பிள்ளை)
5. மலர்க்குழு
6. நிருமலன் அருளோடு – நீடூழி வாழ்க (அமரர். யாழ் ஜெயம்)
7. ஆசிச்செய்திகள்
8. யாழ்ப்பாணத்தின் முதல் கத்தோலிக்க அச்சகமும் . . . (அருள்திரு. S.V.B. மங்களராஜா)
9. ஆயர் எமிலியானுஸ் ஆண்டகையும் பாதுகாவலன் வளர்ச்சியும் (அருள்திரு. C.J. அன்ரனிபாலா)
10. பாதுகாவலனின் பின்நவீனத்துவத்தின் முன் எதிரொலிகள் (அருள்திரு. ஜெயசீலன்)
11. தீர்வு ஒரு சமாதானமன்று (அருள்திரு. S. M. செல்வரட்ணம்)
12. பாதுகாவலன் நீ நீடு வாழி (அருள்திரு. N. மரியசேவியர்)
13. அச்சக ஆசிரியப் பணியில் சில வருடங்கள் (அருள்திரு. அன்ரன் மத்தாயஸ்)
14. காவலன் நீ வாழி (நவாலியூர் நாயகி)
15. பொதுநிலையினருடைய பார்வையில் (A. S. அகஸ்ரின்)
16. திருச்சபைச் சட்டமும் பாதுகாவலனின் பங்களிப்பும் (அருள்திரு. T. J. கிருபாகரன்)
17. பூமியில் எங்கும் பொங்கி நிற்கும் (G. அரியமலர்)
18. சத்திய வசனங்களை நித்திய வாழ்வுக்கு (M. தார்சீசியஸ்)
19. நான் அறிந்த காவலன் ஆசிரியர்கள் (S. M. J)
20. காவலனே வாழ்க வளர்க (A. சான் பெனற்)
21. பாதுகாவலன் ஆசிரியர்கள் (C. C. கொலிந்திரன்)
22. குருசோ பிறதர் (அருள்திரு. நீக்கிலஸ் o.m.i)
23. காவலன் களஞ்சியத்தில் கண்டவை சில (S. யேசுதாஸ்)
24. மறையாசிரியர்களின் பார்வையில் பாதுகாவலன்
(E. M. ஜெயசீலன், M. ஜேசுதாசன், S. A. நாதர், C.S. பங்கிராஸ்)
25. என் இதயத்தைக் கவர்ந்தவளே (அருட்சகோதரி நெவிஸ் லடிஸ்லாஸ் [H.F.C])
26. 125 ஆண்டில் வீறு நடைபோடும் ஓர் ஏடு (சாமுவேல் பெனடிக்ற்)
27. நான் ஆடிய தொட்டில் (புலவர் மணி அமுது)
28. சமூக அரசியல் பொருளாதாரத் தளங்களில் (அருள்திரு. C. G. ஜெயக்குமார்)
29. பாதிப்புற்ற வேளையிலும் துணிந்து பணி செய்த பாதுகாவலன்
(மேரி வுளோறன்ஸ் சூசைதாஸ்)
30. பாதுகாவல்னின் பணிபற்றிய பல்நோக்கு – நேர்காணல்
31. பாதுகாலனை வாழ்த்தியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் காவலாம் சூசை தந்தையின்
மங்களங்கள் எங்கும் சொல்லி
இங்கு பாடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# His Holiness John Paul II

cordially imparts his
Apostolic Blessing to the

## Rev. Fr. Director
## and his Collaborators

on the 125th Anniversary of the Pathukavalan
of St. Joseph's Catholic Press,
1876 - February 19 - 2001, Jaffna.

*Ex Aedibus Vaticanis die, 5-1-2001*

+ Oscar Rizzato

*Archiepiscopus Eleemosynarius Apostolicus*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM THE APOSTOLIC NUNCIO

The Tamil Catholic Messenger Weekly newspaper "*Paathukavalan*" celebrated on the 19th of February, at the beginning of the third millennium and just after the close of the Great Jubilee, its 125th Year Anniversary. Therefore, it is fitting to offer a hymn of praise and thanksgiving to the Lord.

The enthusiasm which the Great Jubilee brought to the Church can only spur us to set out afresh with humble courage on a new stage of our journey in service to the Gospel. The ability to proclaim the Good News effectively depends above all on intense prayer, on listening to God and on courageous fidelity to Christ, the divine Communicator of salvation.

"Communicators and Communication policy makers must serve the real needs and interests both of individuals and of groups, at all levels and of all kinds" (Ethics in Communications-Pont. Council for Social Communications).

I am happy to note that the "*Paathukavalan*" is spiritually enriching many Catholics religious life since it carries news and information about religious events, ideas and personalities thus serving as a vehicle for evangelization and catechesis. Each week it provides inspiration, encouragement and opportunities for worship to persons confined to their homes or to institutions.

Continue to write interesting pages rich with noble memories! "In your speaking and writing be guided by love, especially when the truth is hard to bear. For this invoke God's Holy Spirit upon you" (Jubilee of Journalists).

"Now we must look ahead, we must 'put out into the deep' trusting in Christ's words; *Duc in altum!"* (Apostolic Letter Novo *millennio ineunte* ). Before us lies a future not without shadows. But one in which Christian hope sees promises that do not disappoint. We must not let difficulties, limited resources and our own limitations discourage us. We must not be upset by the ever faster change of contexts, structures, methods and ways of life.

"The Church and the media must walk together in their services to the human family I ask the Lord to grant you with the conviction that it is possible to be both authentic Christians and excellent journalists. This will happen more and more if you can keep your gaze fixed on Jesus Christ. 'the faithful witness.... Who is and who was and who is to come" (RE, 1:5,8)May you find the strength to fulfill your service of informing and forming our contemporaries, by helping them to open their hearts on a global scale! It must be your concern to make yourselves witnesses to the truth, so that the human person will always be respected. The Church is counting on you to know how to retransmit to the world message of hope that comes from Christ" (Jubilee of Journalist)

Before I conclude I thank also who have collaborated in various ways during these 125 years in the daily work of "Paathukavalan", with a special thought and prayer for all who have entered eternal life in this period.

I entrust you, work and your plans to the motherly protection of Mary, Star of Evangelization. I accompany my wishes with a Blessing, which I affectionately extend to the hundreds of readers of "Paathukavaln" in Sri Lanka and around the world.

**Colombo.**

**Thomas Yeh Sheng-Nan**
**Apostolic Nuncio**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் யாழ். கத்தோலிக்க திருச்சபையின் இதயமாக விளங்குகின்றது. யாழ். கத்தோலிக்க திருச்சபையை மட்டுமல்லாது இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் அனைவரினதும் இறைவிசுவாசத்தை ஆழப்படுத்தி ஆன்மீகப் பயணமதில் ஒன்றேகால் நூற்றாண்டுகளைக் கடந்து வெற்றிவாகை சூடி விழா எடுத்து நிற்கின்றது. இவ்விழாவினைச் சிறப்புற கொண்டாட இறைவன் அருள்கூர்ந்த இவ் அரிய சந்தர்ப்பத்திற்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இம்மலரினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

திருச்சபையின் பணிகளுக்கு ஊடகமாக விளங்கும் பாதுகாவலன் யாழ். திருச்சபையின் விசுவாச வாழ்விற்கு ஒரு அடிக்கல்லாக விளங்குகின்றான். செயல்திறனும், இறைவிசுவாசத்தை ஆழப்படுத்தும் சேவை மனப்பாங்கும் கொண்ட ஆயர்கள், குருக்கள், பொதுநிலையினரதும் அயராத முயற்சியினால் அடித்தளமிடப்பட்ட பாதுகாவலன் இம்மண்ணிற்கு ஆற்றிவரும் பணிகள் அளப்பரியதாயினும் இதுவரைகாலமும் நூல் வடிவம் பெறாமையினால் இம் மிலேனிய நூற்றாண்டிலாவது இவர்களின் ஈடிணையற்ற அளப்பரிய பணி வாழ்வினை உலகறியச் செய்யவேண்டுமென்ற பேராவலினால் இம்மலரினை உருவாக்கி உள்ளோம்.

நாம் இம்மலரினை வடிவமைப்புச்செய்வதற்கு நூற்றாண்டு காலமாகப் புரிந்த சகல அம்சங்களையும் பூரணமாக வெளியிடுவதற்கு இடப்பெயர்வின் விளைவால் உண்டாகிய பாரிய அழிவுகளால் வரலாற்றுப் பதிவுகளை பெறுவதில் பல அசௌகரியங்களை ஏற்படுத்தியபோதும் இயன்றளவு தகவல்களைப் பெறுவதற்கு 1876லிருந்து இற்றைவரை வெளியான பாதுகாவலன் இதழ்கள் ஊடாகவும், பல அறிஞர்கள் எழுதிய வரலாற்று நூல்கள் ஊடாகவும், கேட்டறிந்த உண்மைகள் வழியாகவும் பெற்று மலராக்கி புனிதவளனுக்கு அர்ப்பணம் செய்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இம்மலரானது 2001 மாசிமாதம் 19ந்திகதி வெளியிடப்படவேண்டியதொன்றாக இருந்த போதும் பல தடைகள் பிரச்சினைகள் மத்தியிலும் இன்று (2001 ஆவணி 4ந் திகதி) இதனை வெளியிட எமக்குக் கிடைத்த சந்தர்ப்பம் இறைவனது திருவருளே ஆகும்.

125 ஆண்டுகளாக பாதுகாவலன் பத்திரிகை வாயிலாக எம் யாழ். திருச்சபையின் விசுவாசத்தைப் பாதுகாக்கும் ஒரு தொடர்புசாதனமாக விளங்கியதுமல்லாமல் அதனால் பெற்ற அளப்பரிய அன்புப்பணிகளை நினைவுகூர்வதுடன் எதிர்கால சந்ததியினரும் அவற்றை அறிந்து பழம் பெருமைகளைப் பேணுவதில் ஒரு கருவியாக ஆர்வமுடன் தொடர்ந்தும் முன்னின்று உழைக்க உங்கள் கரங்களில் அன்பளிப்புச் செய்வதில் அகமகிழ்கின்றோம்.

இதனை பாதுகாவலன் வாசகர்கள் ஆர்வலர்கள் அனைவரும் படித்துப் பயன் பெறுமாறு அழைத்து நிற்பதுடன், இவ் ஆய்வுத் தொகுப்பானது ஓர் முழுமையான ஆய்வென நாம் கொள்ள முடியாதென்பது, வரலாற்றில் நாம் சந்தித்த மாபெரும் இடம்பெயர்வு இதற்கான முழுமையான சான்றாதாரங்களைப் பெறுவதில் அதிகமான இன்னல்களை எதிர்நோக்கியபோதும் இயன்றவரை எம்மால் பெறப்பட்ட தகவல்கள் சான்றாதாரங்களை ஒன்றுசேர்த்துத் தொகுத்து நூல் வடிவமாக்கியுள்ளோம். எனவே இவற்றில் உள்ள நிறைகளுடன் குறைகளையும் ஆதரவாளர்களாகிய நீங்கள் கண்டறிந்து எமக்கு தெரிவிக்கும் பொருட்டு எதிர்காலத்தில் மலரவிருக்கும் மலர்களில் இவற்றின் குறைகளைப் பூர்த்திசெய்து நிறைவுசெய்ய வாய்ப்புண்டு என எதிர்பார்க்கின்றோம். ஆகவே உங்கள் ஆதரவும், ஆலோசனைகளும் பாதுகாவலன் வளர்ச்சிக்கு என்றும் அவசியமானதே என்பதை ஆணித்தரமாகக் கூறி இந்நந்நாளில் இம்மலரினை உங்களுக்கு உவந்தளிப்பதே எம் மகிழ்ச்சியும் இறையருளுமாகும்.

நன்றி

செல்வி மரியா அருளானந்தம்
இதழாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணோடும் மக்களோடும் - 125 ஆண்டுகள் பாதுகாவலன்

## பாதுகாவலன் ஆசிரியரின் ஆசிச் செய்தி

பாதுகாவலன் பத்திரிகையின் 125 ஆண்டு நிறைவினில் மனமகிழ்வோடு என் எண்ணக்கருக்கள் சிலவற்றை உங்களோடு பகிர்ந்துகொள்ள அனுமதியுங்கள்.

பாதுகாவலன் பத்திரிகையின் எழுத்துப் பணியோடு மிக நீண்டகாலம் இறுகப் பிணைக்கப்பட்ட நான், இப் பத்திரிகை 125 ஆண்டுகளைக் கொண்டாடும் வேளையில் அதன் ஆசிரியராக இருக்கும் பாக்கியம் இறைவன் அருளிய ஒரு பெரும் கொடையென்றே எண்ணுகின்றேன்.

நீண்டகால சரித்திரத்தையும் பாரம்பரியத்தையும் கொண்ட இப் பத்திரிகை பல சரித்திர மைல் கற்களைத் தாண்டிக் கடந்து வந்திருக்கிறது. ஆரம்பகால சமயப் போராட்டங்கள் – இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடாக பரிணமித்தபோது பத்திரிகை என்ற ரீதியில் எதிர்நோக்கிய சிக்கல்கள் – மண்ணோடும் மக்களோடும் மிக நெருங்கி ஒட்டி உறவாடியதால் அவர்களின் போர்க்கால அனுபவங்கள், பொருளாதாரத் தடைகள், இடம்பெயர்வுகள், இழப்புக்கள் என்ற அன்றாட துன்ப துயரங்களில் பங்குகொண்ட நினைவுகள் – இவற்றின் மத்தியில் 125 ஆண்டுகள் வேகமாக ஓடியே போய்விட்டன.

1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாதுகாவலன் பத்திரிகை தவிர்க்கப்பட முடியாத காரணங்களால் நிறுத்தப்பட்ட அனுபவங்கள் பல. 87–88ஆம் ஆண்டுகளில் இந்திய இராணுவ நடவடிக்கையின் போதும் 90–91ஆம் ஆண்டுகளில் கோட்டை அடிபாட்டின் போதும் 95–96ஆம் ஆண்டுகளில் யாழ். நகரின் வரலாறு காணாத பாரிய இடம்பெயர்வின் போதும் 2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆனையிறவு தாக்குதலின் பின்னருமாக நான்கு தடவைகள் பாதுகாவலன் நிறுத்தப்பட்டது.

பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை, தபால்த் தடை என்பவற்றால் பாதுகாவலன் துரிதமாகச் செயற்படமுடியாத கட்டங்கள் தோன்றின. வாரப் பத்திரிகை மாதமிரு பத்திரிகையாகவும், மாதப் பத்திரிகையாகவும் மாறவேண்டிய துர்ப்பாக்கியநிலை கூட பல தடவைகளில் தவிர்க்கப்பட முடியாததாயிருந்தது.

இக் காரணங்களால் இலங்கை முழுவதற்குமான தன் பணியினை முழுமையாகச் செய்ய முடியாமல் பாதுகாவலன் திணறிய போது அது பாதுகாத்து வந்த பல இடங்களை அம் மறை மாவட்டங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைகள் பறித்துக் கொண்டன. தமிழ் கத்தோலிக்க பத்திரிகைகள் பலவற்றின் வரவினைப் பெருமையோடு ஏற்றுக்கொண்ட பாதுகாவலன் இன்னும் இவ்விடங்களில் தனக்கெனச் சிறப்பான ஓர் இடத்தினை வைத்திருப்பது மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மையாகும்.

வன்னிப் பிரதேசத்திலுள்ள கிளி–முல்லை மறைக்கோட்டத் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட போது அப் பிரதேசங்களில் பாதுகாவலன் தன் பணியினை ஆற்றமுடியாமல் **போனது** வருத்தத்திற்குரியது.

1989ஆம் ஆண்டு 10ஆயிரம் பிரதிகள் விற்பனை செய்யப்பட்ட பாதுகாவலன் இன்றைய மண்ணினதும் மக்களதும் நிலையினால் விற்பனையில் ஒரு பரிதாப நிலையினை அடைந்துள்ளது. அடிக்கடி நிகழ்ந்த யுத்த அனர்த்தங்களும் இடம்பெயர்வுகளும் பாதுகாவலன் பத்திரிகையின் விற்பனை எண்ணிக்கையை பெரிதும் பாதித்தன.

பாதுகாவலனின் விற்பனையால் பெரும் பணம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தையல்ல, பெரும்பணி செய்யவேண்டும் என்ற நோக்கையே எம் மனதுகளில் ஆழமாகப் புதைத்து வைத்தோம்.

இப் பணிக்கு பெரிதும் துணைநிற்க வேண்டியவர்கள் பங்குத் தந்தையர்களும் நிறுவனக் குருக்களுமே என்று எமது முதலாவது ஆசிரியத் தலையங்கத்திலேயே தெளிவாகக் குறிப்பிட்டோம். இந்தவகையில் இப் பணியில் எமக்கு தோளோடு தோள் நின்ற குரு நெஞ்சங்களை நன்றியோடு நினைவுகூர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன் பணியினை பல வழிகளிலும் சிறப்பிக்கவும் முன்னெடுக்கவும் பல முயற்சிகளை மேற்கொண்டோம்.

ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் பாதுகாவலன் வாசகர்கள் அபிமானிகளுக்கும் பாதுகாவலன் விற்பனையை விரிவுபடுத்தினோம். இப் பணியினை இன்னும் விரிவாக்கவுள்ளோம்.

பங்குகள்தோறும் பாதுகாவலன் பத்திரிகையாளர்களை உருவாக்கி அவர்களுக்கு பயிற்சிகொடுத்து அவர்கள் வழியாக பாதுகாவலன் வளர ஆவன செய்தோம். கத்தோலிக்க செய்திகளையும் ஞாயிறு சிந்தனைகளையும் தவக்கால சிந்தனைகளையும் பாதுகாவலனின் ஒரு பணியாகவே தினசரிப் பத்திரிகைகளில் வெளிவர இவர்கள் வழியாக ஆவன செய்தோம். பல பங்குகளில் இவர்களின் துணையோடு பாதுகாவலன் வாசகர் வட்டங்களை அமைத்தோம்.

எந்த பிரதியுபகாரமும் எதிர்பாராமல் எம்மோடு சேர்ந்து உழைத்த பாதுகாவலன் பத்திரிகையாளர்கள் அனைவரும் என்றும் நன்றிக்குரியவர்கள். பாதுகாவலன் 125ஆவது ஆண்டு மலரின் சிறப்பிற்கும் இவர்கள் பங்களிப்புச் செய்துள்ளார்கள்.

யாழ். நகரில் அச்சிட்டு வெளியிடப்படும் பத்திரிகைகளில் எதிரீட்டுப் பதிவு அச்சு முறையை (Off set) முதன்முதலாக பாதுகாவலனுக்கு அறிமுகம் செய்து பாரிய நிதிப் பழுவின் மத்தியிலும் அதன் தரத்தினை பேண முற்பட்டோம்.

எதிரீட்டுப் பதிவு அச்சு முறையில் வசதிகளும், வாய்ப்புகளும் இருந்தபோதும் அதற்குத் தேவையான பிளேற்றுகள், இரசாயனத் திரவங்கள் மற்றும் பொருட்கள் என்பவற்றை கொழும்பிலிருந்தே பெறவேண்டியிருப்பதால் வேறு பல சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

ஒரு பத்திரிகை அது கொண்டிருக்கும் செய்திகளைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றது. 1997ஆம் ஆண்டு இப்பத்திரிகையைப் பொறுப்பேற்ற போது சமயத்தையும் சமய நிகழ்வுகளையும் சுற்றிவரும் செய்திகள் இப்பத்திரிகையில் பெருவரவேற்பை பெற்றுக் கொள்வதில்லை என்பதை கருத்தில்கொண்டு பத்திரிகையில் இரு மாற்றங்களை மேற்கொள்ள முயன்றோம்.

மண்ணிற்கும் மக்களுக்கும் புறம்பே ஒரு பத்திரிகை இருக்க முடியாது என்பதால் பத்திரிகையின் முதல் இறுதிப் பக்கங்களில் சமய செய்திகளைக் குறைத்து தமிழ் விடுதலைப் பயணத்தோடும் மனித உரிமைகளோடும் தொடர்புடைய செய்திகளுக்கு முன்னுரிமை கொடுத்தோம்.

அருமையான செய்திகள் இருந்தும் அழகான வடிவமைப்பு இல்லாவிட்டால் பத்திரிகை செய்திகள் எடுபடாமலேயே போய்விடலாம் என்பதனையும் கருத்திற்கொண்டு பத்திரிகை வடிவமைப்பு முறைகளுக்கு ஏற்ப முதல் இறுதிப் பக்கங்களை அமைக்கத் தொடங்கினோம்.

முன் எப்போதும் இல்லாத வகையில் பத்திரிகையின் தரத்தினையும் வடிவினையும் வளத்தினையும் அதிகரிக்க பெரிதும் முயன்றோம். விலை ஏற்றத்தின் மத்தியிலும் தடைகளின் நடுவிலும் பணச் செலவினைப் பாராது பத்திரிகைப் பணிக்கு முன்னுரிமை கொடுத்தோம்.

இக்காலப் பத்திரிகைகளை ஆய்வு செய்வோர் இவற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்வர் என்றே நம்புகின்றோம்.

இவ்வாறு நாம் மேற்கொண்ட மாற்றங்களே பாதுகாவலன் பத்திரிகை 2000 ஆண்டுக்கான சிறந்த வடிவமைப்புக் கொண்ட தமிழ் பத்திரிகைக்குரிய விருதினைப் பெற்றுக்கொள்ள வழிவகுத்தது எனலாம்.

பாதுகாவலனின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் என்றும் உழைக்கும் புனித வளனார் கத்தோலிக்க அச்சகப் பணியாளர் வாசக அன்பர்கள் பத்திரிகையாளர்கள் அபிமானிகள் அனைவரும் இணையுங்கள், இன்னும் சாதிக்க வேண்டியவை பல உண்டு. வாழ்த்துக்கள்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
பாதுகாவலன் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 125ஆவது ஆண்டு மலர்க்குழு

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

**ஆசிரியர் பாதுகாவலன்**

திரு. கொன்றாட் கொலிந்திரன்

திரு. சூசைப்பிள்ளை யேசுதாஸ்

திரு. யோசவ் கீதபொன்கலன்

செல்வி மரிய் கொன்செஸ்ரா அருளானந்தம்

செல்வி தவம் குருசுமுத்து

செல்வி மேரி வுளோறன்ஸ் சூசைதாஸ்

செல்வி லூசியா சூசைப்பிள்ளை

திருமதி இமாக்குலேற் ராஜ்குமார்

செல்வி R. ஜெயராணி

திரு. கிறிஸ்ரியன் செல்மர் எமில்

**ஆலோசகர் குழு**

திருமதி மேரி கொன்செப்ரா குணேந்திரன்

திரு. அன்ரனி நீக்கிலஸ்

திரு. மார்ட்டின் டக்ளஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிருமலன் அருளோடு – நீடூழி வாழ்க

காற்றிலே நறுமணம் கலந்துற்ற வாறாய்க்
காவலா நின்புகழ் கமழ்ந்து மீதூர
நூற்றொடும் இருபத்து ஐந்து நீடாண்டு
நுகர்ந்திட நிரந்தரம் மகிழ்ந்துநாம் வாழ
ஊற்றெனத் திருமறை சாற்றிடும் நெறிகள்
உள்ளம் மலர்ந்திட உயர்ந்தநற் சேவை
ஆற்றினை அரும்பணி போற்றியே என்றும்
அடியொற்றி ஆன்மீக வெற்றிகாண் போமே

மலர்கொஞ்சு செடிதனைத் தென்றல் தாலாட்ட
மதுவுண்டு வண்டுகள் களிகொண்ட தென்னப்
பலவண்ண நீதிகள் பொழிகின்ற கீதம்
பாடிநாம் பருகுவோம் பரவசம் பெறுவோம்
நிலையின்றி மாய்ந்திடும் வாழ்க்கை பேரின்பம்
நீங்கிடா துயர்பதம் ஓங்கியே வாழப்
புலனைந்தும் வென்றிடும் போதமே அருள்வாய்
பூதலம் என்றுமுன் புண்ணியம் வாழ்த்தும்

அன்பெனும் முதல்வனை அன்பிலே காண
அருளறம் இருதயக் கருணையின் தாகம்
இன்பமே அன்றிவே றின்பமே இல்லை
என்றுநாம் என்றுமே உணர்ந்துயர் வடையும்
துன்பமே தொடர்கிலாத் தூய்மையின் நெறியைத்
துய்த்துநல் அறிவுரைக் கடல்தனில் மூழ்கப்
பொன்னொளிப் புதையலைக் கண்ணுறத் தருவாய்
புனிதமும் மனிதமும் நின்முகப் படிவம்

புத்துயிர் ஊட்டிடும் பொங்குநீர் அருவி
பொன்னினும் மணியினும் பெரியதோர் புதையல்
சத்தியப் போர்வையாய்ப் புனைந்தபொன் ஆடை
சாந்தியும் அமைதியும் வனைந்தசெங் கலசம்
எத்துணை எத்துணை ஒப்புரைத் தாலும்
ஈடிணை அற்றதோர் ஏடெனத் திகழ்வாய்
முத்தியின் வாசலே தழுவிடும் ஆவல்
மூண்டெழச் செய்யுமுன் தூண்டுதல் மறவோம்

முத்தமிழ்ப் புன்னகை சிந்திடும் மலர்கள்
முழுநிலாச் சாறெனக் கவிதைகட் டுரைகள்
சித்தம் குளிர்ந்திடும் சிந்தனைக் குவியல்
சிறுவரும் முதுமையின் செல்வரும் மகிழ
வித்தகம் மிளிர்ந்திடும் விதவிதப் படையல்
விருந்தென மருந்தென ஞானஞ் சொரிந்தே
நித்தம் புரந்திடும் பாதுகா வலனே
நிருமலன் அருளோடு நீடூழி வாழ்க

**அமரர் யாழ் - ஜெயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மண்ணின் கடின அனுபவங்கள் மத்தியில் பாதுகாவலன் 125 ஆண்டுகள் வெளிவந்தது சாதனையே

## யாழ். ஆயரின் ஆசிச் செய்தி

நீண்டகால சரித்திரத்தையும் பாரம்பரியத்தையும் கொண்ட பாது காவலன் பத்திரிகையின் 125வது ஆண்டு நிறைவிலே அதனை வாழ்த்துவது உண்மையிலே பேருவகையூட்டும் ஒரு செயலாகும். இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடாக ஆரம்பிக்கப்பட்டு இலங்கை வாழ் தமிழ் கத்தோலிக்க மக்கள் அனைவர் மத்தியிலும் பாதுகாவலன் ஆற்றிய பணியை எவருமே மறுப்பதற்கில்லை. இலங்கையின் பத்திரிகை வரலாற்றிலேயே கத் தோலிக்கத்தின் முதன்மைப் பத்திரிகையாக பரிணமித்து இலங்கையிலே இன்றுபோல் பத்திரிகைகள் எதுவும் இல்லாத காலம் தொடக்கம் இன்றுவரை அளப்பரிய பணியாற்றியுள்ளது.

பாதுகாவலன் பத்திரிகை பலரின் ஆளுமையிலும் அர்ப்பணிப்பிலும் வளர்ந்து வந்த ஒரு பத்திரிகையாகும். இதன் ஆரம்பகால வளர்ச்சிக்கு ஒரு உறுதியான அடித்தளமிட்டு வித்திட்டவர்கள் என்றும் போற்றுதற்குரியவர்களே. மேதகு பொன்ஜின் ஆண்டகையும் அவரைத் தொடர்ந்துவந்த யூலன் ஆண்டகையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியவர்கள். சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற மற்றைய ஆரம்பகால குருக்களையும் நாம் என்றும் மறப்பதற்கில்லை. இவர்கள் என்றும் நன்றிற்குரியவர்களே.

சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பார்க்கின்றபோது பல பிரச்சினைகளை எதிர்கொண்டும் துன்ப துயரங்களுக்கு முகம் கொடுத்தும் பல சவால்களை சந்தித்தும் உறுதியோடும் உரத்தோடும் பரந்து வளர்ந்துள்ளது பாதுகா வலன் பத்திரிகை. இலங்கை முழுவதிலும் தமிழ் கத்தோலிக்க விசுவாசத்தை வளர்த்தெடுப்பதிலும் கட்டிக் காப்பதிலும் உறுதியான பணிபுரிந்துள்ளது பாது காவலன் பத்திரிகை. ஆரம்பகால சமயப் பிரச்சினைகளையும் பத்திரிகையாக உருவாகும்போது ஏற்பட்ட சவால்களையும் மக்களது அன்றாட அனுபவங்க ளையும் தன்னுடையதாக்கி ஏற்றுக்கொண்டும் தாங்கிக்கொண்டும் வளர்ந்து வந்துள்ளது பாதுகாவலன் பத்திரிகை.

எமது மண்ணின் அண்மைக்கால துன்ப, துயர அனுபவங்களின் நடுவில் பல தடவைகள் பத்திரிகை நிறுத்தப்பட்டது துரதிர்ஷ்டவசமானது. இலங்கை யின் பல மறைமாவட்டங்களிலும் புதிய பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டதாலும் கடிதப் போக்குவரத்தில் ஏற்பட்ட சிக்கல்களாலும் யாழ். மறைமாவட் டத்துக்கு வெளியே இதன் விற்பனையில் பெருவீழ்ச்சி ஏற்பட்டது. தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரினாலும் அதன் தாக்கங்களாலும் வாரா வார வெளியீடு தடைப்பட்டுப் போனதும் அனைவரும் அறிந்ததே. அடிக்கடி பல தடவைகளில் மக்கள் இடம்பெயர்ந்ததால் ஏற்பட்ட குழப்பங்களால் பாதுகாவலனை விற்க முடியாத நிலை தோன்றியது. இவை எல்லாவற்றின் மத்தியிலும் பாதுகாவலன் தன் பணியை தொடர்ந்தாற்ற வேண்டும் என்பதில் நாம் கண்ணும் கருத்துமாக இருந்தோம். இதனால் இன்னும் பாதுகாவலன் வெளிவந்துகொண்டு இருக்கின்றது.

எமது மண்ணின் பல்வேறுபட்ட கடின அனுபவங்கள் மத்தியில் பாதுகாவலன் 125 ஆண்டுகள் வெளிவந்தது ஒரு பெரும் சாதனையே. இதனை யாரும் மறுப்பதற்கில்லை. தொடர்ந்தும் பாதுகாவலன் வீறுநடை போட ஆசிக்கிறோம். வாழ்த்துகிறோம்.

அண்மையில் பாதுகாவலன் பரிசும் பாராட்டுதலும் பெற்றது மகிழ்ச்சிக்குரியது. பாதுகாவலன் தன் பணியை பல துன்ப துயர அனுபவங்கள் மத்தியிலும் சிறப்பாக ஆற்ற ஏதோவொரு வகையில் முயன்று கொண்டிருக்கிறது என்பதை இது காட்டுகிறது.

125 ஆண்டு நிறைவு காணுகின்ற வேளையில் கடந்த காலங்களில் அர்ப்பணிப்போடு பணியாற்றிய அனைவரையும் நன்றியோடு நினைவு கூருகிறோம். இனியும் அதன் பணி சிறப்புற நடைபெற ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டியது பங்குத்தந்தையர்களே என்பதை இவ்வேளையில் மிகவும் உறுதியாகக் கூறி இதன் வளர்ச்சியில் உங்கள் முழுமையான ஒத்துழைப்பை நல்க வேண்டுகிறோம்.

பாதுகாவலனின் பணி சிறக்க எம் வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
யாழ். ஆயர்

ஆயர் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் தொடர்ந்து வெளிவந்தது பெருமைக்குரிய விடயமே

## இளைப்பாறிய யாழ். ஆயரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் பழம்பெரும் வார ஏடாகிய பாதுகாவலன் பத்திரிகையின் 125 ஆண்டு நிறைவில் அதன் மகத்தான பணியினை பாராட்டி வாழ்த்துவது உண்மையில் பெரும் மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

125 ஆண்டுகளாக பாதுகாவலன் தொடர்ந்து வெளிவருவது பத்திரிகை உலகில் அரிய ஒரு சாதனையாகும்.

நான் குருவானவராக இருந்தபோது 60களின் ஆரம்பத்தில் சிறிதுகாலம் பாதுகாவலன் ஆசிரியராக பணியாற்றினேன். அதையிட்டு பெருமைப்படுகின்றேன்.

எமது பிரதேசத்தில் பல வருடங்களாக இடம்பெற்றுவரும் யுத்தத்தின் மத்தியிலும் பாதிப்புக்கள், தடங்கல்கள் இடப்பெயர்வுகள் அனைத்தின் நடுவிலும் பாதுகாவலன் தொடர்ந்து வெளியிடப்பட்டது உண்மையிலே பெருமைக்குரிய விடயமாகும். இதற்கு முற்றுமுழுதாக துணைநின்றது இறைவனின் வல்லமையே என நன்றியுடன் நாம் நினைவு கூரவேண்டும்.

அச்சக நிறுவனத்தின் பாதுகாவலர் புனித வளனாரின் வேண்டுதலால் இப்பணி தொடர்ந்தும் நடைபெற வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவிக்கின்றேன்.

ஆரம்ப முதல் இன்றுவரை பாதுகாவலன் வளர்ச்சிக்கு உழைத்த அனைவரையும் இவ் வேளையில் பாராட்டுகின்றேன். வாழ்த்துகின்றேன் இறைஆசி வேண்டுகின்றேன்.

மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை
இளைப்பாறிய யாழ். ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் போர் அவலங்களை உரத்துப்பேசும் வடபுலத்து திருச்சபையின் குரல் பாதுகாவலன்

## திருமலை-மட்டுநகர் ஆயரின் ஆசிச் செய்தி

இலங்கையின் மூத்த தமிழ்ப் பத்திரிகைகளில் ஒன்றான பாதுகாவலன் 125வது ஆண்டு நிறைவைக் காண்பது மகிழ்ச்சியாகவும் பெருமிதமாகவும் இருக்கின்றது.

இலங்கையில் முதலாவதும் ஒரேயொரு கத்தோலிக்க வாரப் பத்திரிகையுமான பாது காவலன் யாழ். மறைமாவட்டத் திருச்சபையின் வெளியீடானாலும் இலங்கைக் கத்தோலிக்க தமிழ் மக்களது விசுவாசத்தின் பாதுகாவலனாக நின்று மறையறிவையும் விசுவாச வாழ்வில் உறுதியையும் ஊட்டி, திருச்பையின் படிப்பினைகளையும், போதனைகளையும் தெளிவுபடுத்தி, மக்கள் தம் ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளதை தமிழ் கிறிஸ்தவ உலகம் நன்றியுடன் நினைவு கூருகின்றது.

பாதுகாவலன் 1876ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 19ந் திகதி முதல் *கத்தோலிக்க பாதுகாவலன்* என்ற பெயரில் வெளிவரத் தொடங்கியது. பின்பு *சத்தியவேத பாதுகாவலன்* என்ற பெயரில் வெளிவந்து தற்போது *பாதுகாவலன்* என்ற பெயரில் வெளிவருகின்றது.

பெயரில் மாற்றங்களைப் பெற்றது போலவே அமைப்பு, உள்ளடக்கம், மொழிநடை போன்றவற்றிலும் பாதுகாவலன் காலத்துக்கேற்ற மாற்றங்களைப் பெற்று வளர்ந்து வந்தி ருப்பதை அறிந்துகொள்ளலாம். குறிப்பாகச் சொல்லப்போனால் இலங்கையில் ஒரு நூற் றாண்டுக்கு மேற்பட்ட தமிழ் நடையின் சொல்நெறியைக் காட்டும் கண்ணாடியாகப் பாது காவலன் திகழ்ந்து வந்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பாதுகாவலன் ஒரு கத்தோலிக்கப் பத்திரிகையாகச் சமயப் பணியாற்றும் அதே வேளை மக்களது சமூக, அரசியல் மற்றும் வாழ்வியல் பிரச்சினைகளிலும் தன்னை ஈடுப டுத்தி மக்களின் குரலாக ஒலித்து வந்திருக்கின்றது. குறிப்பாக போரின் கொடுமைகளுக்கு ஆளாகி அல்லற்படும் மக்களின் அவலங்களை வெளிப்படுத்துவதோடு நீதியான சமாதா னத்தை வலியுறுத்தும் திருச்சபையின் உறுதிப்பாட்டை உரத்துப் பேசும் வடபுலத் திருச் சபையின் குரலாக பாதுகாவலன் விளங்குகின்றது. இக்கட்டான காலகட்டத்திலும் மின்சாரம், பத்திரிகைக்கான காகிதாதிகள் போன்றவற்றின் கடுந் தட்டுப்பாட்டுக்கு மத்தியிலும் கிடைத்த வளங்களைப் பயன்படுத்தி பாதுகாவலன் தன்னைப் பிரசவித்துக் கொண்டது ஒரு சாதனை.

மேலும் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற பேரறிஞர்களால் வளர்த்தெடுக் கப்பட்ட பாதுகாவலன் காலத்துக்குக் காலம் புதிய புதிய ஆசிரியர்களால் புதுக்கோலம் பெற்று வளர்ந்து வந்துள்ளது. தற்காலத்தில் நவீன அச்சு வசதிகளைப் பெற்று மேலும் மெருகு பெற்றுள்ளது. இவ்வேளையில் பாதுகாவலனின் உருவாக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் அன்று முதல் இன்றுவரை தம்மையே அர்ப்பணித்த ஆசிரியர்கள், வழிகாட்டி ஒத்துழைப்பு நல்கிய ஆயர்கள், உழைப்பை உவந்தளித்த ஊழியர்கள் அனைவரையும் நன்றியோடு பாராட்டு கின்றோம்.

பாதுகாவலன் வருங்காலங்களில் திருச்சபையின் வளர்ச்சிக்கும், மேன்மைக்கும், மக்களிடையே நல்லுறவுக்கும், சமூக நீதிக்கும் தனது நிறைவான பங்களிப்பை வழங்கு வதோடு புத்தாயிரமாம் ஆண்டில் மேலும் பல நூற்றாண்டுகளைக் கண்டு சிறக்க வேண்டு மென எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

**மேதகு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை**
**திருமலை-மட்டுநகர் மறைமாவட்ட ஆயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊடகமாக பவனி வந்துள்ளது பாதுகாவலன்

## மன்னார் ஆயரின் ஆசிச் செய்தி

யாழ். மண்ணில் மலர்ந்து திக்கெட்டும் மணம் பரப்பி வரும் பாதுகாவலனின் 125வது ஆண்டு நிறைவுச் சரித்திர நிகழ்வை நினைவுகூரவும், வரலாற்று ஏடுகளில் பொறித்து வைக்கவும் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி அளிப்பதில் பேருவகைகொள்கின்றேன்.

ஈழத் தமிழ்க் கத்தோலிக்க திருச்சபையின் கடந்த ஒன்றேகால் நூற்றாண்டுகால வரலாற்றில் பாதுகாவலனின் பங்களிப்பு மகத்தானது. காத்திரமானது. வெறும் செய்திப் பத்திரிகையாக மட்டுமன்றி இறைமக்களின் வாழ்வையும் மற்றும் இறையியல் அறிவையும் அனுபவத்தையும் வளர்த்தெடுத்த தொடர்புசாதனமாகப் பாதுகாவலன் திகழ்ந்துள்ளது. மக்கள் மத்தியில் சமூக, அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊடகமாகவும் அது பவனி வந்துள்ளது. அத்துடன் ஈழத் தமிழ் கத்தோலிக்க திருச்சபையின் இதயநாதமாகவும் எதிரொலித்தது. காலத்திற்கும் சூழலிற்கும் ஏற்ப திருச்சபையின் கொள்கைகளை வெளியிட்டது. இளம் தலைமுறையினரின் எழுத்தாற்றலை இனம் கண்டு விருத்தி செய்யும் களமாகவும் அது செயற்பட்டது.

இப் பெருமைகளைக் கொண்டாடும் இவ்வரிய சந்தர்ப்பத்தில் சத்தியவேத பாதுகாவலன் தடைகளைத் தாண்டி வெற்றிநடை போட அர்ப்பணத்துடன் உழைத்த, உழைக்கின்ற ஆயர் பெருந்தகைகளை நான் இவ்வேளையில் வியந்து பாராட்டுகின்றேன். அத்துடன் பாதுகாவலன் பத்திரிகையின் வளர்ச்சியில் தம்மையே கரைத்துக்கொண்ட முன்னாள்– இந்நாள் பதிப்பாசிரியர்கள், பணியாளர்கள் அனைவரையும் நினைத்துப் பாராட்டுகின்றேன். எழுத்தாளர்கள், வாசகர்கள் அனைவருக்கும் என் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாதுகாவலன் பத்திரிகை இன்னும் பல்லாண்டுகள் சிறப்போடு பவனி வர வாழ்த்தி இறையாசி வேண்டி விடைபெறுகின்றேன்.

**மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை**
**மன்னார் ஆயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PAATHUKAVALAN IS FORTUNATE TO HAVE AN EXCELLENT PRINTING PRESS

*Message from the JDCSI Bishop in Jaffna*

I am glad to have this opportunity in sending my good wishes to the editor of the souvenir to mark the 125th year publication of Paathukavalan. I remember reading Paathukavalan during my school days at Chavakachcheri. At the time it was called "Sathya Vedha Paathukavalan". It reflected the theological thinking of the Catholic Church. Now we are living in the age of Ecumenism. Some years ago my speech at the St. Xavier's Seminary was published in Paathukavalan as the lead. I have been very close to some of the editors of Paathukavalan.

Paathukavalan is fortunate to have an excellent printing press to publish the paper. I have gone to St. Joseph's Catholic press several times to print the Morning Star issues.

It gives me great satisfaction to find Paathukavalan giving much importance to devotional matters. Paathukavalan holds the ideal that "a Paathukavalan in every house will guard the faith." This is a worthy ideal and I wish Paathukavalan to continue to instill hope, faith and charity among its readers.

With best wishes.

***Rt.Rev. Dr. S.Jebanesan***
***JDCSI Bishop in Jaffna***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரிலிருந்து வரும் சுடரொளியாக நாட்டின் எல்லாப் பாகங்களிலும் பரவியுள்ளது பாதுகாவலன்

## பேராயரின் ஆசிச் செய்தி

யாழ். மறைமாவட்டத்தில் பிரசுரிக்கப்படும் பாதுகாவலன் என்னும் கத்தோலிக்க இதழானது இத் தீவில் வாழும் மக்களின் விசுவாசத்தைப் பாதுகாத்து ஊட்டம் பெறச் செய்கிறது என்பதை தன் பெயரின் அகத்தே கொண்டுள்ளது. இது குன்றின் மேலிட்ட தீபம் போல் யாழ். நாட்டிலிருந்து வரும் சுடர் ஒளியாக நாட்டின் எல்லாப் பாகங்களிலும் வாழும் மக்களிடையே பரவியுள்ளது. இறைவனின் வாழ்வுதரும் வார்த்தையை அடிப்படையாகக் கொண்ட இப் பத்திரிகையின் வளமுள்ள ஆக்கங்களால் எமது இளைஞரும், வளர்ந்தோரும் பெரும் நன்மை அடைந்துள்ளனர். இக் கத்தோலிக்கச் செய்தித்தாள் தனது பணியின் 125வது ஆண்டை நிறைவு செய்கிறது.

எமது நாட்டின் கத்தோலிக்க செய்தித் தாள்களில் மிகப் பழமை வாய்ந்த ஒன்றாகத் திகழ்கிறது. மக்களின் விசுவாசச் சுவாலையை உயிரோட்டமுள்ள தாக்குவதிலும், ஊட்டம் கொடுத்து வளர்ப்பதிலும் அளப்பரிய பணிபுரிந்துள்ளது. இது மேலும் பல ஆண்டுகள் இறைவனது வார்த்தையையும், அவரது அரசையும் பரப்புவதில் நீடித்துப் பணிபுரிய வேண்டுமென மனம் உவந்து வாழ்த்துகிறேன்.

இச் சஞ்சிகையின் முன்னைய ஆசிரியர்கள், முகாமையாளர்கள், பணி யாளர்கள் அனைவரதும் சேவையை நன்றியுடன் நினைவுகூர்ந்து அவர்களைப் பாராட்டுகின்றேன்.

சமீப காலங்களில் ஏற்பட்ட தடைகளையும் தாண்டி, பாதுகாவலன் நிலைத்து நிற்கிறது. எனவே வருங்காலத்திலும் தனது பணியைத் தொடர்ந்து செய்து வெற்றி பெற வேண்டுமென நல்லாசி கூறுகிறேன். பாதுகாவலன் அனைத்திலும் வெற்றியும் இறை வழிநடத்துதலும் பெற்று முன்னேற வாழ்த்துகிறேன்.

**மேதகு நீக்கிலஸ் மார்க்கஸ் பர்னாந்து ஆண்டகை**
**கொழும்பு பேராயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் இலங்கைவாழ் தமிழ் பேசும் கத்தோலிக்க மக்களின் விசுவாச வளர்ச்சிக்கு துணைநின்றுள்ளது

## கண்டி ஆயரின் ஆசிச் செய்தி

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் பத்திரிகை திக்கெட்டும் மணம் பரப்பி 125 ஆண்டுகளை நிறைவுசெய்யும் இச் சரித்திர நிகழ்வையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

பாதுகாவலனின் இந் நீண்ட தூரப் பயணம் திருச்சபையின் மேன்மையை பாதுகாத்தும் குறிப்பாக இலங்கை வாழ் தமிழ் பேசும் கத்தோலிக்க மக்களின் விசுவாச வளர்ச்சிக்கும் துணை நின்றும் வந்துள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. பலவித இன்னல்களையும் தடைகளையும் தாண்டி வாரம் தோறும் பாதுகாவலனை வெளிவரச் செய்யும் ஆசிரியர் உட்பட அவரது குழுவினரை பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்களது அயராத உழைப்பே இந்த இக்கட்டான நிலையிலும் பாதுகா வலன் வெற்றிநடை போட ஏதுவாக அமைந்துள்ளது. பாதுகாவலனின் வளர்ச்சிக்கு வித்திட்ட அனைவரையும் அதன் மலர்ச்சிக்கும் எழுச்சிக்கும் தம்மை அர்ப் பணித்துள்ள அனைவரையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

வழியும் வாழ்வும் உண்மையுமான எம் பெருமான் இயேசுக் கிறிஸ்துநாதரின் போதனை இப் புத்தாயிரமாமாண்டில் எவ்வாறு வாழப்படலாம், பழைமை வாய்ந்த எம் விசுவாசம் எவ்வாறு இன்றைய மனிதனுக்கு ஏற்புடையதாக அமையலாம், எம் தாய் நாட்டில் எவ்வாறு அன்பும் மன்னிப்பும் நிறை சமாதானத்தின் கலாச்சாரத்தை உரு வாக்கலாம் என்பவற்றின் அடிப்படையில் புதுப்பொலிவுடன் பாதுகாவலன் வெளிவர இறைவரம் வேண்டி நிற்கிறேன். பாதுகாவலன் என்றென்றும் நிலைத்திருக்க என் வாழ்த்துக்கள்.

*இறையாசீர்! நிறையாசீர்!*

**மேதகு வியான்னி பெர்னாண்டோ ஆண்டகை**
**கண்டி ஆயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியவேத பாதுகாவலனை வாசித்து படித்து ஞானம் அறிவு பெற்று வளர்ந்தோம்

## இளைப்பாறிய திருமலை-மட்டுநகர் ஆயரின் ஆசிச் செய்தி

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் 125 ஆண்டுகளை (2001–02–19) நிறைவு செய்யும் வேளையில் நம் ஆசிச் செய்தியை அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த 125 ஆண்டுகளில் நாமும் 60 ஆண்டுகளுக்கு மேலாக ***"சத்தியவேத பாதுகாவலனை"*** வாசித்து, படித்து, ஞானம் அறிவு பெற்று வளர்ந்தோம். அந்தக் காலத்தில் புனித. யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வணபிதா. பிரான்சிஸ் அ.ம.தி பாதுகாவலன் "ஆசிரியர்" வணபிதா. பெரிய ஞானப்பிரகாசம் அ.ம.தி. அவர்களின் ஆக்கங்களைப் படித்து நலம் பெற்றோம்.

1945ம் ஆண்டு மட்டிலே "மாதா ஆத்தும சரீரத்தோடு எடுத்துக்கொள்ளப் பட்டதை" வேத சத்தியமாக்க ***சத்திய வேத பாதுகாவலன்*** மூலம் மக்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டது. இதை நான் வாசித்ததும் வணபிதா. குருசாமி அ.ம.தி. நாங்கள் இதை விசுவசிக்கின்றோமே ஏன் இந்த ஆராய்ச்சி என்று கேட்டேன். அவரும் இதற்கு வேத விளக்கம் கொடுத்தார். பரிசுத்த 12ம் பத்திநாதர் "பிரகடனம்" செய்தபொழுது (1–11–50) நானும் உரோமையில் இருப்பேனென்று கனவிலும் நினைக்கவில்லை

மேலும் புதுமை என்னவென்றால் உரோமையிலிருந்த போதும் பாதுகாவலன் மூலம் நாம் எல்லாச் செய்திகளையும் அறிந்தோம். நாம் உரோமையில் நேரடியாகக் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பாதுகாவலனில் வாசிப்போம்.

ஈற்றில், ஆர்வமும் ஊக்கமும் கொண்டு பாதுகாவலன் சிறப்புற வளர உழைக்கும் அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன், பிதா சுதன் பரிசுத்த ஆவியின் ஆசியை இரந்து மன்றாடுகிறோம்.

**மேதகு எல். ஆர். அன்ரனி ஆண்டகை**
**இளைப்பாறிய திருமலை.-மட்டுநகர் ஆயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலனின் இடமும் பணியும் தனித்துவமானது

## குருமுதல்வரின் ஆசிச் செய்தி

வரலாற்றிலே முதல் உதயமாகி ஈழத்தின் ஒரே கத்தோலிக்க வார ஏடாக 125 ஆண்டுகளாக நற்பணி செய்யும் பாதுகாவலனின் பணி போற்றிப் புகழப்பட வேண்டியதே.

இலங்கை மறைமாவட்டங்கள் 1886ல் வரையறுக்கப்பட்டு உருவாக்கப்படுவதற்கு பத்து ஆண்டுகள் முன்னதாகவே பாதுகாவலன் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. யாழ். திருச்சபையின் வரலாற்றில் பாதுகாவலன் ஒரு முழுமையான பங்களிப்பைத் தந்து வருகிறது என்றால் தவறிருக்க முடியாது. கடந்த 125 ஆண்டுகளாக எமது மக்களின் மறை வளர்ச்சிக்கும், கிறிஸ்தவ வாழ்வுக்கும் வழிகாட்டத்தக்க உலக திருச்சபையின் பல்வேறு செய்திகள், நிகழ்வுகள் முதலியவற்றை தவறாமல் தெரிவித்தே இப் பணியைச் செய்துவருகிறது.

கடந்த 125 ஆண்டுகளாக இறைமக்களோடு தொடர்புகொள்ள பாப்பரசர்களுக்கும் ஆயர்களுக்கும் ஒரு ஊடகமாக பாதுகாவலன் நற்பணியாற்றி வந்திருக்கிறது.

இன்று யாழ். மறைமாவட்டத்தில் நாளேடுகளும் சஞ்சிகைகளும் நிறைந்திருந்தாலும் பாதுகாவலனின் இடமும் பணியும் தனித்துவமானது. இது தனக்கே உரித்தான தொனியுடனும், சிறப்புடனும் தொடர்ந்து வெளிவந்துகொண்டு இருக்கிறது. காலத்துக்கும், தேவைக்கும் பொருத்தமான விளக்கங்கள், விரிவாக்கங்கள், செய்திகள் என்பவற்றை காவலன் தந்து பல தடைகளின் மத்தியிலும் பணியாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியது.

இறைவனுக்கே அனைத்து புகழும், மகிமையும் தெரிவித்து ஆவியானவரின் வழிநடத்தல் பாதுகாவலன் பத்திரிகைக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்து பாதுகாவலன் ஆசிரியர் நிர்வாகிகள், பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

அருள்திரு J.P.E. செல்வராஜா
யாழ். மறைமாவட்ட குருமுதல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் மறை வளர்ப்பதில் ஒரு செயல்வீரன்

## அ.ம.தி.களின் யாழ். மாகாண முதல்வரின் ஆசிச் செய்தி

அமல மரித்தியாகிகள் ஈழமண்ணில் கால் பதித்து ஏறத்தாழ 153 ஆண்டுகள் நிறைவு செய்கின்ற இவ் வருடத்தில் கத்தோலிக்க பாதுகாவலன் பத்திரிகை தனது 125 ஆண்டு சேவையைக் கண்டு களிப்பது வரலாற்றில் மிக முக்கிய பதிவாகும். யாழ் மறைமாவட்டம் தனது அமைப்பிலும் மறைவாழ்விலும் ஓர்ஆல விருட்சம் போன்று நிலைபெற்று இருப்பதற்கு அமல மரித்தியாகிகள் தமது தூரத்து பார்வையுடனும் அர்ப்பண மனப்பான்மையுடனும் கடின மாக உழைத்தது மிக முக்கிய காரணமாகும். சமய சமூக கல்வி நிருவாக துறைகளில் தம் பணியை ஈடுபடுத்திய அமல மரித்தியாகிகள் கத்தோலிக்க பாதுகாவலன் எனும் பத்திரி கையை ஆரம்பித்தார்கள்.

சமூகத்தொடர்பு சாதனங்களூடாக நற்செய்தியைப் பரப்பும் சேவையினை கத்தோலிக்க திருச்சபை தொன்றுதொட்டு ஆற்றி வருகிறது என்பதற்கு பாதுகாவலன் பத்திரிகை நியாய மான ஒரு சான்றாகும். ஆரம்பிக்கப்படும் எப் பணியையும் தொடர்ந்துவரும் சவால்கள் மத்தியில் வளர்த்துவருவது என்பது அவ்வளவு சுலபம் அல்ல. பாதுகாவலன் வரலாற்றை மீளாய்வு செய்து பார்க்கின்ற வேளையில் ஆயர்களதும், குருக்களதும், பொதுநிலையினரதும் கடின உழைப்பும், விடாமுயற்சியும் அதனது வெற்றிக்கு வழிகோலின என்பது வெள்ளிடை மலை.

எனது ஆக்கங்களான ஞாயிற்று சிந்தனைகளை தொடர்ச்சியான மூன்று வழிபாட்டு ஆண்டு காலத்தில் வாரம்தோறும் தேனருவி என்ற தலைப்பில் பிரசுரித்தமைக்காக பாது காவலனுக்கு எனது இதயபூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அண்மைக்காலத்தில் தமிழ்ப் பத்திரிகை உலகில் பாதுகாவலன் பத்திரிகையும் தனக் கென ஒரு சிறப்பு விருதை பற்றிக் கொண்டமை அதன் ஆசிரியர் உடன் எழுத்தாளர்கள் பணியாளர்கள் யாவரும் கொண்டுள்ள ஈடுபாடும், அர்ப்பண உணர்வும், செயல் திறமையின தும் பயனே என்று கருதவேண்டும். காலத்திற்குகாலம் ஆசிரியர் பணியினை பொறுப்பேற்ற குருக்கள் தமது சேவையினை காலத்தின் குறிகளை அறிந்து செயற்பட்டு இருக்கின்றார்கள். இவர்களது பரம்பரையில் தற்போதைய பத்திரிகை ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் பாதுகாவலனது பணிக்கு சிறந்த முறையில் உயிரூட்டம் அளித்து வருதல் போற்றுதற்குரியது.

பாதுகாவலன் மறைவளர்ப்பதில் ஒரு செயல்வீரன். எழுத்தாளர்களை உருவாக்குவதில் ஒரு ஆசிரியன். மறைசார்ந்த செய்திகளை தமிழ் உலகிற்கு பரப்புவதில் அதிதூதன். உலகளாவியதும் உள்ளூரினதும் நிகழ்வுகளை நிரல்படுத்தி தொடர்படுத்துவதில் ஓர் வித்த கன். தற்காலத்தய போர்ச் சூழல் மத்தியிலும் லாபம் கருதாது கிரமம் தவறாது தரம் குறையாது வெளியீட்டுப் பணியைத் தொடர்வது மிகவும் கடினமானது. அதனால் பத்திரிகையின் 125வது ஆண்டு நிறைவில் இப் பத்திரிகை ஆசிரியரையும் அவர் தம் குழுவினரையும் பாராட்டு கின்றேன்.

இந் நவீன உலகத்தில் படிப்போர் எண்ணிக்கை எந்த வகையிலும் குறைந்து விடவில்லை. கணணி யுகத்தினது பயன்பாடுகளை பிரயோகித்து தம் சேவையினைத் தொடர்ந்து ஆற்ற ஆசிக்கின்றேன். அரசியல் சமூக அமைதி குலைந்துபோய் இருக்கும் மக்கள் மத்தியில் உண்மை சாகடிக்கப்படும் சூழலில் தம் சேவையை தூரத்துப் பார்வையுடனும் பொதுநலனுடனும் குன்றா மகிழ்வுடனும் தொடர்ந்தும் ஆற்ற அமல மரித்தியாகிகள் சபையின ருடன் இணைந்து வாழ்த்துகின்றேன்.

அருள்திரு அ. ஜீவேந்திராபோல் அ.ம.தி.
மாகாண முதல்வர் அமலமரித் தியாகிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறை மொழியின் திவ்விய காவலன் வாழ்க

## கவிமாமணியின் ஆசிச் செய்தி

சுத்தமுறு தமிழ்த்தென்றல் சூழ்ந்துலவும் யாழில்
தூயமறை துலக்கும் நல் லாயர்சற் குரவோர்
மெத்துபுகழ்த் திருச்சபைத்தாய் மேன்தவத்தா லோங்கி
மிளிர்கின்ற சூசைவளன் புனிதமனைப் பூங்கா
அத்தமியாய்ச் சூரியன்போற் பிறந்துவளர்ந் தின்று
ஆண்டாகும் நூற்றிருபத் தைந்தைக்காண் காவலனே!
சித்தம்மகிழ் இந்நாளோர் பொன்னாளே: ஞானத்
திரவியங்கள் சேர்த்துவரு திருமடலே! வாழ்க!

மண்ணாகும் உடலுக்காய் உழைப்பவர்கள் நிறைய;
வளங்கொழிக்கும் உளத்துக்காய் உழைப்பவர்கள் குறைய;
எண்ணிஎண்ணிச் சொலமுடியா இறவாத ஆன்ம
இன்னலத்துக் குழைப்பவர்கள் எட்டுனையே யென்பார்;
கண்துடைக்குங் காலத்திற் காக்குதிரு மறையின்
கனிமொழியின் இனிமைதனைக் கருதிப்பணி யாற்றி
விண்ணமுத விருந்தூட்டக் கண்ணியமாய் உழைக்கும்
மெய்ம்மைநிறை காவலனே! வித்தகனே! வாழ்க!

'எழுத்துலகில் இளமையிலே ஈடுபடா ஒருவன்
இன்னாத முதுமையிலே என்னாவான்' என்றே
அழுத்தியுரை நெப்போலியன் அதிமதுர வாக்கை
ஆய்ந்தவனி என்போன்றோர் அரங்கினிலே நிற்கப்
பழுத்தபழ எழுத்தாளர் ஆய்வாளர் கவிஞர்
பாதைக்கு வழிகாட்டிப் பராமரித்த அன்பின்
அழியாத புகழ்பெற்றாய்! அதன்பேறாய் நீயும்
'அழகான அமைப்புக்கும்' விருது பெற்றாய் வாழ்க!

க. த. ஞானப்பிரகாசம்
கவிமாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் தொடர்ந்து வெளிவருவதற்குக் காரணமானவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்

## முன்னாள் ஆசிரியர்களின் ஆசிச் செய்தி

அகவை நூற்று இருபத்தியைந்தில் காலடி எடுத்து வைக்கும் பாதுகாவலன் பத்திரிகையை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். "ஆண்டவரே நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் கண்விழித்திருப்பது வீணாகும்" (தி.பா 127:1) எனும் விருதுவாக்குடன் இப் பத்திரிகை நம் திருமறையின் காவலனாக இத்துணை நீண்டகாலமாகப் பணியாற்றியமை பாராட்டுக்குரியதே.

இன்று அச்சு வெளியீடுகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற சமூகத் தொடர்புக் கருவிகள் பொதுமக்கள் கருத்துக்களை உருவாக்குவதில் பெரும் ஆற்றல் மிக்கவையாகத் திகழ்கின்றன. எனவேதான் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத் தந்தையர்கள் இக் கருவிகளைத் திருச்சபை தனது பல்வேறு பணிகளிலும் பயன்தரும் முறையில் கையாளவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். குறிப்பாக அச்சு வெளியீடுகள் வழியாக இயற்கைச் சட்டத்திற்கும் திருமறையின் படிப்பினைகளுக்கும் இயைந்தவாறு பொதுமக்கள் கருத்துக்கள் உருவாக்கப்படவேண்டும் என்று எடுத்துரைத்துள்ளனர்.

சென்ற நூற்றாண்டிலேயே இந்த உண்மைகளை உணர்ந்து கொண்டவர்களாய் இப் பத்திரிகையை வெளியிட ஆரம்பித்த திருச்சபைத் தலைவர்களும், இதுவரை காலமும் இது தொடர்ந்து வெளிவருவதற்குக் காரணமானவர்கள் அனைவரும் எமது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்களாவர்.

ஈற்றில், இலங்கையின் தனிப்பெரும் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் தொடர்ந்தும் தங்குதடையின்றி வெளிவர எல்லாம் வல்ல ஆண்டவர் அருள்புரிய வேண்டும் என்று ஆசி கூறுவதில் பெருமிதமடைகின்றேன்.

**அருள்திரு க.இ. மேரி யோசெப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் அணையாத தீபமாய் கிறிஸ்தவ விழுமியங்களுக்கு குரல்கொடுக்கும் ஊடகமாகட்டும்

## முன்னாள் ஆசிரியர்களின் ஆசிச் செய்தி

கத்தோலிக்க மறையை மங்கா விளக்காய் காத்திட உதித்தான் "சத்தியவேத பாதுகாவலன்" ஈழத்தின் முன்னோடியான தமிழ் வார இவ்விதழ் தனது 125 ஆண்டுகளை நிறைவுசெய்யும் இவ்வேளையில், நல்லாசி கூறி அதனைப் போற்றிப் புகழும் அன்பர்களுடன் அடியேனும் ஒன்றிணைய அளிக்கப்பட்ட வாய்ப்பையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன்.

எவரது வாழ்விலும், எதனது வாழ்விலும் வரலாற்றுக் கட்டங்கள் உள்ளன. காலத்தின் சக்கரத்தில் எழும் மாற்றங்கள், மற்றும் சவால்கள் எவரையோ, எதையோ விட்டு வைப்பதில்லை. இவற்றின் ஊடாக தனது இலட்சியத்தை இழக்காது, இலக்கை அடைவதுதான் வாழ்வின் வெற்றியாகும். இவ் அடிப்படையில், கடந்த 125 ஆண்டுகளாக தன் வரலாற்றின் வெவ்வேறு கட்டங்களில், காலத்தின் அறிகுறிகளை நன்கறிந்து, சிக்கலான சவால்களை செவ்வனே சந்தித்து, காலத்தின் தேவைக்கேற்பத் தன் பணியை ஆற்றிய தனிப்பெரும் பெருமை பாதுகாவலனுக்கு உரியதாகும்.

முன்னொரு நாள் ஈழத்தின் ஏக கத்தோலிக்க தமிழ் வார ஏடாக பெருமை கொண்டாடிய "பாதுகாவலன்" தற்போதைய நவீன உலகில் இதர இதழ்களுடன் போட்டியிட வேண்டியுள்ளதை மறுக்க முடியாது. எனவே, பழமையின் பெருமையில் பெருமிதம் கொள்வதுடன் நின்றுவிடாது, அதேவேளையில் பகட்டுப் புதுமையைப் புகுத்தி சத்தியத்தின் சாரத்தைச் சிதறவிடாது, தொடர்ந்தும் எதிர்வரும் சகாப்தங்களில் "பாதுகாவலன்" அணையாத தீபமாய், கிறிஸ்தவ விழுமியங்களுக்கு, சிறப்பாக உண்மைக்கும் நீதிக்கும் குரல் கொடுக்கும் ஊடகமாய், மக்களின் மனங்களைச் செம்மைப்படுத்தும் சாதனமாய் பாரெங்கும் துலங்கிட வாழ்த்துகின்றேன்.

அருள்திரு G.A. பிரான்சிஸ் ஜோசப்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலனின் நிறைவான பணி பலரின் ஆன்மீக ஈடேற்றத்துக்கு உதவியாக அமைந்துள்ளது

**நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி**

அன்புசார் பெருந்தகையீர்,

பாதுகாவலன் பத்திரிகைக்கு 125 ஆவது ஆண்டு நிறைவடைந்திருப்பதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். மனிதன் மனித நேயத்தோடு வாழ்வதற்கு பாதுகாப்புப் பலவழிகளில் தேவைப்படுகின்றது. வாழும் இவ் உடலுக்கு பாதுகாப்பு, உயிருக்குப் பாதுகாப்பு இறைவன். இப்படி பல பாதுகாப்புக்களை மனிதன் தேடவேண்டிய காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் காலச் சூழ்நிலையில் பாதுகாவலன் எனும் பத்திரிகை நிறைவான பணிகளை 125 ஆண்டுகள் ஆற்றியமை பலருடைய ஆன்மீக ஈடேற்றத்திற்கும் உதவியாக அமைந்துள்ளது. இதனுடைய வளர்ச்சி இந்நாட்டின் வாழும் மனிதர்கள் ஒவ்வொருவரையும் சிந்தித்து செயற்பட வைக்கும் ஆக்கங்களையும் கட்டுரைகளையும் தந்த ஆசிரியர்களையும் இன்று இப் பத்திரிகையைத் தொடர்ந்து செயற்படுத்திக் கொண்டிருக்கும் பத்திரிகை ஆசிரியரையும் பாதுகாவலன் பத்திரிகை சார்ந்த அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. தொடர்ந்து பாதுகாவலன் பத்திரிகை வெளிவர இறைஆசியை வேண்டுகிறோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்சுவாமிகள்**
**2வது குருமஹா சந்நிதானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரியமிக்க இச் சஞ்சிகை தன்னளவில் ஒரு சரித்திரத்தைப் படைத்துள்ளது

## அரசாங்க அதிபரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த நூற்றி இருபத்தைந்து ஆண்டுகளாக ஒரு தமிழ் சஞ்சிகை வெற்றியோடு வெளிவருவது ஒரு மகிழ்ச்சியான விடயமாகும்.

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரு தரமான தமிழ் ஏடு பாதுகாவலன். பாரம்பரியமிக்க இந்த சஞ்சிகை தன்னளவில் ஒரு சரித்திரத்தைப் படைத்துள்ளது. இந்த மண்ணில் கிறிஸ்தவ மதம் உலாவத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை இதனுடன் தொடர்புடைய தியாகம் மிக்க இறைநம்பிக்கை உடைய செயல்கள் பல. பாதுகாவலனும் தனது சேவையை புரிந்துள்ளது. வாசகர்களுக்கு நல்விருந்து படைத்து பத்திரிகை மணம் பரப்பி திகழ்ந்ததில் எந்தவித வியப்பும் இல்லை. கடந்த காலங்களில் பல ஆக்கபூர்வமான கட்டுரைகள், வேறுபல ஆக்கங்கள் வாசகர்களுக்கு அறிவை ஊட்டியதை யாவரும் மறக்கமுடியாது. இந்த பணிகள் ,மேன்மேலும் தொடரவேண்டும். எதிர்காலத்தில் பல்வேறு சிறப்பம்சங்களுடன் வெளிவந்து குறிப்பாக கத்தோலிக்க வாசகப் பெருமக்களை மகிழ்வித்து, தமிழ் இலக்கிய உலகில் நல்ல ஒரு நன்மதிப்பைப் பெற்று அமைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

க. சண்முகநாதன்
அரசாங்க அதிபர்
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் அனைத்து மக்களுக்குமான வழிகாட்டியாகும்

## மெதடிஸ்த திருச்சபை முகாமைக் குருவின் ஆசிச் செய்தி

மக்கள் தொடர்புச் சாதனத்தின் உன்னத வரலாற்றுச் சின்னமாக விளங்கும் "பாதுகாவலன்" 125 ஆண்டுகளைக் கடந்து மக்கள் மனங்களில் குடிகொண்டு விட்டது. வாழ்க! அதன் அளப்பரிய பணி ஓங்கட்டும் புகழ் மென்மேலும்.

பாதுகாவலன் அனைத்து மக்களுக்குமான வழிகாட்டி ஆகும். வழி – வாழ்வு – உண்மை என்கின்ற புனித பாதையில் எம் சமுகத்தை உறுதியுடன் நடத்தி வருகின்றான். ஒன்றேகால் நூற்றாண்டுகள் இறைவனின் எழுத்தாக மலரும் இப் பத்திரிகை யாழ். மண்ணில் இறைவனின் அறைகூவலை எமக்குத் தருகின்றது. பாதுகாவலன் துணிவும் தீர்க்கதரிசனப் பார்வையும் நிறைந்து விளங்கும் பத்திரிகை. அனைத்து மக்களுக்கும் பாதுகாவலன் வேண்டி நிற்கும் சமாதானம் கிடைக்கும் படியும் பாதுகாவலனின் பரந்த பணி தொடரவும் வளரவும் எனது இறை ஆசிகள்.

மேலும் பாதுகாவலனின் வரலாற்றுச் சிறப்பினை பொறித்து வைக்கும் இச் சிறப்பு மலரும் சிறப்புற மலர என் வாழ்த்துக்கள்.

அருள்திரு க. கருணாசேகரா
முகாமைக்குரு

மெதடிஸ்த திருச்சபை
யாழ் சேகரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் இறையருளால் மென்மேலும் வளர்வதாக

## இலங்கை திருச்சபை யாழ்.பிரதேச முதல்வரின் ஆசிச் செய்தி

கடந்த 125 ஆண்டுகளாக கத்தோலிக்க ஏடாகிய பாதுகாவலன் மக்களுக்கு ஆற்றிய பணி எண்ணிலடங்கா. 125 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பாதுகாவலன் வாழ்க மேலும் வளர்க என வாழ்துவதில் யாழ். அங்கிலிக்கன் திருச்சபை மகிழ்ச்சிய டைகிறது.

எமது கிறிஸ்தவ வரலாற்றிலே ஏடுகள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. வரலாற்றிலே இறைவாக்கினரும், புதிய ஏற்பாட்டிலே அப்போஸ்தலரும், திருச்சபை பிதாக்களும் கிறிஸ்தவ விசுவாசத்தை நிலைநிறுத்தவும், பரப்பவும் எழுத்துருவிலான ஏடுகளை பயன்படுத்தினர். இதையே விசுவாசத்தை பாதுகாக்கும் பட்டயம் என பவுலடி யார் குறிப்பிடுகிறார்.

கடந்த 125 ஆண்டுகளாக இப் பணியை எமது மண்ணிலே ஆற்றுகின்ற பாதுகாவலன் பத்திரிகை அனேக கஷ்டங்கள், இடையூறுகள், ஓயாத யுத்தங்கள் இவற்றின் மத்தியிலே சிறப்பாக செயல்படுவதையிட்டு இப் பத்திரிகையின் ஆசிரியர் சமூகத்தை நன்றியோடு பாரட்டுகிறோம்.

கிறிஸ்தவ தொடர்புகளையும், சமூக முன்னேற்றத்தையும், விவிலிய கட்டுரை களையும், ஆன்மீக ஈடேற்றத்திற்கான சிந்தனைகளையும் தாராளமாக அள்ளி வழங்கும் பாதுகாவலன் இறை அருளால் மென் மேலும் வளர்வதாக, இறையரசின் கருவியாக தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவதாக என வாழ்த்துவதில் அக மகிழ்வடை கிறேன்.

வண. செ. பி. நேசகுமார்,
யாழ். பிரதேச முதல்வர்,

இலங்கைத் திருச்சபை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் பத்திரிகை தூரநோக்குப் பார்வையோடு ஆரம்பிக்கப்பட்டது

## யாழ். மறைக்கோட்ட முதல்வரின் ஆசிச் செய்தி

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க பத்திரிகையான "பாதுகாவலன்" தனது சேவையில் 125 ஆண்டுகளை நிறைவுசெய்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இற்றைக்கு 125 ஆண்டுகளுக்கு முன் பாதுகாவலன் பத்திரிகை தூரநோக்குப் பார்வையோடு ஆங்கிலம், தமிழ் மொழிகளில் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை இப் பத்திரிகையின் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள், இப் பத்திரிகையின் வளர்ச்சியில் கைகொடுத்தவர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். கடந்தகாலத்தில் இப் பத்திரிகை தனது சேவையில் உண்மை, நீதி, சமாதானம் என்பவற்றை பாதுகாத்துக் குரல் கொடுத்து சத்திய மறையின் விசுவாசத்தைத் திக்கெட்டும் பரப்பி கத்தோலிக்கர்களை விசுவாசத்தில் நிலை நிறுத்தியுள்ளது.

எனவே பாதுகாவலன் பத்திரிகையின் சேவை பல்லாண்டுகாலம் புதுப் பொலிவோடு யாழ். திருச்சபைக்குத் தொடர்ந்து கிடைக்க இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

அருள்திரு அ.கொ. கிறிஸ்தோப்பர்
யாழ். மறைக்கோட்ட முதல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியாற்றிய இடமெல்லாம் பாதுகாவலன் பத்திரிகைக்கு பேராதரவு வழங்கியுள்ளேன்

## கிளி.-முல்லை. மறைக்கோட்ட முதல்வரின் ஆசிச்செய்தி

தமிழ் பேசும் கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தின் காவலனாக, 19ம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் (1876ல்) "கத்தோலிக்க பாதுகாவலன்" என்ற பெயருடன், மேதகு பொன்ஜீன் ஆண்டகை அவர்களால், அங்கீகரிக்கப்பட்டு, அருள்திரு M.A. மேர்பி அடிக ளாரின் மேற்பார்வையின் கீழ் தொடக்கி வைக்கப்பட்டுள்ள "பாதுகாவலன்" பத்திரிகை 125 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது என்பதை நினைக்கும்போது, உண்மையிலேயே எனது உள்ளம் பரவசத்தால் பூரிக்கின்றது.

திருநூல், திருப்பலி, ஏன் ஏனைய வழிபாட்டு முறைகள் எல்லாம் "இலத்தீன்" மொழி யில் நடைபெற்று வந்த காலகட்டத்தில், தமிழ் மட்டும் தெரிந்த எமது இறைமக்களுக்கு, சத்தியவேதத்தின் தத்துவங்களை, அவர்களுக்குத் தெரிந்த மொழியிலேயே எடுத்துச் சொல்ல, ஒரு ஊடகமாக இப்படியொரு பத்திரிகையை ஆரம்பித்து வைத்த முன்நோக்காளர் மேதகு பொன்ஜீன் ஆண்டகையை எண்ணிப் பார்க்கும்போது என்னையறியாமலேயே எனது கரம் கூப்பித் தொழுகிறது.

மறைக்கல்விப் பாடநூல்கள் வெளிவராத காலகட்டத்தில், எமது மக்களின் விசுவாசத் தைப் பாதுகாக்க, இப்படியொரு பத்திரிகையை ஆரம்பித்து, வாரந்தோறும் திருப்பலி முடிவில் அந்நாளைய "உபதேசிமார்கள்" மூலம் படித்துக்காட்டி, விளக்கமும் சொல்லுவித்த எமது மூதாதையக் குருக்களுக்கு எமது நன்றிகளும் வாழ்த்துக்களும்.

நான் சிறுபிராயத்தில் இப் பத்திரிகையை வாசித்து எனது அழைத்தலை உணர்ந்து கொண்டேன் என்பதைப் பெருமையுடன் இவ்வேளையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் இறைவனின் பணியாளனாகக் கடமையாற்றிய இடமெல்லாம், அப் பத்திரிகையின் பெருமை யினை எடுத்துச்சொல்லி, இப் பத்திரிகைக்கு எனது பேராதரவை வழங்கி வந்துள்ளேன்.

"தமிழ் பேசும் உலகிற்கு ஒரேயொரு கத்தோலிக்க வார இதழ்" என்ற பெருமையைத் தேடித் தந்த இப் பத்திரிகை, காலத்தின் கட்டாயத்தினால் மாத இதழாக வெளிவருவது கவ லைக்குரியதே! என்றாலும், புதிய வடிவில் நவீன கட்டமைப்பில் சமூக பொருளாதார பின்புலன்களையும் கொண்ட சூழ்நிலையில் வெளியிடப்பட்டு வரும் இப் பத்திரிகை, உண்மை யின் எண்ணங்களை உரத்துக்கூறி, சத்தியத்துக்குச் சான்றுபகரும் நடுநிலை ஊடகமாக விளங்கிவருவது பாராட்டுக்குரியதே.

இலைமறை காய்களாக இருந்துவரும் எழுத்தாளர்களை வெளிக்கொணர்வதிலும், கத் தோலிக்க பாடம் பாடசாலைகளில் கற்பிக்காத சூழ்நிலைகளில் அவர்களுக்கேற்ற விதத்தில் வினா–விடைகள் மூலம் அவர்களைத் தயாரித்து ஊக்குவிப்பதிலும் முன்நின்று உழைக்கும் சேவை போற்றுதற்குரியது. இயேசு சொன்ன "கடுகுமணி உவமை" போன்று, ஆரம்பத்தில் சிறு விதையாகத் தோன்றிய "சத்தியவேத பாதுகாவலன்" இன்று பெருவிருட்சமாகத் தழைத்தோங்கி, உலகின் பல்வேறு நாடுகளுக்கும் திருச்சபைச் செய்திகளை மட்டுமல்ல, அடக்குமுறைகளுக்கும், இன்னல்களுக்கும் உள்ளாகியுள்ள ஈழத்தமிழர்களின் உண்மை நிலைகளையும் வெளிச்சம் போட்டுக் காட்டித்தருவது இயேசுவின் "உண்மைக்குச் சாட்சியம் தரும் பணியை" செயல்படுத்திக் கொண்டிருப்பதை மனமுவந்து பாராட்டுகின்றேன்.

ஆசி வேண்டி நிற்கும்

அருள்திரு ஏ.பி.தேவசகாயம்
கிளி.-முல்லை. பணி முதல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் கடல்கடந்த நாடுகளிலும் நற்செய்திப் பணியாற்றுவது இறைவனின் அருட்பொழிவு

## இளவாலை மறைக்கோட்ட முதல்வரின் ஆசிச்செய்தி

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் பத்திரிகையின் 125 ஆவது ஆண்டு நிறைவினில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கான ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

"நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு" என்னும் புனித சின்னப்பருடைய வார்த்தையை உள்ளத்தில் கொண்டு, பாதுகாவலன் பாரிய நற்செய்தி அறிவிப்புப் பணியை மேற்கொண்டுள்ளான். 125 வருட பாரம்பரியத்தைக் கொண்ட பாதுகாவலன் இலங்கை வாழ் தமிழ்க் கத்தோலிக்கரது விசுவாசத்தை ஆழப்படுத்தி, சிறந்த நல் வழிகாட்டியாக அமைந்ததோடு, அவர்களின் தன்னிகரற்ற பாதுகாவலன் ஆகவும் திகழ்கின்றான்.

எண் சாண் உடம்புக்குச் சென்னி சிறந்திடும் என்பதுபோல இலங்கை வளநாட்டின் தலையாகிய யாழ்ப்பாண மண்ணில் பாதுகாவலன் இன்று கடல் கடந்த நாடுகளிலும் மணம் பரப்பி நற்செய்திப் பணியாற்றுவது இறைவனின் அருட்பொழிவாகும்.

கத்தோலிக்கரிடையே இலைமறைகாயாக விளங்கும் கலைஞர்களை வளர்த்தெடுப்பதிலும், அவர்கள் ஊடாக நற்செய்தி அறிவிப்புப் பணியினை மேற்கொள்வதிலும், அவற்றினூடாகக் கிறிஸ்தவ விழுமியங்களை மக்களிடையே பரப்புவதிலும், வளர்த்தெடுப்பதிலும் கருத்தாக இருப்பது பாராட்டிற்குரியதாகும்.

எனவே மாறிவரும் உலகினில் இன்றும் என்றும் சிறந்த இறைபணியாற்றித் தொடர்ந்தும் இறைவனுக்கு உகந்த மக்களை உருவாக்குவதிலும் பாதுகாவலனாக இருந்து இறைசித்தத்திற்கேற்ப நிறைவுடன் நிலைத்து நின்று பணிகள் பல ஆற்றிடவும் ஆசிக்கின்றேன்.

அருள்திரு யஸ்ரின் B.ஞானப்பிரகாசம்
இளவாலை மறைக்கோட்ட முதல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாவருக்கும் பாதுகாவலன் விருந்தாக இருப்பது அதனுடைய தனிப்பெரும் பண்பாகும்

## பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வரின் ஆசிச்செய்தி

நம் தாய்நாட்டின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வாரப் பத்திரிகையாக "பாதுகாவலன்" உதயமானது. இது எமது யாழ். மண்ணில் மலர்ந்து திக்கெட்டும் மணம் பரப்பி 125 ஆண்டுகளை 19.02.2001 இல் நிறைவு செய்கிறது. அதை நினைத்து மனம் மகிழ்ந்து நம் தந்தையாம் இறைவனிடமிருந்தும் ஆண்டவராம் யேசுக் கிறிஸ்துவிடம் இருந்தும் வரும் அருளால் வாழ்க! வளர்க! என வாழ்த்துகிறோம். இப் பத்திரிகையானது "அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினர்." (மாற். 16:20) என்பதைச் சிரமேற்கொண்டு யாழ். கத்தோலிக்க திருச்சபையால் வெளியிடப்படுகின்றது. இறை அறிவைப் பரப்பவும், விசுவாசத்தை உறுதிப்படுத்தவும் கட்டுரை, கதை, வினாவிடை, போட்டிகள், செய்திகள் எனப் பல அம்சங்களைத் தாங்கி வருகின்றது. சிறுவர், இளையோர், பெற்றோர், முதியோர் யாவருக்கும் பாதுகாவலன் விருந்தாக இருப்பது அதனுடைய தனிப்பெரும் பண்பாகும். திருவிவிலிய அருளோடு இறை அறிவை கத்தோலிக்க விசுவாசத்தை, பல்வேறு கோணங்களில் நாசூக்காகப் புகுத்துவது அதனுடைய சிறப்பான அம்சமாகும். இன்றைய போர்ச் சூழலிலும், அனர்த்தங்களிலும், இப் பத்திரிகையின் வளர்ச்சிக்காக புனித வளனார் அச்சகம் நவீன சாதனங்களைப் பயன்படுத்துவதையிட்டு பெருமைப்படுகிறோம்.

"பாதுகாவலன்" ஆற்றிய பணியிலே 125 வருடங்களாக வீறுநடை போட்டதை, தமிழ் கத்தோலிக்க மக்கள் மறக்கமுடியாது. பலவிதமான கஷ்டங்களின் மத்தியிலும் தன் கடமையை நிறைவாகச் செய்து வருகிறது. இடம்பெயர்ந்து நிரந்தரமற்ற இடங்களில் வாழும் எமக்கு இறைவார்த்தைப் பஞ்சம் ஏற்படாது எமது விசுவாசத்தை ஆழப்படுத்த நம் கைகளில் பாதுகாவலன் தவழ்வதையிட்டுப் பெருமகிழ்வடைகிறோம். 125 ஆண்டுகளாக பாதுகாவலன் பத்திரிகை படிப்படியாக வளர உழைத்த ஒவ்வொருவரையும் நன்றியுடன் நினைந்து பாராட்டுகிறோம். உங்கள் பணி சிறக்கச் செபிக்கிறோம். பாதுகாவலனின் எதிர்காலம் வளமாக இருப்பது உங்களிலும் எங்களிலும் தங்கியுள்ளது. எனவே புதுப்பொலிவோடு புதிய மிலேனியத்தை எதிர்நோக்கி உயிர்த்துடிப்போடு பணியைத் தொடர்வோம்.

*வாழ்க! வளர்க! பாதுகாவலன்*

ஆசியுடன்
அருள்திரு ப. இருதயதாஸ்
பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 125 ஆண்டுகளைத் தாண்டியது ஒரு சாதனையாகும்

## யாழ். திருக்குடும்ப சபை மாகாணத் தலைவியின் ஆசிச் செய்தி

சத்திய மறையின் உத்தம கொள்கைகளை இத் தலம் பரப்பி, எத்தனையோ உள்ளங்களை இறை இயேசுவின் விழுமிய வாழ்வுக்குள்ளும், அவர் வழியில் கிறிஸ்தவ வாழ்வுக்குள்ளும் நுழைத்திட வாராவாரம் பொலிவுடன் வெளிவந்து பலரையும் கவர்ந்து ஐஇருபத்தைந்து ஆண்டு நிறைவுகாணும் பாதுகாவலன் இதழை மனமார வாழ்த்துகின்றோம்.

புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தின் அயராத முயற்சியும் அதன் ஆசிரியர், செயலர், உதவியாளர்கள், உடன் உழைப்பாளர்கள் அனைவரதும் கூட்டுமுயற்சியின் கனியே இவ்வார இதழ். காலத்தின் கெடுபிடியினாலும், அடாவடித்தனங்களினாலும் ஒருசில வாரம் தாமதிக்கையில் அதற்காக ஏங்கிய வாசகர்களையும் நாம் அறிவோம். போக்குவரத்து தடைகளினால் ஏற்படும் தாமதங்களையும் தாண்டி காலம் தாழ்த்தி இந்த இதழ் கரங்களில் தவழும் போதும் கூட அது வாசகர்கட்கு ஒரு வரவேற்பு. அதனைப் பரப்புவதில் தம்மைக் கையளிப்பவர்களின் ஆர்வம் இதழின் பெயருக்கு ஒரு மெருகு. உண்மையில் அதில் பொதிந்து வெளிவருவவை சிதறிவாழும் ஒருகுலமான சிறுபான்மையினருக்கு புத்துணர்வூட்டும் ஒரு செய்திப் பொதியை அவிழ்த்துவிடுதலாகும். சத்திய உண்மைகள் பொதிந்த கதைகள், கட்டுரைகள் எண்ணக் குவியல்கள், புத்திமதிகள், பங்கு மாவட்ட ரீதியிலான சம்பவங்கள் நிகழ்வுகள், இனப்பிரச்சினையால் இன்னலுறும் மக்களின் நிலைகள், இளைஞர் சிறுவர், பெற்றோர் மட்டிலுள்ள கடமைகள் உரிமைகள் உலக திருச்சபை நிகழ்வுகள் எனும் விதவித நிகழ்வுகளை நிறையப்பொதிந்து வெளிவரும் ஒரேயொரு தமிழ்க் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் 125 வருடங்களைத் தாண்டியது ஒரு பெரும் சாதனையாகும். இது யாழ். கத்தோலிக்க திருச்சபைக்கு மகிழ்வையும், பெருமையையும் தருவதுமல்லாமல் – சவால்கட்கு மத்தியில் இந்த ஏடு வெளிவருவதற்கு முதுகெலும்பாய் நின்று இதுவரை உழைத்த ஆசிரியர்கள், ஊழியர்கள், அதன் வளர்ச்சிக்கு உதவிய எழுத்தாளர்கள், உபகாரிகள் அனைவர்க்கும் எம் இதயம் கனிந்த இனிய வாழ்த்துக்களையும் இறையாசிகளையும் கூறுவதில் மகிழ்வடைகின்றோம்.

பாதுகாவலன் எம் விசுவாசத்தின் காவலன். இயேசு எம்மிடம் வேண்டுவதும் கடுகளவு விசுவாசமே. தனித்த இந்த ஏடு கத்தோலிக்க மக்களின் தனிவாழ்வு, குழுவாழ்வு குழுமவாழ்வு, அரசியல் வாழ்வு இவற்றின் அடிப்படையில் இதயத்தில் பதியவைக்கும் **இனிய** எண்ணங்களோ அளப்பரியவை. ***வாசினை ஒருவனைப் பூரணனாக்கும். நல்வாசினை ஒருவனை நற்குணனாக்கும்.*** "ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்". (தி.பா.127:1) இப்பொருத்தமான காவலனின் வாக்கியம் துன்புறும் எம்மைப் பொறுத்தவரை முற்றும் பொருத்தமாகும். இறைவனில் மட்டுமே எம் நம்பிக்கையை வைக்க எம்மை அழைக்கும் காவலனின் சவாலை எம் வாழ்வில கடைப்பிடித்து அதன் நீண்டகால சேவையை வாழ்த்தி அதன் வளர்ச்சியை இறையாசியுடன் விரும்புகிறேன். எம் காவலன் தன் பணியைத் தொடர்ந்தும் ஆற்ற எம் ஆசிகளையும், செபங்களையும் உரித்தாக்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

*வாழ்க காவலன்*
*வளர்க அதன் சேவை*

அருட்செல்வி மேரி சோபியா
யாழ். திருக்குடும்ப மாகாணத் தலைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க மணம் கமழும் தனித்துவமான ஒரேயொரு வாரப் பத்திரிகை

## யாழ். கார்மேல் சபை தலைவியின் ஆசிச் செய்தி

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காப்பவன் கண்விழிப்பது வியர்த்தம்" என்னும் இறைவாக்கினை தன் விருது மொழியாகக் கொண்டு அகவை 125 ஐ இறுமாப்புடன் நிறைவு செய்து இன்று விழாக்கோலம் பூண்டுள்ள எம் இனத்தின் பாதுகாவலனை வாழ்த்திப் போற்றுதல் எம் கடனன்றோ. கடல் அலைகள் தாலாட்டக் கண்ணுறங்கும் யாழ். மடந்தையின் மையத்தில் குடிகொண்டு, சத்தியவேத பாதுகாவலன் என்னும் காரணப்பெயர் சூடி, அன்றும் இன்றும் மறைபரப்பி, மறை வளர்த்து, மறைக்காய் உழைத்த, எம் பாதுகாவலன் சேவைகள் காலத்தால் அழியாதவை, பொன் அச்சரங்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

எமது தமிழ்த்தாய் மண்ணில் வேரூன்றிய வேதநெறியானது பெரும் ஆலவிருட்சமாய் விழுதூன்றி, கிளைபரப்பி, செழித்தோங்க, நீரிறைத்ததும் இந்தக் காவலன் ஏடுகள் எனின் மிகையாகாது. ஒரு நூற்றாண்டைப் பூர்த்தி செய்து அடுத்த நூற்றாண்டிலும் கால்பதித்து வீறுநடைபோட்டு நிற்கும் காவலன் பத்திரிகைக்கு வித்திட்டு அதை நாளும் பொழுதும் வளர்பிறையாய் வளர்த்தெடுக்க, அரும்பாடுபட்டு இவ்வுலகை விட்டுப் பிரிந்துவிட்ட சேவை உள்ளங்களை இவ்வேளையில் நினைகூருதல் எம் கடனாகும். அன்றாடம் எத்தனையோ நாடேடுகள் வெளிவரினும் கத்தோலிக்க மணம்கமழும் தனித்துவமான ஒரேயொரு வாரப் பத்திரிகை இதுதான் என்பதை நாம் மறக்கலாகாது.

இன்று அகில உலகும் போற்றும் பரிசுத்த பாப்பரசரின் வத்திக்கான் செய்திகளை யெல்லாம் தன்னுள் சுமந்து, எமக்கு அளித்துவரும் காவலனே! நீ வாழி! இன்னும் எமது மறைமாவட்டத்தை தன் அரும்பெரும் சேவையால் ஆண்டு நடத்தி வருகின்ற ஆசானும் இந்த ஏடுதான் என்பதை எம் நெஞ்சங்கள் நன்றியுடன் நினைவு கூருகின்றன. போர் மேகம் சூழ்ந்திருக்க புலம்பெயராது, இடம் அகலாது, அயராது உழைக்கும் காவலன் பத்திரிகையின் உறுதிகண்டு வியக்கின்றோம். முந்தையர்க்கும் எம் தந்தையர்க்கும், எம்மவர்க்கும் தூது சொல்லும் சேவகனாய் 125 வருடகாலங்கள் எம்மிடை வலம் வந்து அருந்தொண்டாற்றிய பாதுகாவலனே உன்னை அன்று போல் இன்றும் வாழியென நாவார வாழ்த்துகின்றோம். இன்று கடந்தகால உயர்பணியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் காலத்தின் தேவையுணர்ந்து பரிபாலனத் தகைமையுடன் பணியாற்றும் அச்சக அதிபரையும் உடன் ஊழியர்களையும் வாழ்த்தி நன்றி கூறுவதிலும் மகிழ்ச்சியடைகின்றேன்.

"காவலன்" இறையாசி நிறைக வளர்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

அருட்செல்வி எம். ஜெறோம் அ.கா.
கார்மேல் மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SOUVENIR OF THE GOLDEN WEDDING OF CHEVALIER V. FRANCIS THAMPOE

KNIGHT OF THE ORDER OF ST. SYLVESTER, AND MRS. THAMPOE OF "MANIAGAR LODGE,"

FIRST CROSS STREET, JAFFNA

5TH FEBRUARY, 1883——5TH FEBRUARY, 1933.



Times of Ceylon

Photo taken on the occasion of the celebration with His Lordship the Bishop of Jaffna and clergy. The Jubilarians are seen on either side of His Lordship together with the members of his family. Chevalier Thampoe was the Editor of the "Catholic Guardian" for 50 years.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய ஆழத்துடன் வாழ்த்தி நிற்கின்றோம் திருச்சிலுவை கன்னியர் நாம்

## திருச்சிலுவை கன்னியர் மாகாண தலைவியின் ஆசிச் செய்தி

தமிழ் மணக்கும் யாழ் மண்ணில் மலர்ந்து மணம் பரப்பி
ஆண்டுகள் நூற்று இருபத்தைந்து தனை இறையடியார்கள் மத்தியில்
மிகச்சிறப்பான சான்று பகர்வுடன் நிறைவு செய்யும் எமதன்பு - பாதுகாவலனே
உனை நாங்கள் உளமார களிகூர இதயம் நல்க
இதமுடன் வாழ்த்துவதில் பெருமையடைகிறோம் திருச்சிலுவைக் கன்னியர் நாம்

இவ்வினிய நற்றாளினிலே எழுகின்றன கேள்விக் குறிகள்
எம்மவர் உள்ளங்களில் உனதருமை வரவை மீட்க
எப்படி கருக்கட்டினாய் எவ்வாறு உருவாகினாய்
ஏன் மலர்ந்தாய் யாழ் மண்ணில் - என்பவைதான் அக்கணைகள்

போற்றத்தக்க பொஞ்சின் ஆண்டகையால்
ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து ஓராம் ஆண்டினில்
தமிழ் மணக்கும் யாழ் மண்ணில் கத்தோலிக்க அச்சகம் என்றமைக்கப்பட்டு
ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தாறாம் ஆண்டினில்
கத்தோலிக்க மக்களின் பாதுகாவலனாக வெளிவந்தாய்
என்பதில் எள்ளளவும் ஐயமில்லை

கத்தோலிக்க மக்களின் கொள்கைகளை களங்கமின்றி காட்டிடவும்
இவர்களது இடர்பாட்டில் சுமூகமான தீர்வுகளைக் காணவும்
இலங்கை மக்களின் உரிமைகளை ஊருருவமாக உணர்த்தவும்
இவர்களுக்கு எதிரான பாரபட்சங்களை படம்பிடித்து பகிரவும்
இறைமக்கள் போற்றும் இனிய நற்காவலனாக மலர்ந்துவிட்டான் அன்று

அன்றுமுதல் இன்றுவரை வாழ்ந்துவிட்ட வாழ்ந்துவரும் - மக்களின்
வாழ்க்கை சக்கரத்திற்கமைய பல்வேறுபட்ட கோணங்களில்
பலவிதமான உளப்பாங்கு கொண்டவர் மத்தியில்
மலர்ந்து மணம்பரப்பி நாளாந்தம் வளர்ந்து முதிர்ந்துவரும் - காவலனே
உனை நாங்கள் உளமார வாழ்த்துகிறோம்.

உனது ஆக்கங்களோ தனித்துவம் - அதிலும் புனிதத்துவம்
அத்தத்துவத்தில் நித்திய ஜீவனை நிஜமாகக் காட்டி
தியானிக்கவும் உறவுகொள்ளவும் ஊக்கமூட்டுகின்றாய்
உனது அறிவினால், ஆற்றலினால், அன்பினால், பகிர்தலினால்
இறை - மனித உறவு பூரணத்துவம் பெற்று பூவுலகில் வாழ
வெவ்வேறு வடிவங்களில் வலம் வந்து எம்மவரைக் கவர்ந்து நிற்கிறாய்

எத்தனை எத்தனை ஆக்கங்களோ உனதென்றாலும்
அத்தனையும் ஒன்றிற்காக - அதுதான் அடியவர்
ஆண்டவனை அறிந்து அன்புசெய்து அவரிடத்திற் சேர்வதற்கே
தொடர்ந்து வரும் காலங்களில் தொடரலையாகத் தொண்டாற்றி
பல்லினிய நாதங்களை பாரினில் மீட்டி பரமனைப் போற்றிட
இதய ஆழத்துடன் வாழ்த்தி நிற்கிறோம் - திருச்சிலுவைக் கன்னியர் நாம்

**அருட்சகோதரி ஐடா தோமஸ்**
**திருச்சிலுவைக் கன்னியர் மாகாணத் தலைவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிக்கும் மனித நேயத்திற்கும் சமாதானத்திற்கும் குரல்கொடுத்த ஒரேஒரு கத்தோலிக்க பத்திரிகை

## செபமாலைத் தாசர் சபை தலைவியின் ஆசிச் செய்தி

125 ஆண்டு நிறைவுவிழா, அது ஒரு நினைவைக் கவரும் நிகழ்வாகும். இது எம்மை கடந்த காலங்களைப் பின்நோக்கி பார்க்கச்செய்வது மட்டுமல்ல, வளமான எதிர்காலத்தை நோக்கி வீறுநடை போடவும் தூண்டும் அரிய நிகழ்வு என்று கூறினால் மிகையாகாது.

எமது ஈழமண்ணின் ஒரேயொரு கத்தோலிக்கத் தமிழ் பத்திரிகையான சத்தியவேத பாதுகாவலன் 125 ஆண்டு நிறைவைக் காணும் இந்த சந்தர்ப்பத்தில் அது கடந்து வந்த பாதையையும் அதன் வரலாற்றையும் திரும்பிப் பார்க்கும்போது பாதுகாவலன் வாசகநேயர்கள் மட்டுமன்று அனைத்துக் கத்தோலிக்க உலகுமே பெருமையுடன் நன்றிக் கடனைச் செலுத்தக் கடப்பாடுடையதாகும்.

கடந்த 125 ஆண்டுகளாகப் பாதுகாவலன் சந்தித்த மேடுபள்ளங்கள், கஷ்ட நஷ்டங்கள், இடையூறுகள், சவால்கள், இழப்புக்கள் போரின் அனர்த்தங்கள் இடப்பெயர்வுகள் மத்தியிலும், அச்சுக்கூடம் இயங்கமுடியாத சூழ்நிலையிலும், வெற்றுத்தாள்கள் கிடைக்காத வேளைகளிலும், இத்தனை பின்னடைவுகள் மத்தியிலும் வீரமுடன் இறைஅரசின் விழுமியங்களுக்குத் துணிந்து நின்று நீதிக்கும் மனிதநேயத்துக்கும் சமாதானத்திற்கும் குரல் கொடுத்த ஒரேயொரு கத்தோலிக்க பத்திரிகை இதுவே எனப் பெருமையுடன் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றோம். இந்தக் காலங்களில் கடமைபுரிந்த வீரச்செம்மல்களான அருள்தந்தையர்களின் கடமையுணர்வையும் கடின உழைப்பையும், விடாமுயற்சியையும், கலைத்திறனையும் காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ப ஆற்றிய அளப்பரிய சேவைகளைப் பாராட்ட அகராதிகளில் உள்ள வார்த்தைகள் போதவே போதா. இவர்களுடன் தோள் கொடுத்துதவிய அனைவரையும் நன்றிப்பெருக்குடன் பாராட்டுகின்றோம்.

எமது பாதுகாவலன் பத்திரிகை இன்னும் சிறந்தோங்கி வளரவும், இன்னும் பல நூற்றாண்டுகளைக் காணவும், பலநாடுகளில் வாழும் தமிழ் கத்தோலிக்க நெஞ்சங்களைச் சென்றடையவும், ஏனைய மதத்தவரும் இப் பத்திரிகையின் ஆன்மீக நீரோடையில் பருகவும் வேண்டுமென ஆசித்து இப் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்திருக்கும் அனைவருக்கும் இறைஆசீர் வேண்டி நிற்கிறோம்.

அருட்சகோதரி M. பப்ரிஸ்ட் C.R
செபமாலைத் தாசர் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலனின் நிறைவான பணி பலரின் ஆன்மீக ஈடேற்றத்துக்கு உதவியாக அமைந்துள்ளது

## நல்லாயன் சபை சகோதரிகளின் ஆசிச் செய்தி

யாழ். மண்ணில் சிறு அரும்பாக மலர்ந்து இன்று 125வது ஆண்டு நிறைவுக் கிளையினைப் பிடித்து நிற்கும் பாதுகாவலனுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

"சிலுவை நாயகன் சிந்திய இரத்தம் வீணாய் போகின்றதே சிறுமை அடைந்திடும் உலகை மறந்து நீ சிலுவை நோக்கி வா" என்று இன்றைய சீர்கெட்ட உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒவ்வொருவனுக்கும் அழைப்பு விடுவது போன்று இன்று பாதுகாவலனின் பணிதொடர்கின்றது.

இன்று எமது யாழ். மண் பலதரப்பட்ட சவால்களையும், கருத்து வேறுபாடுகளையும் சந்தித்துக் கொண்டிருக்கும் காலகட்டங்களில் ஒரு மனிதனை சீர்ப்படுத்தக் கூடிய கருத்து மிக்க அங்கங்களையும், வேதாகம விழிப்புணர்வுப் போட்டிகளையும் புதுப்பொலிவுடன் அள்ளி வழங்கி எமது ஆன்மீக அறிவுக் கண்களைத் திறக்கின்றது.

இங்கிலாந்தில் இருக்கும் ஒருவருக்கு நொடிப்பொழுதில் செய்தியனுப்ப இன்ர நெற்றைத் தெரிந்தெடுப்பது போல் பாப்பரசரின் செய்தியை விரைவில் அறியப் பாதுகாவலனைத் தெரிந்தெடுக்கின்றோம். இவ்வாறு உலகச் செய்திகள் அடங்கிய விடயங்களை இரத்தினத் துளிகளைப்போல வாரி வழங்கி வருகின்றது.

பாதுகாவலனே உம்முடைய எழுதுகோல் ஆயிரமாயிரம் ஆண்டு காலம் எழுதப்பட வேண்டியது. இப் பணியினால் ஆயிரம் உள்ளங்களின் மனக்கண்கள் திறக்கப்பட வேண்டியது. வானத்தில் சூரியன் உள்ளவரை பால்நிலவு உள்ளவரை பகட்டான மனிதன் மறையும் வரை பாதுகாவலனின் பணி தொடரட்டும், தொடர்ந்து முழுங்கட்டும் என பாது காவலனை வளமுடன் வாழ்த்துகின்றேன்.

*"மை சொட்டும் விழிகள் பார்க்கட்டும் உள்ளம்*
*மனம் திரும்பட்டும்"*

*வளர்க நின் பணி சிறக்க.*

**யாழ். நல்லாயன் சகோதரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை விசுவாச வாழ்வில் பாதுகாத்து வழிநடத்தி வருகின்றது பாதுகாவலன்

## செபமாலைத் தாசர் சபை மாகாண முதல்வரின் ஆசிச் செய்தி

ஈழநாட்டின் திருமறையில் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் "சத்தியவேத பாதுகாவலன்" கடந்த 125 ஆண்டுகளாக நமது கத்தோலிக்க விசுவாசத்தைக் கட்டுக்கோப்போடு காத்து வீரத்தோடு வளர்த்து இன்று ஓர் உன்னத உயர்ந்த நிலைக்கு நம் திருமறை வளர வழி வகுத்துள்ளது.

மக்களுக்கு விசுவாச உண்மைகளை விளக்கத்தோடு கொடுத்து விசுவாச வாழ்வுப் பயணத்தில் தளர்வுகளில் ஊக்கமும், எதிர்ப்புக்களில் வீரமும், உண்மைச் செய்திகளில் உயர்வுத் தன்மையும், வழிகாட்டலில் விழிப்புணர்வும், திருமறையின் தனிப்பெருந் தலைவராம் திருத்தந்தையின் அறிவுரைகளை வெளிப்படுத்துவதும், வீரவிசுவாசத்தோடு கிறிஸ்தவ விழுமியங்களைத் தங்கள் அன்பு வாழ்வில் வாழ்ந்து மற்றவர்களையும் வாழத்தூண்டிய புனிதர்களின் முன்மாதிரிகைகளை அவ்வப்போது கொடுத்தும், திருமறையின் வாழ்வுச் சக்கரத்தில் வரும் புனித திருவிழாக்களின் தன்மைகளை வெளிக்காட்டி திருவருகை, கிறிஸ்து பிறப்பு, பொதுக்காலம், தவக்காலம், பாடுகளின் வாரம், கிறிஸ்து உயிர்ப்புக்காலம், பரிசுத்த ஆவியின் காலம், அன்னை மரியின் பெருவிழாக்கள், புனிதரின் திருநாட்கள் போன்று அக்காலங்களுக்கேற்ப மக்களை மீட்புப் பணியில் பங்கேற்கும் மக்களாக வழிநடத்தி அன்பு வழியில் நிலைநிறுத்தி இன்றைய பெரும் பிரச்சினைகள் சூழ்ந்த காலத்திலும் விசுவாசம் ஒன்றுதான் நமக்கு விடிவைக் கொடுக்கும் விடிவெள்ளி என்ற உண்மையை வெளிக்காட்டி மக்களை இறை விசுவாச வாழ்வில் பாதுகாத்து வழிநடத்தி வருகிறது பாதுகாவலன்.

திருமறைக்கெதிரான பிரசாரங்களை சூட்டோடு சூடாக களைந்தெறிந்து ஞானம் படைத்த காவலன் ஆன்மீகப் பணியோடு சமுதாய அன்பு வாழ்க்கையின் அன்றாடத் தேவை களைத் தன்னாலானவரை நிறைவுசெய்யத் தவறவில்லை. தமிழ்க் கலை கலாச்சார பண்பாடு களை அவ்வப்போது மக்களிடையே புகுத்தி திருமறை எழுத்தாளர்களையும் புலவர் பெரு மக்களையும் கௌரவித்து வளர்த்து வந்தது.

யாழ் மறைமாவட்டத்திலே தோலகட்டி என்னும் இடத்தில் நிறுவப்பட்ட :செபமாலைத் தாசர், செபமாலைக் கன்னியர் துறவு சபைகளின் வாழ்வுத்தன்மையை வேண்டியபோது வெளிக்காட்டி இதன் நிறுவுனர் தவத்திரு வ.அ. தோமஸ் அ.ம.தி அடிகளாரின் புனிதம் நிறை வாழ்வை நம்மவர்க்கு முன்மாதிரிகை:யாகக் கொடுப்பதோடு அனைத்து துறவு சபைகளின் உள்ளுயிரை, அன்புப் பணியை வெளிக்காட்டி திருமறை வாழ்வில் துறவு சபைகளின் பங்கு எவ்வளவு முக்கியம் என்பதை எப்போதும் எடுத்துக்காட்டுகிறது பாதுகாவலன்.

இன்னும் பல் நூறாண்டு திருமறை ஒளிச்சுடரை ஏந்தி கம்பீர நடைபோடவேண்டும் என்பது எனது ஆசையும் வேண்டுதலுமாகும்.

**அருள்திரு அ.ம. ஸ்ரீபன் செ.தா.**
**இலங்கை மாகாண முதல்வர்**
**செபமாலைத் தாசர் சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மாண்பு மறுக்கப்படும்போது அதற்கெதிராக குரல்கொடுக்கும் பாதுகாவலனின் பணி பாராட்டுதற்குரியது

## திருவுளச் சபை மாவட்ட அதிபரின் ஆசிச் செய்தி

இலங்கையில் முதன் முதல் வெளிவந்த தமிழ் கத்தோலிக்க பத்திரிகையான பாதுகாவலன் தன்னுடைய மறைபரப்புப் பணியில் 125ம் ஆண்டை நிறைவு செய்கின்ற இந்த நேரத்தில் அதன் பரிணாம வளர்ச்சியை வாழ்த்தி அதற்கு ஆசிச் செய்தி அளிப்பதில் அக்களிப்படைகின்றேன்.

சமூக, பொருளாதார, அரசியல் பின்னடைவுகள் நடுவே ஆசிரியரின் அயராத உழைப்பினால் இதன் தரமும் பருமனும் வளர்ந்து வருவது மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இது தனியே யாழ். கத்தோலிக்க செய்திகளை மட்டுமன்றி அகில உலக கத்தோலிக்க செய்திகளையும் தனதாக்கி இலக்கியப் படைப்புக்களூடே ஆன்மீகத்தை மக்கள் மத்தியில் விதைத்து மனித மாண்பு மறுக்கப்படும் போது அதற்கு எதிராக குரல் கொடுப்பதும் மிகவும் பாராட்டுக்குரியதொன்றாகும். உள்நாட்டில் மாத்திரமின்றி வெளிநாட்டிலும் தமிழ்க் காற்றைச் சுவாசிக்கும் ஒவ்வொரு உள்ளமும் இதன் அயராத சேவையால் ஆன்மீக பயன்பெறும் ஒரு ஊடகமாக இது அமைகின்றது. இதன் சேவை உலகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளுக்கும் சென்று அவர்களின் கைகளில் தவழ்ந்து அவர்களுக்கு ஆன்மீக வழிகாட்டி பசிதீர்த்துப் போஷிக்க என் அன்பான நல்லாசிகள் என்றும் உங்களுடன்.

**அ.றெ. லொயிட் சாந்திக்குமார்**
**மாவட்ட அதிபர், இலங்கை**
**திருவுளச்சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருண்ட எம் தமிழ் மண்ணின் வாழ்விற்கு ஒளியூட்டுவது பாதுகாவலன்

## கிளறீசியன் சபையினரின் ஆசிச் செய்தி

தமிழ் பேசும் கத்தோலிக்க உலகிற்கு ஒரு தன்னிகரில்லா சேவையைக் கடந்த 125 ஆண்டுகளாக காவலன் பல இன்னல்கள் மத்தியில் ஆற்றிவருகிறது என்றால் இறை யாசீர்தான். இந்த ஆசியினால் தான் ஆயிரக்கணக்கான திருச்சபைச் செய்திகளை மக்கள் வியப்புடன் படித்துத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக இலங்கையில் ஏறக்குறைய அனைத்து மறைமாவட்டங்களிற்கும், வெளி உலகிற்கும் ஆற்றுகின்ற சேவையை எண்ணி மகிழுகின்றேன்.

மலைநாட்டில் நான் பணிபுரிகின்றபோது பாதுகாவலன் பத்திரிகை போரின் அனர்த் தத்தின் மத்தியிலும் பல வடிவங்களில் வெளிவந்து கொண்டிருந்தது. யார் என்ன செய்தாலும் பரவாயில்லை என்ற துணிவுடன் செய்திகளைத் தாங்கி வந்துகொண்டிருந்த வேளைதனில் யானிதனை பெருமையுடன் மக்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றேன்.

போர் என்ற புயலில் காகிதங்கள் பறந்தாலும், காகிதங்களுக்கு தடை விதிக்கப் பட்டாலும் செய்திகள் பரீட்சை எழுதும் தாளில் வந்த நாட்களையும் எண்ணிப் பெருமைப் படுகின்றேன். வசதிகள் குறைந்தால்தான் வளர்ச்சி பெருகுகிறது என்பார்கள். இவ்வாறு மக்களின் ஆன்மீக வளர்ச்சியிலும் திருச்சபையின் அன்றாட முன்னேற்றங்களையும், நிகழ்வு களையும் எடுத்துக் கூறுவதிலும் பாதுகாவலன் பின் நிற்கவில்லை. இவ்வாறு விடா முயற்சியுடன் என்றும் தனித்துவமாக தொடர்ந்தும் பல நூற்றாண்டுகள் – மக்களின் ஆன் மீக வாழ்விற்கும் அறிவு வளர்ச்சிக்கும் அணையாமல் ஒளியூட்ட வேண்டுமென்றும், காவலன் வளர வேண்டுமென்ற வாஞ்சையுடன் பணிபுரியும் அதிபர் ஆசிரியர்கள் ஊழியர்கள் தொடர்ந்து தமது அர்ப்பண சேவையை அளிக்க ஆசித்து நிற்கின்றேன்.

அருள்திரு S.R. கொன்ஸ்ரன்ரைன் C.M.F.
கிளரீசியன் மிசனரீஸ்

'கிளாரட் அகம்'
15, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Paathukavalan inspite of serious difficulties at different periods of its long career valiantly kept on

*Message from Morning Star*

The Fathukavalan having completed 125 years of service to the Tamil people of Sri Lanka us bringing out a souvenir of the happy event. The souvenir must indeed be a very interesting production, as it will reflect the records of a 125 years. On such great occasion the Morning Star with much pleasure sends to its esteemed contemporary message of hearty goodwill and sincere felicitation on the successful past, coupled with an earnest desire that it may continue its service to the country for another 125 years and more.

Paathukavalan one of the oldest newspapers in the north, at its inception it had to undergo much difficulties because Jaffna was cut off from the rest of the Island for want of facilities of communication. The Paathukavalan was the sole purveyor of news and the exponent of current questions wielding thus considerable influence among the catholic and other Tamil speaking people of Sri Lanka.

In the third half of the 19th century many a paper, which appeared, later gave up the struggle after a time. But the Paathukavalan in spite of serious difficulties at different periods of its long career valiantly kept on, on now has come to the ripe old age of 125. This is no doubt a rare journalistic feat. The editors, managers and the Catholic Church in Jaffna who are largely responsible for it deserve credit for its indomitable courage.

In the present perilous time where the people are confronted **with** perplexing problems, political and social and with the weakening of moral values will look for a safe guide and we are confident that the Paathukavalan true to its name will prove to be such, and so fulfil the high purpose for which it was founded.

**Rev.A.A.Paul**
**Editor**
**Morning Star**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The winning of National Award for the Best Designed newspaper is a tribute from the National media to Paathukavalan

## *Message from Catholic Messenger*

It is a great privilege to write a message for the souvenir of the prestigious Tamil weekly paper Paathukavalan, celebrating its 125th anniversary.

Considering the vicissitudes and problems caused by the present conflict, the continued publication of the paper shows the fortitude, courage ands determination of its editor to provide the distressed people with the beacon of hope and a message of love and compassion. A difficult task indeed given the situaion that exist, but the paper is popular shows the effectiveness of its message.. The winning of National award for the best designed news paper is a tribute from the National media to a paper that is striving against the great odds and is succeddings.

The Paathukavalan has become at this time of uncertinity an instrument bonding the Tamil Catholics not only within the Country but also abroad. It creates nostalgia for days past and renewed hope for the better future.

The Catholic paper in the Island the Gnanarathapredeepaya established in 1869, The Messenger in 1866 and the Paathukavalan now chalking up 125th year have all played a very dynamic role in maintaining Gospel values within a changing society.

I sincerely hope that Paathukavalan amidst the numerous difficulties and uncertainities it faces will continue in its task as outlined by Pope John Paul 11 " Christian communities have a task, a prophetic vocation, to protect against the false gods and idols of our time, materialism, hedoism, consumerism and extreme nationalism".

I wish the paper all success and may its vision provide hope to the people.

God bless you and your work.

Manel Abhayaratna
**Editor**
**Catholic Messenger**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(L-R) **Rev. Fr. S. J. Vedanayagam O.M.I,**
**Rev. Fr. B. A. John O.M.I**
**1950-04-30**



(L-R) **Rev. Fr. F. J. Stanislaus O.M.I,**
**Rev. Fr. C. Schuermans O.M.I**
**1953-04-30**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழரின் பாதுகாவலன்

## உதயன் ஆசிரியரின் ஆசிச் செய்தி

ஈழம் வாழ் கத்தோலிக்கரின் தமிழ்க் குரலாக ஒலிக்கும் "பாதுகாவலன்" பத்திரிகை அதன் வரலாற்றுப் பாதையில் 125 ஆண்டுகளை நிறைவுசெய்வது அறிந்து பேருவகை அடைகிறோம்.

முதலாவது தமிழ் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலனின் தோற்றமும் வளர்ச்சியும் நீண்ட சரித்திரப் பின்னணி கொண்டவை.

யாழ். குடாநாட்டு கத்தோலிக்க மக்களின் குரலாகவும் இந்த மண்ணிலிருந்து உலகம் முழுவதும் ஒலிக்கும் "பாதுகாவலன்" யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் அனுபவித்த எல்லா நெருக்கடிகளையும் இடர்பாடுகளையும் எதிர்கொண்டு அந்த அனுபவங்களுக்கூடாக வீறுநடை போட்டு வளர்ந்து வருவது வியந்துரைக்கப்பட வேண்டியது.

1876ஆம் ஆண்டு பாதுகாவலனின் முதல் பிரசவத்திற்கு அடித்தளமிட்ட – அத்திவாரமாகத் திகழ்ந்த – மதத் தலைவர்கள் முதல் இன்று அதன் ஆசிரியராக விளங்கும் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை வரை மிகப் பலரது ஆளுமையும் அயராத அர்ப்பணிப்புமே பாதுகாவலனின் இன்றைய வளர்ச்சிக்கு உரமாகின.

"பாதுகாவலனின்" தோற்றமும் வளர்ச்சியும் குடாநாட்டின் அச்சுக் கலை வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடையது.

அச்சுக் கலையின் பல்வேறு படிமுறைகளையும் தாண்டி இன்று நவீன ஒவ்செற் அச்சுப் பதிப்பாக வெளிவந்துகொண்டிருக்கும் "பாதுகாவலன்" கத்தோலிக்க தமிழர்களின் காவலனாக மட்டுமன்றி முழுத் தமிழ் மக்களின் உரிமைக்குரலாகவும் ஓயாது ஒலிக்க வேண்டும்.

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் அவையால் **(Editors Guild of Sri Lanka)** ஆண்டுதோறும் வழங்கப்படும் பத்திரிகைத்துறை விருதுகளில் கடந்த ஆண்டு சிறந்த பக்க வடிவமைப்புக்கான விருது "பாதுகாவலன்" பத்திரிகைக்கு கிடைத்தது பெரும் சிறப்பாகும்.

பலரால் புடம் போடப்பட்டு இன்று பிரகாசிக்கும் "பாதுகாவலன்" பத்திரிகை அதன் பாரம்பரியத்தை தொடர்ந்து கட்டிக்காத்து அதற்கு மேலும் மெருகூட்டும் என்பது எமது நம்பிக்கை.

125ஆவது ஆண்டு நிறைவை முழு நிறைவுடன் கொண்டாடும் "பாதுகாவலன்" குடும்பத்தினருக்கு "உதயன்" பத்திரிகைக் குடும்பத்தினர் தங்கள் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**ம. வ. கானமயில்நாதன்**
**பிரதம ஆசிரியர்**
**உதயன் - சஞ்சீவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்காலத்தின் நிஜங்களை வெளிப்படுத்துகிறாய்

## தொண்டன் ஆசிரியரின் ஆசிச் செய்தி

அரிய பல பணிகள் புரிந்து,
ஆண்டுகள் 125 கடந்து,
ஆனந்த வெள்ளத்தில் திழைத்திருக்கும் பாதுகாவலனே,
உனக்கு எமது பாராட்டுக்கள்.
உன்னை விசுவாசத்தின் காவலன் என்பதா?
விம்முகின்ற சமுதாயத்தின் தோழன் என்பதா?
பெயருக்கேற்ற பணி செய்து வருகிறாய்,
இறையாசிரையூட்டி உயிர் கொடுக்கிறாய்,
இறைமக்களைப் பாதுகாத்து வருகிறாய்,
வீரமுடன் விசுவாசத்தைப் பாதுகாத்து வருகிறாய்,
இறையனுபவங்களையும், விசுவாசப் பகிர்வுகளையும் பரவலாக்குகிறாய்,
சிறுகதை கூறிச் சிந்திக்க வைக்கிறாய்,
போட்டிகளினால் புத்தியைக் கூர்மையாக்குகிறாய்,
உன் பணியில் பலர் வாழ்வு பெறுகிறார்கள்.
தொடரட்டும் உன் பணி,
பரவட்டும் பாரெல்லாம் உன் புகழ்,

பெயருக்கேற்ற பணிசெய்து மக்களை பாதுகாத்து வருகிறாய்,
அகதிகளின் அவலங்களை அவனி அறியச் செய்கிறாய்,
அநீதிகளைச் சுட்டிக் காட்டுகிறாய்,
போர்காலத்தின் நிஜங்களை வெளிப்படுத்துகிறாய்,
பட்டினி மரணங்களையும், மருந்து தட்டுப்பாடுகளையும்
பட்டியல் படுத்துகிறாய்,
ஓரினம் நசுக்கப்படும் போது
இறைவாக்குப் பணியை இனிதே செய்கிறாய்,
உன்குரல் சர்வதேசத்தில் ஒலிக்கட்டும்!
உன்முயற்சி இறையரசை ஓங்கச் செய்யட்டும்!
வளரட்டும் உன் துணிவு. வாழட்டும் உன்பணி!
இறையாசீர் வேண்டி நிற்கிறேன்.

அருள்திரு J.A.G. றெட்ணகுமார்
ஆசிரியர் - தொண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் தனது வரலாற்றில் எத்தனையோ கத்தோலிக்க மக்களின் எழுத்தாற்றலை அறிவை வளர்த்திருக்கிறது

## அருள்ஊற்று ஆசிரியரின் ஆசிச் செய்தி

இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் விசுவாசத்தில் விழிப்புணர்ச்சியடைந்து, ஆன்மீக வழிநடக்கவும், கத்தோலிக்க மதத்தை வளர்ச்சிபெறச் செய்யவும் வேண்டுமென்ற நோக்குடன், இலங்கையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட கத்தோலிக்க தமிழ் வார பத்திரிகையான பாதுகாவலன் திக்கெட்டும் மணம்பரப்பி, 125ஆண்டுகளைப் பூர்த்திசெய்துள்ளமை குறித்து பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இப் புதிய நூற்றாண்டில் பல வண்ண அட்டைகளைத் தாங்கி வலம் வந்து கொண்டிருக்கும் பல பத்திரிகைகள், கவர்ச்சி என்ற போர்வையில் நம் இளைய தலைமுறையினரின் உள்ளங்களில் தவறான சிந்தனையைப் புகுத்தி ஒழுக்கத்தைச் சீர்குலைக்கும் வகையில் இளைஞர்களை வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பயன்படாதவர்களாய் ஆக்கிக்கொண்டிருக்கின்றன.

பொழுதுபோக்கிற்காக இத்தகைய மோசமான பத்திரிகைகளை படித்து கண் மூடித்தனமாக நடக்கும் மக்களை, குறிப்பாக இளைஞர்களைத் தீய சக்தியிலிருந்து பாதுகாத்து, கத்தோலிக்க மக்களின் விசுவாச வளர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்கும் பாதுகாவலன் தன் பணியினை 125 ஆண்டுகளாக தொடர்ந்து மேற்கொள்ள பலவிதமான இன்னல்கள், இடையூறுகளை அனுபவித்திருக்கலாம். கடந்த 20 ஆண்டுகளாக நாட்டில் இடம் பெற்று வரும் யுத்த நிலையிலும் தன் பணியை அயராது மேற்கொண்டு வருவது போற்றுதற்குரியது. மேலும் இப்பத்திரிகை தனது வரலாற்றில் எத்தனையோ கத்தோலிக்க மக்களின் எழுத்தாற்றலை, ஆர்வத்தை, அறிவை வளர்த்திருக்குமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இன்று எத்தனையோ பத்திரிகைகள் வெளிவருகின்றன. வந்தவேகத்தில் காணாமலும் போய்விடுகின்றன. ஆனால் பாதுகாவலன் பத்திரிகையுலகில் தனக்கென்று தனியிடத்தைப் பிடித்து நிலைத்து நிற்கின்றதென்றால் அதன் சிறப்பும், தரமும், முயற்சியும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

நாடெங்கிலும் வாசகர்களையும் படைப்பாளிகளையும் கொண்டிருக்கும் பாதுகாவலன் மென்மேலும் வாசகர், அபிமானிகள், படைப்பாளர்களின் பேராதரவைப் பெற்று, கத்தோலிக்க மக்களது விசுவாசத்தின் பாதுகாவலனாகச் சிறப்புடன் தன் பணியைத் தொடர இறைவனைப் பிராத்திப்பதுடன், எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

நன்றி

கிறிஸ்துவில் அன்புடன்
**அருள்திரு மில்ரோய் பொன்சேகா**
**ஆசிரியர் - அருள்ஊற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மண்ணின் மக்கள் குரலாக மனசாட்சியின் குரலாக தொடர்ந்து ஒலித்தான் பாதுகாவலன்

## மன்னா ஆசிரியரின் ஆசிச் செய்தி

இலங்கையின் முதல் தமிழ்த் கத்தோலிக்க பத்திரிகை பாதுகாவலன். இந்தப் பெருமையோடு கடந்த 125 வருடங்களாக பாதுகாவலன் பவனி வருகின்றான். தமிழீழக் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றோடு பாதுகாவலன் பின்னிப் பிணைந்துள்ளான். பக்க பலமாக நின்று உழைத்துள்ளான். இம் மண்ணின் விசுவாசத்தைப் பாதுகாத்து வளர்ப்பதில் பாதுகாவலனின் பங்களிப்பு பாரியது. இந் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் வேத விசுவாசத்திற்கு எதிரான பேதகங்கள், தப்பறைகள் போன்றன இத்தமிழ் மண்ணில் தலை தூக்கிய போதெல்லாம் சத்திய வேத பாதுகாவலனாக இப்பத்திரிகை யுத்தம் புரிந்துள்ளதைச் சரித்திரம் சொல்லும்.

போராட்டத்தின் வீரத்தழும்புகளை தாங்கிக்கொண்டு, இழப்புக்களைச் சுமந்து கொண்டு, விடுதலையின் பேறுகால வேதனையில் அவஸ்தைக்குள்ளாயிருக்கும் இத்தமிழ் மண்ணின் மக்கள் குரலாக மனட்சாட்சியின் குரலாக பாதுகாவலன் தொடர்ந்து ஒலித்தான். ஆயுதப்போராட்டத்தின் பயங்கரங்கள் – இருள் சூழ்ந்த காலங்களிலெல்லாம் தமிழ் பத்திரி கையின் குரல் வளைகள நெரிக்கப்பட்டன. அந்த இக்கட்டான காலங்களிலெல்லாம் பாது காவலன் பக்கசார்பின்றி மக்களுக்காக வாதாடினான்.

பாதுகாவலன் பத்திரிகையின் 125 ஆவது ஆண்டு நிறைவிலே மன்னார் மறைமாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகையான "மன்னா" மகிழ்கிறது. மன்னா பத்திரிகையின் பதிப்பாசிரியர் என்ற வகையில் மன்னா எழுத்தாளர்கள், வாசக அன்பர்கள், மற்றும் மன்னார் மறைமாவட்ட இறை மக்கள் சார்பாக பாதுகாவலனை வாழ்த்தி நிற்கின்றேன்.

எனது சிறுபராயத்திலிருந்தே பாதுகாவலன் என் பக்க தோழன். எனது சிந்தையில் சிதறிய சின்னச்சின்ன எண்ணங்களை எழுத்துருவாக்கியபோது அதற்குக் களம் அமைத்து என்னை கௌரவப்படுத்தியது இந்தக் காவலனே. எனவே இச் சந்தர்ப்பத்தில் பாது காவலனின் இப்பாரிய வளர்ச்சியிலும் முதிர்ச்சியிலும் தனிப்பட்ட முறையில் எனது மகிழ்ச்சி யையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன். இவ் இக்கட்டான யுத்த சூழ்நிலையிலும் பத்திரிகைப் பணி ஆற்றுகின்ற பாதுகாவலன் ஆசிரியர் ரூபன் மரியாம்பிள்ளை அடிக ளார்க்கும், சக பணியாளர்களுக்கும் என் மனம் நிறைந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கிறேன்.

அன்புடன்
அருள்திரு நேசன்
பதிப்பாசிரியர்-மன்னா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று வெளிவரும் அனைத்து தமிழ் கத்தோலிக்க செய்தித்தாள்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் தாயாக நின்று வழிகாட்டுகின்றாள் பாதுகாவலன் அன்னை

## வெட்டாப்பு ஆசிரியரின் ஆசிச் செய்தி

மலர்ந்துள்ள மூவாயிரம் ஆண்டின் தொடக்கத்தில், இலங்கைத் தமிழ் கத்தோலிக்க பத்திரிகையின் உயிர்நாடியாகத் திகழும் பாதுகாவலன் மலரின் 125வது ஆண்டு சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி பகர்வதில் பெருமை அடைகின்றேன். கடந்த ஒன்றேகால் நூற்றாண்டுகளாகத் தமிழ் கத்தோலிக்க விசுவாச வளர்ச்சிக்கு தனித்து நின்று ஓங்கி ஒலித்த பெருமை பாதுகாவலன் பத்திரிகைக்கு உண்டு என்பது அனைவருக்கும் வெள்ளிடைமலை. இன்று நமது நாட்டில் வெளிவருகின்ற எத்தனையோ கத்தோலிக் தமிழ் சஞ்சிகைகளுக்கு மத்தியில் ஒரு மணிமகுடம் வைத்தாற்போல் கொலுவீற்றிருக்கின்றது பாதுகாவலன்.

அதுமட்டுமல்லாது இன்று வெளிவரும் அனைத்து தமிழ் கத்தோலிக்க செய்தித்தாள்களுக்கும், சஞ்சிகைகளுக்கும் ஒரு தாயாக நின்று அவள் வழிகாட்டுகின்றாள் என்பது அனைவரும் அறிந்த உண்மை. எத்தனையோ இடர்கள், துன்பங்கள் குறுக்கிட்ட போதும், விசேடவிதமாக தொடரும் யுத்தத்தினால் முழு யாழ்ப்பாணமுமே இடம் பெயர்ந்த போதும், அரசின் பொருளாதாரத் தடையினால் அச்சகப் பொருட்கள் தடைப்பட்ட போதும் நான் எனது மக்களுக்கு பாதுகாவலனாக இருப்பேன் என்ற எண்ணத்திலும், சிந்தனையிலும் சிறிதும் தளராது தனக்கிருந்த குறைவான வளங்களை உள்வாங்கிக்கொண்டு தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்ட பாரம்பரியத்திற்கு விசுவாசத்தினால் உரம் சேர்த்த பெருமை பாதுகாவலனுக்கு உண்டு என்றால் அது மிகையல்ல. இவ்வாறு தமிழ் மக்களின் முழு விடுதலைக்கும் ஆன்மீக உரமூட்டும் பாதுகாவலனின் ஒன்றேகால் நூற்றாண்டுப்பணி இன்றும் தொடர வாழ்த்துகின்றேன். உன்னுடைய முதுமையிலும் கன்னிமை குன்றாச் சேவை பாரெங்கும் பரவி தமிழ் கூறும் நல்லுலகிற்கும் எம்மைப்போன்ற உனது வழித் தோன்றல்களாகிய வெட்டாப்பு பத்திரிகைக்கும் கிடைக்கட்டும்.

"இறை வார்த்தையை அறிவி.
வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் கருத்தாயிரு.
கண்டித்துப்பேசு, கடிந்துகொள். அறிவுரை கூறு. மிகுந்த பொறுமையுடன் கற்றுக் கொடு".

பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியருக்கும் சிறப்பு மலர்க்குழுவினருக்கும் இறையாசீர் இணைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அருள்திரு A.A. நவரெட்ணம்
ஆசிரியர் - வெட்டாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கிறிஸ்தவ உலகில் எழுத்தாற்றலால் முத்திரை பொறித்த அறிஞர்களின் பங்களிப்புகளை தாங்கி வந்துள்ளது பாதுகாவலன்

## ஜேர்மன் - தொடுவானம் ஆசிரியரின் ஆசிச் செய்தி

"இறைவன் நகரைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்" என்னும் வாக்கினைத் தன் தாரக மந்திரமாகக் கொண்டு செயற்படும் சத்தியவேத பாதுகாவலன், தனது ஐந்தாம் வெள்ளிவிழாவைக் கண்டுள்ளது என்பதனை நினைக்குந் தோறும் மனம் நிறைவெய்துகின்றது.

நம் தாயக மண் கொண்டுள்ள பல இன்னல்கள் மத்தியில், திருமறைச் சேவையை தொடர்ந்து ஆற்றிவந்துள்ள பாதுகாவலனின் சாதனைகளை எண்ணிப் பெருமிதம் கொள் ளல் இயல்பானதே. தனக்கே உரித்தான பாணியில் அடக்கமாக, எனினும் ஆணித்தரமாக பிழையற்ற தமிழில் தன் எண்ணக்கிடக்கைகளை வெளியிட்டு, எக்கட்டத்திலும் உறுதியோடு பணியாற்றி வந்துள்ள பாதுகாவலன் இலங்கையில் புகழ்மிகு ஊடகத்துறையில், மிகப் பழைய அனுபவம் மிக்க வெளியீடுகள் மிகச் சிலவற்றில், ஒன்று என்பது பெருமைபடக்கூடிய ஒன்றே.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் அறிவினாலும், சமய ஈடுபாட்டாலும் தனக்கெனத் தனி இடம் வகித்து, புகழ்பெற்ற நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என்னும் சொற்கலைப் புலவரின் பிரச்சார ஊடகமாக பாதுகாவலன் சிறப்புப் பணி ஆற்றிவந்துள்ளது. 1875ல் பிறந்த அந்தப் பேரறிஞர் ஏறத்தாள அதே காலக்கட்டத்தில் தோன்றிய பாதுகாவலன் ஊடாகவும், தன் ஆற்றல் கொண்ட ஆராய்ச்சி எண்ணங்களை வெளியிட்டமை எதிர் பார்க்கத்தக்கது ஒன்றே.

அனுபவம் மிகக் கொண்டவரும் பெரும் கிறிஸ்தவ தமிழ் அறிஞருமான அருளப்ப முதலியார் எனும் தென் இந்திய அறிஞரை ஆரம்பகாலப் பதிப்பாசிரியராகக் கொண்டு செயற்படத் தொடங்கிய பாதுகாவலன், ஈழத்தின் தமிழ்க் கிறிஸ்தவ உலகில் தன் எழுத்தாற்றலால் முத்திரை பொறித்த, ஏறத்தாள, எல்லா அறிஞர்களது பங்களிப்புகளையும் தாங்கி வந்துள்ளது. ஓய்வு பெற்ற முன்னைநாள் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை, இந் நாள் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உட்பட, பல அருட்தந்தையர்கள், காலத்துக் காலம் காவலனுக்கு உயிரூட்டம் தந்துள்ளனர். யாழ் ஜெயம், இளவாலை வித்துவான் அமுது, தாளையடி அறிஞர் சவரிமுத்து ஆகியோரது படைப்புக்களைப் பாதுகாவலன் பலமுறைகள் தாங்கி வந்துள்ளது.

காவலன் எண்ணற்ற ரசிகர்களையும், படைப்பாளர்களையும் உருவாக்கியுள்ளது என்று கூறுதல் மிகை அல்ல. இறைவன் அருளில் தொடர்ந்தும் காவலன் பணி ஆற்றுவான் என்று எதிர்பார்த்து அதன் மகிழ்ச்சியில் கலந்து, ஜேர்மன் தமிழ் ஆன்மீகப் பணியகம் சார்பில் வாழ்த்து இயம்பி நிற்கின்றோம்.

**அருள்திரு பேணாட் றெக்னோ**
**ஆசிரியர் -தொடுவானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த வடுக்களால் நொந்துபோயுள்ள மனங்களை ஆற்றுப்படுத்துகிறது பாதுகாவலன்

## வலம்புரி ஆசிரியரின் ஆசிச் செய்தி

இலங்கையின் முதலாவது தமிழ்க் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் நூற்றி இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்துவிட்டதென்பதை எண்ணும் போது நெஞ்சம் மகிழ்கிறது.

இற்றைக்கு நூற்றி இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னதாக தொடங்கப்பட்ட பாதுகாவலன் இதழை அன்று முதல் இன்றுவரை பாதுகாப்பாக அழைத்து வருகின்ற பக்குவம் கத்தோலிக்க மதத்தின் நிர்வாகச் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இலங்கையின் வரலாற்றில் எத்தனையோ சஞ்சிகைகள், வாரஏடுகள், நாளேடுகள் தோன்றி மறைந்துள்ளன. ஆனால் பாதுகாவலன் 125 ஆண்டுகளாக தடைகளின்றி ஏற்றமுள்ளதெனில் அதற்கு இறைவனின் ஆசியுண் டென்பது அசைக்கமுடியாத உண்மையாகும்.

யுத்தத்தின் வடுக்களால் நொந்துபோயுள்ள மனங்களுக்கு பாதுகாவலன் ஏடு ஆற்றுப்படுத்துவதாகவும் இறையுணர்வை எடுத்து இயம்புவதாகவும் அமைந்துள்ளது.

இதனால் மனித மனங்களைப் பாதுகாக்கும் ஏடாகவும் பாதுகாவலன் விளங்கு கின்றான்.

அவ்வகையில் தமது இடையராத பணியால் பாதுகாவலனை அழைத்துவரும் அனைவருக்கும் நிச்சயமாக ஆண்டவன் ஆசிகள் உண்டு எனக்கூறி பாதுகாவ லனுக்கு எமது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

**திரு. சி. வெற்றிவேலாயுதம்**
**நிர்வாக இயக்குநர்**
**வலம்புரி, யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் குறிக்கோளின்பாற்பட்டு பாதுகாவலன் இற்றைநாள் வரை செயற்பட்டுவருகிறது

## வீரகேசரி ஆசிரியரின் ஆசிச் செய்தி

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் பத்திரிகை, நமது யாழ். மண்ணில் மலர்ந்து, 125 வருடங்கள் சிறப்பாக நிறைவு செய்துள்ளதை யிட்டு எனது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பத்திரிகை உலகில் 125 வருட சாதனையை நிறைவேற்றியுள்ள இச் சமயப் பத்திரிகை இன்று பலரும் படிக்கத்தக்க விதமாக வளர்ச்சிபெற்று வருவது வரவேற்கத் தக்கதாகும். பழைய பாரம்பரியத்தை கொண்டுள்ள இப் பத்திரிகை இன்னும் வளர்ந்து கொண்டிருக்கின்றது என்பதற்கு அண்மையில் பாதுகாவலன் பெற்றுக்கொண்ட இலங்கை பத்திரிகையாளர் சங்க விருது ஒரு சான்றாகும்.

மதங்கள் பலவகை இருப்பினும், அவற்றின் குறிக்கோள் ஒன்றே. அது இறை விசுவாசம் ஆகும். மனிதர்களை மனிதர்களாக வாழத் தூண்டுவது இறைவிசு வாசமாகும்.


அவ் உயர் குறிக்கோளின்பாற்பட்டு, "பாதுகாவலன்" இற்றை நாள் வரை செயற்பட்டு வந்துள்ளது. அது மென்மேலும் சிறப்புடன் பணியாற்ற எனது வாழ்த் துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எஸ். நடராஜா
பிரதம ஆசிரியர்-வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Rev. Fr. Forzey O.M.I**



**Rev. Fr. Andrew Clerpha O.M.I**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றித்தடம் தொடர தினகரனின் வாழ்த்துக்கள்

## தினகரன் ஆசிரியரின் ஆசிச் செய்தி

கடந்த 450 ஆண்டுகளுக்கு முன்னர் கத்தோலிக்க மதத்தின் இலங்கை வருகை முக்கியம் வாய்ந்த நிகழ்வாக கருதப்படுகிறது. கல்வித்துறை மருத்துவத்துறை உள்ளிட்ட இன்றைய துறைகளில் பாரிய மாற்றங்கள் இலங்கையில் ஏற்பட்டன.

வர்ணாச்சிரம கொடுமைகளினால் தமிழர்களின் ஒரு கூறாகவிருந்த மக்கள் பலர் மனித உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்ட நிலையில் விலங்குகளைவிட கேவலமான முறையில் நடத்தப்பட்டார்கள். கத்தோலிக்கத்தின் வருகை இம் மக்களின் ஒரு பகுதியினரின் வாழ்வில் விடியலின் கதிர்களை பாய்ச்சியது. மக்களின் பார்வையை விசாலமுறச் செய்தது.

இந்தச் சமூக மாற்றப் போக்கிற்கும் மறுமலர்ச்சிக்கும் தமிழ்மொழியின் புதிய பரிமாணக் கூர்ப்பிற்கும் இலங்கையின் முதலாவது தமிழ் கத்தோலிக்க சஞ்சிகையான கத்தோலிக்க பாதுகாவலன் 1876 பெப்ரவரி 19ஆம் திகதி முதல் கடந்த ஒன்றேகால் நூற்றாண்டு காலமாக அரும்பணியாற்றிவருவது பாராட்டுதற்குரியது. கத்தோலிக்கம் தமிழுக்குத் தந்த கனபரிமாணங்கள் அனந்தமானவை. வீரமாமுனிவர் – கொன்ஸ்ரான்ரின் ஜோசவ் பெஸ்கி தமிழைச் செம்மைப்படுத்த வகுத்தழித்த "சதுர கராதி" ஒன்றே பெயர் சூட்டப் போதுமானது.

எமது மக்களின் சிந்தனைப் போக்கிற் பெருமாற்றத்தினை ஏற்படுத்திய "பாதுகாவலனின்" பிதாமகர் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் பொஞ்சீன் ஆண்டகை இப்பொழுதில் பத்திரமாக நினைவுகூரப்பட வேண்டியவர். பாதுகாவலனின் பணிகள் வெற்றித் தடத்தில் தொடர்ந்து செல்ல வாழ்த்துக்கள்.

**ராஜ சிறிகாந்தன்**
**பிரதம ஆசிரியர்-தினகரன்**

**லேக் ஹவுஸ்,**
**கொழும்பு-10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபிரதேச மக்களின் யுத்த அவலங்களை வெளிக்கொணரும் ஊடகமாக வளர்ச்சிபெற்றுள்ளது பாதுகாவலன்

## தினக்குரல் ஆசிரியரின் ஆசிச் செய்தி

ஆத்மீக விழிப்புணர்ச்சி, சமூக விழிப்புணர்ச்சி, கல்வி வளர்ச்சி ஆகிய பன்முகப்பட்ட நோக்கங்களை உள்ளீடாகக் கொண்டு யாழ்ப்பாண மண்ணில் இருந்து அருள் செழுமையோடு வெளிவந்துகொண்டிருக்கும் பாதுகாவலன் தனது வாழ்வையும் வளத்தையும் மாற்றி நூற்றி இருபத்தைந்து ஆண்டுகளாகப் பேணித் தொடர்ந்தும் நிறைவோடு மலர்வது மன மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

பழமையும் பாரம்பரியமும் நிறைந்த பத்திரிகை புத்தாயிரம் ஆண்டின் எழுச்சிக்கு ஏற்ற வகையில் தன்னை நவீனத்துவத்திற்குட்படுத்தியும் புதுமையோடும் பொலிவோடும் வெளி வருவதை அவதானித்த இலங்கை பத்திரிகையாளர் சங்கம் 2000ம் ஆண்டுக்கான சிறந்த வடிவமைப்புக் கொண்ட பத்திரிகையாகக் கணித்து விருது வழங்கி கௌரவித்துள்ளது.

இலங்கையின் பாரம்பரிய பத்திரிகையான உதயதாரகையின் பின்னர் தோன்றிய உதயாதித்தன், உரைகல் ஆகியவற்றைத் தொடர்ந்து தோன்றிய கத்தோலிக்க பாதுகாவலன், இடைக்காலத்தில் சத்தியவேத பாதுகாவலன் என்ற பெயரோடு வெளிவந்தது. பல்வேறு வித பரிமாணங்களின் பின்னர் இப்பொழுது பாதுகாவலன் வாராந்தப் பத்திரிகையாக இப்பொழுது மாதம் இரு முறையாக வெளிவருகின்றது.

அச்சுக்கோர்க்கும் பாரம்பரியத்தோடு ஆரம்பித்த இந்தப் பத்திரிகை நவீன அச்சுப் பாரம்பரியத்தோடு சமய சமூக வரம்புகளைக் கடந்து வடபிரதேச யுத்தம், இடப்பெயர்வுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் இனப்பிரச்சினை பற்றியும் மக்களின் அவலங்களை, அனுபவங்களையும் வெளிக்கொண்டுவரும் ஊடகமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

பழமைவாய்ந்த இந்தப் பத்திரிகை ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை தனது சமயப் பணிகளின் பக்க வளர்ச்சியாக, தொடர்பியல் துறையில் ஆர்வம் கொண்டு, "பழமையிலே புதுநினைவுகள் பாய்ந்து எழும்" வகையில் ஆற்றிவரும் பணி மனநிறைவைத் தருகின்றது.

பாதுகாவலன் தமிழ் பேசும் நெஞ்சங்களின் பாதுகாவலனாக மேலும் நலம் சிறக்க வேண்டும் என வாழ்த்துவோமாக!

ஆ. சிவநேசச் செல்வன்
பிரதம ஆசிரியர்
தினக்குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துவப் பணிக்காலத்திலும் வாசிக்கும் ஆவலை வளர்த்தது பாதுகாவலன்

## அவுஸ்திரேலிய ஆன்மீக பணியக இயக்குனரின் ஆசிச் செய்தி

பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் குழுவுக்கும் வாசக நேயர்களுக்கும்!

உங்கள் அனைவரையும் பாதுகாவலன் பத்திரிகையின் 125 ஆண்டுச் சிறப்பு மலர் வழியாகச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இச் சுபவேளையில் பத்திரிகைக்கும் அதன் வழி உங்களுக்கும் என் ஆசிச் செய்தியை அளிப்பதில் பாக்கியமடைகின்றேன்.

சிறிய வயதில் எனது பெற்றோர் வழியாகவும் பின்பு குருமடவாழ்வில் – யாழ் மடுத்தீனார் குருமட அதிபர்களே பெரும்பாலும் பத்திரிகையின் ஆசிரியர்களாக இருந்ததால் அவர்கள் வழியாகவும் – வாரம் தவறாமல் இப் பத்திரிகையைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதனால், பின்பு என் குருத்துவப் பணிக்காலத்திலும் அதைப் படிக்கும் ஆவல் தொடர்ந்தும் என்னுள் வளர்ந்தது. குறிப்பாகக் கலவரக் காலங்களில் என் மன அமைதிக்கும், என் பணியைத் தொடர்வதற்கும் ஓர் உந்துகோலாக பழைய பத்திரிகைகளை முதலாய்த் திரும்பத் திரும்பப் படித்துப் பயன்பெற்றதுண்டு. சிறுவர் முதல் பெரியோர் வரை படித்து மகிழும் விதத்தில் கதைகள் துணுக்குகள் கட்டுரைகள் விவிலிய விளக்கங்கள் போன்ற பல அம்சங்களைக் கொண்ட இப் பத்திரிகை குறைந்த விலையில் வெளிவருவது அனைவருக்கும் ஏற்ற பத்திரிகையாக இதை அமைக்கின்றது.

எனவே வளம் மிக்க இப் பத்திரிகையின் 125 ஆண்டு நிறைவில் இப் பத்திரிகையை ஆரம்பித்து வளர்த்த ஆசிரியர்கள் பங்களிப்பாளர்களை நன்றியோடு நினைவுகூர்வதோடு இதுவரை குறிப்பாக கலவரங்கள் மத்தியிலும் பத்திரிகையைப் பாதுகாத்து வளர்த்து தமிழ் மக்களுக்கு அருமருந்தாக அமைய திடமுடன் செயற்பட்ட, செயற்படுகின்ற ஆசிரிய குழுக்களுக்கும், பத்திரிகையைத் தொடர்ந்து படித்துப் பயன்பெறும் வாசக நேயர்களுக்கும் பாராட்டைத் தெரிவித்து இன்னும் பல்லாண்டு காலம் இப் பத்திரிகை பவனிவந்து பயன்தர இறையாசீர் கூறிநிற்கின்றேன்.

**அருள்திரு அல்பேட் யோகராஜா**
**அவுஸ்திரேலியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் பணிக்கு தூரப்பார்வையும் துணிவும் விரும்புகின்றேன்

## எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளாரின் ஆசிச் செய்தி

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க ஏடான பாதுகாவலன் பத்திரிகை 125 ஆண்டுகள் எமது மதத்திற்கும் தமிழ் மக்களுக்கும் ஆற்றிய சேவையையிட்டு நாம் அனைவரும் நன்றி உணர்வுடன் பெருமைப்படுவதும் எதிர்கால பணிக்குரிய உந்துசக்தி திரட்டுவதும் மிகப் பொருத்தமானது. இன்றி அமையாதது. பத்திரிகைப் பொறுப்பாளர்கள், பணியாளர்கள், வாசகர்கள் அனைவருடனும் நானும் என்னை இணைத்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது தகப்பனார் இப் பத்திரிகையின் ஆங்கில இதழான காடியன் பத்திரிகையின் அச்செழுத்துக் கோர்ப்பவராகப் பணியாற்றிய காலங்களில் வெள்ளிக் கிழமைகளில் கொண்டுவரும் ஆங்கில தமிழ் இரு பத்திரிகைகளையும் வாசலில் காத்து நின்று வாசித்தது என் நினைவில் இன்றும் இருக்கின்றது. பல ஆண்டுகளின் பின் (1967–1968) திரு. எஸ் எம். ஜே. லூயிஸ் அவர்களுடன் சில மாதங்களாக இத் தமிழ் பத்திரிகையை வழிநடத்தும் வாய்ப்பும் கிடைத்தது. இப் பத்திரிகையை சத்தியவேத பாதுகாவலன் என்ற நீண்ட தலைப்பை சுருக்கிக் காவலன் என்று சில இதழ்களுக்குத் தலைப்பிட்டேன். ஆயர் எமிலியானுசுக்கு அது ஏற்புடையதாக இருக்கவில்லை. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திறந்த கண்ணோட்டத் திற்கு இணங்கவே அப் பெயர் மாற்றம் தேவைப்பட்டது. ஆனால் எனது நோக்கத்தை அவர் புரிந்து ஏற்றுக்கொள்ளவில்லை.

இன்று தமிழ் மக்களும், அவர்கள் மத்தியில், வாழும் கத்தோலிக்க விசுவாசிகளும், முன்பு ஒருபொழுதும் நினைக்க முடியாத துன்பங்களையும் சவால்களையும் எதிர்நோக்கு கின்றனர். தமிழ் கிறிஸ்தவர்களும் திருச்சபைகளும் கடந்த காலங்களிலும் பார்க்க கூடிய தெளிவுடனும், துணிவுடனும் உண்மைக்காக, நீதிக்காக, சமாதானத்திற்காகப் பணிபுரிய கடமைப்பட்டிருக்கின்றனர். இப் பணியில் பாதுகாவலன் முக்கிய பங்கேற்க வேண்டும் என்பது எனது ஆழமான தாகம்.

கிறீஸ்தவர்களும் அவர்களின் திருச்சபைகளும் தங்களுக்கென தனி இடமும் மதிப்பும் தேடி வாழ்ந்த காலம் மலையேறிவிட்டது. இயேசுவின் தூரப் பார்வையுடனும் துணிவுடனும் மக்களின் முழுமையான விடுதலைக்காக (**Total Liberation**) குரல் கொடுக்கவும் பணி புரியவும் அழைக்கப்படுகின்றனர். நீண்டகாலமாக இவ்வழைப்பு ஏற்கப்படவில்லை. அண்மைக் காலங்களில் இப் பார்வையும் துணிவும் வளர ஆரம்பித்து இருப்பதுபோல் தோன்றுகிறது. இவை எம் கிறீஸ்தவ சகோதரர் மத்தியில் மேலும் வளரவும், அவ் வளர்ச்சியில் பாதுகாவலன் முக்கிய பங்கு ஏற்கவும் இறைவனை நான் இறைஞ்சுகின்றேன்.

**அருள்திரு எஸ். ஜே. இம்மானுவேல்**
**ஜேர்மனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**1997ஆம் ஆண்டு ஒளிவிழாவின் போது அச்சகப் பணியாளர்கள் கிறிஸ்மஸ் கீதம் இசைக்கின்றனர்.**



**2000ஆம் ஆண்டு ஒளிவிழாவின் போது அச்சக முதன்மைப் பணியாளர் திரு நீ. அன்ரனி உரையாற்றுகிறார்.**



**2000ஆம் ஆண்டு ஒளிவிழாவின் போது அச்சகப் பணியாளர்கள் கிறிஸ்மஸ் கீதம் இசைக்கின்றனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1997ஆம் ஆண்டு ஊடகவியலாளர்களுக்கான ஒளிவிழாக் கொண்டாட்டங்களின்போது ஆயர் செய்தி வழங்கும்போது

1999ஆம் பாதுகாவலன் பயிற்சிப் பாசறையின்போது





1998ஆம் ஆண்டு பயிற்சி பாசறையின்போது பாதுகாவலன் ஆசிரியர் வரவேற்புரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் முதல் கத்தோலிக்க அச்சகமும் அங்கு வெளியான இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க பத்திரிகையும்

## – வரலாற்றுப் பின்னணியும் ஆரம்பகால நிகழ்வுகளும் – ஒரு கண்ணோட்டம்

அருட்கலாநிதி S.V.B. மங்களராஜா

### முன்னுரை

எழுத்தறிவு, வாசிக்கும் பழக்கம், கல்வியில் ஆர்வம் ஆகியவற்றில் இலங்கையிலே வடபகுதி ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. இதற்கு 16ம் – 17ம் நூற்றாண்டுகளில் இங்கு பணியாற்றிய யேசு சபை, பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் கணிசமான பங்களிப்பு செய்துள்ளனர் எனலாம். அந்நாட்களில் வடபகுதி பல பங்குகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பங்கிலும் ஒரு ஆலயமும் அதனருகே ஒரு பாடசாலையும் எனக் கட்டப்பட்டு ஒழுங்காக நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன. யேசு சபையினரின் பாடசாலை விபரங்கள், மாணவர் எண்ணிக்கை (1) அதுபோல பிரான்சிஸ்கன் சபையினரின் பாடசாலைகள் மாணவர் எண்ணிக்கை (2) விபரங்கள் அவர்களது குறிப்பேடுகளில் உள்ளன. சனத்தொகையில் கணிசமான தொகையினர் கத்தோலிக்க மதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத் தழுவி இருந்தனர். மாணவர்களின் புத்திக் கூர்மையும், அறிவுத்திறனும் அந்நாளைய வெளி நாட்டுக் குருக்களையே பிரமிக்கச் செய்துள்ளன. மக்கள் மத்தியிலும் இந்தியாவில் முதல்முதலாக அச்சாகிய தமிழ் நூல்கள் புழக்கத்திலிருந்தன. 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வந்த ஒல்லாந்தர் விதித்த தடைகளினால்தான் இந்தச் சீரான முன்னேற் றம் தடைப்பட்டது. இல்லாவிடில் 17ம் நூற்றாண்டு முடிவடைவதற்குள்ளேயே யாழ்ப்பாணத்திலேயே அச்சகங்கள் ஏற்படுத்தப்பட்டு மண்ணின் மைந்தர் களாலே எழுதப்பட்ட நூல்கள் உட்பட பல தமிழ் நூல்கள் இங்கேயே பதிப்பிக்கப்பட்டிருக்கும். 17ம் நூற் றாண்டுப் பிற்பகுதியில் ஐரோப்பாவில் பிரபல்யமடை யத் துவங்கிய பத்திரிகைகளைப்போல யாழ்ப்பாணத் திலும் தமிழ்ப்பத்திரிகைகள் பதிப்பாயிருக்கும்.

ஒல்லாந்தர் வருகையுடன் பலர் தமது மூதா தையரின் மதத்திற்குச் சென்றமையாலும், கணிசமான தொகையினர் கல்வினிஸத்தைப் பின்பற்றியமையாலும் கத்தோலிக்கர் மிகவும் சிறுபான்மையினராயினர். இவர்கள் ஒருவாறாக எதிர்ப்புக்கள் மத்தியிலும் முத்.. பெற்ற ஜோசவ்வாஸ் அடிகளதும் அவருக்குத் துணை யாக வந்த அவரது ஒரட்டோரியன் சபைக் குருக் களின் பராமரிப்பில் தமது திருமறையில் பிரமாணிக்க மாயிருந்தாலும் அச்சகங்களை ஏற்படுத்தி நூல்களை யும் பத்திரிகைகளையும் தாமாகவே வெளியிடுவதற்கு 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரைக்கும் தமிழில் வெளியிட இன்னுமொரு கால்நூற்றாண்டு காத்திருக்க வேண்டியிருந்தது.

## யாழ்ப்பாணத்தில்பாவனையிலிருந்த முதல் அச்சாகிய தமிழ் நூல்கள்

ஐரோப்பாவுக்கு வெளியே பேசப்படுகின்ற மொழிகளில் அச்சேறிய நூல்களில் ஒரு சிலவே அழியாமல் உள்ளன. இவற்றுள் இன்றும் முழுமையாகக் கைவசமுள்ள நூல்களுள் 1554ல் போர்த்துக்கல், லிஸ்பனில் அச்சேறிய காட்டில்லா (Cartilha) எனும் தமிழ் நூல் முக்கியமானது. பின் இந்தியாவில் தமிழ் அச்சகத்துறையின் தந்தையென்று அழைக்கப்படக்கூடிய என்றிக் என்றிக்கஸ் எனும் யேசுசபைக்குரு 1578இலும் 1579இலும் முறையே அச்சேற்றிய தம்பிரான் வணக்கம், கிறிஸ்தியானி வணக்கம் எனும் கிறிஸ்தவ மறைக்கல்வி நூல்களும் 1586இல் மீண்டும் அவரே வெளியிட்ட புனிதர்கள் வரலாறு அடங்கிய புளசந்தோர் என்று சொல்லப் பட்ட (Flos Sanctorum) எனும் நூலும் முக்கிய மானவை. தமிழில் வெளிவந்த இம்முதல் நூல்கள் பற்றி தவத்திரு தனிநாயகம் அடிகளார் விளக்கு கின்றார். (4) இக்காலத்தில் வெளியான இன்னுமொரு நூல் 'கிறீஸ்து பெருமான் வரலாறு' ஆகும்.

இந்நூல்களுள் காட்டில்லா (Cartilha) எனப் படும் முதல் நூல் சாதாரண யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்ததற்கான வாய்ப் பில்லை. இந்தியாவிலும் இலங்கையிலும் தமிழ்மொழி தெரியாத நிலையில் தமிழ் மக்களிடையே மறைப் பணியாற்ற வந்த குருக்களுக்கு இது உதவியாக இருந்திருக்கும். செபங்களும், மறையுண்மைகளும் மூன்று வரிகளில் தரப்பட்டுள்ளன. நடுவில் பெரிய எழுத்துக்களில் தமிழில் ஆனால் ரோமன் எழுத்துக் களிலும், மேலேயுள்ள வரியில் அதன் போர்த்துக்கேய மொழியின் அர்த்தத்தையும், கீழே உள்ள வரியில் அச்செபம் அல்லது மறையுண்மை போர்த்துக்கேய மொழியில் உள்ளபடியும் தரப்பட்டுள்ளது. (5) யாழ்ப்பாணத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் மறைப்பணி 1591ல் கணிசமானளவு மறைப்பணியாள ருடன் இடம் பெறத் துவங்கி பின் 1622ல் யேசுசபை யினர் வருகையுடன் இன்னும் முனைப்புப் பெற்ற தெனலாம். இக்காலத்தில் இந்தியாவில் 1578இலும் அதற்குப் பின்னும் தமிழிலேயே முழுமையாக அச்சா கிய நூல்கள் வரத் துவங்கியிருந்தமையால் காட் டில்லா எனும் நூலின் தேவை குறிப்பாக மக்களுக்கு இருந்திராது.

மற்ற நூல்களுள் குறிப்பாக இரண்டு யாழ்ப் பாணப்பகுதியில் 17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாவனையில் இருந்துள்ளமைக்கு ஆதாரங்களுண்டு. நவாலியில் உள்ள சமூகத்தலைவர்களுள் ஒருவர் தமது குடும்பத்தவருடன் திருமுழுக்குப் பெற்ற போது Flos Sanctorum எனும் புனிதர் வரலாறு அவருக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது. ஒரு சில நாட் களுக்குள் இவர் இதனை வாசித்து இதன் உள்ளடக்கம் முழுவதையும் எவ்வளவுக்கு ஐயந்திரிபுறப் புரிந்துகொண்டாரெனின் இவர் பிறமதத்த வருடன் தயங்காது கத்தோலிக்க திருமறை பற்றி வாதிடக்கூடியவராயிருந்தார். (6) அது போலவே யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்க மாணவரிடையே பிர பல்யம் பெற்ற ஒரு மறைக்கல்வி நூல் "கிறீஸ்து பெருமான் வரலாறு" என்னும் நூல் ஒன்றும் இருந் தது. இந்நூல் தற்போது எவ்விடமும் இல்லை. ராஜமாணிக்கம் அடிகள் குறிப்பிடுவதுபோன்று இதுவும் என்றிக் என்றிக்கஸ் அடிகளாரது நூல்களில் ஒன்று. இதில் படைப்புத் தொடக்கம் கிறீஸ்துபெருமான் விண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணகம் சென்றது பற்றிய விபரங்கள் உண்டு. அச்சு வேலியில் உள்ள சிறுவர்கள் பலர் இந்நூலில் உள்ள ஐநூறுக்கு மேற்பட்ட வசனங்களை மனப்பாடம் செய்து வைத்திருந்தனர். (7) தமது வயோதிப காலத்தில் யாழ்ப்பாணத்தில் இரு வருடங்கள் பணியாற்றிய கிறீஸ்தவத்தமிழ் வசனநடை இலக்கியத்தின் தந்தையென்று அழைக்கப்படும் தத்துவ போதகர் றொபேர்ட் டி நோபிலி எனும் யேசுசபைக்குரு, தமிழ் – போர்த்துக்கேய மொழி அகராதியொன்றை யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த போது எழுதத்துவங்கிய இக்னேசியஸ் புருனோ அடிகள் போன்றவர்களது பணியால் யாழ்ப்பாணத்தில் கிறீஸ்தவ தமிழ் இலக்கியம் நல்லதொரு நிலைக்கு வந்துகொண்டிருந்தது. இவ்வளர்ச்சியின் சிறப்பம்சம் ஒன்று என்னவெனில் யாழ்ப்பாண மண்ணின் மைந்தர்களது தரமான கிறீஸ்தவத் தமிழ் இலக்கியப் படைப்புக்களும் வெளிவந்தமையாகும். 1647ல் தெல்லிப்பளையைச் சேர்ந்த பேதுருப்புலவர் கிளாலி சந்தியோகுமையோர் யாத்திரைத் தலத்தின் பேரில் "சந்தியோகுமையோர் அம்மானை" பாடியிருந்தார். இதே காலத்தில் வெளியான இன்னுமொரு சிறப்பான படைப்பு 'ஞானப்பள்ளு' என்பதாகும். 1644–1650ம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய யேசுசபைக்குரு செபஸ்ரியாவோ பொன்சேக்கா அடிகளின் தூண்டுதலால் யாழ்ப்பாணக் கத்தோலிக்கர் ஒருவரால் இது எழுதப்பட்டிருக்கவேண்டுமென ஞானப்பிரகாசர் சுவாமியை மேற்கோள் காட்டி ஆயர் எட்மண்ட் பீரிஸ் சில விளக்கங்கள் தருகிறார். (8) இந்நாட்களில் எழுதப்பட்ட பிறிதொரு படைப்பு பூலோகசிங்கம் புலவர் எழுதிய 'திருச்செல்வர் காவியம்'.(9) யாழ்ப்பாணப் பகுதியில் பணிபுரிந்து கொண்டிருந்த குருக்களின் ஆக்கங்கள் மட்டுமன்றி மண்ணின் மைந்தராகிய பொதுநிலையினரது கிறீஸ்தவத் தமிழ் இலக்கியங்களும் முழு வீச்சில் வெளிவரத்துவங்கிய 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கல்வினிஸவாதிகளாகிய ஒல்லாந்தர் 1658ல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியமை பேரிடராக வந்தது. தமிழ் கத்தோலிக்க இலக்கியம் வளர்ந்து கொண்டிருந்த வேகத்தை நோக்கும்போது ஒல்லாந்தர் மட்டும் வந்திராவிடின் 17ம் நூற்றாண்டு முடிவடைவதற்குள் யாழ்ப்பாணத்தில் அல்லது மன்னாரில் யேசுசபையினர் இந்தியாவில் சில இடங்களில் நிறுவியதுபோன்று ஒரு அச்சகத்தை நிறுவியிருப்பார் என உறுதிபடக் கூறலாம்.

1658ல் யாழ்ப்பாணத்திலிருந்து யேசு சபையினர், பிரான்சிஸ்கன் சபையினர் மற்றும் மற்ற துறவற சபைக்குருக்கள் வெளியேற்றப்பட்டனர். இதனால் 1679ல் யேசு சபையினரால் அப்பலக்காட்டிலும், தென் இந்தியாவின் வேறு இடங்களிலும் படிப்படியாக நிறுவப்பட்ட அச்சகங்களிலே இக்னேசியா புறூனோ, றொபர்ட் டி நோபிலி போன்ற குருக்கள் எழுதிய நூல்களும் முன்னர் குறிப்பிட்ட பிறநூல்களும் அச்சாகின. (10) யாழ்ப்பாணத்திலேயே ஒரு கத்தோலிக்க அச்சகம் தோன்றி அங்கேயே தமிழ் கத்தோலிக்க நூல்கள் அச்சாவதற்கான காலத்திற்கு இன்னும் பல வருடங்கள் காத்திருக்கவேண்டியிருந்தது.

## கையெழுத்துப் பிரதிகளின் காலம்

கத்தோலிக்க சமயத்திற்கெதிராகக் கடும்போக்கைக் கடைப்பிடித்த ஒல்லாந்தர் கத்தோலிக்க ஆலயங்கள், சுரூபங்கள், சின்னங்களைச் சிதைத்த போது புழக்கத்திலிருந்த நூல்களையும் விட்டு வைத் திருக்க மாட்டார்கள். பக்தியார்வமுள்ள சில கத்தோலிக்கரால் சில சுரூபங்களும் சின்னங்களும் மறைத்து வைக்கப்பட்டதுபோல சில நூல்களும் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம். புதிதாக இந்தியா வில் அச்சாகிய நூல்களைக் கொண்டுவரும் பேச்சுக்கே இடமிருந்திருக்காது. மறைவிடங்களில் வைக்கப்பட்ட ஒரு சில நூல்களும் காலப்போக்கில் கறையான் போன்றவற்றினால் அழிந்துபோயிருக்கும். இதனால் தான் முதலில் அச்சாகி யாழ்ப்பாணத்தில் பாவனையிலிருந்த எந்த நூல்களையும் இங்கு பிற்காலத்தில் மீட்க முடியாமல் போனது.

1687ல் வடபகுதி வந்த முத். ஜோசவ்வாஸ் அடிகளும் 10 வருடங்களின் பின் வரத்துவங்கிய மற்ற ஒரட்டோரியன் சபைக் குருக்களும் மறைக்கல்வி புகட்டுவதற்குதவியாகச் சில கையெழுத்துப் பிரதிகளையே வைத்திருந்தனர். எனினும் 1706ல் இலங்கை வந்த யக்கோமே கொன்சால்வெஸ் அடிகள் காலத்திலிருந்துதான் முறையான கையெழுத்துப் பிரதிகளின் காலம் ஆரம்பித்தது எனலாம்.

முன்னரிலும் பார்க்க செபக்குறிப்பிடங்கள், மற்றும் மறைக்கல்வி நூல்கள் தற்போது கூடுதலாகத் தேவைப்பட்டன. அதற்கொரு காரணமும் இருந்தது. ஜோசவ்வாஸ் அடிகளாரைத் தொடர்ந்து இருவர் மூவராக அவ்வப்போது வந்துகொண்டிருந்த குருக்கள் பல்வேறு இடங்களுக்கும் சென்று அணைந்து கொண்டிருந்த மக்களின் மதநம்பிக்கையைத் திரும்பவும் ஒளிரச் செய்தனர். கத்தோலிக்க குருக்கள் வேட்டையாடப்பட்ட காலம் அதுவாகவிருந்ததால் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி தங்கள் இருப்பிடங்களை மாற்றவேண்டி யிருந்தது. இவ்வாறு ஒரு கிராமத்திலிருந்து அடுத்த கிராமத்திற்குச் செல்லும்போது அவ்விடத்தில் உள்ள வர்கள் தொடர்ந்து மறைக்கல்வி கற்கவும் செபங் களை மனனம் செய்யவும் நூல்கள் தேவைப்பட்டன. எனவே அச்சடித்த நூல்களை ஓரளவேனும் ஈடு செய்ய யக்கோமே கொன்சால்வெஸ் அடிகள் பெரும் எண்ணிக்கையில் அனுபவமிக்க எழுத்தாளர்களைப் பிரதியெடுக்கும் வேலைக்கமர்த்திப் பெருமளவுக்கு கையெழுத்துப் பிரதிகளைத் தயாரிக்கலானார். (11) 1713லிருந்து அடிகளாரே பயன்தரு பல கிறீஸ்தவ படைப்புக்களை உருவாக்கலானார். பெரும் பொருட் செலவேற்பட்டபோதும் மக்கள் மத்தயில் இவற்றுக் கிருந்த தேவை காரணமாக பல எழுத்தாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டு பிரதிகள் எடுக்கப்பட்டன. 1720ல் பெரும் பணச்செலவில் அடிகளின் நூல்களுள் ஒன் றின் 200பிரதிகள் யாழ்ப்பாண மக்களின் பாவனைக்கு எடுக்கப்பட்டன.(12) குறிப்பாக அடிகளாரின் 'பசாம்' எனப்படும் 'வியாகுல பிரசங்கம்' இன்றும் வடபகுதி யில் பிரசித்தி பெற்றிருப்பதைப் பார்க்கும்போது அந் நாளில் அதனை அறியாத கத்தோலிக்கரே அதன் பிரதியொன்றில்லாத வீடோ இருந்திருக்காது எனலாம்.

ஒல்லாந்தர் காலத்தில் 18ம் நூற்றாண்டில் கிறீஸ்தவத் தமிழ் நூல்கள் எல்லாம் அனேகமாக இவரது படைப்புக்களே. யாழ்ப்பாணத்தில் கத்தோலிக் கருக்கென அச்சியந்திரம் இல்லையென்ற குறையை ஓரளவுக்கெனினும் ஈடுசெய்யும் விதத்தில் பெரும் சிரமங்கள், பணச்செலவுகள் மத்தியிலும் பல எழுத் தாளர்களைப் பணிக்கமர்த்தி ஒவ்வொரு நூலிலும் தேவைக்கேற்ப நூற்றுக்கணக்கான பிரதிகள் எடுத்து மக்கள் மத்தியில் இவர் விநியோகித்தார். 19ம் நூற் றாண்டில்தான் இவை முதலில் இந்தியாவிலும் பின் னர் இலங்கையிலும் அச்சுவாகனம் ஏறத்துவங்கின.

## கத்தோலிக்க அச்சகம் – ஒரு கட்டாய தேவை

1796ல் இலங்கைக் கரையோர மாகாணங்கள் ஆங்கிலேயர் வசம் வந்ததும் கத்தோலிக்கருக்கெதி ராக முன்னைய ஆட்சியாளர் விதித்திருந்த தடைச்சட் டங்கள் படிப்படியாக நீக்கப்பட்டன. 1829ல் கத் தோலிக்க சமயத்தவர்களுக்கு முழுமத சுதந்திரம் வழங்கப்பட்டது. அடக்குமுறையின் கீழ் வாழ்ந்து வந்த கத்தோலிக்கர் சுதந்திரக்காற்றைச் சுவாசித்தனர். இம்மத சுதந்திரம் கத்தோலிக்கருடன் சேர்த்து இந்துக்கள், பௌத்தர்கள், முஸ்லீம்களுக்கு மட்டு மல்ல பல்வேறு கிறிஸ்தவ சபைகளுக்கும் வழங்கப் பட்டது. கத்தோலிக்கர் தற்போது புதிய சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. புதிதுபுதிதாக வந்த கிறீஸ்தவ சபையினர் கத்தோலிக்கரைத் தம்பக்கம் இழுத்தெடுக்கும் ஆபத்து நிறைய இருந்தது. இதற்கு ஒரு எடுத்துக்காட்டைச் சுட்டிக்காட்டலாம். கிறிஸ்தவ அறிவைப் பரப்பும் சபை (Sociaty for the Propagation of Christian Knowledge) யைச் சேர்ந்த கிறிஸ்ரியன் டேவிட் 84 கத்தோலிக்கரைத் தனது சபையில் சேர்த்ததாகக் கூறுகிறார்.(13) இது போன்ற சபைகளின் தீவிர பிரச்சாரத்திற்குக் கத்தோலிக்க திருச் சபை ஈடுகொடுக்க வேண்டியிருந்தது. 1815ல் வந்த மெதடிஸ்த மிஷனரிகள் 1828ல் 54 பாடசாலைகளை நிறுவியிருந்தனர். (14) இக்காலத்தில் ஆங்கிலம் உலக மொழியாகப் பிரபல்யம் பெற்று வந்தமையால் ஆங்கிலப் பாடசலைகளுக்குப் பெற்றோர் தம் பிள்ளை களை அனுப்ப முனைந்தனர். இச் சபைகள் வேதாக மம் மற்றும் தமது மத பிரசார நூல்கள் துண்டுப் பிரசுரங்களை தமது அச்சகங்களிலும் பதிப்பித்து மக்கள் மத்தியில் தாராளமாக விநியோகித்தனர். வேதாகம நூல்களை கத்தோலிக்கரும் இவர்களிடம் இருந்து பெறமுயன்றனர்.(15)

இச்சவால்களை எதிர்கொள்ளக்கூடிய நிலை யில் கோவா ஒரட்டோரியன் குருக்கள் இருக்கவில்லை. இவர்கள் எண்ணிக்கையிலும் குறைவாக இருந்தனர். அத்துடன் ஆங்கிலக்கல்வி வழங்க முடியாத நிலையிலும் இவர்கள் இருந்தனர். கத்தோலிக்கரும் இதனையுணர்ந்து ஐரோப்பிய குருக்களை அனுப்பி ஆங்கிலக் கல்விக்கு ஆவன செய்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ரோமைக்கு விண்ணப்பித்தனர்.(16)

## பெற்றக்கீனி ஆண்டகையின் முயற்சிகள்

ஐரோப்பிய குருக்களை அனுப்பும் திட்டத்தில் திருச்சபையின் ஆட்சிப்பீடம் இத்தாலியரான பெற்றக் கீனி அடிகளை 1842ல் இலங்கைக்கு அனுப்பியது. இவருடைய வருகையால் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபைக்கு அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணக் கத் தோலிக்க திருச்சபைக்கு ஒரு புதிய வளமான அத்தி யாயம் ஆரம்பித்ததெனலாம். பெற்றக்கீனி அடிகளார் இலங்கை வந்ததும் மறைக்கல்வி புகட்டுவதற்கென நூல்களின் தேவையையும் ஒரு அச்சகத்தின் தேவை யையும் உணர்ந்ததைக்காணக் கூடியதாயுள்ளது.(18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றக்கீனி அடிகள் வருவதற்கு ஒரு சில வருடங்களுக்கு முன்னரே கொழும்பு வாழ் கத்தோலிக்கர் ரோமைக்கு அனுப்பிய மனுவொன்றில் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் உடனடித்தேவைகளை விளக்கியிருந்தனர். அதில் இந்தியாவில் சென்னையில் ஒரு அச்சகம் ஏற்படுத்தப்பட்டு 'Roman Catholic Exporitor' எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டு வருவதால் அங்கு கத்தோலிக்க திருச்சபை கண்டுள்ள வளர்ச்சியைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.(19)

அப்போது பணியாற்றிய குருக்கள் (அநேகமானோர் கோவா ஒரட்டோரியன் சபையினர்) மக்களுக்கு மறைக்கல்வி புகட்டுவதில் போதிய ஆர்வம் காட்டுவதில்லையென்று பெற்றக்கீனி அடிகள் முறையிட்டுவதையும் (20) மும்மொழிகளிலும் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) அச்சுக்கள் தயாராகி அச்சக இயந்திரம் வர இருப்பதையும் (21) இருமாதங்களின் பின் (யூலை, 1843) அச்சக இயந்திரங்களும் உதிரிப் பாகங்களும் வந்து சேர்ந்தமை கத்தோலிக்கருக்குப் பெருமகிழ்வையும், அவர்க்களுக்கெதிராகத் தமது நூல்கள், துண்டுப்பிரசுரங்கள் வழியாக அவதூறுகளையும் பொய்ப்பிரசாரங்களையும் பரப்பி வந்தோர் வாயடைத்து நின்றதையும் சுட்டிக்காட்டுகின்றார்.(22)

கொழும்பில் இருந்ததைப்போன்றே யாழ்ப்பாணத்திலும் கத்தோலிக்க மறைக்கல்வி நூல்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவி வந்துள்ளது. புரட்டஸ்தாந்து மற்றும் சபைகளைச்சார்ந்தவர்களும் மறுபக்கத்தில் தமது நூல்களைத் தாராளமாக விநியோகித்து வந்தமையால் கத்தோலிக்கர்களும் அவற்றை வாங்கத் தூண்டப்படுகின்றனர் என்று 1846ல் யாழ்ப்பாணக் கத்தோலிக்கர் ரோமாபுரிக்கு முறைப்பட்டுள்ளனர்.(23)

யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க மறை வட்டத்திற்கு ஆயராக வந்து ஒருசில வருடங்களுக்குள்ளேயே (1849ல்) அவர் கத்தோலிக்க பத்திரிகை ஒன்றின் தேவையை உணர்ந்தது மட்டுமன்றி அதன் அளவு உள்ளடக்கம், விநியோகம் பற்றியும் பல்வேறு திட்டங்கள் வகுத்திருந்தார்.(24) ஆயர் பெற்றக்கீனி இவ்வாறு முனைப்போடு திட்டமிட்டதற்கு முக்கிய காரணம் 1816ல் இலங்கை வந்த புரட்டஸ்தாந்து அமெரிக்க மிஷன் மானிப்பாயில் 1841ல் இருந்து வெளியிட்டு வந்த Morning Star உதயதாரகை எனும் பத்திரிகையில் வெளிவந்துகொண்டிருந்த கத்தோலிக்க மதம்பற்றி வந்த, சில தவறான கருத்துக்கள் தான் என்று உணரக்கூடியதாயுள்ளது.(25) ஆயர் பெற்றக்கீனியின் திட்டம் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தும் கொழும்பு இணை ஆயர் பிறாவி சுட்டிக்காட்டியுள்ளார் போலத் தெரிகிறது. முதலில் இவர்கள் நிறுவத்திட்டமிட்டிருந்த அச்சகம் முழுமையாக இக்கத்தோலிக்க பத்திரிகைக் கென்றே இயங்கவேண்டியிருக்கும் (நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், போன்றவற்றை வெளியிட முடியாதிருக்கும்) என்றும் அடுத்து வாசகர் தொகையைக்கூட்டி வருமானத்தை உறுதிப்படுத்திப் பத்திரிகை சீராக வெளிவரச் செய்ய வேண்டுமாயின் பாராளுமன்ற விவாதங்கள் (இங்கிலாந்துப் பாராளுமன்றம்) போன்ற சுவையான விடயங்களையும் வெளியிடவேண்டியிருக்குமென ஆயர் பெற்றக்கீனி கருதினார். அத்துடன் அரசாங்கத்துக்கெதிரான நிலைப்பாட்டை எடுக்க முடியாதிருக்கும். ஏனெனில் கத்தோலிக்கரிடமிருந்து போதியளவு பொருளாதார ஆதரவு கிடையாது என்பதால் அரசாங்கத்தின் தயவில் தங்கியிருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இது கத்தோலிக்க பத்திரிகையொன்று வெளியிடுவதற்கான குறிக்கோளிலிருந்து விலகுவதாகும் என்றும் மேலும் பெற்றக்கீனி ஆண்டகை சுட்டிக்காட்டுகிறார்.(26)

மனம் தளராத ஆயர் பெற்றக்கீனி கத்தோலிக்க பத்திரிகையொன்றை ஆரம்பிப்பதற்கு கொழும்பு இணை ஆயர் பிறாவியுடனும் தனியாகவும் மேற்கொண்ட மேலும் சில முயற்சிகளை இங்கு குறிப்பிட வேண்டும். 1844ல் இருந்து கொழும்பில் இயங்கத்துவங்கியிருந்த கத்தோலிக்க அச்சகத்தையும், 'The Times' என்ற தேசிய பத்திரிகை அச்சாகிய 1846ல் நிறுவப்பட்ட பிறிதொரு அச்சகத்தையும் ஆயர்கள் இருவரும் நாடினர். தாம் திட்டமிட்ட கத்தோலிக்க இதழை வெளியிட இவர்கள் அச்சக நிர்வாகிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கவில்லை. அச்சகத்தார் எதிர்பார்த்த பணம் மிகவும் அதிகமாயிருந்தது. பின்னர் 'The Times' பத்திரிகையின் பங்குகளில் பாதியை விலைக்கு வாங்கி அதையொரு அரசியல் சமய இதழாக வெளியிட மேற்கொண்ட முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. தொடர்ந்தும் ஆயர் பெற்றக்கினி யாழ்ப்பாணத்தில் ஒரு அச்சகத்தை நிறுவ வேண்டிய இயந்திர உபகரணங்களை விலைக்கு வாங்க முயன்றார். ஆனால் 1853ல் அவர் இத்தாலி சென்றபோது அதற்குவேண்டிய பணத்தை அவரால் திரட்டமுடியவில்லை. (27) இதனால் ஆயர்கள் பிறாவி, பெற்றக்கீனி அவர்களின் "கத்தோலிக்க பத்திரிகைத்திட்டம்" அத்துடன் ஆயர் பெற்றக்கீனியின் "யாழ்ப்பாணத்தில் ஒரு கத்தோலிக்க பத்திரிகைத் திட்டம்" ஆகியவை அப்போதைக்குக் கிடப்பில் போடப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர் பெற்றக்கீனியின் அயராத முயற்சி பின்னடைவைச் சந்தித்தாலும் அவர் கொடுத்த அழுத்தம் நாளடடைவில் வேகம் பெற்றது என்றுதான் சொல்லவேண்டும். கொழும்பில் இயங்கிவந்த கத்தோலிக்க அச்சகம் சீராக இயங்கவில்லை போல் தெரிகிறது.(28) தென்பகுதிக்கு தேவையான கத்தோலிக்க மறைக்கல்வி நூல்கள் போன்றவற்றைப் பதிப்பிக்கவே இவ்வச்சகம் சிரமப்பட்டவேளையில் வடபகுதித் தேவைகளையும் நிறைவு செய்ய எதிர்பார்ப்பது எப்படி? அத்துடன் யாழ்ப்பாணத்தில் 1841ல் இருந்து வெளிவந்துகொண்டிருந்த 'Morning Star' 'உதயதாரகை' மட்டுமல்ல கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பல்வேறு கிறீஸ்தவ சபைகளின் பத்திரிகைகள் வெளிவரத் துவங்கி கத்தோலிக்கருக்குப் பெரும் சவாலாக விளங்கின.

அரசாங்கத்தின் ஆதரவுடனும், பல்வேறு புரட்டஸ்தாந்து சபைகளின் கண்காணிப்பிலும் வெளிவந்த பத்திரிகைகளால் கத்தோலிக்கரது நலன்கள் பாதிக்கப் பட்டனவென்றே சொல்லவேண்டும். 1834ல் புரட்டஸ்தாந்து நிர்வாகத்தின் கீழ் 'The Observer' என்ற பத்திரிகை கொழும்பில் வெளியானது. பின்னர் புரட்டஸ்தாந்து சபையினரால் 'The Examiner' என்ற பத்திரிகை வெளியிடப்பட்ட இக்காலத்தில் மேலும் அங்கிளிக்கன் வெஸ்லியன் திருச்சபையினரின் சில பத்திரிகைகள் தோன்றி சொற்ப கால வெளியீட்டின் பின் நின்று போயின. ஆனால் இந்த சொற்பகாலத்திலும் கத்தோலிக்க திருச்சபையின் நலன்களை இவை வெகுவாகப் பாதித்தன. இவைதாம் 'The Diversan Gazette', The Church Missionary Gleaner', The Ceylon Friend' என்பவை. யாழ்ப்பாணத்தில் 'Morning Star' பத்திரிகையைத் தொடர்ந்து 1862ல் புரட்டஸ்தாந்து சபையினரின் 'Jaffna Freeman' எனும் பத்திரிகையும், 1863ல் 'Ceylon Patriot' எனும் பத்திரிகையும் வெளிவந்தன. இக்காலத்தில் 'Jaffna News' எனும் பத்திரிகை வெளிவந்து 1871ல் 'Jaffna Freeman' உடன் இணைந்தது. இவற்றுடன் இந்த பல்வேறு கிறிஸ்தவ சபைகள் சில தமிழ்ப் பத்திரிகைகளையும் வெளியிட்டுவந்தன. (29)

கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகளுக்கும், பக்தி முயற்சிகளுக்கும் செயல்பாடுகளுக்கும் எதிராக மேற்குறிப்பிட்ட பத்திரிகைகளில் கட்டுரைகளுக்கும், விமரிசனங்களுக்கும் தகுந்த பதில் அளிக்க முடியாமலும் உறுப்பினர் எண்ணிக்கையில் மற்ற கிறீஸ்தவ சபைகளைவிட மிகவும் அதிகமாயிருந்தும் கல்வி போன்ற முக்கிய விடயங்களில் தமது உரிமைகளை எடுத்துரைக்கவும் முடியாமல் தத்தளித்தது கத்தோலிக்க திருச்சபை.

காலம் தாழ்த்தியென்றாலும் கொழும்பில்தான் கத்தோலிக்க பத்திரிகைத்திட்டம் முதலில்செயல் வடிவம் பெற்றது. அங்கு 1846ல் ஆங்கிலத்தில் 'Colombo Catholic Magazine' என்ற மாத இதழ் வெளிவரத்துவங்கியது. ஆனால் இது குறுகிய காலத்திலேயே நின்றுவிட்டது. அதன்பின் 1869ல் தான் மாதமிருமுறை இதழாக Ceylon Catholic Messenger எனும் ஆங்கில இதழ் வெளிவரத் துவங்கியது. தொடர்ந்து 1873ல் 'Gnanakartha Practipaya' என்ற சிங்கள இதழ் வெளிவரத் துவங்கியது.(30) இவற்றுள் இலங்கை முழுவதும் வாழ் கத்தோலிக்கருடைய பிரச்சினைகளைத் தீர்க்க முயன்றதன் அடிப்படையில் Ceylon Catholic Messenger ஓரளவுக்கு யாழ்ப்பாணக் கத்தோலிக்கருக்கும் ஆறுதலாகவிருந்தது. எனினும் யாழ்ப்பாணக் கத்தோலிக்கர் எதிர்நோக்கியிருந்த தனித்துவமான பிரச்சனைகளைத் தீர்க்க யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகை உருவாகவேண்டும் என்ற தேவை முன்னரைப்போலவே இருந்தது.

## யாழ்ப்பாணத்தில் முதல் கத்தோலிக்க அச்சகம்

இந்தியாவில் 9 வருடங்கள் மறைப்பணியாற்றிய பின் யாழ்ப்பாணத்திற்கு 1856ல் வந்து அமல மரித்தியாகிகள் சபையில் இணைந்து அருட்திரு கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் அடிகள் தமது பணியை ஆரம்பித்ததும் பெற்றக்கீனி ஆண்டகையின் அச்சகம் ஒன்றை ஆரம்பித்து பத்திரிகையொன்றை வெளியிடுவது என்ற கனவு நனவாவதற்குப் பச்சைக்கொடி காட்டப்பட்டது எனலாம். பொன்ஜீன் அடிகள் ஆரம்பத்திலிருந்தே கத்தோலிக்கக் கல்வி நிறுவனங்களுக்கு நீதி கிடைக்கவேண்டுமென்றும், திருமணம் சம்பந்தமாகக் கத்தோலிக்கருக்குப் பாதகமான சில சட்டங்கள் நீக்கப்படவேண்டுமென்றும் தமது பேனாவைக் கொண்டே போராடினர். தமது வாதங்களை ஆணித்தரமாகவும் திறமையுடனும் வாசிப்போரைச் சிந்திக்கத் தூண்டும் வகையிலும் எழுதினர். இவற்றை உடனுக்குடன் தூண்டும் பிரசுரங்களாகவும், சிறிய நூல்களாகவும் வெளியிட ஒரு கத்தோலிக்க அச்சகம் யாழ்ப்பாணத்தில் விரைவில் தோன்ற வேண்டும் என்று உணர்ந்தார். ஆரம்பத்தில் தமது கருத்துக்களையும், கட்டுரைகளையும் சென்னையிலும், திருச்சியிலும் மட்டுமல்ல கொழும்பில் புரட்டஸ்தாந்து சபையினரால் நடாத்தப்பட்ட 'The Examiner' என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையில் முதலாக வெளியிட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (31)

புரட்டாஸ்தாந்து சபையினருடன் பல்வேறு முனைகளில் கத்தோலிக்க திருச்சபை 'எழுத்துப்போர்' களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அக்கால கட்டத்தில் பொன்ஜீன் அடிகள் தமது கட்டுரைகளை வெளியிடு வதற்கு அவர்களுடைய தயவை அணுகியமை ஒரு மிகவும் மென்மையாகக் கையாளப்பட வேண்டிய விடயமாகவே இருந்திருக்கும். தாம் விரும்பியவாறு சில விடயங்களை அவர்களது பத்திரிகைகளில் வெளியிட முடியாதிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. என ஞானப்பிரகாசர் சுவாமி குறிப்பிடுகிறார். (32) எனினும் 'The Examiner' என்ற பத்திரிகை குறிப்பாக ஓரளவு மென் போக்கைக் கடைப்பிடித்து வந்தமையாலும் பொன்ஜீன் அடிகளின் கட்டுரைகளும் கடிதங்களும் பெரும்பாலும் கத்தோலிக்கருக்கு நீதி கேட்பதில் மட்டும் ஈடுபட்டிருந்தமையாலும் இவை வெளியிடுவதில் பெரும் சிக்கல்கள் இருக்கவில்லை. எது எப்படியிருப்பினும் அக்கால சூழ் நிலையைக் கருத்தில் எடுக்கும்போது அவர்கள் பொன்ஜீன் அடிகளின் ஆக்கங்களை வெளியிட முன் வந்தமை அவர்களது பெருந்தன்மையைக் காட்டி நின்றது என்றே சொல்ல வேண்டும். எனினும் இவ்வாறு நிரந்தரமாகப் பிறரில் தங்கியிருப்பது பொன்ஜீன் அடிகள் போன்ற கடுகதி வேகத்தில் பணிபுரிபவர் களுக்கு ஒரு தடையாகவே இருந்திருக்கும். பொன்ஜீன் அடிகள் இவ்வாறாகத் தமது அவசரமாக வெளியிட வேண்டியிருந்த கடிதங்கள், கட்டுரைகளை வெளியிட அவற்றை அங்குமிங்கும் அனுப்பிக்கொண்டிருந்த போது கொழும்பில் இயங்கிக் கொண்டிருந்த கத்தோலிக்க அச்சகம் அடிகள் எதிர்பார்த்த உதவியை வழங்கவில்லைப் போல் தெரிகிறது. பொன்ஜீன் அடிகள் ஒரு குறிப்பில் கொழும்பில் பணியாற்றும் சில்வெஸ்டர் துறவற சபையினர் தமது சாதனைகளைப் பிரபல்யப்படுத்துவதற்கே அங்குள்ள அச்சகத்தை பயன்படுத்துவதாகக் குறை கூறுகிறார். (33)

1868ல் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க மறை வட்டப் பொறுப்பை ஏற்ற பொன்ஜீன் ஆண்டகையின் பணித்திட்டத்தில் அச்சகம் ஒன்றை நிறுவுவது முதலாவதாயிருந்திருக்கும். 1868 ஆகஸ்ட் 24ல் பிரான்சில் டூர்ஸ் (Tours) நகரில் ஆயர்பட்டம் பெற்று இலங்கை திரும்புமுன் அவரின் நண்பரும், உபகாரியும், பிரெஞ்சு அரசின் அமைச்சருமாயிருந்த ஒருவர் கையால் இயக்கக்கூடிய அச்சகப் பொறியொன்றை அவருக்கு அன்பளிப்பாக வழங்கினார். டெ லா வேர்ஷே (De La Vershere) எனும் ஒரு பெண் உபகாரி அவ் அச்சகப்பொறிக்கு வேண்டிய உதிரிப்பாகங்கள் வாங்குவதற்கென நன்கொடையாக 4000 பிராங்க் பணம் கொடுத்தார்.(34)

சிறிய அளவில் அச்சகம் ஒன்று ஆரம்பிப்பதற்குத் தேவையான எல்லா உபகரணங்களும் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தும் அச்சகப்பணி உடனடியாக ஆரம்பிக்கவில்லை. சற்றுக்காலம் தாழ்த்தினாலும் இந்தப் பொறிகள் ஒரு அச்சகமாக இயங்கத் துவங்கிய வரலாறு சற்றுக் சுவையானது. யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட அச்சக உபகரணங்கள் ஆயரில்லத்தில் வைக்கப்படாமல் அங்கிருந்து 2 மைல் தொலைவில் உள்ள கொழும்புத்துறையில் வைக்கப்பட்டன. அதற்கும் ஒரு காரணம் இருந்தது.

கொழும்புத்துறை என்னும் அமைதியான புறநகர்ப்பகுதியிலுள்ள கிராமத்தில் 1862ல் கொள்வனவு செய்யப்பட்ட வளாகத்திற்கு ஆயரில்ல வளாகத்திலும் மற்றும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் சிறிய அளவில் இயங்கிவந்த அனாதை இல்லங்களிலிருந்து சிறுவர் (ஆண்கள்) 1863ல் கொண்டுவரப்பட்டு பராமரிக்கப்பட்டனர். இந்நாட்களில்தான் தமிழ்க் கத்தோலிக்கரின் பல்வேறு தேவைகள் (தமிழ் ஆசிரியர்களை உருவாக்கல், இளைஞர் உருவாக்கம் போன்றவை) நிறைவு செய்யப்படவென யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க மறைவட்ட ஆயர் செமேரியா புனித சூசையப்பர் சகோதரர்கள் சபை (SSJ) என்ற சுதேச துறவறசபையை 1864 மார்ச் 19ல் ஏற்படுத்தினார். இவ்விரு அமைப்புக்களுக்கும் பொன்ஜீன் அடிகள் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.(35) பொன்ஜீன் அடிகள் அனாதை இல்லத்திற்கெனப் பல திட்டங்கள் வைத்திருந்தார். புனித சூசையப்பர் சபைச் சகோதரர்களுடைய பணிகளைப் பயன்படுத்தி அனாதை இல்லத்தையும் புனித சூசையப்பர் பாதுகாவலில் கொணர்ந்து விரிவுபடுத்தினார். குறிப்பாக 1868ல் அவர் ஆயராகப் பொறுப்பேற்றதும் அநாதை இல்லத்தைப் பல புதிய கட்டடங்களுடன் விரிவுபடுத்தினார். வழமையான பாடசாலையுடன் ஒரு தொழில் முன்னிலைப் பகுதியையும் ஏற்படுத்தினார். இங்கு தச்சுத்தொழில், இரும்பு அல்லது உலோகவேலை போன்றவற்றைக் கற்பதற்கான வாய்ப்புக்கள் இருந்தன.(36) மண்ணின் மைந்தராகிய புனித சூசையப்பர் சபைச்சகோதரர்கள் தமது இளைய தலைமுறையினர் தத்தம் திறமைகளைக் கண்டுபிடித்து அவற்றை வளர்ப்பதற்கு நல்ல பயிற்சியளித்தனர். பொன்ஜீன் ஆண்டகை கொண்டுவந்த அச்சகப் பொறியைத் தானாகவே இயக்க வரலாறு படைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C. அண்ட்றா எனும் மாணவன் இவர்களது பயிற்சி யில் உருவானவனே.

இத்தொழில் முன்னிலைப்பிரிவு ஆயரின் திட் டத்தில் தெளிவாக இருந்தமையால்தான் 1868 ஒக்டோபர் 25ல் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க மறை வட்ட ஆயராக அவர் வந்தபோது தமக்கு அன் பளிப்பாகக் கிடைத்த புதிய அச்சகப்பொறியை கொழும்புத்துறையில் இயக்கிய புனித சூசையப்பர் அனாதை இல்லத்தில் வைத்தார்.

ஏறக்குறைய 20 வருடங்களுக்கு மேலாக எதிர்பார்க்கப்பட்டிருந்த அச்சகப்பொறி பல்லாயிரக் கணக்கான மைல் தொலைவிலிருந்து கொண்டுவரப் பட்டு அச்சகப்பொறி மாதக்கணக்கில் கவனிப்பாரற்றுக் கொழும்புத்துறை புனித சூசையப்பர் அனாதை இல்லத் தில் ஒரு மூலையில் முடங்கிக் கிடந்தது. அச்சகப் பொறியின் இயக்கம்பற்றித் தெரிந்தோர் கத்தோலிக் கருள் எவரும் இருக்கவில்லையென்பதே இதன் காரணம்.

அனாதை இல்லத்தில் C. அண்ட்றா என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். ஒரு புதிய இயந்திரத் தைக் கண்டவுடன் அதன் இயக்கம் பயன்கள் பற்றி அறியும் ஆவல் எல்லா இளைஞர்க்கும் பொதுவாக இருப்பதொன்று. ஆனால் C. அண்ட்றா எனும் இளைஞனுக்கும் இந்த ஆவல் மற்றவரிலும் பார்க்க மிகவும் அதிகமாகவேயிருந்தது. ஒரு மூலையில் கவனிப்பாரற்றுக் கிடந்த அச்சகப்பொறியை இவன் பல நாட்களாகப் பாகம்பாகமாக ஆராய்ந்தான். அதை எவ்வாறு இயக்குவது என்று தானாகவே கண்டறிந் தான். பின்னர் இவன் மானிப்பாயில் இயங்கிக் கொண்டிருந்த அமெரிக்கன் புரட்டஸ்தாந்து சபை யினரின் அச்சகத்திற்குச்சென்று இன்னும் தெளிவில் லாத விடயங்கள் பற்றிய விளக்கங்களையும் பெற்றுக்கொண்டான். அங்கிருந்து அச்சடிக்கப் பயன் படும் மை கொஞ்சம் பெற்றுக்கொண்டு திரும்பினான். தானே வடிவமைத்துத் தோலினாலான மட்டை யொன்று தயாரித்தான். பின்னர் ஒரு கடதாசித் துண்டில் சில வசனங்கள் அச்சடிப்பதில் வெற்றி கண்டான். அந்நேரத்தில் அனாதை இல்லப் பொறுப் பாளராயிருந்த பொய்சோ (Boissau) அடிகள் மகிழ்ச்சியுடன் முதல் 'யாழ்ப்பாணக் கத்தோலிக்க அச்சகத்தில்' அச்சேறிய முதல் 'தொகுதி' வசனங் களை எடுத்து ஆயரிடம் விரைந்தார்.(37)

தமது நீண்ட நாள் எதிர்பார்ப்பும், அச்சியந்திரத் தைப்பெற்று நீண்ட பயணத்தின் பின் கொண்டு வந்து சேர்த்தமையின் பலனும் இவ்வாறு அண்ட்றா எனும் இளைஞனின் செயல்திறனால் கைகூடியது பற்றி மிகவும் மகிழ்ந்த ஆயர் அச்சக இயந்திரத்தைப் பொருத்தி ஒரு சிறிய அச்சகத்தை நிறுவி துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றை வெளியிட அவ்விளைஞ னுக்கு உத்தரவு வழங்கினார். அதற்கேற்ப அண்ட்றா முறைப்படி ஆயரின் பணிப்புரையின்படி அச்சேற்றிய முதல் துண்டுப்பிரசுரத்தின் தலைப்பு 'Protest of the Catholic of Ceylon' (இலங்கைக் கத்தோலிக்கரின் எதிர்ப்பு) என்பதாகும். கீழே 'Printed at the Catholic Press of the Holy Childgood, Colombogam, Jaffna 21st March 1871' (திருப்பாலத்துவத்துவத் தின் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சாகியது. கொழும் புத்துறை, யாழ்ப்பாணம், 21 மார்ச் 1871) என இருந்தது. (திருப்பாலத்துவ சபை வழங்கிய பண உதவியுடன்தான் கொழும்புத்துறை அனாதை இல்லம் பெருமளவிற்குப் பராமரிக்கப்பட்டது என்பது குறிப் பிடத்தக்கது) ரோமை திருப்பீடத்திற்குச் சொந்தமான காணிகள், கட்டடங்கள் போன்றவை இத்தாலிய அரசினால் அரசுடமையாக்கப்பட்டதற்கெதிர்ப்புத் தெரி விக்குமுகமாக இத் துண்டுப்பிரசுரம் வெளியிடப் பட்டது.(38)

## புனித சூசையப்பர் (வளனார்) கத்தோலிக்க அச்சகமாக புதிய இடத்தில்...

கொழும்புத்துறையில் சிறிய அளவில் ஆரம்பிக் கப்பட்ட திருப்பாலத்துவ அச்சகம் புனித வளனாரின் பாதுகாவலில் வைக்கப்பட்டது. ஆயரின் மேய்ப்புப் பணியில் துண்டுப்பிரசுரங்கள், நூல்கள் போன்றவை முக்கிய இடம் வகித்தன. சுற்றுமடல்கள், மடல்கள் மூலம் தமது குருக்களுடனும், மக்களுடனும் நெருக்க மான தொடர்பை ஏற்படுத்தி அவர்களை வழிநடாத்தி வந்தார். தமது பணியை மென்மேலும் பயனுள்ள தாக்கப் பத்திரிகையொன்றை ஆரம்பிப்பது இவரது அடுத்த உடனடித்திட்டமாக இருந்தது. எனவே கொழும்புத்துறையிலிருந்த அச்சகத்தைத் தமக்கு அரு காமையில் ஆயரில்ல வளாகத்திற்குள்ளேயே கொணர்ந்தார். இவ்வச்சகத்தின் இயக்கம் ஆயர் பொன்ஜினின் இதயத்துடிப்பாயிருந்ததெனலாம்.

1873ல் இருந்து புனித வளனார் கத்தோலிக்க அச்சகம் இங்கேயே(தற்போதைய இடத்தில்) இயங்கி வருகின்றது. திருவாளர் C. அண்ட்றா அச்சகத்துறை யில் மேலும் சிலவிடயங்களைக் கற்கவும் அனுபவ அறிவைப் பெறவும் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி வந்த இவர் நீண்டகாலம் இவ்வச்சகத்தின் தொழிற்கூட மேற்பார்வையாளராக (Foreman) நீண்ட காலம் மிகத்திறமையுடன் பணியாற்றினார். (39) கத்தோலிக்க பாதுகாவலன் 'The Catholic Guardian' பத்திரிகை ஒரு செய்தித்தாளாகப் பதிவுசெய்யப்பட்ட போது இவரது பெயர்தான் வெளியீட்டாளராகக் கொடுக்கப்பட்டு ஆரம்பத்தில் இருந்து பல வருடங்களாக இவரது பெயரை ஒவ்வொரு பிரதியிலும் காணலாம். திரு. C. அண்ட்றூ இவ்வாறு நினைவு கூரப்பட்டமை முறையே ஏனெனில் திரு. C. அண்ட்றூவின் பங்களிப்பு அந்த நேரத்தில் இல்லாதிருந்தால் மறைவட்ட வளர்ச்சியில் முக்கியமான கட்டத்தில் பிரதான பங்குவகித்த கத்தோலிக்க அச்சகத்தின் ஆரம்பம் ஒரு சில வருடங்களாவது பின்தள்ளப்பட்டிருக்கும். அக் காலகட்டத்தில் கத்தோலிக்க திருச்சபையை எதிர்கொண்ட சவால்களை நோக்கும்போது இந்த ஒரு சிலவருடங்கள் முதலாக கத்தோலிக்க திருச்சபையின் பிற்கால வளர்ச்சிக்கு மிகவும் பாதகமாக இருந்திருக்கும்.

## யாழ்ப்பாணக் கத்தோலிக்க பாதுகாவலன் 'The Jaffna Catholic Guardian' ஆரம்பம்

புனித வளனார் கத்தோலிக்க அச்சகம் யாழ்ப்பாண ஆயர் இல்ல வளாகத்தில் இயங்கத் துவங்கியதும் அடுத்த கட்ட நடவடிக்கை மறைவட்டக் கத்தோலிக்க பத்திரிகையை ஆரம்பிப்பது என்பதில் இரு கருத்துக்கள் இருந்திருக்க முடியாது. ஆயர் பொன்ஜீன் ஆண்டகையின் நேரடிக்கண்காணிப்பில் பல்வேறு ஆயத்தங்கள் செய்யப்பட்டு யாழ் மறைவட்ட முதல் கத்தோலிக்க பத்திரிகை ஒரு தமிழ் ஆங்கில இதழாக 1876ம் ஆண்டு பெப்ரவரி 19ம் நாள் வெளிவரத் தொடங்கியது. தொடங்கியபோது இது ஒரு மாதமிருமுறை வருமிதழாகவிருந்தது. இதன் முதல் பத்திராதிபராக இளமைத் துடிப்புள்ள அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் M. A. மேர்பி (Murphy) நியமிக்கப்பட்டார். அப்போது அவருக்கு 26 வயது. புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவுமிருந்தார். மிகச்சிறந்த நிர்வாகி, ஆங்கிலத் திலும் புலமை மிக்கவராயிருந்தார்.(40) இவருக்குதவியாகத் திருவாளர்கள் முருகப்பா, பிலிப்பையா என்பவர்கள் மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டனர். (41)

## முதல் இதழ் ஒரு கத்தோலிக்க பத்திரிகையின் கொள்கைப்பிரகடனம்

கத்தோலிக்க பாதுகாவலன் என்ற இப்பழம் பெரும் பத்திரிகை 125 வருடங்களையும் தாண்டி வெற்றிகரமாக வெளிவந்துகொண்டிருக்கும் இக்காலக் கட்டத்தில் இதன் முதற் பிரதி இன்றும் வாசித்து சிந்திப்பதற்கு மிகவும் பொருத்தமான கருத்துக்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக இதன் ஆசிரியர் தலையங்கமும், இப்பத்திரிகையின் தந்தை என அழைக்கப்படக் கூடிய ஆயர் பொன்ஜீன் ஆண்டகையின் அறிவுரைக் கடிதமும் கோடிட்டுக் காட்டப்படக் கூடியவை. இவ்விரண்டு நீண்டு பந்திகளும் ஒரு கத்தோலிக்க பத்திரிகையின் கொள்கைப் பிரகடனத்தின் (Magna Carta) இரு பிரிவுகள் எனலாம். முதல் வருடங்களில் வந்த பாதுகாவலன் பத்திரிகைப் பிரதிகளைப் புரட்டிப் பார்க்கும் போது இக்கொள்கைப் பிரகடனத்தின் அடிப்படையில் பாதுகாவலன் தனக்கென்று வகுத்துக் கொண்ட பாதை சிறப்பானதும் பொறுப்புள்ளதும் எனத் தெளிவாகின்றது. எனவே இவற்றின் முக்கிய கருத்துக்களை மட்டும் நோக்குவது பொருத்தமாகும்.

ஆசிரியர் தலையங்கத்தில் உள்ள முக்கிய அம்சங்கள்:-

1) பத்திரிகை ஒன்றை ஆரம்பிப்பதே கடினம். அதுவும் கடலாலும் தரையாலும் சென்றடையச் சிரமமான யாழ்ப்பாணத்தில் பல்வேறு வசதியீனங்களை எதிர்கொண்டும் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையிலும் வாழும் கத்தோலிக்கருக்கென பிரதானமாக ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடத்துவது மிகவும் சிரமம்.
2) ஆனால் கத்தோலிக்க பத்திரிகை ஒன்றின் தேவையை எந்தவித தடைகளும் இல்லாததொன்றாக்கிவிட முடியாது.
3) (பத்திரிகை சீராக இயங்குவதற்கு) கத்தோலிக்கர் தியாகங்கள் செய்ய முன்வரவேண்டும். சந்தாதாரர்களாகியும், எழுத்தாக்கங்களை வழங்கியும் தம் ஒத்துழைப்பை வழங்கலாம்.
4) தமிழ்க் கத்தோலிக்கருக்கு இதுவரை தம் கருத்துக்களை எடுத்துரைக்க, உரிமைகளை வலியுறுத்த, தமது மதத்திற்கெதிராகப் பல்வேறு வழிகளில் தோன்றும் பிரச்சாரங்களுக்குப் பதிலளிக்க, தமது மதத்தைப்பற்றியும் அதன் பழம்பெருமைகளைப் பற்றியும் முழுமையான விதத்திலும் தமக்கு விளங்கக் கூடிய முறையிலும் அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள இதுவரை எந்த ஊடகமும் இருந்த தில்லை. இப்போது இக்குறை நீங்குகின்றது.

5) கத்தோலிக்க பத்திரிகை தடையின்றி வளர மிகவும் உயர்மட்டத்தில் திருச்சபையின் அதிகாரிகளது ஆதரவும் வழிகாட்டுதலும் வேண்டும். சத்திய வேத பாதுகாவலனைப் பொறுத்தளவில் ஆயர் பொன்ஜீன் வழங்கிவரும் ஆதரவும் வழிகாட்டுத லும் மிகவும் உற்சாகம் தருவதாக உள்ளது.(42)

ஆயர் பொன்ஜீன் சத்தியவேத பாதுகாவலன் நிர்வாகத்தினருக்கு எழுதிய கடிதம் பத்திரிகையின் குறிக்கோளையும் செயல்திட்டத்தையும் விளக்கும் நீண்டதொரு மடலாக உள்ளது. கத்தோலிக்க மதத் தின் வளர்ச்சிக்கு குறிப்பாக வடபகுதியில் சத்திய வேத பாதுகாவலன் முக்கிய பங்களிப்புச் செய்ய முடியுமென்று ஆயர் சுட்டிக்காட்டுகின்றார். இதில் உள்ள முக்கிய விடயங்கள் பின்வருமாறு:

(1) தமது தரவை வெளிப்படுத்த முடியாதிருந்த தமிழ்க் கத்தோலிக்கரது குரலாகவும், உண்மை இறை நம்பிக்கையின் காவலர்களாகவும் செயல்படுவது கடினமான ஆனால் மேன்மை யானதொரு பணி. இதனை நிறைவேற்ற அர்ப் பணிப்புணர்வுடன் முன்வந்த உங்களுக்கு எனது வாழ்த்துக்கள். இப்பணி ஒரு போருக்குப் போகு முன் ஒருவன் உட்கார்ந்து பல்வேறு சாதக பாதக அம்சங்களை ஆராய்ந்து செல்வது போன்றது.

(2) பத்திரிகைக்கு இரண்டு விதமான குறிக்கோள்கள் இருக்கவேண்டும்.

(i) இருக்கும் மத நம்பிக்கையையும், புனித வாழ்க்கையையும் கத்தோலிக்கரிடையே பேணி வளர்ப்பது.

(ii) சிலுவையென்னும் ஆயுதத்துடன் எதிரி களின் தாக்குதல்களை முறியடிப்பது.

ஆயர் இவற்றை மேலும் விளக்குகிறார். சாதாரண மக்களுக்குக் கத்தோலிக்க திருச்சபையின் மறையுண்மைகளையும் ஒழுக்க விதிகளையும் தெளி வாக வழங்கவேண்டும். பழைய ஏற்பாட்டுக் காலத் திலிருந்து - பிதாப்பிதாக்கள் இறைவாக்கினர், பின் யேசுவின் பிறப்பும் மீட்புப்பணியும் தொடர்ந்து அப்போஸ்தலர், மறைச்சாட்சியர் காலம், இறையியல் வல்லுநர்கள், புனிதர்கள் மற்றும் திருச்சபையின் நிறுவனங்கள் பற்றிய விளக்கங்கள் போன்ற பல் வேறு அம்சங்கள் வழங்கப்படலாம். அத்துடன் நாட்டில் நடைமுறையில் உள்ள மூட நம்பிக்கைகள், இந்து சமய தத்துவங்கள் பற்றிய மதிப்பீடுகள், மற்றும் தமிழ்மொழிப் பாவனை முறைகள் போன்ற விடயங்களும் அவற்றுடன் பொதுவாக வாசகர்களுக் குப் பயனுள்ள வேறுவிடயங்களும் இடம்பெறலாம்.

இரண்டாவதாக எதிரிகளின் தாக்குதல்களை முறியடிப்பது பற்றியது. இது மிகவும் கடினமானது. இரண்டு விதமான எதிரிகள் உள்ளனர் - முதல் வகுப் பினர் பைபிள், பைபிளைத் தவிர வேறில்லையென் போர் இவர்களைக் கோபத்துடனல்ல அன்புடன் அணுகவேண்டும். இவர்கள் எங்களைப் பல்வேறு பெயர் கொண்டழைப்பர். இறைவனுக்குப் பணிபுரிவதா கக் கருதி இவையெல்லாம் செய்வர் யோவான்.16:6. தொடர்ந்து இவர்களை வெற்றிகொள்வது எப்படி யென்று பொன்ஜீன் ஆண்டகை சில எளிய படிமுறை களைத் தருகின்றார். அடுத்த வகுப்பினர் உலக போக்குடையோர், இவர்களை வெற்றிகொள்வது மிகவும் கடினம். ஏளனம், பிடிவாதம், உண்மையைத் திரிபுபடுத்தல் போன்றவை இவர்களது ஆயுதங்கள். இவர்களுக்கெதிராகத்தான் கத்தோலிக்க பத்திரிகை யாளர்களது போராட்டம் ஆரம்பமாகவேண்டும்.

(3) ஒரு சிறிய மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை யால் பெரிதாக எதையும் சாதிக்க முடியா விட்டாலும் ஒரு சிலவற்றையாவது சாதிக்கலாம். கத்தோலிக்கருக்குச் சரியான ஒளியைக் கொடுக் கலாம். அதே வேளையில் எதிரணியில் உள்ள மனச்சாட்சியின்படி உண்மையைத் தேடுவோரை யும் சிந்திக்க வைக்கலாம். துளித்துளியாக விழும் மழைநீர் கல்லையும் குழிவிழச்செய்வது போல சத்தியவேதபாதுகாவலனின் தாக்கமும் இருக்க வேண்டும். உண்மை அறிவிக்கப்படும் போது அது ஒருபோதும் வீணாவதில்லை.

(4) உண்மையை எடுத்துரைக்கும் போது தாழ்ச்சி யுடனும் அதேவேளையில் முழு உண்மைகளை யும் வழங்கவேண்டும்.

(5) கட்சி அரசியலைப் பொறுத்தளவில் அதற்கப் பால் இருந்து செயல்படுங்கள். உண்மையே எதிலும் உங்கள் குறிக்கோளாகவும் அளவு கோலாகவும் இருக்கட்டும்.

இவ்வாறாக ஆயர் பொன்ஜீனுடைய அறிவுரை தொடர்கின்றது. தனது முழு ஆதரவு சத்தியவேத பாதுகாவலனுக்கு எப்போதும் இருக்கும் என்று உறுதி யும் கூறுகிறார்.(43)

ஆயரவர்கள் தனது வாக்குறுதியைக் காப் பாற்றி வந்துள்ளமை அவர் பத்திராதிபர் M. A. மேர்பி அடிகளாருக்கு 1877ம் ஆண்டில் எழுதிய கடிதத்தி லிருந்து தெளிவாகின்றது.(பத்திராதிபராக 1876ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பொறுப்பேற்கும் போது அருட்சகோதரராக விருந்தார். பின் 1877ல் இவர் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டிருக்க வேண்டும்). சத்தியவேத பாது காவலன் ஊடாக மறையறிவிப்புப் பணிக்கு மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கலாம் என்று ஆயர் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத்தக்கது. இதோ அக் கடிதத்திலுள்ள முக்கிய வரிகள்: 'சத்தியவேத பாது காவலனில் நீர் எழுத அமரும்போது ஒரு மறை யுரையாற்றப் போவதாகவே நினைத்துக்கொள்ளும். உமது வார்த்தைகள் முழு இலங்கையிலும் உள்ள எல்லா மக்களையும் சென்றடையவுள்ளது. அவர் களுள் பெரியோர், சிறியோர், இறைவனில் நம்பிக்கை யுள்ளோர், நம்பிக்கையிழந்தோர், பிரமாணிக்கமுள்ள கத்தோலிக்கர், பேதகக் கொள்கைகளைப் பின்பற்று வோர் போன்ற எல்லோரும் இருப்பர். இவர்கள் எல்லோருக்கும் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் உண்மையெனும் அப்பம் சிறுசிறு துண்டுகளாக வழங்கப்பட வேண்டும். இவர்களுள் பலர் இவற்றைப் பெற்றுப் பலன் பெறுவதற்கு இதுபோன்ற பத்திரிகை களில் வரும் எளிதான கட்டுரைகளைத்தான் நம்பி யிருக்கிறார்கள்' (44) இக்கடிதம் 1877 மார்ச் 6ம் நாள் எழுதப்பட்டுள்ளது. ஆயர் தொடர்ந்து மேர்பி அடிகளாருக்கு அதே வருடம் யூலை 25ம் நாளும் ஆகஸ்ட் 5ம் நாளும் எழுதிய கடிதங்கள் ஆயர் பொன்ஜீன் மேர்பி அடிகளாரின் பணியில் திருப்தி யடைந்திருப்பதைக் காட்டுகின்றது என புர்டன்ஸ் அடிகள் தமது நூலில் சுட்டிக்காட்டுகின்றார்.(45)

முதல் வருடங்களில் வெளிவந்த சத்தியவேத பாதுகாவலன் பிரதிகளைப் புரட்டிப்பார்க்கும்போது ஆரம்பத்திலிருந்தே இக்கத்தோலிக்கப் பத்திரிகை ஆயர் பொன்ஜீனின் ஆலோசனைகளையும், வழி காட்டுதல்களையும் உள்வாங்கி கத்தோலிக்கருடைய மட்டுமல்ல உண்மை, நீதி, சமாதானத்தை விரும்பும் எல்லா மக்களுடைய நலன்களையும் காக்கும் காவ லனாக ஒரு உயரிய பத்திரிகைப் பாரம்பரியத்தை ஏற்படுத்தியமை தெளிவாகின்றது. இக்கால பத்திரிகை யின் (குறிப்பாக முதல் 15 - 20 வருடங்கள்) வடி வமைப்பும், உள்ளடக்கமும் இதனைச் சந்தேகத்திற் கிடமின்றி உணர்த்துகின்றன.

## வடிவமைப்பு

1876 பெப்ரவரி 19ம் நாள் வந்த முதல் பிரதியிலேயே இது மாதம் இருமுறை (ஒன்றுவிட்ட ஒரு சனிக்கிழமை) வெளிவரும் பத்திரிகை என்று 'The Jaffna Catholic Guardian' 'சத்தியவேத பாது காவலன்' என்று ஆங்கிலத்திலும், தமிழிலும் வந்த தலைப்புக் கீழே தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு பத்திரி கையும் நான்கு பக்கங்களைக் கொண்டதாயிருந்தது. இலக்கமிடுதல் ஒவ்வொரு பிரதிக்கும் தனித்தனியென் றிராது முதல் பிரதியில் ஆரம்பித்த இலக்கம் (1) ஒரு வருடம் முழுவதும் தொடர்ந்து வருட இறுதிப் பிரதியில் இறுதி இலக்கத்துடன் முடிவடைந்தது. ஒவ்வொரு பிரதியிலும் மலர் இலக்கம்(பா), இதழ் இலக்கம் (No) தரப்பட்டுள்ளது. சத்தியவேத பாது காவலனில் பல கட்டுரைகள் தொடர்கட்டுரைகளாக வந்துகொண்டிருந்தன. இதனால் வருட முடிவில் எல்லாப்பிரதிகளையும் ஒன்றாகக் கூட்டி ஒரு பெரிய நூலாகக் கட்டி வைத்திருக்கும்போது தேவையான வேளையில் வேண்டிய கட்டுரையை முழுமையாகப் பெறக் கூடியதாயிருந்தது. முதல் பக்கத்தில் பொது விடயங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இருந்தன. இங்கு சத்தியவேத பாதுகாவலன் சந்தாவிபரம், விளம்பரங்கள் (புனித வளனார் கத்தோலிக்க அச்சக விளம்பரங்களும், பிற விபரங்களும்), யாழ்நகரிலும் புறநகர்ப்பகுதியிலும் உள்ள ஆலயங்களிலும் ஞாயிறு திருப்பலி நேரங்கள், அடுத்த பிரதிவெளிவரும் வரை யுள்ள 2 வாரகாலப் பகுதிக்கான புனிதர் விழாக்கள், மற்றும் திருநாள் விபரங்கள் போன்றவை இடம் பெற்றன.

இரண்டாம் மூன்றாம் பக்கங்கள் தமிழில் இருந்தன. இவற்றின் உள்ளடக்கம் மிக முக்கிய மானது. இரண்டாம் பக்கத்தில் ஆசிரியர் தலை யங்கம் இடம்பெற்றது. சிலவேளைகளில் அத்துடன் வேறு ஒன்று அல்லது இரண்டு கட்டுரைகளும் இடம் பெற்றன. தொடர்ந்து 2ம் 3ம் பக்கங்களில் செய்திகள் இடம்பெற்றன. இச் செய்திகள் யாழ்ப்பாணம், இலங்கை, வடதேசம் (இந்தியா), பிறதேசம் (ரோமை யும் மற்றும் உலகசெய்திகள்) அநேகமாகத் திருச் சபைச் செய்திகள் இடம்பெற்றன. 3ம் பக்கத்தில் வாசகர் கடிதங்களும் இடம்பெற்றன. 4ம் பக்கத்தில் ஆங்கிலத்தில் ஆசிரியர் தலையங்கமும் ஒன்று அல்லது இரண்டு கட்டுரைகள், அல்லது முக்கிய நிகழ்வு அல்லது விடயம் பற்றிய விமர்சனம் இடம் பெற்றது. பொதுவாக இவ்வமைப்பு ஆரம்பத்தில் பேணப்பட்டாலும் அவ்வப்போது படிப்படியாக சில மாற்றங்கள் செய்யப்பட்டன. உ+ம் மூன்றாவது இதழிலிருந்து முதல்பக்கத்தில் ஆங்கிலத்தில் ரோமா புரியிலும் மற்றும் உலகின் முக்கிய நாடுகளிலும் நகரங்களிலும் இடம்பெற்ற கத்தோலிக்க திருச்சபை சம்பந்தமான முக்கிய நிகழ்வுகள் தரப்பட்டுவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுப்பு முடியாவிட்டால் இதன் தொடர்ச்சி இறுதிப் பக்கத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.(46)

## வார இதழாதல் – மேலும் வளர்ச்சியும் மாற்றங்களும்

ஆயர் பொன்ஜீன் சத்தியவேத பாதுகாவல னுக்கு எழுதிய முதல் கடிதத்தில் போருக்குச் செல்லும் ஒருவன் சாதக பாதக காரணிகளை ஆராய்ந்தபின் செல்வதுபோல அல்லது கட்டிடம் கட்ட இருப்பவன் அதைக்கட்டி முடிக்கவேண்டிய பொருட்களைத் தன் னால் ஒன்றுசேர்க்க முடியுமா என்று பார்த்தபின் வேலையை அதற்கேற்ப துவங்கவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.(47) மிகவும் அவதானமாக மாதமிரு முறை என்று ஆரம்பித்த சத்தியவேத பாதுகாவலன் இரண்டு வருட வெளியீட்டின் பின் தனது மூன்றாம் வயதை ஆரம்பிக்கும்போது ஒரு வார வெளியீடாக வரத்துவங்கியது. 1877ம் ஆண்டு டிசம்பர் 1ம்நாள் வெளியீட்டில் பலருடைய வேண்டுகோளுக்கிணங்க சத்தியவேத பாதுகாவலன் தனது மூன்றாவது வருட வெளியீட்டை ஒரு வார வெளியீடாக ஆரம்பிக்கு மென்றும், சந்தா ஒரு ரூபாவால் மட்டும் (3 ரூபா விலிருந்து 4 ரூபாவுக்கு) கூடும் என்றும் தமிழிலும் ஆங்கிலத்திலும் அறிவித்திருந்தது. (48) அதன்படி 1878இல் பெப்ரவரி 23இல் வெளியான சத்தியவேத பாதுகாவலனில் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளி வரும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. முன் குறிப்பிட்ட சந்தா மாற்றமும் தரப்பட்டிருந்தது.(49)

1896ல் இருந்து சத்தியவேத பாதுகாவலன் அதுவரை வெளிவந்துகொண்டிருந்த அளவிலும் பார்க்கப் பெருப்பிக்கப்பட்டது. அதுவரையில் ஒரே பத்திரிகையில் முதல் பக்கத்தில் தமிழும், ஆங்கிலமும் கலந்து உள்ளே இரண்டாம் மூன்றாம் பக்கங்கள் தமிழிலும் நாலாம் பக்கம் ஆங்கிலத்திலும் வந்து கொண்டிருந்தது. இந்த வருடத்திலிருந்து (1896) அளவில் பெருப்பிக்கப்பட்ட நிலையில் சத்தியவேத பாதுகாவலன் தனித்தனி பிரதிகளாக வெளிவரத்து வங்கின. அவ்வருடத்திலிருந்து தமிழ் பிரிவு சத்திய வேத பாதுகாவலன் திரும்பவும் மாதமிருமுறை இதழா கியது. ஆனால் 1897ல் இருந்து Messenger of Our Immaculate Queen மாசற்ற இராக்கினியின் தூதன் என்ற சிறிய சிறப்புச் சஞ்சிகை மாதமொரு முறை வெளிவரத் துவங்கியது. ஆங்கிலப்பதிப்புத் தொடர்ந்து 1905லும் மேலும் 1914லும் அளவில் பெருப்பிக்கப்பட்டது. தமிழ்ப்பதிப்பு 1912ல் மீண்டும் வார இதழாகியதுடன் மாதமொருமுறை வெளிவந்து கொண்டிருந்த சிறப்புச் சஞ்சிகை நிறுத்தப்பட்டது.(50)

## உள்ளடக்கம் ஒரு கண்ணோட்டம்

பத்திரிகையின் முதல் பிரதியில் உள்ள ஆசிரியர் தலையங்கத்தின் பின்னணியில் ஆயர் பொன்ஜீன் ஆண்டகை இந்தப் பத்திரிகையில் என்ன வெல்லாம் உள்ளடக்கமாகவிருக்கவேண்டுமென எதிர் பார்த்திருந்தாரோ அத்தனையும் காலத்தின் தேவைக் கும் நாளுக்குநாள் மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப உள்ளடக்கப்பட்டிருந்ததை அவதானிக்கலாம்.

## செய்திகள்

முதல் பிரதியின் ஆசிரியர் தலையங்கத்தில் யாழ்ப்பாணம் தரையாலும் கடலாலும் சென்றடை வதற்குக் கடினமானதொரு பிரதேசம் (இன்றுபோல) என்று குறிப்பிட்டிருந்ததையும் இங்குள்ள கத்தோலிக் கர் பொதுவாகப் பெரிய செல்வந்தர்களல்ல என்று குறிப்பிட்டிருந்ததையும் அவதானித்தோம். எதுவித வெளித்தொடர்புகளும் இல்லாவிடில் யாழ்ப்பாண மக்கள், குறிப்பாகக் கத்தோலிக்கர் உலகச் செய்தி களையும் திருச்சபைச் செய்திகளையும் அறியாது கிணற்றுத் தவளைகளாகவே இருப்பர். அவர்களது பொருளாதார நிலையயைக் கருத்திலெடுக்கும் போது சத்தியவேத பாதுகாவலனுடன் உலக நடப்புகளை அறிய அவர்கள் இன்னுமொரு பத்திரிகையையும் வாங்கவேண்டுமென எதிர்பார்க்க முடியாது. எனவே சத்தியவேத பாதுகாவலன் முடியுமானளவுக்குச் செய்திகளை வழங்க முயன்றது. செய்திகளை ஒரு ஒழுங்குடன் வழங்குவதற்கென அவை பகுதிபகுதி யாகப் பிரிக்கப்பட்டிருந்தன. முதலில் யாழ்ப்பாணச் செய்திகளும் பின் இலங்கைச்செய்திகளும் இடம் பெற்றன. அந்நாட்களில் இந்தியாவும் இலங்கையும் ஆங்கிலேய அரசினாலேயே ஆட்சிசெலுத்தப்பட்டு வந்தமையினாலும், யாழ்ப்பாணத்திலும் குறிப்பாகத் தென் இந்தியாவிற்கும் இடையே நிலவி வந்து கொண்டிருக்கும் மொழி, பண்பாட்டுப் பிணைப்புக்களா லும் அடுத்த கூட்ட செய்திகளை வடதேசம் என்ற தலைப்பில் இந்தியச் செய்திகள் தரப்பட்டன. கத் தோலிக்க திருச்சபை ரோமையில் தலைமைப்பீடமாகக கொண்டியங்கும் ஒரு அனைத்துலகத் திருச்சபை யென்பதையும் யாழ்ப்பாணக் கத்தோலிக்கர் ரோமையி லும் உலகின் பல்வேறு இடங்களிலும் கத்தோலிக்க திருச்சபை சம்பந்தமான முக்கிய நிகழ்வுகளையும் மற்ற நிகழ்வுகளையும் அறியுமுகமாகப் பிறதேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தலைப்பில் பல முக்கிய செய்திகள் இடம் பெற்றன. கத்தோலிக்க பத்திரிகை என்ற மட்டில் இச் செய்திகளில் கத்தோலிக்க செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தன.

ஆங்கிலத்திலும் செய்திகள் முதல் பக்கத்திலும் கடைசிப்பக்கத்திலும் இடம்பெற்றனவாயினும் வடிவமைப்பில் வித்தியாசம் காணப்பட்டது. ஐரோப்பா, ஆசியா என்ற தலைப்புகளின் கீழும் Local and General உள்நாட்டு, பொதுச்(செய்திகள்) என்ற தலைப்பின் கீழ் இலங்கையில் நடந்த முக்கிய நிகழ்வுகள் (திருச்சபை சம்பந்தமான செய்திகள் உட்பட) தரப்பட்டுள்ளன.

இச்செய்திகள் யாழ்ப்பாண மக்களுக்குத் தாம் எங்கோ ஒரு மூலையில் வெளித்தொடர்பின்றி வாழ்கின்ற மக்கள் கூட்டம் என்ற உணர்விலிருந்து விடுபட்டுத் தாமும் உலக அரங்கில் மற்றவர்களோடு இணையாக இருப்பவர்கள் என்றும் கத்தோலிக்க திருச்சபையைப் பொறுத்தளவிலும் தாமும் இம் மாபெரும் மறையுடலின் உறுப்புக்களை என்று தம்மை மற்ற இடத்திருச்சபைகளுடன் ஒப்பிட்டுப்பார்த்துத் தமது பங்களிப்பையும் உணரக்கூடிய நிலையை ஏற்படுத்தின என்று சொல்லவேண்டும். இவ்வாறாக சத்தியவேத பாதுகாவலன் யாழ்மக்கள் உலகைப் பார்க்க ஒருசாளரம் போல அமைந்திருந்தது.

## மறைக்கல்வி

மறைக்கல்வி வழங்குவதற்குக் கத்தோலிக்க பத்திரிகை ஒரு சிறந்த ஊடகம். மறைக்கல்வி நூல்களிலும் பார்க்கப் பத்திரிகை சிறப்பிடம் பெறுகின்றது. அன்றாட தேவைகளுக்கும் வாசகர்களின் வாழ்க்கை நிலைக்கும் ஏற்ப பகுதிபகுதியாக உரிய விளக்கங்களுடன் மறையுண்மைகளைப் பத்திரிகைகள் வழங்குகின்றன. ஆயர் பொன்ஜீன் குறிப்பிட்டபடி கத்தோலிக்க மக்கள் தம் திருமறையில் பிரமாணிக்கமாயிருப்பதற்கு அதன் மறையுண்மைகளை ஐயந்திரிபுற அறிந்திருக்க வேண்டும்.

திருத்தந்தையர்களது சுற்றுமடல்கள், மடல்களும், யாழ் ஆயர்களுடைய மடல்களும் இங்கு முன்னுரிமை பெறுகின்றன. இவற்றுக்குரிய விளக்கங்களும், ஆசிரிய தலையங்கங்களிலும், தனிக்கட்டுரைகளிலும் இடம்பெற்று வந்துள்ளன. உதாரணமாகத் திருத்தந்தை 13ம் சிங்கராயர் 1880 டிசம்பர் 3ம் நாள் வெளியிட்ட மறைபரப்புப் பணி பற்றிய சுற்றுமடல் ஆங்கிலத்தில் 1881 ஜனவரி 22 வெளியீட்டில் ஒரு பின் இணைப்பாகவும் ஜனவரி 29ல் இருந்து தொடர்ந்து வந்த இதழ்களில் பகுதிபகுதியாகத் தமிழிலும் வந்திருந்தது.(51) அவ்வப்போது ஆயர்களின் திருமுகங்கள் வரும்போது அதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. உதாரணமாக ஆயர் மெலிசன் நோன்பு சுத்தபோசனம் பற்றி மறைவட்டக் குருக்கள், துறவியர், பொதுநிலையினருக்கு எழுதிய சுற்றுமடலைக் குறிப்பிடலாம்.(52)

திருச்சபையின் வரலாற்று அறிவு கத்தோலிக்கர் தமது மறையில் பிரமாணிக்கமாயிருப்பதற்கு முக்கியமானது. இதனை உணர்த்த ஒரு தொடர் கட்டுரை சத்தியவேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டு வந்துள்ளது. இதன் ஆரம்பத்தில் உள்ள பின்வரும் வசனங்களால் இதன் முக்கியத்துவம் உணர்த்தப்படுகின்றது. "நமது சத்திய கத்தோலிக்க ரோமான் திருச்சபையின் பூர்வ அபூர்வ சரித்திரங்களைச் சரிவர அறியாதார் நம்முட் பலர். அச்சரித்திரங்களையறிவதனாலே திருச்சபையினுடைய உண்மையையும் அதிலுள்ள தேவ தன்மையையும் பரிசுத்தம் முதலிய சுகிர்தவிலட்சணங்களையுந் தெள்ளிதிலுணர வழியாகும்"..... இவ்வாறு தொடர்ந்த முன்னுரையுடன் பழைய ஏற்பாட்டு யூதர் வரலாற்றுடன் இந்த நீண்ட வரலாறு ஆரம்பமாகி கிறீஸ்துவின் பிறப்பு, அப்போஸ்தலர் காலம், அவர்களின் பணிபற்றிய வரலாறு நீண்டு விரிகின்றது.(53)

நாம் எமது பழைய கத்தோலிக்க பாரம்பரியங்களை நன்கு அறிந்தால்தான் அதையிட்டுப் பெருமைப்படமுடியும் அதைப்பேணிப் பாதுகாக்க முடியும். இந்த அடிப்படையில் எங்கள் முதாதையரது பெருமைக்குரிய வரலாறு குறிப்பாக மறைச்சாட்சியரின் வரலாறு விளக்கமாகத் தொடர் கட்டுரையாகத் தரப்பட்டுள்ளது. மன்னார் மறைசாட்சிகளிலிருந்து போர்த்துக்கேயர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மறைச்சாட்சிகளான குருக்கள் பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் மறைசாட்சிகளான மண்ணின் மைந்தர்களான பொதுநிலையினரான தொன் பேட்றோவும் அவரது சகாக்களும் பற்றிய வரலாறு தரப்பட்டுள்ளது.(54)

இன்றும் மறைசாட்சிகளின் யுகம் முடியவில்லையென்று காண்பிப்பதற்கும் அவர்களது வீரம் செறிந்த வாழ்வு தொடர்ந்து எமக்கு வழிகாட்டியெனக் காண்பிப்பதற்கு சில சமகால நிகழ்வுகளும் தரப்பட்டுள்ளன. இதற்கு உதாரணங்களாக ரோமன் கத்தோலிக்கர் கொரியாவில் துன்புறுத்தப்பட்டமையும் (55) சீன வேதகலாபனையையும் குறிப்படலாம்.(56) பொன்ஜீன் ஆண்டகை கத்தோலிக்க மக்களுக்கு வேண்டிய மறையுண்மைகளை வழங்குவதுடன் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தவறான பிரச்சாரங்களிலிருந்து பாதுகாக்கும் கடமையும் சத்தியவேத பாதுகாவலனுக்குண்டு என்று குறிப்பிட்டுள்ளார். கத்தோலிக்க மக்களைக் குழப்பி விடும் இப்பிரச்சாரத்திற்குத் தகுந்த பதிலடி கொடுக்க கத்தோலிக்க பாதுகாவலன் தயங்கியதில்லை.

"Morning Star உதயதாரகை" கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகள் மக்களைச் சென்றடைவதற்குப் பெரியதடையாகவிருந்தது. கத்தோலிக்க பாதுகாவலன் ஆசிரியர் குழுவின் கணிசமான நேரத்தையும் பத்திரிகையில் குறிப்பிடத்தக்க இடத்தையும் உதயதாரகைக்குப் பதில் அளிக்கவேண்டிய பணி ஆக்கிரமித்துக்கொண்டது. உதாரணமாக திருவிவிலியம், இறையுக்கம் பெற்றநூல்கள் பற்றி உதயதாரகையில் வந்த விளக்கத்திற்கெதிராக கத்தோலிக்க நிலைப்பாடு தரப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம். (57)

அடுத்து கடும் போக்குடைய இந்து சமயத்தினர் தமது இதழாகிய "The Hind Organ" என்ற பத்திரிகையில் வெளியிட்ட கத்தோலிக்க சமயத்திற்கெதிரான போதனைகளைச் சமாளிக்கவேண்டியிருந்தது. உதாரணமாகச் சிலைவழிபாடு பற்றிவெளியிட்ட கருத்துக்களுக்கு கத்தோலிக்க பாதுகாவலன் பதில் அளித்தது.(58) இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கொரு விடயம் என்னவெனில் கத்தோலிக்க பாதுகாவலன் வாசகர்கள் அடைந்திருந்த முதிர்ச்சி. இவர்களது முதிர்ச்சி எவ்வளவுக்கிருந்ததென்றால் இவர்களே பல சந்தர்ப்பங்களில் தமது வாசகர் கடிதங்களூடாக 'கடும்போக்கு' இந்துக்களின் தாக்குதல்களுக்குப் பதலளித்து வந்துள்ளனர்.(59) ஒரு சோனகர் தமது சமய இதழொன்றில் மரியாளை மாரியாத்தாளுடன் இணைத்துத் தனது விளக்கத்தை அளித்துக் கொண்டு போன சந்தர்ப்பத்தில் 'சோனக உளறு வாயனுக்கு உத்தரம்' என்ற தலைப்பில் வந்த கடிதத்தில் உள்ளது.(60)

இந்நாட்களில் யாழ்ப்பாண கத்தோலிக்க திருச்சபையில் சில சிக்கல்கள் உள்ளேயும் தோன்றியிருந்தன. இதனால் சாதாரண கத்தோலிக்கருக்கிடையே சில குழப்பநிலைகள் உருவாயின. இவற்றைத் தீர்க்கவும் கத்தோலிக்க பாதுகாவலனது உதவி தேவைப்பட்டது. மன்னாரில் பறப்பாங்கண்டல் போன்ற இடங்களில் சில பிரிவினைவாத கோவாக்குருக்கள் மக்களை குழப்புவதில் ஈடுபட்டிருந்த வேளையில் ஆயர் மெலிசன் நிலைமையைத் தெளிவுபடுத்தி கத்தோலிக்க பாதுகாவலனில் எழுதிய மடலும்(61) பின்னர் இலங்கையில் கோவா அதிகாரம் முடிவுக்கு வந்து விட்டது என்று கோவா பேராயரும் பிதாப்பிதாவுமாகிய பேரருட்திரு அந்தோனியே எழுதிய மடலும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.(62)

## சமூக சேவை

கத்தோலிக்க பாதுகாவலன் கத்தோலிக்க மக்களின் நலனுக்காக மட்டுமன்றி எல்லா மக்களுக்காகவும் குறையின்றி வாழவேண்டுமென்றும் சமுதாயச் சீர்கேடுகள் நீங்கவேண்டுமென்றும் பாடுபட்டது. யாழ்ப்பாண மக்கள் கொழும்பு மற்றும் இலங்கையின் பிறபாகங்களுடன் தொடர்புகொண்டிருப்பதற்குப் பல வருடங்களாக உயிர்நாடி போன்றிருந்தது யாழ்ப்பாணத்திற்கான ரயில் பாதையாகும். இந்த ரயில் பாதையை யாழ்ப்பாணம் கொணர்வதற்கு கத்தோலிக்க பாதுகாவலன் ஒரு நீண்ட தொடர்ச்சியான போராட்டம் நடத்தியதெனலாம்.(63)

அந்நாட்களில் குறிப்பாக, 1850களுக்குப் பின் யாழ்ப்பாணத்தில் கொலரா எனும் 'கோதாரி' நோய் 'வாந்திபேதி' பலரைப் பலிகொண்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்குப்பணி புரிவதில் கத்தோலிக்க திருச்சபை முன்னணியில் இயங்கியது. இதனால் சில குருக்கள் முதலாக (லெய்புயர் போன்றோர்) இதற்குப் பலியானார்கள். கத்தோலிக்க பாதுகாவலன் இக்காலத்தில் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. மக்கள் மத்தியில் இந்நோய் பற்றிய விழிப்புணர்வைக் கொணரவும், சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் எனப்பல கட்டுரைகளை எழுதியது.(64) அத்துடன் கத்தோலிக்க பாதுகாவலன் வாசகர்களை ஒரு பகிர்ந்து வாழும் குழுமமாக உருவாக்குவதிலும் வெற்றிகண்டது எனலாம். பொருளாதாரத்தின் மேல் நிலையில் இல்லாவிட்டாலும் மக்களில் இரக்க உணர்வு பொங்கியெழ கத்தோலிக்க பாதுகாவலன் ஒரு கருவியாகச் செயற்பட்டது. கொலரா நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கென அவர்களது மறுவாழ்வுக்கென ஒரு நிதியை ஆரம்பித்தது மட்டுமன்று பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள அயர்லாந்தில் 1880ல் ஏற்பட்ட பெரும் பட்டினிச்சாவைப் போக்குவதற்கும் கத்தோலிக்க பாதுகாவலன் ஒரு நிதியைச் சேகரிக்க முன்னின்றமை(65) யாழ்ப்பாணக் கத்தோலிக்க மக்களை கத்தோலிக்க பாதுகாவலன் எவ்வளவுக்கு ஒரு பரந்த மனப்பான்மையுள்ள குழுமமாக ஏற்படுத்தியிருந்தது என்று தெளிவாகின்றது.

சமுதாயத்தை நிர்மூலமாக்கும் சீர்கேடுகள் அவ்வப்போது சுட்டிக்காட்டப்பட்டு வந்தன. உ+ம் சாராயமும் அதன் கொடுமையும் என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் முதலாக வெளிவந்துள்ளது. (66) அதே இதழில் ஆங்கிலத்திலும் Arrack and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Crime என்ற தலைப்பில் தலையங்கம் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சமுதாயத்தில் சில குறைபாடுகளைச் சுட்டிக் காட்டும்போது உண்மை நிகழ்வு ஒன்றையும் குறிப் பிட்டு அதுவும் இங்கேயே நடந்த நிகழ்வொன்றைச் சுட்டிக்காட்டி அதன் படிப்பினைகளையும் தரப்படும் போது அது உள்ளத்தில் ஆழமாகப் பதிகின்றது. பெற்றோர் தமது சிறு குழந்தைகளை எப்போதும் அக்கறையுடன் கவனிக்கவேண்டுமென்பதற்குப் பின் வரும் செய்தியிலும் குறிப்பும் நிச்சயமாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் "அகால மரணம் - சில நாட்களின் முன்னே அரியாலையில் இரண்டு வயதுள்ள குழந்தையொன்று துரவில் விழுந்து மாண் டது. பெற்றோரின் பராகண்டிதமே பிள்ளையின் மரணத்திற்குக் காரணம். மாரிக்கிணறு! பெற்றோரே!! எச்சரிக்கை!!!"(67)

## கத்தோலிக்கரின் உரிமைக்குரல்

ஆயர் பொன்ஜீன் கத்தோலிக்க பாதுகாவ லனை ஆரம்பித்தபோது அது கத்தோலிக்கரது உரிமைக் குரலாக ஒலிக்கவேண்டுமென விரும்பியிருந் தார். கத்தோலிக்க கல்வி நிறுவனங்கள் சம்பந்தமா கவும் திருமணம் சம்பந்தமாகவும் கத்தோலிக்கருக்குப் பாதகமான சட்டங்கள் வந்தபோது கத்தோலிக்க பாதுகாவலன் வெளிவரமுன் பொன்ஜீன் ஆண்டகை வேறு பத்திரிகைகளில் எழுதிவந்தார் என்று பார்த் தோம். இப்போது கத்தோலிக்க பாதுகாவலன் ஊடாக கத்தோலிக்க திருச்சபையின் உரிமைக்குரல் ஒலிக்கத் தொடங்கியது. பொன்ஜீன் ஆண்டகையின் கத் தோலிக்க பாடசாலைகளின் உரிமைகள் பற்றிய கருத்துக்கள் அவ்வப்போது வலியுறுத்தவும், தெளி வாகக் காட்டவும் பட்டு வந்துள்ளன.(68)

இலங்கையில் மட்டுமன்று உலக மட்டத்தி லும் கத்தோலிக்க திருச்சபைக்கெதிராக அநீதிகள் இடம்பெற்ற போது கத்தோலிக்க பாதுகாவலன் குரல் கொடுக்கத்தவறவில்லை. 1890ம் ஆண்டு இத்தாலிய அரசு ரோமாபுரியிலும் சூழவுள்ள இடங்களிலும் கத் தோலிக்க திருச்சபையின் சொத்துக்களை அபகரித்த போது கத்தோலிக்க பாதுகாவலனில் 'திருட்டரசு' என்ற தலைப்பில் இத்தாலி அரசின் செயலைக் கண்டித்து ஒரு கட்டுரை வெளிவந்தது.(69)

## சில சுவையான அம்சங்கள்

கத்தோலிக்க பாதுகாவலனில் சில சுவையான செய்திகள், துணுக்குகள் போன்றவையும் இடம்பெறத் தவறவில்லை. இவ்வாறு வாசகர் மத்தியில் ஒரு நகைச்சுவை உணர்வையும் சற்று சிந்தித்துச் சிரிக் கக்கூடிய பக்குவத்தையும் ஏற்படுத்தியது ஆரம்ப கால கத்தோலிக்க பாதுகாவலன். 1883ல் நாய் களுக்கு ஒருவரி வசூலிக்கப்பட முயற்சி நடந்திருக்க வேண்டும். வரி அறவிடப்பட்டதோ இல்லையோ என்று தெரியவில்லை. இந்நாட்களில் பின்வரும் ஒரு குறிப்பு கத்தோலிக்க பாதுகாவலனில் வந்தது 'நாய் வரிபோடவே கூடாது. பொலிஸ்காரன் சிப்பாயை விட இவை வெகு பிரயோசனமானவை' (70) இன்னு மொரு சுவையான வெளிநாட்டுச்செய்தி பின்வருமாறு 'அமெரிக்க தபாற் சாவடிகளிலே 1000 பூனைகள் வளர்க்கப்படுகின்றனவாம். எலிகளாலே சேதம் வரா திருக்க இப்பூனைகள் வளர்க்கப்படுகின்றனவாமே'. (71)

## தமிழ் மொழிப் பாவனை

பொன்ஜீன் ஆண்டகை வெளிநாட்டவராயிருந் தும் கத்தோலிக்க பாதுகாவலனை ஆரம்பித்தபோது தூரநோக்குடன் தமிழ்மொழி பாவனை, தமிழ் பண் பாடு போன்றவற்றை வளர்ப்பதிலும் இப்பத்திரிகை தனது பங்களிப்பை வழங்கவேண்டும் என எதிர் பார்த்திருந்தார். ஆங்கிலக்கல்வியும் எல்லாவற்றிலும் ஆங்கில மோகமும் பிரபல்யமடைந்து வந்த சூழ் நிலையில் தமிழுக்கும் தமிழ் கல்விக்கும், தமிழ் பாவனை, தமிழர் பண்பாடு ஆகியவற்றுக்கும் முக்கி யத்துவம் கொடுக்கப்படவேண்டும். இல்லாவிடில் வருங்கால சமுதாயம் பெறுமதி மிக்க இவற்றை முற்றாக மறந்துதவிடக்கூடிய ஆபத்துள்ளது என்று 'தமிழரின் வருங்கால நிலையாது' என்ற தொடர் கட்டுரை வலியுறுத்துகின்றது.(72)

## விசேட கட்டுரைகள், குறிப்புக்கள் போன்றவை

கத்தோலிக்க பாதுகாவலன் அவ்வப்போதய தேவைகளுக்கேற்ப விசேட கட்டுரைகளையும், குறிப் புக்களையும் வெளியிட்டுவந்துள்ளது. இவ்வாறு தவக்காலத்தில் பெரிய கிழமை பற்றியும்(73) வைகாசி மாதத்தில் வணக்கமாதம் பற்றியும் (74) மற்றும் திரு இருதய பக்தி முயற்சி(75) போன்ற விடயங்கள் வெளியிடப்பட்டு வந்துள்ளன. கோவாவில் புனித சவேரியாரின் உடல் காட்சிக்கு வைக்கப்பட்டபோது அதுபற்றியதொரு கட்டுரை, யாழ்ப்பாணத்தில் குரு மடம் ஆரம்பிக்கப்பட்ட போது சுதேச குருக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை பற்றியதொரு கட்டுரை(76) போன்ற பல அவ்வப்போது தேவைகளுக்கேற்ப வெளிவந்துள்ளன.

## வளர்ச்சிப்பாதையில் அனுபவப்பாடங்கள்

எந்தவொரு பத்திரிகையும் எவ்வளவு உயர்ந்த குறிக்கோளோடு ஆரம்பித்திருந்தாலும் அவ்வப்போது நிதானித்து தனது குறிக்கோளை அடைவதில் சந்தித்த மேடு பள்ளங்களை ஆராய்ந்து குறைகளை நீக்கி, கைகொடுத்துதவுபவர்களுக்கு நன்றிகூறி மற்றவர்களை ஊக்குவித்து அவர்களையும் செயல்திறன் மிக்கவர்களாக மாற்றமுயல்வது வழமை. கத்தோலிக்க பாதுகாவலனும் ஒருவருட முடிவில் அல்லது புதிய வருட ஆரம்பத்தில் இப்பணியைச்செய்ய முயன்றுள்ளது.

கத்தோலிக்க பாதுகாவலன் வெளியாகி 5வது வருட நிறைவின்போது அதுவரை துணைநின்றவர்களுக்கு நன்றிகூறப்பட்டு பத்திரிகை தான் என்ன குறிக்கோளை அடைய அதுவரை முனைந்து வந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. "நம்மூரவர்களுக்கு நல்லறிவைக்காட்டவும், சத்தியத்தை நாட்டவும், எவ்வித நற்கிருத்தியங்களையும் போதிக்கவும், வேளாண்மை, வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றிலே தேர்ச்சியடைவிக்க வேண்டுமென்பதும் நமது பேராசையாகவிருந்தது....."(77)

கத்தோலிக்க பாதுகாவலன் தனது 15வது வெளியீட்டை ஆரம்பிக்கும்போது ஓரளவுக்கு முதிர்ச்சி பெற்ற நிலையில் இதுவரைதான் கண்ட வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்களை மேலும் குறிப்பாக இனம்காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் தடையாக இருப்போரையும் பிரிவுபிரிவாக அலசி ஆராயக்கூடிய அளவுக்கு வளர்ந்திருந்தது. முதலில் சிறப்பாக பத்திரிகை நடக்கவேண்டியவை வரிசையில் பொருளுதவி செய்வோர், கடித உதவிசெய்வோர், நல் ஏவுதல் வழங்குவோர் வருகின்றனர்.(78) பொருளுதவி செய்வோர் வரிசையில் சந்தாதாரர்கள் மட்டுமன்றி அவ்வப்போது பத்திரிகை பொருளாதாரம் நெருக்கடிகளைச் சந்திக்கும்போது தாமாக தம்மாலியன்ற உதவிகளை வழங்குமுன் வருவோரையும் குறிக்கும். ஒரு பத்திரிகையை எத்தனைபேர் ஆவலுடன் வாசிக்கின்றனர் என்பது அப்பத்திரிகைகளுக்கு வரும் வாசகர்கள் கடிதங்கள் மற்றும் ஆக்கங்களிலிருந்து தெரியவரும். வாசகர் கடிதங்கள் மற்றும் ஆக்கங்கள் அதிகம் வரும்போது பத்திரிகை நிர்வாகத்தினருக்கும் ஆசிரியர்களுக்கும் மிகச்சிறந்த உந்து சக்தியாக அவை அமைகின்றன. அடுத்து ஒரு பத்திரிகைக்கு வேண்டியவை ஆக்கபூர்வமான ஆலோசனைகள், விமர்சனங்கள் ஆகியவை.

தனது 15வருட கால அனுபவத்தில் கத்தோலிக்க பாதுகாவலன் தன்னைக் குறைகூறி வளர்ச்சிக்குத் தடையாக இருப்போரையும் இனங்கண்டுகொண்டது குறிப்பிடத்தக்கது. அவர்கள் பின்வருவோர் 1) பத்திரிகைக்கு கையொப்பகாரரல்லாதோர் (சந்தாதாரரல்லாதோர்), 2) இரவலாக வாசிப்போர், 3) கண்டவற்றிலும் குற்றம் தெரிந்து பேசுவோர், 4) பத்திரிகையை சரியாக வாசிக்கத்தெரியாதோர், 5) தாமாக நாலுவார்த்தை எழுத அறியாதோர், 6) உலககாரிய சம்பவங்களின் வகையாகு மென்ற உத்தேச அறிவு சற்றேனுமில்லாதோர், 7) இன்ன இன்ன பத்திரிகை இன்ன இன்ன தன்மையாயிருக்க வேண்டுமென்ற வேறுபாடு அறியாதவர்கள், 8) விபரீத அறிவும், வினோத விருப்பமுடையவர்களும், 9) இவர்களெல்லாரிலும் கூடிய மதியுடையவராய் பத்திரிகையை வாசியாது கேட்டவாய்க் கேட்டுப் பேசுகின்றவர்களாம்...... என்று வகைப்படுத்தி இவர்களுக்காக கத்தோலிக்க பாதுகாவலன் வெளிவருவதில்லையென்றும் குறிப்பிடுகின்றது.79)

## முடிவுரை

இக்கட்டுரையை நிறைவுசெய்யும்போது கத்தோலிக்க பாதுகாவலனிலேயே 15 வருட அனுபவத்தின் பின்னர் ஆசிரியர் உதிர்த்த கருத்துக்களைச் சுட்டிக் காட்டுவது பொருத்தம். பத்திரிகையின் பலம் வாசகர்களிலேயே தங்கியுள்ளது என்ற அனுபவ உண்மை வெளிப்பட்டிருக்கின்றது. வாசகர்களது ஒத்துழைப்பிற்கேற்ப பத்திரிகை தனது குறிக்கோளை அடைவது சுலபமானதாகவோ கடினமானதாகவோ உள்ளது. "எப்பத்திரிகையாவது தன்னிலே பெலனுடையதும் மகத்துவமுடையதுமன்று இவையெல்லாம் கையொப்பகாரரிடமிருந்து வருவனவேயாகும். ஒரு பத்திரிகைக்குக் கையொப்பகாரர் தொகை அதிகரிக்கின்ற அளவுக்கு அது பெலன் கொண்டு மேட்டிமையும் மகத்துவமுமடைகின்றது. தீபத்துக்கு எண்ணெய் பிரகாசம் கொடுப்பதுபோல கையொப்பகாரர் பத்திரிகைக்கு பிரகாசத்தையும் பெலனையும் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்" என்றும் தொடர்ந்து பத்திரிகை வாசிக்கும் பழக்கம் இன்னும் அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி,! இத்தேசத்தவருள்ளே பத்திரிகை வாசினை விருப்பு எப்போது உதிக்குமோ அப்போதுதான் உலக சம்பவங்களையறிந்து உயிருள்ள மனுஷர்போல் விளங்குவார்கள். (80)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சான்றாதாரங்கள்


1. Perera S.G., S.J., The Jesuits in Ceylon, Madura, 1941, pp.111-114
2. cfr. Paulo da Trinidade, O.F.M., Conquista Spritual do Oriente, translated and annotated by by Peiris, E.,O.M.I., and Meersman , O.F.M, as Chapters on The Introduction of Christianity in Ceylon, Colombo, 1972, pp. 238-242.
3. cfr. Perniola.V.,S.J., The Catholic Church in Sri Lanka, The Portuguese Period, Vol.111, 1620-1658. Dehiwala, 1991, p.291.
4. cfr. Thaninayagam.X. 'The First Books Printed in Tamil' in Tamil Culture, Vol. VII, no.3 July, 1958, Madras, p.291.
5. Cartilha in Tamil & Portugues, (Impressa em 1554 per ordem do Rei:) Lisboa, 1970.
6. Paolo da Trinidale, O.F.M., Conquista . . . . . p.236.
7. cfr. Perniola V., S.J.,The Catholic. . . ., The Portuguese Period, Vol.III. (1620 – 1658), Dehiwala, 1991, p. 86. See also, இராசமாணிக்கம்.S., சே.ச. (பதிப்பாசிரியர்) அண்டிறீக்கு அடிகளார் இயற்றிய Flos Sanctorum என்ற 'அடியார் வரலாறு' தமிழ் இலக்கியக் கழகம் தூத்துக்குடி, 1967. பக்.XXX
8. cfr. Peiris. E., O.M.I., Tamil Culture Literture in Ceylon from the 16th C. to the 18th C. in Tamil Catholic (Ed. Thaninayagam. X) Vol.II nos. 3 & 4, Madurai, Sept. 1953, pp. 232-234
9. Gnanaprakasar.S., O.M.I., 'XXV Years' Catholic Progress. The Diocese of Jaffna under the Episcopale of Dr.Henry Joulain, O.M.I., 1893 – 1918, Jaffna, 1925, p.227
10. cfr. Thaninayagam.X., 'Tamil Manuscripts in European libraries' in 'Tamil Culture..... Vol.III. Nos.3 & 4. Oct. 1954. pp.224 – 225.
11. cfr. Perera. S.G., S.J., Life of Father Jacomẽ Gonçalvez, Madura, 1942, pp. 21-22
12. cfr. ibid.p.92,
13. cfr. Boudens. R., O.M.I., Catholic Missionaries in a British Colony, Switzerland, 1979, p.33.
14. cfr. ibid. p.34
15. cfr. ibid.
16. cfr. Perniola.V.,S.J., The Catholic Church....... The British Period, Vol.I, 1795-1844, Dehiwala, 1992, P.256.
17. cfr.ibid. p. 321
18. cfr.ibid. p. 368
19. cfr.ibid. p. 256
20. cfr.ibid. p. 368
21. cfr.ibid.
22. cfr.ibid. pp. 375-376
23. cfr. Perniola.V., S.J. The Catholic Church....... The British Period. Vol.II 1845-1849, Dehiwala, 1995, p.227
24. cfr.ibid. pp. 574-575
25. cfr.ibid. p. 574
26. cfr.ibid. pp. 581-582
27. cfr. Saverimuthu, P.N.M., The Life and Times of Orazio Bettachini, The First Vicar Apostalic of Jaffna, Ceylon, (1810-1857), Rome, 1980, p.63.
28. cfr. Perniola.V., S.J., The Catholic Church...... B.P. Vol.11.. pp. 331-332.
29. cfr.Gnanaprakasar, S., O.M.I., op. cit. p. 208
30. cfr. Boudens. R., O.M.I., op. cit., p. 100
31. cfr.ibid. p. 117




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. cfr.Gnanaprakasar.S., O.M.I., op. cit., p.207.
33. cfr. Boudens.R., O.M.I., op.cit. p.117.
34. cfr. Gnanaprakasar.S., O.M.I., op.cit p. 207
35. cfr. ibid. pp.144 – 145; Boudens.R., O.M.I., op. cit, p.96
36. cfr. Gnanaprakasar.S., O.M.I., op.cit., p.145
37. cfr. ibid. p. 207
38. cfr. ibid. pp. 207-208
39. cfr. ibid. P.208
40. cfr. Ramakrishnan, Mrs. C. V., 'The Helmsmen in the Patrician Heritage' in 150th Anniversary Jubilee Souvenir, 1850-2000, 17-03-2001, Jaffna, p. 20
41. cfr. Gnanaprakasar. S.,O.M.I. op. cit. p.208
42. cfr. கத்தோலிக்க பாதுகாவலன்;. Vol.I, No.1., பெப்ரவரி 19, 1876. p. 4
43. cfr.ibid.
44. Boudens, R., O.M.I., op. cit p.117
45. ibid.
46. JCG. க.பா.காவலன். Vol.I. No.3. March 18. 1876.
47. cfr. JCG. க.பா.காவலன். Vol.I. No.1 Feb. 17,1876
48. cfr. JCG. க.பாதுகாவலன் Vol.II, No.21 Dec. 1, 1877
49. cfr. JCG. க.பாதுகாவலன். Vol.III, No.1. Feb.23,1878
50. Gnanaprakasar.S., O.M.I., op.cit., p 209
51. JCG. Vol.V; No 48, Jan 29th onwards. upto No.51, Vol.VI, No.1, Feb.26th & No.2 March 5th .
52. JCG. Vol. XIV, No.7, Feb 23, 1889.
53. JCG. Vol. III, No.13, May 18, 1778 onwards upto Nov.2. No.37.
54. JCG. Vol. I. No.20 Nov.11, 1876 onwards upto No.22, Dec. 9,1876
55. JCG. Vol. IX, No.10 March 15, 1884.
56. JCG. Vol. IX, No. 17 May 3, 1884.
57. JCG. Vol. XV. No.37, Sept. 13,1890
58. JCG, Vol. XVI, No.2, Jan, 17 1891.
59. JCG. Vol. XVI, No.27, July 11, 1891.
60. ibid
61. JCG. Vol. XIV, No.30, Aug.1889.
62. JCG. Vol. XIV, No.36, Sept. 14 1889.
63. JCG. Vol. XV, No.20 March 23, 1889 onwards, upto April 13 No.23.
64. JCG. Vol.I, No.21, Nov.21,1876; No.22 Dec.9, 1876; Vol.11 No.2 March, 10. 1877; No.3, March 24, 1877.
65. JCG. Vol. V. No.2. March 6,1880
66. JCG. Vol. I – No –7 May, 13 1876.
67. JCG. Vol. V. No.30, Sept. 18,1880
68. JCG. Vol. VII No.6,Fil.10. 1883
69. JCG. Vol. XV. No. 49. Dec.13 1890
70. JCG. Vol. VIII. No.28, July 14, 1883.
71. JCG. Vol. VIII, No.24, June 16, 1883.
72. JCG. Vol. VI, No.3, March. 1881 also nos, 4, 5, & 6
73. JCG. Vol. I, No.5 April 12, 1876
74. JCG. Vol.I No.6 April 29, 1876
75. JCG. Vol. VIII No.22 June 2, 1883
76. JCG. Vol. I, No.5. April 12, 1876
77. JCG. Vol. V, No.44, Dec.24,1880
78. JCG. Vol. VI, No.1, Jan 11,1890
79. ibid.
80. JCG. Vol. XVI, No. 2, Jan. 17, 1891.

கத்தோலிக்க உண்மைகளைப் பாதுகாக்கும் பத்திரிகைகளுக்கு
ஆதரவு கொடுப்பது ஒவ்வொரு கத்தோலிக்கனையும் சார்ந்த
மிகப்பெரிய கடமையாகும். இது ஒரு புனிதமான கடமை. இதை
உணர்ந்து செயல்படவேண்டும்.

- 23ஆம் அருளப்பர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயர் எமிலியானுஸ் ஆண்டகையும் பாதுகாவலன் வளர்ச்சியும்

*அருள்திரு C. J. அன்ரனிபாலா*

## முன்னுரை

பேரருட்கலாநிதி ஜே. ஜெரோம் எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை அவர்கள் யாழ். மறை மாவட்டத்தை ஆளுகை செய்த 22 ஆண்டுகளில் (1950 முதல் 1972 வரை) பாதுகாவலனின் வளர்ச்சி பற்றி ஆய்வு செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். இவரது ஆளுகையின் கீழ் பாதுகாவலன் மிகவும் சிறப்பாக வளர்ச்சியடைந்ததற்குக் காரணம் ஆயரது அறிவுப் புலமையும், அவரது தூரதரிசனப் பார்வையுமாகும். இந்த ஆய்வுக் கட்டுரையில் அன்றைய கால பாதுகாவலன் சார்ந்த நிகழ்வுகளை ஓரளவு திறனாய்வுடனும், கூடியமட்டும் உள்ளதை உள்ளவாறும் கூற விழைந்துள்ளேன். இந்த ஆய்வின் மூலமாக, இனி வரும் தலைமுறையினருக்கு, கடந்த 22 வருடகால பாதுகாவலன், சிறந்ததோர் வரலாற்று ஆவணக் காப்பகமாகவும், விசுவாசத்தின் கால்நூற்றாண்டுக் காவலனாகவும் எவ்வாறு திகழ்ந்தது என்பதைக் கோடிட்டுக் காட்டுவதே எனது குறிக்கோள்.

## ஆயர் எமில்

1949ம் ஆண்டு மே மாதம் 22ந்திகதி ஞாயிறு தின நிகழ்வானது, இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை வரலாற்றிலும், விசேடமாக யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க இறைமக்களின் வரலாற்றிலும், மிகவும் மறக்கமுடியாத நிகழ்வாகும். அன்றைய தினம் அ.ம.தி. சபையைச் சேர்ந்த அருட்திரு ஜே. ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அடிகளார், இலங்கையரல்லாத இறுதி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி அல்பிறட் கியோமர் அ.ம.தி ஆண்டகை அவர்களால் யாழ். மறை மாவட்ட இணை ஆயராக (Co-adjutor) எதிர்காலத்தில் யாழ். மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்க வேண்டிய வழிவரும் உரிமையுடன், யாழ் மரியன்னை பேராலயத்தில் அபிஷேகம் செய்யப்பட்டார்.

யாழ். கரம்பொன் நகரைப் பெற்றோர் வழியிடமாகவும், 1901 ஆடி 20ல் நீர்கொழும்பு வென்னப்புவ நகரைப் பிறப்பிடமாகவும் கொண்டு, யாழ் மண்ணின் மைந்தனாக, இலங்கையின் முதல் தமிழ் ஆயராக, யாழ். மறைமாவட்டத்தின் முதல் சுதேச ஆயராக, அபிஷேகம் செய்யப்பட்ட ஆயர் எமில் அவர்கள், பல்வேறு கல்வித்தகமைகளையும், சிறந்த ஆளுமையினையும் தாங்கியவராக, மண்மயமாக்கப்பட வேண்டிய யாழ் திருச்சபையின் பல்வேறு சவால்களோடு கூடிய தேவைகளை செயல்படுத்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க, செயல் வீரனுக்குரிய ஆற்றல்கள் திறமைகளை அந்நாட்களில், தன்னிலே கொண்டவராகக் கணிப் பிடப்பட்டு, உரோமைத் தலைமைப்பீடத்தினால் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அரசாங்க மட்டத்திலும், பொதுமற்றும் தனி யார் துறையினர் மட்டத்திலும், இராஜதந்திர ரீதியில் செல்வாக்கும், கூர்மதியும் விவேகமும் கொண்ட சொல்வாக்கும் பெற்றவராக, இலங்கை அரசியல் அமைச்சர்கள் மட்டத்தில் பலரை நண்பர்களாகக் கொண்டு அனைத்தையும் உன்னிப்பாகக் கவனித்து எதிர்காலத்தின் தரிசன வீச்சுக்களை நிகழ்காலத்தின் நிதர்சனப்பார்வையுடன் கணிப்பிடக்கூடிய வல்லமை யுடையவராகத் திகழ்ந்தார். இவரது இளைய சகோ தரர் பிரித்தானிய அரசில் முதல் மாணவராகத் திகழ்ந்ததோடு இங்குவந்தபின், ஏனைய சகோதரர் களும் இவரும் இணைந்து பல கல்வி மற்றும் அரச நிறுவனங்களில் பணியாற்றிய முதல் இலங்கையர்கள் என்னும் மதிப்போடு இறுதிவரை திகழ்ந்தனர்.

## முதல் சுதேச ஆயரின் அபிஷேக நிகழ்வில் பாதுகாவலன்

மேற்கூறப்பட்ட காரணங்களோடு ஓர் சுதேச ஆயரைப் பெறுகின்றோம் என்ற குடும்ப உணர்வு, கத்தோலிக்கர் மத்தியிலும், கத்தோலிக்கர் அல்லாதவர் மத்தியிலும் மேலோங்க, அண்மையில் சுதந்திரம் பெற் றிருந்த இலங்கைத் தீவின் கத்தோலிக்க திருச் சபையின் எதிர்கால தமிழ் சுதேச இளவரசர்களின் முன்னோடியாகத் திகழப்போகிறார் என்ற காரணத்தால் ஆயரது அபிஷேக நிகழ்வு மிகவும் முக்கியம் பெற்ற தொன்றதாகவே இருந்தது. எனவே ஆன்மீக ரீதியில் மிகவும் ஆடம்பரமாகவே இடம்பெற்ற இந்நிகழ்வினை கொழும்பு ஒலிபரப்புச் சேவை உட்பட பல செய்தி ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க ஏடான பாதுகாவலன் தனது "Catholic Guardian" என்னும் ஆங்கில ~ தமிழ் இணைப்பில் மிகவும் முக்கியத்து வம் கொடுத்து வெளியிட்டது.

ஆயரின் குடும்பப் பின்புலம், கல்வித்தகமைகள், அவரது ஆளுமை பற்றிய செய்திகளை மிகவும் துல்லியமான நிழற்படங்களுடன் கூடிய ஓர் விசேட பதிப்பு ஊடாகவும் (1949~05~19) அதன்முன் பின்னாக வெளிவந்த இதழ்களூடாகவும் தொகுத்து வெளியிட்டுக் கௌரவித்தமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும். 1949~05~19ம் திகதி விசேட இதழில் அருள்தந்தை எமில் என்னும் ஆசிரியர் தலையங்க மும் ''யாழ் ஆயத்துவம் மண்மயமாக்கப்படுகின்றது'' என்னும் கட்டுரையும் மிகவும் குறிப்பிடத்தக்கவை யாகும். 1949~05~26 ம் திகதி இதழில் ''துணை ஆயரின் அபிஷேகம் பேராலயத்தில் ஓர் கண்கொள் ளாக்காட்சி'' என்னும் தலைப்பிலானான கட்டுரை சிறப்பிடம் வகிக்கின்றது. இந்த இதழில் துணை ஆயர் இறைமக்களை ஆசீர்வதிக்கும் ஒரேஒரு படம் மட்டும் வெளிவந்துள்ளது. 1949~06~02ந் திகதி வெளிவந்த இதழ், அபிஷேகம் தொடர்பான பல துல்லியமான படங்களைத் தாங்கி வந்து அக்கால புகைப்படத்துறையின் வளர்ச்சி பற்றி எம்மை வியக்க வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்

## "தூயன் இடம் சென்றனையோ"

இதேபோன்று ஆயர் எமிலின் இறப்பு 1972~07~17ல் இடம் பெற்றபோது 1972~07~22ம் திகதி இதழ், முன்பக்கத்தில் ''மறைந்த யாழ். ஆயர் மேதகு ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை'' என்னும் தலைப்பின் கீழ் அன்னாரின் படத்துடன் தோற்றம் மறைவு திகதிகள் இருபக்கமும் இடம்பெற கீழே ''ஆயன் என்ற சொல்லிற்கு ஆட்சி தந்த திருவே; தூயன் இடம் சென்றனையோ தூது சொல்ல குருவே'', என்னும் கவிதை வரிகளுடன் வெளிவந் துள்ளது. 2வது பக்கத்தில் ''மறைந்த எம் மேய்ப் பன்'' என்னும் தலைப்பில் இரத்தினச் சுருக்கமாக ஆயரின் வரலாறுபற்றிய ஆசிரியர் தலையங்கத் துடன், தற்காலிக பரிபாலகராக துணை ஆயர் L. R. அன்ரனி ஆண்டகை பொறுப்பேற்றுள்ளார் என் னும் குறிப்புடன், அன்னாரின் படமும், மறைந்த ஆயரின் சீவியக் குறிப்புகளும் காணப்படுகின்றன. 4ம் பக்கத்தில் அருள்திரு நீ. மரியசேவியர் அவர்களின் ''தங்க இதயமே தங்க நீ எங்கு சென்றாய்'' என்னும் ஆயர் பற்றிய இறுதி நிமிட நிகழ்வுகள் தொடர்பான வர்ணனையும், திரு. சாமுவேல் பெனடிக்ற் அவர் களின் ''ஈழத்தின் முதல் தமிழ் ஆயர்'' என்னும் கட்டுரையும் தரப்பட்டுள்ளது.

## "கனவும் நிறைவும்"மலரை நிறை வாக்கிய அஞ்சலி சிறப்பிதழ்.

1972~07~29ல் வெளிவந்த ஆயரின் அஞ்சலி தொடர்பான பாதுகாவலன் சிறப்பிதழில் வெளிவந்துள்ள பலவிடயங்கள், ஆயரது ஓராண்டு நினைவஞ்சலி வெளியீடாக, புனித வளன் கத்தோலிக்க அச்சகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினால் 1973ல் வெளியிடப்பட்ட "கனவும் நிறைவும்" மலரில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை எந்த ஆயருக்கும் அளித்திராத முக்கியத் துவத்தை ஆயர் எமில் ஆண்டகைக்கு பாதுகாவலன் ஏடு கொடுத்திருப்பதானது முதல் சுதேச ஆயர் என்னும் வகையில் மறைமாவட்டத்தினதும் அதே வேளையில் பாதுகாவலனதும் வளர்ச்சிக்கு ஆயரின் பணி மிகவும் இன்றியமையாததாக இருந்தது என்ப தைச் சொல்லாமலேயே விளங்கவைப்பதாகும். ஆயரின் மறைவையொட்டி வெளிவந்த சிறப்பிதழ் "யாழின் இசை மீட்டினாய் எமிலே; வாழும் திசை காட்டினாய்" என்னும் கவிதை வரிகளுடன், பல்வேறு பத்திரிகை களில் வெளிவந்த அஞ்சலிச் செய்திகளின் போட்டோ பிரதிகளின் மத்தியில் ஆயரின் படத்தினை முன் பக்கத்திலும் அருட்திரு நீ. மரியசேவியர் அவர்களின் அஞ்சலி வரிகளைப் பின்பக்கத்திலும் தாங்கி வெளி வந்துள்ளது.

இந்த 32 பக்க சிறப்பிதழின் உள்ளே மறைந்த ஆயரின் குடும்ப உறுப்பினர்களின் ஒருபடமும், குரு, ஆயர்நிலையில் இரு படங்களும், கொழும்பு வாசியா பேராலயத்தில் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப் பட்டு, பலாலி விமான நிலையத்தில் பூதவுடல் வந்தது முதல் கல்லறையில் வைக்கப்படும் வரையு மான ஆறுபடங்களும், அவரது வகுப்புத்தோழனும் கர்தினாலுமாகிய தோமஸ்கூறே ஆண்டகையுடன் 23ம் அருளப்பர் பாப்பிறையைச் சந்தித்த ஓர் தனிப் படமும், பாப்பிறை திருக்கர ஆசீருடன் ஓர் படமுமாக 12 படங்கள் வெளிவந்துள்ளன. மேலும் 'எமில் என்ற புதிர்' (வண. F.J.ஸ்ரனிஸ்லஸ்) 'யான் அறிந்த எமில்' (வண. J. P. ஜீவரட்ணம்) 'தந்தையை இழந் தோம்' (செல்வி வயலற் இம்மானுவேல்) 'என்ன வேண்டும்' (சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்கள்), 'ஈழம் இழந்த பெருமகன்' (திரு சிவசுப்பிரமணியம்) போன்ற கட்டுரைகளுடன், மேலான அஞ்சலி என்னும் தலைப்பில் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் தலை யங்கமும், பல்வேறு துறவற சபைகளின் அஞ்சலிச் செய்தியுடன் ஆயரின் மடல்களிலிருந்து சில வரி களும், தந்தி அஞ்சலிச் செய்திகளும் காணப்படு கின்றன. இவ்விதமாக தன்னை வளர்த்த ஆயரின் பணியைப் பாராட்டி நன்றிக்கடன் செய்வதில் பாது காவலன் முன்னின்று செய்தி வழங்கிய விதம் மறக்க முடியாததொன்றாகும்.

## ஆயர் மறை மாவட்டத்தைப் பொறுப்பேற்றவேளை பாதுகாவலன்

1876ம் ஆண்டு மாசி 19ம் திகதி ஆரம்ப மாகியது தொடக்கம் 1950 ஆடி 27ம் திகதி வரை யும் ஆங்கிலப் பத்திரிகையாக தமிழ் இணைப்புடன் "Jaffna Catholic Guardian" என்னும் பெயருடனும், "Misi Diminus Custodierit Civitatem Frustra Vigilate Qui Custodit Eam" என்னும் இலத்தீன் மொழி விருதுவாக்குடனும் வாராந்தப் பத்திரிகையாக வெளிவந்துகொண்டிருந்தது. 1950 ஆடி 27ந் திகதி இதழில் வெளிவந்த "The Bishop of Jaffna informs the subscribers to the 'Catholic Guardian' that this is the last issue of our diocesan paper" என்னும் ஆயர் கியோமர் ஆண்டகையின் அறிவித்த லுடன் நிறுத்தப்பட்டது. மேலும் 1950 புரட்டாதி 9ந் திகதி பாதுகாவலன் பத்திரிகையில் ஆயர் கியோமர் ஆண்டகை இறைமக்களுக்கு விடுத்த சுற்று நிருபத் திலே, யாழ் மறைமாவட்டத்தைத் துணை ஆயரிடம் ஒப்படைத்து, தான் இளைப்பாறப்போவதாகவும், அவருக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கும்படியும் கேட்டுக்கொண்டார். எனவே 1950 புரட்டாதி 25ல் ஆயர் எமில் மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்ற போது, பாதுகாவலன் பத்திரிகை, தமிழ் மொழியில் மட்டும் "சத்தியவேத பாதுகாவலன்" என்னும் தனிச் சமய முதல்வாத தலைப்புடனும், "கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" என்னும், காவலனுக்கேயுரிய தனித்துவ மான விருது வாக்குடனும் 1950 ஆவணி முதல் வெளிவந்துகொண்டிருந்தது.

## பாதுகாவலன் வடிவமைப்பு

1950 ஆவணி 3ல் தொடங்கிய முழுவதும் தமிழ் மொழியிலான பாதுகாவலனின் வடிவமைப்பு, ஒவ்வொரு பக்கமும் ஏறக்குறைய நான்கு பத்தி களாகப் பிரிக்கப்பட்டு முதல் பக்கத்தில் அவ்வார மிக முக்கிய செய்தியும், 2ம், 3ம் பக்கங்களில் சில கட்டுரைகளும், கவிதைகளும், சிறுகதைகளும், செய்தி களும், 4ம் பக்கத்தில் ஆசிரியர் தலையங்கத்துடன், 5ம், 6ம், 7ம், 8ம் பக்கங்களில் பொதுக்கட்டுரைகள், உள்நாட்டுச் செய்திகள், விளம்பரங்கள் உலக அரங்கில் ஆகியவற்றுடன் அகல நீளமான தாளில் (Dy ½) வெளிவந்து கொண்டிருந்தது. 1953லிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1955 வரை வெளிவந்த பாலர் பக்கம் 1956லிருந்து அனுபந்தமாக (விசேட இணைப்பு) "புனித வீரர்", "அருட்செல்வி" என்னும் தலைப்புக்களில் ஒன்றுவிட்ட ஓர் இதழில், ஒவ்வொன்றாக வெளிவந்து கொண்டிருந்தது. 1956-15-23ல் இருந்து இந்த அனுபந்தம் வர்ணப் பிரதியாகவும் வந்தது. 1960ல் இருந்து 4வது பக்கம் ஆசிரியர் தலையங்கமாகவும், 5வது பக்கத்தில் சுவிசேஷ வியாக்கியான விளக்கவுரைக் குறிப்புக்களுடனும் 6ம் பக்கம் இளைஞர் பக்கமாகவும் 7ம் பக்கம் பாலர் பக்கமாகவும் 8ம் பக்கம் விளம்பரங்களுடனும் காணப்படுகிறது. சில காலங்களில் ஆசிரியர் தலையங்கம் 2ம் பக்கத்திற்கு அல்லது 6ம் பக்கத்திற்கு மாற்றப்பட்டது. 1960ம் ஆண்டு மார்கழி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட மாதர் பக்கம் 1961ல் இருந்து 1967 வரை மகளிர் மன்றமாக தொடர்ந்தது. அத்துடன் தினசரி பூசை வழிகாட்டி, ஞாயிறு சிந்தனைகள், இருளில் ஒளி, சிந்தனைக்கதிர், பேசும் பேனா, இவ்வார அர்ச்சியசிட்டவர், உல்லாசவேளை, மணமாட்சி, தமிழ்த்தொண்டு, ஊர்க்குருவி, அங்கும் இங்கும் போன்ற வெவ்வேறு விடயங்கள் தொடர்ந்து இடம் பிடித்தன. 1954, 1955, 1960, 1961, 1665, 1967, 1970, 1971 ஆகிய வருடங்களில் தலைப்புக்களிலும் வடிவமைப்பிலும் மாற்றங்கள் இடம் பெற்றன.

## பாதுகாவலன் சிறப்பு இதழ்கள்

சிறப்பு இதழ்களைப் பொறுத்தவரை 1950-06-01ல் Special Fatima number (பாத்திமா ஞாபக மலர்) சிறப்பான விசேட இதழாக 12 பக்கத்தில் வெளிவந்துள்ளது. 1954 ஐப்பசி 7ல் "மரியாயின் சமாகம ஞான உபதேச கண்காட்சி" விசேட இதழ் வெளிவந்துள்ளது. அடுத்த இதழ் செபமாலைப் படையணி விசேட இதழாக வெளிவரும் என்னும் செய்தி 1955-02-17 இதழில் காணப்படுகிறது. ஆனால் 1955-02-24 இதழ் விசேட இதழின் தன்மையைக் கொண்டிருக்கவில்லை. 1956-4-26 இதழ் மரியாயின் சேனை சமாகம விசேட இதழாகவும் 1956-06-07 இதழ் திரு இருதயப் பக்தியின் நூற்றாண்டு விசேட இதழாகவும் வெளிவந்துள்ளன. 1962-07-29 இதழ் மரியாயின் சேனை யூபிலி இதழாக 4 பக்க அனுபந்தத்துடன் (இணைப்பு) வெளிவந்தது. 1962-10-06 இதழ் 2ம் வத்திக்கான் பொதுச் சங்க ஆரம்ப விசேட இதழாக முன்பக்கம் வர்ணப் பிரதியாக வெளிவந்துள்ளது. 1970-11-28 இதழ் பாப்பரசர் 6ம் சின்னப்பரின் இலங்கை விஜய ஞாபக இதழாக 32 பக்கங்களில், கட்டுரைகள், கவிதைகள், செய்திகள் பலவற்றுடன், பாப்பிறையின் பிரயாண அட்டவணை, மற்றும் மக்களின் கொழும்பு பயண ஒழுங்கு என்பவற்றுடன் முன்பக்கம் வர்ணப் பிரதியாக வெளிவந்துள்ளது. 1970-12-22 இதழ் மறைக்கல்வி மாநாட்டு விசேட இதழாக காணப்படுகிறது. இவற்றைவிட ஒவ்வொரு வருட உயிர்ப்பு விழா கிறிஸ்து பிறப்பு விழாவையொட்டியும் விசேட இதழ்களை வெளியிட்டு காவலன் இறைமக்களுக்கு சேவையாற்றியுள்ளது.

## நிர்வாக ஆசிரிய பீடம்

எந்த ஓர் செய்தித் தாளுக்கும் திறமை வாய்ந்த ஆசிரிய பீடம் இன்றியமையாததாகும். செய்தித்தாளின் வளர்ச்சியும் தளர்ச்சியும் அதன் ஆசிரிய நிர்வாகத்திலேயே தங்கியுள்ளவகையில் 1960வரையும் பாது காவலனின் நிர்வாக ஆசிரியராகக் கடமையாற்றிய திருவாளர் ஞானப்பிரகாசம் அவர்கள் பாராட்டுக்குரியவராவர். இவர் 1960 ல் இளைப்பாறியபோது இவரது ஆசிரிய மற்று 40 வருட எழுத்துப் பணிக்காக பாப்பரசரால் "திருச்சபைக்காகவும் பாப்பரசருக்காகவும்" (For the church and Pope; Pro ecclesia et pontifice) என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (1961-06-03, 1961-01-20 இதழ்கள்). இவரது 50வருட எழுத்துப் பணி 1971-06-05 இதழில் பாராட்டுப்பெற்றுள்ளது. பின்பு அருள்திரு தியோகுப்பிள்ளை அவர்கள் [பின்பு திருமலை ~ மட்டுநகர் மறைமாவட்டத் துணைஆயர் (Auxiliary), பின்பு 1973ல் யாழ். ஆயர்], (1967-04-01, 1967-05-20 இதழ்கள்) தனது குறுகிய கால காவலன் நிர்வாக ஆசிரியசேவையில் பல புதிய விடயங்களைப் புகுத்தினார். இப்புனரமைப்பு முயற்சியானது திரு. ஞானப்பிரகாசம் ஆசிரியர் ஓய்வு பெறும் வரை காத்திருந்து மேற்கொள்ளப்பட்ட ஆயர் எமில் அவர்களின் வழிகாட்டல் என அருள் திரு. J. E. ஜெயசீலன் அடிகள் யாழ்ப்பாணத் திருச்சபை வரலாறு என்னும் தனது நூலில் 202ம் பக்கத்தில் குறிப்பிடுகின்றார். வேறுபணிகள் காரணமாக அருட்திரு தியோகுப்பிள்ளை அவர்கள் மாற்றம் பெற இந்த நவீனமயப்படுத்தலை திருவாளர் S.M.J. லூயிஸ் அவர்கள் தொடர்ந்தார். இவர்களின் காலத்தில் ஆயர் எமில் அவர்களின் மேற்பார்வை, வழிநடத்தலின் கீழ் எழுத்தாளர் மன்றம் ஒன்று (1960-06-01 இதழ்) நிறுவப்பட்டது. ஏற்கனவே 1950 முதல் பல தமிழ் புலமை வாய்ந்த பேராசிரியர்கள், ஆசிரியர்கள் புதிய எழுத்தாளர்களினது பங்களிப்புடன் வீறுநடை போட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த பாதுகாவலன் 1960ல் இருந்து மிகவும் சிறப்பான வளர்ச்சியை கண்டதெனலாம்.

## ஆசிரியர் தலையங்கங்கள்

ஓர் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கமானது காலத்தை கோடிட்டுக் காட்டும் கண்ணாடியாக விளங்குகின்றது. சிறப்பாகக் கத்தோலிக்க விசுவாசத்தின் பாதுகாவலனாக விளங்கும் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கமானது, இரண்டு தொடர் இதழ்களுக்கிடையில் உலக அரங்கில் இடம்பெறும் மறைசார்ந்த அல்லது அதற்கு அப்பாற்பட்ட விடயங்களை நற்செய்தியின் ஒளியில் மதிப்பீடு செய்வதாக உள்ளது. இந்த 22 வருட கால பத்திரிகை ஆசிரியர் தலையங்கங்களில் பல, ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய மறைக் கருத்துக்களை (தபக்காலம், திரு இருதயம், திரு இரத்தம், நற்கருணை, ஆரோபணம், மறைபரப்பு, இறந்த ஆன்மாக்கள்) வலியுறுத்தின. திருச்சபையின் புனிதர்கள், மற்றும் தமிழுக்கும் மறைக்கும் வழிகாட்டிய பெரியோர் (ஞானப்பிரகாசர், வீரமாமுனிவர், யோசவ்வாஸ், யக்கோமே கொன்சால்வஸ்) ஆயர்கள், குருக்கள் கன்னியர், இல்லறத்தொண்டர் ஆகியோரின் வாழ்வும், பணியும் கூறப்பட்டுள்ளன. திருச்சபையினதும், உலகத்தினதும் சர்வதேச நிலைமைகளும் அலசி ஆராயப்பட்டு உள்நாட்டு மக்களின் தேவைகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

விசேடமாக 1959, 1960களில் அரசியல் தொடர்பான விடயங்கள் சிறப்பாக பிரதமர் கொலை, தேர்தல் வாக்களிப்பு, தேர்தல் முடிவுகள், சிங்களச் சட்ட மசோதா எதிர்ப்பு, ஸ்ரீ எதிர்ப்பு, தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகம், தனியார் துறைகள் தேசியமயமாக்கல், பாடசாலை சுவீகரிப்பு போன்ற நிலமைகளில், மக்களோடு தோள்கொடுத்து, ஒருமித்த கருத்தை வளர்த்து காத்திரமான பங்களிப்பை, திருமறை ஒளியில் வழங்கியது பாதுகாவலன் ஆசிரியத்துவமாகும். தலத்திருச்சபையின் பாடசாலை மறியற் போராட்ட நிகழ்வுகள், கொம்யூனிச ஆட்சிக்கெதிரான ஆலயத் திருச்சபைகளினது பாவப் பரிகாரிப்பு நிகழ்வுகளுக்குப் பலம் சேர்த்தது, பாதுகாவலன் ஆசிரியர் தலையங்கங்களேயாகும். 1961 முதல் 1965 வரை 2ம் வத்திக்கான் சங்க நிகழ்வுகள் தொடர்பான விளக்கங்களும், சங்க மறுமலர்ச்சி தொடர்பான விளக்கங்களும் இடம் பெற்றுள்ளன. பல ஆசிரியர் தலையங்கங்கள் ஆயர்களின் சுற்று மடல்களைத் தாங்கி வந்துள்ளன. இவ்விதமாக பாதுகாவலன் ஆசிரியபீடம் மக்களின் விசுவாசக் காவலாளனாக, சிறப்பான விதத்தில் ஆசிரியத் தலையங்கங்களினூடாகத் துணிவுடனும் நேர்மையுடனும் சேவையாற்றியுள்ளது.

## ஆயரின் பத்திரிகை

1970-09-12 இதழில் "உருவாக்க உதவுக" என்னும் கிறிஸ்தவ பத்திரிகையாளன் பற்றிய கட்டுரையில் ஓர் மறைமாவட்டக் கத்தோலிக்க பத்திரிகையானது மறைமாவட்ட ஆயரின் பத்திரிகை என்னும் குறிப்பு வலியுறுத்தப்படுகிறது. இவ்வகையில் பாதுகாவலன் ஆயரின் குரலாகவும், அதற்கு மக்கள் எவ்விதம் பதில் தரவேண்டும் என்பதன் விளக்கமாகவும் ஆயர் பற்றிய செய்திகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதாகவும் அமைந்து ஓர் சிறந்த பணியை ஆற்றியுள்ளது. விசேடமாக ஒவ்வொரு வருடமும் தபக்காலத்தையும், திருவருகைக் காலத்தையும் ஒட்டிய ஆயரின் நிருபங்கள் முக்கிய இடம் பிடிக்கின்றன. மேலும் விசேட இதழ்களுக்கான, அந்த நிகழ்வுகளும் ஏனைய பிரதான நிகழ்வுகளும் தொடர்பான, ஆயரின் வாழ்த்துச்செய்திகளும், 2ம் வத்திக்கான் சங்கம், மாகாண மேய்ப்புப்பணிச் சங்கம் என்பவற்றின் சித்திக்காக செபிக்கும்படி அவர்தந்த செபங்களும், பாப்பரசர் தினம், மற்றும் புதிய தேவ ஸ்துதிகள் பற்றிய அறிவுறுத்தல்களும், பாடசாலை சுவீகரிப்பின்போது பிள்ளைகளுக்கு விடுத்த கடிதங்களும், இளைஞர் பக்கம், மகளிர் மன்றம், சிறுவர் விருந்து, பாலர் பக்கம் போன்றவை ஆரம்பிக்கப்பட்டபோது தந்த அறிவுரைகளும் மிகவும் பயன் மிக்கதாகும்.

மேலும், ஆயர் செய்த பங்கு விசாரணைப் பயணங்கள் பற்றிய செய்திகளும், மருதமடு அன்னையின் விழாவில் ஆயர் பற்றிய செய்திகளும், 2ம் வத்திக்கான் சங்க நிகழ்வுகளுக்கான பயணங்களும், திருத்தந்தையை ஆயர் குழுவுடன் சந்திக்கச்சென்ற பயணங்களும், திருப்பலி மறையுரைகள், பொது விழா உரைகள் தொடர்பான செய்திகளும் காணப்படுகின்றன. இத்தோடு ஒவ்வொரு வருடமும் ஆயரின் பெயர் கொண்ட தினமும், அவரது அபிஷேக ஆண்டு நிறைவு தினமும், விசேடமாக குறிப்பிடப்பட்டு பாதுகாவலன் அவரை வாழ்த்தியும் இறையாசீர் இரந்தும் செய்தி வெளியிடத் தவறவில்லை. மேலும் திருகோணமலை மேற்றிராணியாரின் நிருபங்களும் இலங்கை ஆயர் மன்றத்தின் கூட்டு நிருபங்களும், தூத்துக்குடி மேற்றிராணியாரின் நிருபங்களும் யாழ். ஆயரின் அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடயதானம் செய்தோர்

பாதுகாவலன் பத்திரிகையின் வளர்ச்சிக்காக, ஒருசில குருக்கள் கன்னியரும் மற்றும் பல பொது நிலையினரும் விடயதானம் செய்து நிறைவான பங்களிப்பை வழங்கியுள்ளனர். ஒரு சிலர் தமது ஆக்கங்களை ஒழுங்காகவும், காலக்கிரமமாகவும் அனுப்பி வைத்துள்ளனர். பலர் இடைவிட்டு அனுப்பி வைத்துள்ளனர். வேறு சிலர் அருமையாகவும் அனுப்பி வைத்துள்ளனர். தொடர் ஆக்கங்களும் மொழிமாற்ற ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. இவ் விதமாக எல்லோருடைய ஆக்கங்களுக்கும் கூடிய மட்டும் சம முன்னுரிமை கொடுத்து வெளியிட்டும், முடியாதுவிட்டால் அதையும் எடுத்துக்கூறி மன்னிப்புக் கேட்டும், நேயர்களின் அபிப்பிராயங்களும், விமர்சனங் களும் கோரப்பட்டும் (1962-10-06 இதழ்) நடந்து கொண்ட தன்மையானது ஆசிரிய நிர்வாக பீடத்தின் பெருந்தன்மையைக் கோடிட்டுக் காட்டுகின்றது. செய்திகள் சேகரிக்கும் நிருபர்கள் மற்றும் ஆதாரங் களைப் பெரும்பாலும் காணமுடியாதுள்ளது. பல விடயங்கள், மாதோட்டத் தபால், புதுக்குடியிருப்புத் தபால், மெலிஞ்சிமுனைத் தபால், தாண்டவன்வெளித் தபால், கல்லாற்றுக் கடிதம், சில்லாலைக் கடிதம் போன்ற பொதுவான தலைப்புக்களில் வெளியிடப் பட்டுள்ளன.

செவாலியர் சூ. அருளானந்தம், பேராசிரியர் பி. சவரிமுத்து, ஆசிரியர் அமிர்தநாயகம், திரு S. M யோசவ், திரு. சாமுவேல் பெனடிக்ற், செல்வி மேரி றோஸ் பிளசம் சாமுவேல், செல்வி மேரி றோசலின் சூசைப்பிள்ளை, செல்வி வயலட் இம்மானுவேல், அருள்திரு நீ. மரியசேவியர், அருள்திரு. எட்வேட் துரைசிங்கம் O.M.I., அருள்திரு வில்லியம் யேசு தாசன், O.M.I., அருட்திரு தாவீது அடிகள், அருள்திரு அன்ரனி ஜோண், திரு அ. யேசுதாசன் திரு. அமலன், திரு ஞா.ம. செல்வராசா, திரு. அந்தோனிப்பிள்ளை, திருமதி. மாகிறேட் சவரிமுத்து ஆகியோர் ஒழுங்காகக் கட்டுரைகள் வழங்கியுள்ளனர்.

ஆசிரியர் விக்டர் (யாழ். ஜெயம்) ஆசிரியர் அடைக்கலமுத்து (அமுது) அருள்திரு. நீ. மரிய சேவியர், ஆசிரும் புலவருமான செ. மொத்தம்போல் (நறுவிலிக்குளம்), மரிசால் புலவர் (பெரிய கட்டைக் காடு) ஆசிரியர் ஆசிநாதர் போன்றோர் ஒழுங்காக கவிதைகள் வழங்கியுள்ளனர். பேசும் பேனா, இருளில் ஒளி, ஆசிரியர் தலையங்கம் சிந்தனைக்கதிர் போன்ற வற்றிற்கு திரு. சாமுவேல் பெனடிக்ற் அவர்களும், உல்லாசவேளை, ஊர்க்குருவி மற்றும் சிறுகதைகள் போன்றவற்றிற்கு திரு. அமலன் அவர்களும் சிறுவர் விருந்து பாலர் பக்கம், இளைஞர் பக்கம் என்ப வற்றிற்கு திரு. அந்தோனிப்பிள்ளை அவர்களும், மகளிர் மன்றத்திற்கு செல்விகள் மேரிறோஸ் பிளசம் சாமு வேல், றோசலின் சூசைப்பிள்ளை போன்றோரும், மொழி மாற்ற செய்திகள், கட்டுரைகள் போன்றவற் றிற்கு திருமதி மாகிறேட் சவரிமுத்து, செல்விகள் வயலட் இம்மானுவேல், மேரி றோஸ் பிளசம் சாமு வேல் அவர்களும் பொறுப்பாக இருந்தனர்.

மேலும் தமிழ்மொழி ஆராய்ச்சி தொடர்பான கட்டுரைகளை அருள்திரு. தாவீது அடிகளும், வர லாற்றுக் கட்டுரைகளை திரு ஞா. ம. செல்வராசா அவர்களும், மறையியல் கட்டுரைகளை திரு இ. பேர்னாட், திரு. அ. யேசுதாசன், அருள்திரு. எட்வேட் துரைசிங்கம் O.M.I. அருள்திரு. வில்லியம் யேசு தாசன், அருள்திரு. அன்ரனி ஜோண் ஆகியோரும் வழங்கியுள்ளனர். 2ம் வத்திக்கான் பொதுச் சங்கத் தினைத் தொடர்ந்து எமது மறைமாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்மொழியில் திருவழிபாடு தொடர்பான விளக்கக் கட்டுரைகளை திருவாளர்கள் அருள், தாசன் ஆகியோரும், 2ம் வத்திக்கான் ஒளி யில் ஆலயத் திருவிழாக்கள் நோவனைகள் சீர் திருத்தம் தொடர்பான ஆயரின் விளக்கக் கருத் துக்கள் அடங்கிய கட்டுரைகளை திரு. பி. சவரிமுத்து அவர்களும் வழங்கியுள்ளனர்.

மேலும் "இளவாலை இளவல்", "திராட்சை யூரான்", "ஞானி" போன்ற புனைபெயர்களிலும், அத் தோடு, இலைமறை காய்களாக இருந்து எப்போதாவது ஓர் இருமுறைகளிலும் விடயதானம் செய்த பெரும் பாலான எழுத்தாளர்களையும் காண்கின்றோம். இவ் விதமாக, விடயங்களை பல்வேறு திசைகளிலிருந்து நிறைவாகப் பெற்று நிறைவாக வழங்கியமையானது அக் கால காவலன் ஆசிரியத்துவத்தின் திறமை எனலாம்.

## சந்தா மற்றும் விளம்பரம் மூலம் பலம் சேர்த்தோர்

எந்த ஒரு நிறுவனத்தின் பலத்திற்கும் இன்றி யமையாதது நிதிநிலமையாகும். காவலனும் இதை உணர்ந்து ஈடு செய்ததைக் காணக்கூடியதாக உள்ளது. 1950 தைமாதம் முதல், இதழ் ஒன்று 10 சதமாக காவலன் விற்பனையாகியது. விசேட இதழ் களுக்கும் விதிவிலக்கில்லை. 1960 ல் வருட சந்தா வாக இலங்கை ரூபா 5.50 சதமாகவும், வெளிநாடுகள் ரூபா 6.50 சதமாகவும் காணப்படுகிறது. 1961 தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 முதல் தனிப்பிரதி 12 சதமாக உயர்த்தப்பட்ட மைக்கு கத்தோலிக்கப் பாடசாலைகள் சுவீகரிப்பும் பத்திரிகைத்தாள் விலையேற்றமும் காரணம் கூறப் பட்டு, காவலனுடன் இணைந்து பலவருடமாக வெளி யிடப்பட்ட "திருத்தொண்டன்" நிறுத்தப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது. மீண்டும் 1962 ஆடி முதல் தனிப்பிரதி 10 சதமாகவும், ஆனால் வருடசந்தா இலங்கையில் 50 சதத்தால் உயர்ந்தும் காணப் படுகிறது. 1965ல் வருட சந்தா 9/= ரூபாவாகவும் தனிப்பிரதி 10 சதமாகவும் விசேட பதிப்பு உட்பட காணப்படுகின்றன. "சந்தா நிலுவைகளைக் கூடிய விரைவில் அனுப்பவும்" என்னும் அறிவிப்பு பல இதழ் களில் காணப்படும் அதே வேளையில், இலங்கையின் பல இடங்களிலும், இந்தியாவிலும் ஏனைய வெளி நாடுகளில் வாழும் தமிழர்கள் பலரும் வாசகர்களாக இருந்து வழங்கிய ஆதரவினை வந்து குவிந்த வாசகர் கடிதங்களில் இருந்தும் காணக்கூடியதாக உள்ளது. அவர்களில் ஒரு சிலரையாவது அவர் களின் இறப்பின்போது சுட்டிக்காட்டிப் பெருமைப்படுத் தவும் காவலன் தவறவில்லை. சின்னையா மாசிலா மணி (1970-08-08 இதழ்), இளவாலை புனித யாகப்பர் ஆலய, பேதுரு அருளப்பு (1970.08.15 இதழ்) மற்றும் அதே ஆலய, பேதுரு அந்தோனி (லொறிவிபத்து 1970.05.09 இதழ்), திரு ச. வ. தாவீதுப்பிள்ளை (1970.07.18 இதழ்), செவாலியர் (பரிமேலர்) சூ. அருளானந்தம் (1970.05.16 இதழ்), செல்வி மேரிறோஸ் பிளசம் சாமுவேல் (ரோஜா 1971.05.22, 1971.05.29 இதழ்கள், பாதுகாவலன் எழுத்தாளர் 1962-1970 வரை) ஆகியோர் கௌர விக்கப்பட்டுள்ளனர்.

விளம்பரங்களைப் பொறுத்தவரை மரண அறிவித்தல்கள் மரண ஞாபகங்கள், நன்றித்துதிகள், திருமண யூபிலி செய்திகள், திருமண அழைப்பிதழ்கள், முதற் திருப்பலி அழைப்பிதழ்கள் தனியார் புத்தக விற்பனை போன்றவற்றின் மூலம் நிதி தரட்டப் பட்டுள்ளது. 1960 இதழின்படி நன்றித்துதி, மரண ஞாபகம் 1அங்குலம் 2/- ரூபாவாகவும், கோட் விளம் பரம் (Order nisi) 6/- ரூபாவாகும் என அறிகின்றோம். மேலும் "மாக்கரூஸ்" பூ வியாபாரம் நுவரெலியா, தனியார் கல்வி நிலையம், பரிமள அரபித்தூபம், நீர் இறைக்கும் இயந்திரம், "பாம்கோட்" பியர் விளம்பரம், புடவை நகை வியாபாரம், மின்சார பல்புகள் உபகர ணங்கள், லக்டோஜன், மீன்பிடி உபகரணங்கள், Air Ceylon போன்ற விளம்பரங்கள் பல இதழ்களில் பல தடவைகள் வெளியிடப்பட்டதன் மூலம் நிதிநிலமை சீர்செய்யப்பட்டுள்ளது. மிகவும் பரவலாக நன்றித் துதி, மரண ஞாபகங்களுக்கு ஈடாக, கோட் விளம் பரங்கள் பல இதழ்களில் பல வருடகாலமாக இடம் பிடித்துள்ளன. எனவே பாதுகாவலன் தனது நிதி நிலமையைப் பெரிதளவாக ஈடுசெய்ய, தனியார் பாட சாலைகளை கடும் சிரமத்தின் மத்தியில் ஆயர் எமில் அவர்கள் நிர்வகித்துவந்த அக்காலத்தில், மறை மாவட்ட நிதி ஒதுக்கீட்டில் மட்டும் தங்கியிராமல் தன்னிறைவோடு செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்க தாகும்.

## வரலாற்று ஆவணக் காப்பகமாகப் பாதுகாவலன்

வாராந்தப் பத்திரிகை என்னும் முறையில் பாது காவலன் செய்தித்தாளானது சிறந்ததொரு கடந்தகால வரலாற்று ஆவணக் காப்பகமாகத் திகழ்கின்றது. ஆயர் எமிலின் 22வருட ஆட்சியின்கீழ் அவர் பற்றி யும், அவரின் வழிகாட்டலோடும் வெளிவந்த ஒவ் வொரு இதழும் எதிர்கால சந்ததியினருக்கு, கடந்த காலத்தில் நடைபெற்ற மிக முக்கிய நிகழ்வுகளை ஞாபகப்படுத்தும் ஓர் உடனடி வரலாற்று நினைவுக் களஞ்சியமாகத் திகழ்கின்றதெனலாம். இவ்வகையில் ஆயரின் காலத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப் பட்டோரின் அபிஷேக நிகழ்வுகளையும் பல குருக் களின் பணிகளையும், 25 வருட, 50 வருட நிறைவு நிகழ்வுகளையும், மரணச் செய்திகளுடன் அவர்களின் வரலாறுகளையும் அறியக்கூடியதாக உள்ளது. அருட்சகோதரி செசிலித்தாயாரின் 75ம் வருட விழா வினையும் (1968-04-06 இதழ்), திருச்சிலுவைக் கன்னியரின் யாழ். கடற்கரைவீதி தலைமை மடம் ஆயரால் திறந்து வைக்கப்பட்டு இலங்கை மகளிரில் ஐவர் நவகன்னியர்களாக முதல்முதல் அனுமதிக்கப் பட்ட செய்தியையும் 1930ம் ஆண்டு ஊர்காவற்று றையில் பணியாற்றத்தொடங்கிய சபையினர் தமது வெள்ளியூபிலி விழாவை அதே இடத்தில் கொண்டாடி யமை பற்றிய செய்தியையும் (1955.02.17, 1957.04.04 இதழ்கள்) காணலாம்.

கலை நிகழ்வுகளைப் பொறுத்தவரை பல வருடங்களாக, புனித பத்திரிசியார் கல்லூரியில் அருள்திரு. லோங் அடிகளாரின் மேற்பார்வையின் கீழ் மேடையேறிய ஆங்கில, தமிழ் திருப்பாடுகளின் காட்சி கள், பேசாலைப் பொம்மை (உடக்கு) பாஸ்காட்சி, அருள்திரு நீ மரியசேவியர் அடிகளாரால் உரும்பிராயி லும், யாழ் முத்தவெளி மைதானத்திலும், வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும் நடாத்தப்பட்ட, கல்வாரியில் கடவுள், சாவை வென்ற சத்தியன், எழுதிய கரம், அன்பில் மலர்ந்த அமரகாவியம், கடவுள் வடித்த கண்ணீர், களங்கம் போன்ற திருப்பாடுகளின் காட்சிகளும், வேதாகம நாடகங்களும், ஊர்காவற்றுறை, வவுனியா, யாழ். பேராலயம் போன்றவற்றில் அருள்திரு. பிலிப் பொன்னையா அடிகளாரால் நிகழ்த்தப்பட்ட திருப்பாடு களின் காட்சிகள் போன்றவற்றின் அறிவித்தல்கள் விமர்சனங்களையும் காணலாம்.

மற்றும் ஆலயங்களின் கட்டிட நிதிக்காகவும், ஆலய திருவிழாக்களையொட்டியும் (யாழ். பேரா லயம் 1969-07-20 இதழ், முகமாலை 1950-06-03 இதழ்) திரு. "பூந்தாரான்" யோசேப்பு அவர்களால் மேடையேற்றப்பட்ட பல கூத்துக்கள் (கருங்குயில் குன்றத்துக்கொலை, பிலோமினா சங்கிலியன்) தொடர் பான விடயங்களையும் அவரால் அறிமுகப்படுத்தப் பட்ட பசாம் வாசிப்புப் போட்டியையும்(1962-04-08 இதழ்) நாவாந்துறை பாஷையூர் கலைஞர்களின் மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள் பற்றிய செய்திகளையும் காண்கிறோம். மேலும் இக்காலத்தில் பரவலாகக் கரையோரப் பகுதிக் கிராம ஆலயங் களின் மேடை நிகழ்வுகள் தொடர்பான செய்திகளை யும், தபசு கால திருப்பாடுகளின் பக்திமுயற்சி தொடர் பான செய்திகளையும் காணமுடியாதுள்ளது பெருங் குறையே. சினிமாவைப் பொறுத்தவரை "பத்துக் கற்பனைகள்" (1959-12-17இதழ்), "சகாயமாதா" (1965-12-11 இதழ்) போன்ற யாழ் திரையரங்கு களில் காட்சி தந்த திரைப்படங்கள் பற்றிய விளம்பர மும் இடம்பெற்றுள்ளது. பல எழுத்தாளர்களின் புத்தக மதிப்பீடுகளுடன் மானிப்பாய் புனித அன்னாள் ஆலய மறையாசிரியர்கள் வெளியிட்ட பாஸ்கா மலர் பற்றிய செய்தியையும் (1971-04-03 இதழ்) காண லாம். அருள்திரு லோங் அவர்களின் உருவத்திரை நீக்கம் பற்றிய செய்தியையும் (1968-08-10 இதழ்) காணலாம்.

மேலும் ஆலயங்களின் வரலாறுகள், திரு விழாக்கள், மக்களின் விசுவாச பக்தி முயற்சிகள் தொடர்பான செய்திகளையும் காணலாம். பண்டத் தரிப்பு பத்திமாகிரி, சின்னமடு, சாட்டி, முகமாலை, செம்பியன்பற்று, தும்பளை, கிளாலி, புல்லாவெளி, மாதகல் லூர்து அன்னை, பாலைதீவு, கச்சைதீவு, மாந்தைகெபி, பரப்புக்கடந்தான், முருங்கன், போன்ற யாத்திரைத் தலங்களின் செய்திகளோடு மருதமடு அன்னையின் விழா பற்றிய செய்திகளும் ஒவ்வொரு வருடமும் இடம் பெற்றுள்ளது. கொழும்புத்துறை தாபனத் திரு விழா, தீவுப்பகுதி சற்பிரசாத சமாகமம் (1968-09-28 இதழ்) மற்றும் தலைவில்லு உட்பட இலங்கையின் ஏனைய இடங்களின் செய்திகளையும் காண்கின்றோம்.

எமது ஆயரவர்களால் நடாத்தப்பட்டு வந்த பாடசாலைகள் பற்றி முகாமையாளர்கள் அருள்திரு T. A. J. மதுரநாயகம், அருள்திரு பிலிப் பொன்னையா அவர்கள் விடுத்த பாடசாலை விழாக்கள், மறைக் கல்விப்போட்டிகள், பாடசாலைப் பரீட்சை முடிவுகள், பாடசாலையில் பயன்படுத்த வேண்டிய புத்தகங்கள் பற்றிய அறிவித்தல்களையும் 1960ஆம் ஆண்டு வரை காண்கின்றோம். யாழ். மறைமாவட்ட ஆய ரால் தொடர்ந்தும் நடாத்தப்பட்டுவந்த 5 தனியார் கல்லூரிகள், பாடசாலைகள் பற்றிய செய்திகளையும் தொடரும் காலங்களில் 1972 வரை காணலாம். கத் தோலிக்க கீர்த்தனை மாலை (1962-04-01 இதழ்), இறைவனைப் புகழ்வோம் (1971- 03-06 இதழ்) போன்ற பாடல் புத்தக வெளியீடு பற்றிய செய்திகளை யும் அருள்திரு. G. T. பாலசுந்தரம் அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட மறைக் கல்விக் கருத்தரங்குகள், பயிற்சிகள், ஞான ஒடுக்கங்கள், குருக்களுக்கான மறைக்கல்விக் கருத்தரங்குகள் பற்றிய செய்திகளை யும், 20ம் நூற்றாண்டுப் பாப்புமார், இலங்கை கர்தினால் மற்றும் முன்னைய ஆயர்களின் அபிஷே கம் பற்றிய செய்திகளையும், கொழும்புத்துறையில் அ.ம.தி.களுக்கு புதிய கட்டடம் (1970-01-10 இதழ்) ஆகிய செய்திகளையும் காணலாம்.

மேலும் பொதுவாக தோழன் போன்ற பல இந்திய செபப்புத்தகங்கள், புனித சூசைமாமுனிவர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட புத்தகங் கள் போன்றவை "அச்சகத்தில் விற்பனைக்குண்டு" என்ற விளம்பரத்துடன் வெளியிடப்பட்டதை அறிகின் றோம். பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி, கூப்பன் நிறுத்தம் (1961-02-23இதழ்), போயாதினம் விடு முறை நாளாக்கப்படல், ஞாயிறு தினத்தில் கிறிஸ்தவ வழிபாடுகளுக்கு, 2 மணித்தியால லீவு, இலங்கையில் அமெரிக்க அமைதிப்படை (Peace Cop 1970-08-01 இதழ்), நிரந்தர பலாலி இராணுவ முகாம் (1962-09-01 இதழ்), கீரிமலைச் சுரங்கம் (1970-09-26) போன்ற செய்திகளையும் காண்கின் றோம். மேலும் பல செய்திகளோடு சிறந்த வரலாற்று ஆவணக் காப்பகமாக பாதுகாவலன் திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால் நூற்றாண்டுக் காவலில் பாதுகாவலன்

பாதுகாவலன் பத்திரிகை தமது பெயருக்கு ஏற்ற விதத்தில் இறைமக்களின் விசுவாசத்தின் பாதுகாவலனாக 1950 தொடக்கம் 22 வருடங்களாகப் பணியாற்றியமை பல்வேறு விதங்களிலும் பாராட்டுப் பெற வேண்டியதொன்றாகும். யாழ். மறைமாவட்டத்தினதும், இலங்கை மற்றும் உலகத் திருச்சபையினதும், மறையறிவிப்புச் செயற்பாடுகள் திருவழிபாட்டுத் முறைமைகள், அருட்சாதனப் பணிகள், கிறிஸ்தவ ஒன்றிப்பு, பல்சமய உரையாடலைப் பொறுத்தவரை மிகவும் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளது. இலங்கைத் தீவினதும், சர்வதேசத்தினதும் செய்திகளை விசுவாச ஒளியில் மக்களுக்கு எடுத்துக் கூறுவதோடு, பத்திரிகைத் தர்மத்தின்படி நேர்மையோடு, நடுநிலைமையோடு உள்ளதை உள்ள வாறு, எடுத்துரைத்தும் உள்ளது. விசேட விதமாக 1949 மார்கழி 24ல் 12ம் பத்திநாதர் பாப்பிறை யூபிலி ஆண்டை ஆரம்பித்து வைத்த போதும், 1950 ஆனி மாதம் பாத்திமா நாயகி யாழ்ப்பாணத்தைத் தரிசித்த போதும், 1950 கார்த்திகை 1ம் திகதி தேவதாயின் ஆரோபண விசுவாச சத்தியம் பிரகடனம் செய்யப்பட்ட போதும் இந் நிகழ்வுகளுக்கு மக்களை ஆயத்தம் செய்வதில் முன்னின்றது பாதுகாவலனே. இந்த விசுவாச சத்தியம் பற்றி "உதயதாரகை" பத்திரிகையின் கருத்து மோதலிற்கு தகுந்த பதில் தந்ததும் பாதுகாவலனேயாகும். 1956ல் ஆயர் கியோமர் அவர்களின் மரணச் செய்தி, 1958ல் 12ம் பத்திநாதர் பாப்பிறையின் மரணம், 23ம் அருளப்பர் பாப்பிறையின் தெரிவு, முடிசூட்டு விழா பற்றிய செய்தி (புனித இராயப்பர் வழிவந்தவர்கள் பற்றி ஆழமான பல கட்டுரைகளுடன்), 1959ல் "மரியநாயகி சபை அதி சிரேஷ்ட சுவாமி" களின் யாழ் விஜயச் செய்தி, 1961இல் ஆசா. யோசேவ்வாஸ் அவர்களின் 250ம் வருட நினைவுச் செய்தி மற்றும் டி மசெனொட் ஆண்டகையின் மறைவு நூற்றாண்டு விழா செய்தி போன்றவற்றைத் தாங்கி வந்துள்ளது. பல்வேறு கட்டுரைகள் மூலமாக அமலமரித் தியாகிகளின் சேவையின் கீழ், யாழ் மறைமாவட்டத்தின் கடந்த கால வளர்ச்சி பற்றி அறியக்கூடியதாக உள்ளது. மேலும் 2ம் வத்திக்கான் சங்க நிகழ்வுகள் பற்றி 1961~1965 வரையும், அரசாங்கம் சமயஸ்தாபனப் பாடசாலைகளைச் சுவீகரித்தபோது எமது இலங்கை ஆயர்களின் தலைமையில் கத்தோலிக்கர் செய்த போராட்டங்கள் பற்றி 1960~1962 வரையும் காணலாம். தோல கட்டி ஆச்சிரமத்தில் மகாநாயக்க தேரோ, கொழும்பு அங்கிளிக்கன் மேற்றிராணியாருடன் வருகை தந்த செய்தியையும், சர்வசமய சம்மேளன மகாநாட்டில் நம் மேற்றிராணியார் ஆற்றிய உரையையும் (1966~04~30 இதழில்) பார்க்கின்றோம். "சகல விதமான கருத்தடைகளும் முற்றாக விலக்கப்பட்டுள்ளது" என்னும் திருத்தந்தையின் அறிவிப்பையும் (1968~08~24 இதழ்) "பேரருட்திரு. L.R.அன்ரனி ஆண்டகை யாழ். மேற்றிராசன துணை ஆயராக அபிஷேகம்" என்னும் செய்தியையும் (1969~11~27 இதழில்) அறியக்கூடியதாக உள்ளது. இவ்விதமாக பல வழிகளில் பாதுகாவலன் பெயருக்கேற்ப கால் நூற்றாண்டு விசுவாசக் காவலனாகத் திகழ்ந்த தெனலாம்.

## ஆண்டு விழா மற்றும் சிறப்பிதழ் நினைவுகளுடனான சுய விமர்சனமின்மை

பாதுகாவலன் பத்திரிகையின் 75வருட முடிவில் அதாவது 1950~01~05 இதழில் "இது 75வது பாதுகாவலன் வருடம்" என்னும் செய்தி மட்டும் வெளிவந்துள்ளது. அதன்பின்பு 1976ம் ஆண்டுவரை பாதுகாவலன் வளர்ச்சி பற்றி, ஒருசில வாழ்த்துக் கவிதைகள் தவிர, வேறு வரலாற்றுக் கட்டுரைகளோ, ஆண்டுவிழா நடந்தது நடவாதது தொடர்பான செய்திகளோ சிறப்பிதழ் வெளியீடுகளோ இடம் பெற்றதாகத் தெரியவில்லை. 1976ம் ஆண்டு முடிந்த வேளையில் மட்டும் 1976 வைகாசி 28ந்திகதி இதழில் இடம்பெற்ற "யாழ் கத்தோலிக்க அச்சகத்தின் வரலாறு", "நூற்றாண்டுக் காவல்" (அருள்திரு பாவிலுப்பிள்ளை, திரு. சாமுவேல் பெனடிக்ற்) என்னும் இரு கட்டுரைகளில் இருந்து ஓரளவு பாதுகாவலன் பத்திரிகையின் பணி பற்றி அறியக்கூடியதாக உள்ளது. எனவே இந்தக் கால் நூற்றாண்டுப் பகுதியில் பாதுகாவலன் வளர்ச்சி பற்றிய விமர்சனக் கண்ணோட்டத்துடன் கூடிய கட்டுரைகள், செய்திகள், கடிதங்கள் போன்றவை இடம் பெறாதது, பாதுகாவலனின் சுயவிமர்சனத்தில் எழுந்த ஓர் குறைபாடு எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

வரலாற்றுக் கண்கொண்டு நிகழ்காலத்தில் நின்று வருங்காலம் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் காட்டுவதே பத்திரிகையின் பணி. எனவே பத்திரிகைச் செய்திகளைப் புரிந்து கொள்வதற்குச் சமூகம் பற்றிய அறிவியல் நோக்குத் தேவை. ஏனெனில் சமூக மாற்றத்தின் கருவியாய் விளங்குகின்ற இச்சாதனத்தைச் சாதாரணமாக மதிப்பிடக்கூடாது என்பதால் ஓரளவு திறனாய்வு கொண்டே நோக்கியுள்ளேன்.

1950 முதல் 22வருட காலமாக வெளிவந்த பாதுகாவலன் இதழ்கள் மேலே பலகோணங்களில் ஆராயப்பட்டுள்ளது.இது ஓர் கத்தோலிக்க பத்திரிகை என்னும் விதத்தில் இறைமக்களின் விசுவாசத்தின் காவலனாகத் திகழ்கின்றது. வரலாற்றுக் களஞ்சியம் என்ற மட்டில் வாராந்தப் பத்திரிகையாக வெளிவருவதால் இது தாங்கிவந்த ஆக்கங்களை கூடியமட்டும் நம்பகத் தன்மையோடு நோக்கக்கூடியதாக உள்ளது. உலகுசார்ந்த செய்திகள் இங்கு நற்செய்தியின் ஒளியில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. திருச்சபை சார்ந்த செய்திகள் அறிவுறுத்தல்களாகவும், அறிவுரைகளாகவும் தகவல்களாகவும் வழங்கப்படுகின்றன. மண்மயமாக்கப்பட வேண்டிய திருச்சபையின் தேவைகளோடு சிறந்த ஆளுமை மிக்கதோர் ஆயரின் வழிநடத்தலில் வளர்ச்சியடைந்த தன்மை இங்கு காணப்படுகின்றது. இவ்வாறு கடந்த 22வருட பாதுகாவலன் வளர்ச்சி மிகவும் சிறப்பானதொன்றெனப் பாராட்டப்படவேண்டியதாகும்.

## உசாத்துணை நூல்கள்


### மூலச் சான்றாதாரங்கள்

1. 1949 வைகாசி 19 தொடக்கம், 1972 ஆடி 29 வரையும் வெளிவந்த அனைத்து பாதுகாவலன் இதழ்கள்.
2. 1976 வைகாசி 28, நூற்றாண்டு பாதுகாவலன் இதழ்.

### இணைச்சான்றாதாரங்கள்

1. கனவும் நிறைவும் ( Man of vision, mission fullfilled)., (Ed.) Fr. G. E. Francis Joseph., St. Joseph's Catholic Press , Jaffna., 1973.
2. சுவாமி J.E. ஜெயசீலன், யாழ் திருச்சபை வரலாறு., வளன் ஆச்சிரமம், 47, 6ம் குறுக்குத் தெரு, (102, பிரதான வீதி,) யாழ்ப்பாணம்., 1997.
3. கலாநிதி நீ. மரியசேவியர், கலைமுகம்., திரு மறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்., பங்குனி 1981.
4. எஸ். அகஸ்தியர், நாட்டுக்கூத்துக் கலாநிதி பூந்தான் யோசேப்பு கலையுலக வாழ்க்கை வரலாறு., யாழ் நவரச நாட்டுக்கூத்துக் கலா மன்ற வெளியீடு., 1981.
5. சிந்தனைச் சிற்பி கதிரவேலுப்பிள்ளை, பா. உ. இலங்கை தமிழரசுக் கட்சி வெள்ளிவிழா மலர்., இ.த.அ.க. தலைமைச் செயலகம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்., 1974.
6. தோழன் Ed. by அருள்திரு எஸ். தேவராஜ் T.N.B.C.L.C. திண்டிவனம், 604 002., பெப்ரவரி 1986.
7. கிறிஸ்தவ கலைச் சொற்கள்., யாழ். கத்தோலிக்க இலக்கியக் கழகம், யாழ்ப்பாணம்., 1993.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலனில் பின் நவீனத்துவத்தின் முன் எதிரொலிகள் 1973 – 1992

அருள்திரு ஜெயசீலன் அடிகள்

## தீயோகு சகாப்தம் ஆரம்பம்

தீயோகு ஆண்டகையின் ஆளுமையில் பதிக்கப்பட்ட 2 தசாப்தங்களும், பிரதிபலிக்கப்படுகிற ஏடாகவே பாதுகாவலனின் இக்கால கட்ட வளர்ச்சியும் வீழ்ச்சியும் கணிக்கப்படல் வேண்டும்.

2ம் வத்திக்கான் சங்கத்தின் எழுச்சிமிகு நம்பிக்கை அலைகள் தலத்திருச்சபையை வந்து முட்டி சங்கநாதம் எழுப்பிய காலகட்டமாகவே அதன் முதல் தசாப்தத்தை மதிப்பிட வேண்டும். 2ம் தசாப்தம் திருச்சபையின் பாதிப்புக்களை உள்ளடக்கியது. எந்தத் திருச்சபையை உலகின் உப்பு, ஒளி, அருட்சாதனம் ஆக வத்திக்கான் 2ம் பேரவை பணித்ததோ அதே சபை வெளியில் இருந்து எழுந்து அதை முட்டி மோதத் தொடங்கிய வலுவுள்ள அலைகளை எதிர்த்து நிற்கமுடியாது தத்தளித்த காலகட்டமாகவே மதிப்பிட வேண்டும். இதற்கான அளவு கோல் (வெப்பமானியாகவே) பாதுகாவலனைக் கணிப்பிட வேண்டும்.

இவ்விரு தசாப்தங்களில் காவலனின் ஆசிரியர்களாக இருந்த நான்கு குரவர்கள், தத்தம் ஆளுமைகளின் ஊடாகவே இவ்வெதிரொலிகளைப் பதிவு செய்தனர் என்பது அவர்கள் எழுதிய ஆசிரிய தலைப்புக்கள், தலைப்புச்செய்திகள் பிரசுரித்த கட்டுரைகள், எழுத்தாக்கங்கள், இந்திய – ஏனைய நாடுகளின் கத்தோலிக்க பத்திரிகைகளின் மொழி பெயர்ப்புக்கள், நேரடி உட்சேர்ப்புக்களில் இருந்து கணக்கிடலாம்.

தீயோகு ஆண்டகையின் ஆட்சியில் முதல் சில பாதுகாவலன்கள் முன்னைய ஆசிரியர் லூயிசின் பேனாவின் கீழ் வெளிவந்தன. மேரியோசப் அடிகள் தொடர்ந்து பாதுகாவலன் ஆசிரியரானார். அக்கால கட்டம் மிக நெருக்கடி உடையதாகவிருந்தது. மறைமாவட்டத்துக்கு நிதிநிலை மிக மோசம். 31.03.1973ல் வெளிவந்த பாதுகாவலன் இதைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ஓராண்டுக்கு இம் மறைமாவட்ட நிர்வாகத்துக்கு 15 லட்சம் ரூபா தேவை. வத்திக்கான் மறைபரப்புப் பணியகம் ஐந்திலொரு பகுதியையே கொடுத்து உதவுகிறது. இப்போதைய கடன்களைத் தீர்க்கத்தேவை எனக்காவலன் தெளிவாக மறைமாவட்ட நிதிநிலையை விளக்கியது.

எனவே மறைமாவட்ட பொதுநிலையினர் முதல் தடவையாக தங்கள் திருச்சபைத்தலைமைப் பீடத்தின் நிதிநிலையை அறிந்தனர். தம் கடமையை உணர்ந்தனரோ தெரியாது. ஆயின் அதன் பின்னர் இன்று வரை மறைமாவட்ட நிதிநிலை மூடு மந்திரமாகவே உளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையால், பாதுகாவலனும் அதை உரு வாக்கும் அச்சகமும் நிர்வாகமும் பெரும் பாதிப்புக் குள்ளாயது. மேரியோசப் அடிகளார் பெரும் முயற்சி களை மேற்கொண்டு பாதுகாவலனை வெளியிட்டுக் கொண்டிருந்தார். உள்நிலை இவ்வாறாயின் புற நிலை எவ்வாறாயிற்று?

வத்திக்கான் 2ம் பொதுப்பேரவை, மூடப்பட்ட ஜன்னல்களைத் திறக்க, உலகில் வீசிய சூறாவளி திருச்சபையினுட் புகுந்தது. பெரும் மாற்றங்கள் தல – உலக திருச்சபைகளில் – வழிபாடுகளில் ஏற்பட்டன. கத்தோலிக்க பத்திரிகைகளில் மறைக்கல்வி, விவிலியம், சமூகப்புரட்சி பற்றிய விரிவான கட்டுரைகள் அடிக்கடி வெளிவந்தன.

தலத்திருச்சபையில் பழம்போக்குச் சிந்தனையாளர்களே அதிகம். முற்போக்குச் சிந்தனைச் சிற்பிகள் அரிதாகவே காணப்பட்டனர். கரவையூர்ச் செல்வத்தின் திரையும் உரையும் (திரைப்பட விமர்சனம்), N.M சவிரியின் களங்கம், சாமுவேல் பெனடிக்ற்றின் பேசும்பேனா, ஞானஒளி, மைக்கல் யோசப்பின் புனித பத்திரிசியார் கலையரங்கில், முதலிய அம்சங்களுடன் பாப்பரசரின் அறிவுரைகள் மற்றும் இந்திய கத்தோலிக்க சஞ்சிகைகளில் வெளியான முக்கிய அம்சங்களும் பாதுகாவலனை நிரப்பின.

இதேவேளையில் ஆசியாவிலும் 3ம் உலக நாடுகளிலும் ஈழத்திலும் விடுதலை இறையியலின் சப்தங்கள் எதிரொலிக்கத் தொடங்கின. ஈழத்து அரசியலில் மௌனம் சாதித்த 'பாதுகாவலன்' நாசுக் காக ஆசிய, தென்னமெரிக்க செய்தி ஊடகங்கள் வெளியிட்ட புரட்சிகர செய்திகளைப் பிரசுரித்தது. ஆங்காங்கு விவிலியம் ஆன்மீகம், வழிபாடு (ஒரே யொருமுறை) மனித உரிமைகள் பற்றிய ஆக்கங் களோடு தன்னைக் காத்துக் கொண்டது. ஆழமறியாது காலை வைக்காது சமயோசிதமாக முன்னெச் சரிக்கையுடன் காவலன் நடந்துகொண்டாலும் அதன் இறுதிக் கட்டங்களின் நிலைப்பாட்டிற்கு எதிர்மாறாகவே தோன்றக்கூடும்.

25.03.73ல் வெளியான காவலனில் இளம் திருச்சபை என்ற தலைப்பில் 1886ல் தொடங்கிய யாழ் மறைமாவட்டத்துக்கு இன்னும் வயது வர வில்லையா? என்ற தொனியில் ஒரு திருமுகம் வரையப்பட்டுள்ளது. 2000 வருட வரலாற்று சிறப்புப் பெற்ற திருச்சபையில் 97 வருடங்கள் இளமைதானே. இம்மனப்பக்குவம் முதல் சகாப்தம் முழுவதும் எதிரொலிக்கிறது. பின் அது இளம் காளை பய மறியாது என்ற கட்டத்தை 1982ன் பின் அடைந்து விடும்.

அரசியலில், சமூகப் பிரச்சனைகளில், ஈழத்துப் போரின் அனர்த்தங்களின் மத்தியில் பாதுகாவலன் துணிந்து செயலாற்றவேண்டிய நிலை 1979 மறை மாவட்டக் குருக்களின் அறிக்கைகள், சிங்கராயர், சின்னராசா அடிகளின் சிறைவாசம், நீதிமன்ற விசாரணை ஆயர் கண்டனம் என்பவற்றில் பிரதிபலித்தது.

## 1979 - 1986 அன்ரன் மத்தாயஸ் ஆசிரியத்துவம்

1979ம் ஆண்டு செப்ரம்பர் மாத நடுப் பகுதியில் தொடங்கி 1986 ஆவணிவரை அன்ரன் மத்தாயஸ் அடிகள் பாதுகாவலனின் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அவர் மிகச்சிக்கலான ஒரு வரலாற்றுக் கட்டத்தினூடாக காவலனை வழிநடத்தினார். தமது ஆசிரியத்துவத்தின் ஆசிரிய வசனங்களின் தொகுப்பை "இன்றைய உலகில் நாம்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார். அந்நூலின் பக்கங்கள் அவரது பணியின் பாரிய பொறுப்பை எடுத்தோதுகின்றன.

"கை கூடுமா?" என்ற தலையங்கத்தில் (11.01.80) 1970–79களின் நிலையை சுருக்கமாக ஆராய்ந்தபின் சில கேள்விகளை வினாவி, நம்பிக்கையற்ற தொனியில் அங்கலாய்க்கிறார். இத் தொனி அவரது ஏழு வருட காவலன்களில் எதிரொலிக்கும்.

முதலாம் ஈழப்போருக்கு ஆயத்த முதல் நான்கு வருடங்களுக்கு அவர் 21 ஆசிரிய தலையங்கங் களை அரசியல் சார்ந்தவைகளாக வரைந்துள்ளார். முதலாம் ஈழப்போரின் பின்வந்த மூன்று ஆண்டுகளில் 24 தலையங்கங்கள் அரசியல் சம்பந்தப்பட்டவை கள் இவை ஆசிரியுரை யாழ் திருச்சபையில் ஏற்பட்ட யதார்த்த சூழ்நிலை மாற்றங்களை – அவர் விரும்பியோ விரும்பாமலோ சிந்திக்க வைத்திருப்பதையே எடுத்துக் காட்டுகிறது.

19.19.1979 காவலனில் ஆறாம்பக்கத்தில் "அவசரகாலச் சட்டத்தை நீக்கி திறந்த உரையாடலை நடத்தி, எல்லோருக்கும் சம உரிமையளித்து பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டுகின்றோம்" என்ற பகிரங்கக் கடிதம் பிரான்சிஸ் யோசவ், S. A மைக்கல் சாமி என்ற குருக்களால் கையொப்பமிட்டு பிரதம மந்திரிக்கு அனுப்பப்பட்டது. இது யாழ் மறை மாவட்டக் குருக்கள் சார்பில் அவர்களின் பிரதி நிதிகளான குருக்கள் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் 21.09.1979ல் ஒன்றுகூடி அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானமாகும் இக் கடிதத்தை பாதுகாவலன் துணிவோடு பிரசுரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிகழ்வுகளின் எதிரொலியே இலங்கை நாடாளுமன்றத்தில், வெள்ளை அங்கி அணிந்த புலிகள் என யாழ் குருக்களை இனங்கண்டு கோஷம் எழுப்பப்பட்டதும், யாழ் குருக்கள் சிறைவைக்கப்பட்டபின் (29.11.82) தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதிக்கு ஆட்சேப தந்திச் செய்தி அனுப்பியதும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் 18.11.82ல் ஒருநாள் பகிஷ்கரிப்பும், ஆட்சேப ஊர்வலமும் நடத்தியமையும் டாக்டர் J. P. C. பிலிப்ஸ் பொதுநிலையினரின் சார்பில் கண்டனக்குரல் எழுப்பியமையும் யாழ் கத்தோலிக்க ஆசிரிய சங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை நிறுத்துமாறு ஏகோபித்த மனுசமர்ப்பித்தமையும் ஆகும். பாதுகாவலனும் யாழ் ஆயர் அரசின் செயல்களைக் கண்டிக்கிறார் என்ற காரசாரமான கருத்துக்களை அஞ்சாது வெளியிட்டது.

கத்தோலிக்க குருக்கள், துறவியர், பொதுநிலையினர் புனித மாட்டீனார் குருமட வாயிலில் உண்ணா நோன்ப அனுசரித்த இரு பெரிய படங்களும் பாதுகாவலனில் வெளிவந்தன. தொடர்ந்து 25.04.83ல் தெற்கு ஈழப்புயலில் இலங்கைத்திருச்சபை என்ற கட்டுரை புத்தளம் அஞ்சலா அந்தோனிப்பிள்ளையால் எழுதப்பட்டது.

"சித்திரவதை செய்யப்பட்டோம் இராணுவ முகாமில்" என்ற தலைப்பில் சிங்கராயர் அடிகள் 02.07.83ல் ஒரு கடிதத்தை எழுதியிருந்தார். 01.07.83ல் அன்ரனி யோண் எழுதிய யேசு அரசியல் வாதியானால் என்ற நேயர் கட்டுரையும் பிரசுரிக்கப்பட்டது.

19.08.83ல் இராணுவத்தால் கொல்லப்பட்ட ஏழைகளின் தோழன் அ. விமலதாசனின் 31ம் நினைவஞ்சலி வெளியாகியது. ரூபன் மரியாம்பிள்ளையின் "மக்களின் விடுதலையில் திருச்சபையும் குருக்களும்" என்ற கட்டுரை 09.12.83ல் தான் பிரசுரமானது யூலைக் கலவரம் பற்றி ஆசிரிய தலையங்கம் தீட்டப்பட்டது.

04.06.1982ல் ஆயர் லீயோ நாணயக்காரா பற்றி "அரசியலும் திருச்சபையும்" என்ற தலைப்பில் வெளியான கட்டுரை மிக முக்கியமானது.

27.04.84ல் யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் குண்டு வெடிப்புப் பற்றிய செய்தி முக்கியமானது "சிங்கராயர் அடிகளை விடுதலை செய் அல்லது விசாரணை செய்" என்ற சர்வதேச மன்னிப்புச்சபை எச்சரிப்பு மக்களின் வரவேற்பைப் பெற்றது.

1984 யூலையில் அ. விமலதாசன் பற்றிய நூல் "ஒரு மனிதன் தரும் சாட்சியம்" விமரிசனம் பெறுகிறது. இதைச் சமப்படுத்தும் ஆயர் பிராங் மார்க்கஸ், யாழ் ஆயர் "வன்செயல்களை எதிர்க்கிறோம், கண்டிக்கிறோம்" என்ற தலைப்புக்கள் பாதுகாவலனின் யதார்த்த நிலையைக் காட்டுகின்றன.

1985 ஏப்ரல் 6ல் மேரி பஸ்தியன் அடிகள் சுட்டுக்கொலை என்ற செய்தி காவலன் நேயர்களை அதிர்ச்சியுறச் செய்தது. இதைச் சமப்படுத்த அரசும் பெரும் கல்விமான் பீற்றபிள்ளை அடிகட்கு அஞ்சல் தலை வெளியிடுகிறது. (31.06.1985)

28.02.1986ல் ஆயர் கிங்ஸ்லியின் "அப்பாவி மக்களைச் சுடவேண்டாம்" என்ற வேண்டுகோள். பின் 13.06.1986ல் குருநகர் பங்கில் கோர நிகழ்ச்சி. 35 மீனவர் படுகொலை. 27.06.1986ல் தோலகட்டி ஆசிரமத்தில் துறவி வின்சஸ்லோஸ் சுட்டுக்கொலை. மறை ஆசிரியர் சகாயநாதன் கோரக்கொலை, இவற்றுடன் ஆசிரியரின் காலகட்டமும் முடிவடைகிறது.

இதற்கிடையில் வழமையாக வரும் சர்வதேச, ஆசிய, தேசிய திருச்சபைச் செய்திகளும் விவிலிய மறைக்கல்விக் கட்டுரைகளும் தலத்திருச்சபைச் செய்திகளும் வந்து கொண்டேயிருக்கின்றன.

"உலகம் சிரியாதோ" என்ற தலைப்பில் கவிதை நடையில் 02.05.1986ல் தமிழர் உட்கொலைகள் பற்றி எழுதிய கவிதை புகழுக்குரியது. கவிதை யாழ் ஜெயம் பாணியில் அமைந்துள்ளது.

## 1986 செப்ரம்பர் தொடக்கம் 1990 வரை அருமைநாயகம் அடிகளின் ஆசிரியத்துவம்

பிலிப்பைன்ஸ் நாட்டு அனுபவம் "இரத்தம் சிந்தாப் புரட்சி" மக்கள் மனதைத்தொட்ட அம்சம் தேவதாயின் ஆண்டுக்கான விளக்கங்கள் தொடர்பாக வெளிவந்தன. தேவதாயின் ஆண்டு 1987ல் அறிவிக்கப்படுகிறது. S. J. இம்மானுவேல் அடிகளின் பொதுநிலையினர் பற்றிய கட்டுரைகளுடன் காவலன் பிரசுரமாகிறது. இந்திய மத்தியஸ்தம் தொடர வேண்டுகிறார் ஆயர் கிங்ஸ்லி 08.05.1987ல்.

திருச்சொரூபத்துடன் சுலோக அட்டைகளா? என்ற ஆசிரிய தலையங்கம் கொழும்பில் ஒஸ்கார் அபயரத்தினா நடத்திய ஊர்வலத்தைக் கண்டித்து எழுதப்படுகிறது. அரசியல் லாபம் என்ற கட்டுரையும் இதே பின்னணியில் எழுந்ததுதான்.

24.07.1987ல் "அரசின் விமானத் தாக்குதலில் இருந்து தமிழ் மக்களைக் காப்பாற்ற" ஆயர் தீயோகு விண்ணப்பம் "தோலகட்டி ஆச்சிரமம் இராணுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமாக மாற்றம்" என்ற குற்றச்சாட்டு "போராளி களே பழைய பகைமைகளைத் தாண்டி, ஒப்பந்தத்தை சீர்குலைக்க வேண்டாம்" என்ற வேண்டுகோள். ஆயர் கிங்ஸ்லியின் இந்து – கிறிஸ்தவ ஒன்றிப்பு வேண்டுதல் வெளிவருகின்றன.

06.01.89ல் திருத்தந்தையின் 'மீட்பரின் அன்னை' திருமடல், தொடர்ச்சியாக விளக்கவுரை, 27.07.89ல் ஆசிரியத்தலைப்பு 'இங்கு 5 ஆயுதப் படைகள்' என.

01.06.90ல் மஜகோரிய காட்சிகளை யூகசிலோ வியாவில் ஆயர்கள் நிராகரிக்கின்றனர் என்ற பக்கச் சார்புள்ள செய்தியை காவலன் வெளியிட்டு மக்களை குழப்பியது.

15.06.90ல் பொதுநிலை இறையியல் வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பம் என்ற அறிவிப்பு. ஆனால் அது நீடிக்கவில்லை என்பது மறைக்கப் படுகிறது. இந்தியாவில் சுவாமி அமலஉற்பவ தாஸின் அகால மரணம் அறிவிக்கப்படுகிறது.

## "மீண்டும் பாதுகாவலன்"

என்ற தலைப்பில் சென்ற ஆண்டு யூன் 15லிருந்து இன்று வரை பாதுகாவலன் வெளியிடப் படவில்லை என்கிறது 16.02.91ல் வெளிவந்த பாது காவலன். பாப்பிறையின் எட்டாவது சுற்றுமடல் "மீட்பரின் தூதுப்பணி" நீதியின் அறுவடை சமாதானம் என்ற ஈழ ஆயர்களின் திருமடல் முதலியவற்றைத் தாங்கி வெளிவருகிறது.

மறைந்த இராயப்பு அடிகள் பற்றிய கட்டுரை 24.05.91ல் வெளிவந்தது. "ஒரு நூற்றாண்டுக்குப் பின்" என்ற சுற்றுமடல் அநீதியான பங்கீட்டுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறது. சமய உட்பிரிவுகள் பெருகுவது சம்பந்தமாக அடிப்படைவாதக் குழுக்கள் பற்றிய உலக ஆயர் அறிக்கை காவலனில் காணக் கிடக்கின்றது.

1991 ஒக்ரோபர் 25 – நவம்பர் 5 இதழ் தொட்டு காவலன் நீலவரி அடித்து காகிதத்தாளில் அச்சடிக்கப்படுகிறது. "நியூஸ்பிறின்ற்" எனப்படும் பத்திரிகைத்தாள் (தமிழ் ஈழத்தில்) தட்டுப்பாடு காரணமாக.

2ம் ஈழப்போரின் காலம்; ஆனால் அது பற்றிய செய்திகள் அதிகம் இல்லை. எதிரொலிகள் மாத்திரமே சிதறிக்கிடக்கின்றன. ஆயர் முன்வைத்த சமஷ்டித் தீர்வு வெளியாகிறது. இக்காலக் கட்டத்தில் பாது காவலனில் கத்தோலிக்க செய்திகளும் எழுத்தாளர் ஆக்கங்களும் ஒருபுறம். மைக்கல் யோசவ், S.J. இம்மானுவேல் முதலி யோரின் சிந்தனைத் தாகங் களும் ஆக்கங்களுமாக மறுபுறமும் காணக் கிடைக்கின்றன.

தியோகுப்பிள்ளையின் இரண்டாம் தசாப்தம் முடிவடையும் நிலை. பாப்பிறை மிலேனிய 2000 யூபிலி ஆயத்தங்களை தொடக்குகிறார். தேவ தாயின் யூபிலி 1987ல் "மீட்பரின் அன்னை" என்ற சுற்று நிருபத்தில் வெளிவருகிறது. கமிலஸ் நிர்மலன் அடிகள் இதைத் தமிழில் மொழிபெயர்த்து 1989 காவலன்களில் தொடர்கட்டுரையாக வெளியிடுகிறார்.

பேர்லின் சுவர் உடைய, சோவியற் சாம்ராச்சி யம் சிதற, பனிப்போர் முடிவடைந்து, புதிய ஆபத்துக் களும் எதிர்பார்ப்புக்களும் தோன்றி "பின் நவீனத்துவ யுகம்" ஆரம்பிக்கிறது. இதைப்பிரதி பலிக்கும் முகமாக 1990 காவலன் "வாழ்க்கைப் பயணம் இவ்வுலகுக் கப்பால் தொடர்கிறது" என்ற பாப்பிறையின் புனித மரிய கொறற்றியின் 100வது வருட பிறப்புவிழாவில், பின் நவீனத்துவ இளைஞர் யுவதிகளுக்கு தலைப்புச் செய்தியாக்கிறது 25.11.1991.

"தீமைக்குத் தீமை தீர்வல்ல" என்ற கட்டுரை யுடனும் "வாரும் ஆண்டவரே" என்ற ஆசிரியத் தலைப்புடனும் 1991ன் இறுதி பாதுகாவலன் ஆசிரிய உரை: பட்ட மரமாகக் கருதப்பட்ட தாவீது கோத் திரத்தில் . . . எமது (ஈழத்தின்) வாழ்வும் சீரழிந்து, பட்டுப்போய், எதிர் காலம் இருள் மயமாய் தென்படும் போதிலும், வாரும் ஆண்டவரே! Maranatha என அழைக்கிறது.

யுத்த கோஷங்கள் சூழ்ந்த தொண்ணூறுகளின் பயங்கரச்சூழல், யாழ் கோட்டை அடிபாடு, யாழ்நகர் வெறிச்சோடிய நிலையில், நகர மக்கள் இடப்பெயர்வு இவற்றிடையே ஓர் மாயை அமைதிநிலை 1991ல் திரும்ப, திருச்சபையின் மாற்றங்களையே முன்னெடுத்து ஓர் நம்பிக்கை ஒளி உருவாகிறது. யாழ் ஆயர் விலக புதிய ஆயர் வருக என காவலன் வரவேற்க இன்னு மோர் புதிய ஆயர் திருமுழுக்கு அருளப்பர் ஆலயத் திலிருந்து உருவாகி வெளியேற கொழும்பு பேராயர் நீக்கிலஸ் மார்க்குஸ் "ஆண்டகை புதிய வசந்தம்" என்று அறிவிக்கிறார். பருவகால நிலைகள் மாறிமாறி வருபன. (கோடை, கார்காலம், முன்பனி, பின்பனி போன்று) நவீனப் போர் இயற்கைச் சுழற்சி அல்லவே? அது தீமைநிறை மனித அநீதிகளிலிருந்து எழும்பும் பெரும் சமூகப் பாவம். அதற்கு இயற்கை வரையறை கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய மாற்றங்களும் தளிர் விடும் நம்பிக்கைகளும்

1992ம் ஆண்டை போருக்குள்ளும் ஓர் சிறப்பான மங்களகரமான ஆண்டெனவே பாதுகாவலன் அழைத்துக் கொடுக்கிறது. வருடம் பூராவும் நீலக் கோட்டுடன் வெளி வருவது குறிப்பிடத்தக்கது.

ஓர் தமிழர் (வண. அலெக்ஸ்சாந்தர் SSS) இலங்கைத் துறவற பேரவையின் சிரேஷ்டர் என 10.01.1992ல் வெளிவரும் காவலன் ஆரம்பிக்கிறது. உளவளத்துணை பட்டமளிப்புவிழா – செல்வரத்தினம் அடிகள் "மனத்துயர் அச்சம் பதற்றம் முதலிய உளப் புண்களை ஆற்றும் பணியில் சாந்திகம்" என அறை கூவுகிறார். 24.01.92 இதழ் தலைப்பில். கொழும்பு பேராயரும் ஆயர் அவையும் விடுத்த அறிக்கையில் (21.02.92) கத்தோலிக்கர் தனித்துவத்தைக் காத்தல் வேண்டும் என்பது முக்கிய அம்சம். 06.03.92ல் "இலங்கையின் அதிசக்தி வாய்ந்த தமிழ்க்கட்சி விடு தலைப் புலிகள் இயக்கமே மாகாணசபை ஆட்சியே இனப்பிரச்சனையைத் தீர்க்க வழி" என்ற பேராயரின் கூற்று தலைப்புச் செய்தியாகிறது.

இதற்கிடையில் இலங்கையின் தேசிய மேய்ப்புப்பணி மாநாடு 1993 ஆகஸ்ட் 3 முதல் 7வரை என்று அறைகூவி, பீக்குகள் யாழ் வருகை, ஆயருடன் எடுத்த புகைப்படங்களுடன் 03.04.92 காவலன் ஆயர் சமாதானக்குழு பிராங்க் மார்க்கஸ், வியான்னி (சில்வெஸ்டர்) ஆண்டகைகளின் நிழற் படங்களையும் வெளியிட்டது.

யாழ் ஆயரை மேன்மைப்படுத்த யாழ்நகரில் ஒரு முத்தமிழ் விழா சித்திரை 24,25,26களில் சிறப்பாக எடுக்கப்பட்டது திருமறைக்கலா மன்றத்தினரால்.

பாதுகாவலன் 15 (வைகாசி) தலைப்புச் செய்தியாக யாழ் பேராலயத்தில் ஆயரின் மும்முடி விழா விபரிக்கப்பட்டது. பல்கலை துணைவேந்தர் துரைராசா அவர்கள் "மக்களுக்கு மன உறுதியூட்டிய பெருந்தகை யாழ் ஆயர்" எனப்புகழ்ந்து "தமிழர் நிலையை உலகனைத்தையும் அறியவைத்தவர்" என்று பாராட்டினார். யோகி நல்லூர் ஆதீனகர்த்தா உட்பட பல்வேறு மத பிரமுகர்கள் அரசாங்க அதிபர் தொட்டு சகல உயர் அதிகாரிகள், பல்கலை பீடாதிபதிகள் மற்றும் பெரும் ஜனத்திரளினால் மரியன்னை பேராலயம் நிரம்பி பேராலய வளாகத்தி லும் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்தது.

29.05.92 யாழ் அமலமரித் தியாகிகளின் மீளாய்வு மாநாடு பற்றிய அறிக்கை வெளியாகிறது. 12.06.92 காவலன் யாழ்நகரில் சர்வமதத் தலைவர்களிடம் மௌன பேரணி; செஞ்சிலுவைச் சங்கத்திடமும் அரச அதிபரிடமும் மகஜர் கையளிப்பு எனத் தொடர்கிறது.

ஆயரின் 2 தசாப்த மேய்ப்புப்பணி முடிவடைய சில முன் மாற்றங்களும் நடைபெறு கின்றன. 16.07.92ன் தலைப்புச் செய்தியின்படி A. I. பேர்னாட் அடிகள் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபராகிறார். மைக்கல் யோசவ் அடிகள் பாதுகாவலன் ஆசிரியரா கிறார் முன்பு சற்றே விரிசல் அடைந்திருந்த ஆயர் ஆட்சியாளர் உறவுநிலை ஒப்புரவு நிலைக்கு வருவதை ஆவணி மாத 'காவலன்' களில் காண்கிறோம்.

பத்திரிசியார் கல்லூரியில் சுவாமி விபுலானந்தர் விழா கோலாகாலமாக நடைபெறுவதைக் காவலன் விபரிக்கிறது.

'ஈழத்துப்போரில் களநிலை மாற்றம்' (04.09.92) 3 குருக்கள், 14 கன்னியர், 10 நவகன்னியர், மக்களுடன் இராணுவக்கட்டுப்பாட்டில் (மிருசுவில், முகமாலை) கடந்த வியாழன் ஸ்ரீ லங்கா முப் படைகள் நடத்திய இராணுவ நடவடிக்கைகளில் மாதகல், சேந்தான் குளம், இளவாலை அகதிகள்.


திருச்சபையின் மேய்ப்புப்பணி முனையில் ஒரு திருப்பம். மன்னார் மறைமாவட்டம் உதயம். இராயப்பு யோசவ் அடிகள் ஆயராக நியமனம் (09.09.92 காவலன்) இலங்கை ஆயர் அவையின் அறிக்கை "அரசியல் தலைவர்களில் இந்நாடு நம்பிக்கை இழந்து விட்டது" (02.10.92).

04.11.92 காவலன் புதிய யாழ் ஆயர், மரியன்னை பேராலயத்தில் பதவி ஏற்கப் போவதை அறிவிக்கிறது."ஆண்டவர் அருளால் ஆசிபெற்றவர் வாழி" என ஆயர் தீயோகுவை வாழ்த்தி விடை கொடுத்து அனுப்புகிறது. அதன்பின் மூன்று காவலன்கள் வெளிவந்து 1992 முடிவடைகிறது. "சமாதானம் விரைவில் உருவாகும் சாத்தியக் கூறுகள் தென்படு கின்றன". மன்னார் ஆயர் திரு நிலைப்படுத்தலில் கொழும்பு பேராயர் கூற்று இது.

"அரசியல் தலைவர்களின் தலைவர்களில் இந் நாடு நம்பிக்கை இழந்துவிட்டது" என்ற இலங்கை ஆயர் அவையின் கூற்றும் நம்பிக்கை – அவ நம்பிக்கை இடையே ஊசலாடிக்கொண்டு முடிந்து தொடங்கும் ஒரு சகாப்தம் ஈழத்து கத்தோலிக்க திருச்சபையின் தலைமைத்துவத்தின் இடையே தோன்றுவதுபோல் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீர்வு ஒரு சமாதானமே

S. M. *செல்வரெட்ணம்*
*(கரவையூர்ச் செல்வம்)*

## முன்னுரையாக . . . . .

பதினேழு வருடங்களாக ஒரு கொடிய போர் வடகிழக்கில் நடைபெறுகின்றது. இதனால் ஏற்பட்ட கொலைகள் பல, சித்திரவதைகள் பல, இழப்புக்கள் பல, அழிவுகள் பல, களவுகள் பல, பாதிப்புக்கள் பல, இடப்பெயர்வுகள் பலப்பல. இவ்வளவு நடந்தும், இவற்றினூடாக வடபகுதியில் மக்கள் இன்னும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். இவர்களுடைய மனத்திடனும் மனத்தைரியமும் மிகவும் பாராட்டுக்குரியது. அதேபோன்று இவ்வளவுக்கும் ஊடாக "காவலன்" வார ஏடும் வளர்ந்து வந்துள்ளது. இதுவும் பாராட்டிற்குரியதே. இந்த வார ஏட்டுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் காவலன் விழா எடுக்கும் இந்நேரம் மனதார வாழ்த்துகின்றேன். வளர்க, இவர்கள் பணி.

## எனது தொடர்பு

1970 களில் காவலனுடன் எனக்கு ஓர் உறவு ஏற்பட்டது. கட்டுரைகள், திரைப்பட விமர்சனங்கள் என்று எனது ஆக்கங்களைக் காவலன் அப்பொழுது தாங்கி வந்தான். காவலன் மூலமாக பல வாசகர்களுடன் எனக்கு ஓர் உறவு உருவானது. 1980களில் நடுப்பகுதியில் நாட்டிற்கு வெளியே இருக்கவேண்டிய ஓர் "அவசியத்தில்" இந்த உறவில் ஓர் தேக்கம். மீண்டும் 1990களின் முற்பகுதியில் உறவு தொடர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. 1995ல் ஏற்பட்ட இடப்பெயர்வில் நானும் இடம் பெயர்ந்தேன். மீண்டும் ஒரு தேக்கம்! பழைய உறவை மறவாது காவலன் விழாக்கோலம் போடும் இவ்வேளையில் என்னையும் காவலனில் சந்திக்க அழைத்த ஆசிரியர் அவர்களுக்கு நன்றிகூறுகின்றேன்.

## இருட்டில் ஒரு ஒளிக்கீற்று

ஈழத்தின் (நான் ஈழம் என்று குறிப்பிடுவது இலங்கை என்ற நாட்டை. 1970களிலும், 80களிலும், இந்தப் பொருளில்தான் நான் ஈழம் என்ற சொல்லைப் பயன்படுத்தினேன்.) வடகிழக்குப் பகுதிகளின் வரலாற்றில் கடந்த பதினேழு ஆண்டுகளும் ஓர் **இருண்ட காலம்**. (1960களிலேயே கருமை மேகங்கள் சிறிது சிறிதாக திரள ஆரம்பித்தன. எங்கள் அன்றைய அரசியல் தலைவர்கள் எரியும் வீட்டில் அன்று சுருட்டுப் பற்றிக் கொண்டிருந்தார்கள்.) இதில் சந்தேக மேயில்லை. இதை மறுப்பதற்கும் இல்லை. இருள் சூழ்ந்த குகையின் மறுமுனையில் ஒரு சிறு ஒளி தெரியாதா என்ற ஓர் ஏக்கம் வடகிழக்குப் பகுதி மக்களின் வாழ்வில் என்றுமே எதிரொலித்துக்கொண்டு தான் இருக்கின்றது. வடகிழக்குப் பகுதிகளின் வெளியே வாழும் ஈழத்தமிழர் பலரின் ஏக்கமும் அதுவே, எதிரொலியும் அதுவே. ஒருவேளை இந்த ஏக்கமும், ஒளியை நோக்கிய எதிர்பார்ப்பும் வளர்த்து வந்த நம்பிக்கை தான் இந்த மக்களை இன்றும் இன்னமும் வாழ வைக்கின்றதோ!

இந்த நம்பிக்கையை உடைக்க அடிக்கடி முனைகின்றனர் போரில் ஈடுபட்டிருப்போர். ஆயினும் பதினேழு ஆண்டுகளினூடாக ஏற்பட்ட பாரிய இழப்புக்கள் மத்தியிலும் பல இடப்பெயர்வுகள் மத்தியிலும் இந்த நம்பிக்கையை அழியவிடாது தமிழ் மக்கள் காப்பாற்றி வந்திருக்கின்றார்கள். இந்த உண்மையை வடகிழக்குக்கு வெளியே வாழும் பலர் இன்னும் உணரவில்லை. உணரவிடாது ஈழத்து நாளேடுகள் பல, வானொலி, தொலைக்காட்சி போன்றவை காத்து வந்திருக்கின்றன. காத்து வருகின்றன.

## மக்கள் தொடர்பு சாதனங்களின் அதர்மம்

தென்னகத்து வானொலி, தொலைக்காட்சி, பெரிய நாளேடுகள், வாரஏடுகள் போர் நீடிப்பதற்குப் பகிரங்கமாகவே வழி வகுத்து வருகின்றன. ஒரு சார்புடன் கட்டுரைகள் கட்டுக்கட்டாக வரையப்பட்டு வருகின்றன. இனத்துவேஷம் பகிரங்கமாகவே வளர்க்கப்படுகின்றது. நாட்டில் தமிழ் மக்களுக்கு பிரச்சனையெதுவும் இல்லையென்று வாதிடுபவர்கள் இன்றும் பலர். இவர்களுள் மதத் தலைவர்களும், மத குருக்களும், ஏன் துறவிகளும் பங்கெடுக்கின்றார்கள்.

அரச பயங்கரவாதத்தை பாதுகாப்பென்றும், விடுதலைப் புலிகளின் போராட்டத்தை பயங்கரவாதமென்றும் அடிக்கடி கூறிவருவது மட்டுமல்ல, உலக அரங்கிலேயே இப்பிரசாரத்தில் தென்னக ஏடுகள் ஆள்வோருக்குத் துணை வந்துள்ளன. நடுவு நிலையில் நின்று போராட்டம் எது, பயங்கரவாதச் செயல்கள் எவை என்று பாகுபடுத்தி எழுதும் தர்மம் ஏனோ ஏற்படவில்லை. வடகிழக்கில் நடப்பதென்ன? யாழ்குடா நாட்டிலும், வன்னியிலும் மக்கள் அனுபவிக்கும் இழப்புக்கள், துன்பங்கள் எவை? என்று விரிவாக விபரமாக இந்த ஏடுகள் இன்றுவரை எழுதியதில்லை. தொலைக்காட்சி படம் பிடித்துக்காட்டவில்லை.

ஜனநாயகம் பேசும் அரசு வடகிழக்கைப் பொறுத்த மட்டில் பாதுகாப்பு என்ற கவசத்தில் செய்தித் தணிக்கையை வன்மையாகத் திணித்து வருகிறது. இது போதாதென்று ஆட்சிக்குப் புறத்தே உள்ள நாளேடுகளும், வார ஏடுகளும் கூட தாமே தம்மை தணிக்கைக்குட்படுத்தி ஒரு சார்பாக எழுதி வருவது பத்திரிகைத் தர்மம் அல்ல.

இதனால் பெரும்பான்மையான சிங்கள மக்கள் போரைப்பற்றிய விடயத்தில் இருட்டிலேயே இருக்கிறார்கள். உலக அரங்கிலேயும் அதே இருட்டடிப்புத் தான். இவ்வளவையும் நன்கு புரிந்துகொண்ட வெளிநாட்டவர்களும் இருளில் இருக்க விரும்புவதாகவே தெரிகின்றது. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில்தான் போருக்குத் தீர்வும் நாட்டில் சமாதானமும் தேவை என்ற பேச்சும் தலைதூக்கி வருகின்றது.

## முரண்பாடுகளுடன் ஒரு சௌகரியம்!

இன்றைய உலகிலும் குறிப்பாக நமது நாட்டிலும் ஓர் ஆரோக்கியமற்ற பழக்கம் சாதாரணமாகி வருகின்றது. **முரண்பாடுகளுடன் சௌகரியமாக வாழப் பழகிக் கொண்டோம்.** வெளி முரண்பாடுகள், அக முரண்பாடுகளின் புறத்தோற்றமுந்தானே! இங்கு சில உதாரணங்கள் உதவலாம்.

* "சமாதானத்திற்கான போர்"
* "சண்டையை நிறுத்தாமல் சமாதானம் பேசுவோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அடக்கி ஆட்சிசெய்து கொண்டே மக்கள் விடுதலை பற்றிப் பேசுவோம்.
* மனித உரிமைகளைப் பறித்துக்கொண்டே மக்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்போம்.
* கொலைகளைச் செய்துகொண்டே, உயிரைப் பாதுகாப்போம் என்று வாதிடுகின்றார்கள்
* பத்திரிகைச் சுதந்திரத்தைக் குழிதோண்டிப் புதைத்துக் கொண்டே, பத்திரிகைச் சுதந்திரத்தின் அவசியத்தை உலகிற்கு எடுத்துரைக்கின்றோம்.
* நீதியற்ற நாட்டில் நீதிமன்றங்கள் வேறு. நீதிபதிகளே கட்சி சார்புடன் நியமனம் பெறுகின்றனர்.
* சர்வாதிகார அரசியலை நடத்திக்கொண்டே இன்று பல அரசியல் தலைவர்கள் ஜனநாயகம் பேசுகின்றார்கள்.
* மனித உரிமைகள் பற்றி உரக்கக் குரல் கொடுக்கும் நாடுகள் கொடியபோர் ஆயுதங்களை உருவாக்கி போரில் ஈடுபட்டுவரும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.
* போரில் ஈடுபட்டு வரும் இரு தரப்பினருக்கும் சமாதானத்தின் அவசியத்தை உணர்த்தி வரும் நாடுகள், போரைத் தொடர்வதற்கு ஆயுதங்களை அவர்களுக்கே விற்று வருகிறார்கள்.

முரண்பாடுகளுடன் சௌகரியமாக வாழ நாம் பழக்கப்படுகின்றோம்: பழகி வருகின்றோம். இதுஓர் ஆபத்தான நிலையென்றே எனக்குத் தோன்றுகின்றது. ஆயினும் கட்சி சேர்ந்து "நீ செய்தால் பிழை, ஆனால் நான் செய்தால் சரி" என்ற ஒரு நியாயப்படுத்தும் நிலைப்பாடும் தோன்றியுள்ளது.

துவக்குப் பலம்; இன்று இந்த நாடுமுழுவதும் முழுமையாகப் பரவிவிட்டது. துவக்குப்பலம் வளர துவக்குப் பயமும் வளரத்தானே செய்யும்? இதனால் "நீதிமேல் பசிதாகம் கொண்டோர்" கூட மௌனிகளாகி விடுகிறார்கள். நல்லவர்கள், நடுவுநிலமை கொண்டோர் கூட வழிதவறி விடுகிறார்கள். பலத்தையும் பதவியையும், அதிகாரத்தையும் தேடுபவர்கள் முரண்பாடுகளை வளர்க்க உதவுகின்றார்கள்.

ஆன்மீகத்தை வளர்க்கவேண்டிய மதத் தலைவர்கள், துறவிகள் கூட மத நிறுவனங்களில் சிக்கி, நிறுவனப் பாதுகாப்பை நோக்கி ஒன்றில் மௌனிகளாகின்றார்கள், அன்றேல் பலத்திற்கும் அதிகாரத்திற்கும் பின்னால் ஒழிகின்றார்கள். ஒரு சில துறவிகளும் குருக்களும் இனத்துவேஷம் பேசிக் கொண்டே பரிசுத்த ஆவியையும் வரவழைக்கின்றார்கள்! அரசியலுக்காக, பதவிக்காக, அதிகாரத்திற்காக தங்கள் "ஆன்மாவை" விற்றுவிடுகின்றார்கள். (Sell their Souls) சில மதகுருக்களும் துறவிகளும். இப்படிப்பட்ட ஒரு பின்னணிலேதான் சமாதானப் பேச்சும் அவ்வப்போது தலைதூக்கி வருகின்றது

## தீர்வு சமாதானமன்று

பதினேழு நீண்ட ஆண்டுகளாக நாட்டில் நடைபெற்று வரும் இக்கொடியபோருக்குத் தீர்வுகாண இன்று சில முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகளை நாம் அனைவரும் வரவேற்க வேண்டும். வடகிழக்கு மக்கள், அதிலும் குறிப்பாக யாழ் குடாநாட்டு மக்களும் வன்னி மக்களும் இன்றுவரை அனுபவித்த, - அனுபவித்து வரும் துன்பம் போதுமானது. யாழ் ஆயர் அண்மையில் கூறியது போல "இனியும் இந்த மக்களால் இத்துன்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியாது". தீர்வுகாண மத்தியஸ்தம் வகிக்க நோர்வே நாடு எடுக்கும் முயற்சிகளை வரவேற்போம். ஒத்துழைப்பையும் மனதார வழங்குவோம்.

இந்நேரம் இந்த முயற்சியில் தோன்றும் சில சொற்பிரயோகங்கள் சில குழப்பங்களையே உருவாக்குமென்பதை இங்கு கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

போருக்குத் தீர்வு காண்பது ஒன்று. சமாதானம் வேறொன்று. போருக்குத் தீர்வொன்றைக் காண்பதினால் மட்டும் சமாதானம் தோன்றாது. தீர்வு சமாதானத்திற்கு வழிவகுக்கும் - வழிவகுக்கலாம். ஆனால் தீர்வு சமாதானமன்று.

## தீர்வு

போர் தொடங்கிய காரணங்களை, சூழலை அறிந்து, நாட்டின் அனைத்து இனங்களின் உரிமைகளைப் புரிந்து, நீதியின்படி போருக்கு ஒரு தீர்வு காணவேண்டும். அடிப்படை மனித உரிமைகளோடு அனைத்து மக்களும் வாழ ஒரு முடிவு காண்பது தீர்வுக்கு அவசியம். வெவ்வேறு இனங்கள் தங்கள் தங்கள் இனத்தை வளர்க்கவும் , கலை பண்பாட்டை வளர்க்கவும், கல்வி, தொழில் துறைகளை வளர்க்கவும், பாதுகாப்போடு வாழவும் தீர்வு துணைசெய்ய வேண்டும். போரின் தீர்வை அமுல்படுத்த - நடைமுறைப்படுத்த மூன்றாவது நாட்டின் உதவியும் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித வளன் கத்தோலிக்க அச்சகப் பணியாளர்கள் ~ 2001



**அமர்ந்திருப்போர் இடமிருந்து வலமாக**
P. நவரட்ணம் , J. K. சிங்கராஜா, M. டக்ளஸ், M.C. குணேந்திரன், அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
N. அன்ரனி, S. ஜெயராஜ், R. யோகரட்ணம், J. ஜெயராஜன்

**நிற்போர் கீழ்வரிசையில்**
S. ஜெயதுங்க, G. L. ஜோண்சன், K. V. சுதர்சன், A. M. கொன்செஸ்ரா, S. R. லூசியா, T. அனுஷா,
T. நிலாஜினி, N. சுபாஜினி, F. N. சாமினி, G. கரோலின், M. கலிஸ்ரன், P. அன்ரன் ஜோர்ச்

**நிற்போர் மேல்வரிசையில்**
J. அன்ரன்ஜோர்ச், T. கண்ணன், M. A. M. பெனடிற்சன், J. யோகராஜா, A. சியாம் யூடினஸ், V. யோண்சன்,
A. அமலகிறிஸ்ரியன், S. சிவானந்தன், A. K. றெஜினோல்ட், T. தர்மிலன், M. பெஞ்சமின், K. S. ஞானராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானம்

சமாதானம் ஓர் ஒப்புரவின் (reconciliation) அடிப்படையில் / விளைவாகத் தோன்றுவது. ஆகவே, உண்மையான சமாதானத்தை நாம் விரும்புவோமானால் இனங்களுக்கிடையே ஒப்புரவு அவசியம். இந்த ஒப்புரவு நடைபெறவேண்டுமானால், நாம் துணிவுடனும், நேர்மையுடனும் சில கசப்பான, நோவான உண்மைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். நாம் செய்த பாரிய குற்றங்களை, தவறுகளை அடையாளங் கண்டு அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும். எமது செயலுக்கு நாமே பொறுப்பேற்கவேண்டும். மன்னிப்பும் கேட்போமானால் நாம் தெய்வத்தன்மையை அனுபவிப்போம். "மன்னிக்கத் தெரிந்தவன்/ள் மாணிக்கக் கோவிலப்பா" கவிஞனின் கூற்று.

இந்த நாட்டில் இன்று மிகவும் அருகிவரும் ஒன்று "கணக்குக்கொடுப்பது" (Accountability) அரசியல் தலைவர்கள், மதத்தலைவர்கள் வெவ்வேறு பொறுப்புக்களை ஏற்றவர்கள் **தங்கள் தங்கள் பொறுப்புக்களுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும்.** இப்படிப்பட்ட ஒரு நிலைப்பாடு தோன்றுமானால் சமாதானம் தோன்ற வாய்ப்புண்டு. இங்கு நாளேடுகள், வாரஏடுகள், வானொலி, தொலைக்காட்சி ஒத்துழைக்க வேண்டும். நடுவு நிலைமை தவறாது தங்கள் பணியை இவர்கள் நாட்டுமக்கள் நலன் கருதித் தாராளமாகத் தருதல் வேண்டும்.

மதத்தலைவர்கள் தங்கள் பங்கைத் தாராளமான மனத்துடனும், திடனுடனும், ஆன்மீக அடிப்படையில் தருதல் வேண்டும். நாட்டில் உள்ள பெரியோர்கள் பின்வாங்காது ஒத்துழைப்புத் தருதல் வேண்டும்.

சீரழிந்து கொண்டு போகும் இந்த நாட்டை காப்பாற்ற வேண்டுமானால், இப்படிப்பட்ட ஒரு முயற்சி இந்த நேரத்தில் அவசியந்தேவை.

## தென்னாபிரிக்க அநுபவம்

ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் இருந்து தென்னாபிரிக்கா சென்ற ஐரோப்பியர்கள் (இங்கு நான் ஆங்கில, அயர்லாந்து நாடுகளையும் இணைத்தே கூறுகின்றேன்.), அந்த நாட்டை "தமது நாடாக்கியது" மட்டுமன்றி, தென்னாபிரிக்க மக்களை (சுதேசிகள்) அடக்கி பல ஆண்டுகள் ஆட்சி செய்து வந்தனர். வெளியில் இருந்து சென்ற ஒரு சிறுபான்மை, உள்ளிருந்த பெரும்பான்மையினரை அடிமைகளாக்கி அடக்கி ஆண்டு வந்த ஒரு கொடிய செயலை உலகம் ஆதரித்து வந்தமை ஒரு பாரதூரமான அதர்மம். இது போதாதென்று இந்த கொடிய செயலை ஆதரித்த மேல் நாட்டவர்கள் தம்மை நாகரீகத்தில் முன்னேறியவர்களென்றும் கூறிக் கொண்டார்கள்.

தென்னாபிரிக்காவில், தென்னாபிரிக்க மக்களின் மனித உரிமைகளுக்காகப் போராட்டங்கள் பல வடிவங்களில் நடைபெற்று வந்தன. எமது நாட்டில் நடைபெறுவதுபோன்று அங்கும் பல கொலைகள், பல அழிவுகள், பல காட்டிக்கொடுத்தல்கள், சித்திர வதைகள், செய்தி இருட்டடிப்பு, பொய்பரப்புதல், முகவரியே இன்றி "மாயமாக" மறைந்தவர்கள் என்று நூற்றுக்கணக்கான சம்பவங்கள் நடைபெற்றுவந்தன.

ஆயினும், அண்மையில் இங்கு ஒருபெரும் மாற்றம் ஏற்பட்டது. தென்னாபிரிக்க மக்கள் தம்மைத் தாமே ஆட்சிசெய்ய உரிமைபெற்றார்கள். ஆட்சி சிறுபான்மையினரிடமிருந்து பெரும்பான்மையினருக்கு மாறியது. இது ஒரு பெரும் புரட்சிகரமான மாற்றம். இம்மாற்றம் ஏற்பட பல இயக்கங்கள் வெளிநாடுகளிலும், குறிப்பாக மேல் நாடுகளிலும் தொடர்ச்சியாக இயங்கி வந்ததை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

## ஒப்புரவு

**நாடுகளிடையே** போர் நடைபெற்று தீர்வுகள் கண்ட பின்னர் அதே நாடுகளிடையே ஒப்புரவு நடைபெறுவது வழக்கமல்ல. அதேபோன்று நாட்டினுள் போர் நடைபெற்று தீர்வு கண்டபொழுதும் நாட்டினுள் போர் புரிந்த இரு சாரார் இடையே ஒப்புரவு ஏற்பட்ட வரலாறு இதுவரை இல்லையென்றே கூறவேண்டும். இந்நிலையை துணிவுடனும் உறுதியுடனும் தென்னாபிரிக்கா மாற்றியது. போர் முடிந்து, தீர்வு கண்டு, ஆட்சிமாறியதும் இனங்களிடையே ஓர் ஒப்புரவு தேவை என்று அம்முயற்சியில் பல பெரியார்கள் ஈடுபட்டார்கள். ஒரு சில முக்கியமானவர்களின் ஒத்துழைப்பு கிடைக்காவிட்டாலும், இந்த ஒப்புரவு முயற்சி வெற்றியளித்தது, பயன் அளித்தது என்று துணியலாம்.

**இப்படிப்பட்ட ஓர் ஒப்புரவு நமது நாட்டிலும் தேவை.** போருக்குத் தீர்வு கண்டதும் சமாதானம் தானாக வந்துவிடும் என்பது வெறுங்கனவு. **இனங்களிடையே ஒப்புரவு தேவை.** செய்த பெருந் தவறுகள், கொலைகள், அழிப்புக்கள், கொள்ளைகள், கற்பழிப்புக்கள், இடப்பெயர்வுகள் அடையாளங்கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றிற்குப் **பொறுப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.** மன்னிப்பும் கேட்கப்படுமானால் சமாதானத்துக்கு நாம் வழிவகுத்தவர்களாவோம்.

இப்பெரும் பணி மனிதத்தன்மையுடனும், பொறுமையுடனும், உறுதியுடனும், மென்மையுடனும் நடைபெறுதல் அவசியம். ஏற்கனவே கூறியதுபோல மதத் தலைவர்கள், துறவிகள், பெரியோர் இப்பணியில் ஈடுபடுதல் அவசியம். நாளேடுகள், வாரஏடுகள் இப்பணியில் தம்மை ஈடுபடுத்தல் வேண்டும். **காவலரும் இப்பணியில் தன்மை ஈடுபடுத்தும்** என்று எதிர்பார்ப்போம். வானொலி, தொலைக்காட்சியும் தமது பங்கை அளிக்கவேண்டும். நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் நாம் இப்பெரும்பணியில் ஈடுபட்டே ஆகவேண்டும். புத்தாயிரத்தில் நாம் செய்யத் தொடங்கும் ஒருபெரும் பணியாக இது அமையும்.

தென்னாபிரிக்காவையும் மீறி, நமது நாட்டில் நாம் செய்யவேண்டிய இன்னுமோர் ஒப்புரவு உண்டு. அதாவது இனங்களிடையே மட்டுமல்ல, **தமிழினத்துக்குள்ளும் ஓர் ஒப்புரவு அவசியம்.** இனத்துக்குள் போராட்ட காலத்தில் பல கொலைகள், பகைமைகள், களவுகள், சித்திரவதைகள் நடந்துள்ளன. ஒரு பழமை வாய்ந்த பண்பாடு, ஒரு குறுகிய காலத்தில் சின்னா பின்னமாக்கப்பட்டு விட்டது. "துவக்குக் கலாச்சாரம்" ஒன்று உருவாகிவிட்டது. கண்டதற்கும் கொலை. துவக்குப்பலத்தில் அதிகாரம். தவறுகளை நியாயப்படுத்தும் ஓர் ஆணவம் – என்று பல. இப்படிப்பட்ட ஓர் ஒப்புரவு ஏற்படாவிட்டால், தீர்வு வந்தும் விடுதலையற்ற வாழ்வு பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த நிலை. பானையில் இருந்து தப்பி, நெருப்புக்குள் விழுந்த நிலை. பதினாறு நீண்ட ஆண்டுகளாக நொந்து நொருங்கிய மக்களுக்கு சமாதானம், அமைதியான வாழ்வு அவசியம். இதற்கு இனத்துக்குள்ளும் ஒப்புரவு அவசியம்.

## ஆன்மீகம்

விடுதலை, நீதி, சமாதானம், ஒப்புரவு இச் சொற்கள் இயல்பாகவே ஓர் ஆன்மீகத்தை கோடிட்டுக் காட்டுகின்றன. கயவர்களும், கள்ளர்களும், கொலைஞர்களும் இச் சொற்களைக் கண்டபடி உளறிய காரணத்தினால் ஒருவேளை மக்கள் மத்தியில் இச்சொற்கள் தன்னுள் கொண்ட ஆன்மீகத் தன்மையை இழந்திருக்கலாம். தவறு மக்கள் இழந்திருக்கலாம்; சொற்கள் இழக்கவில்லை. நான் இங்கு குறிப்பிடும் ஆன்மீகம், நிறுவனங்களுக்குள் சிறைப் பட்டுவிட்ட மதங்களுக்கு மேற்பட்ட ஒரு மனித ஆன்மீகம். மதங்கள் இயல்பாக இப்படிப்பட்ட ஓர் ஆன்மீகத்தை வளர்க்கவேண்டும். ஆனால், நிறுவனமயமாக்கப்பட்ட மதங்கள் நிறுவனங்களையும், கட்டுக் கோப்பான அமைப்புக்களையும் வளர்ப்பதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருக்கின்றன. அதனால், எந்த ஆன்மீகத்தை வளர்க்க மதங்கள் உண்டோ, அதே ஆன்மீக வளர்ச்சிக்குத் தடையாக, முட்டுக்கட்டைகளாக மதங்கள் மாறுவதும் உண்டு.

ஆன்மீகம் என்று நான் இங்கு குறிப்பிடுவது நிறுவன மயமாக்கப்பட்ட மதங்களுக்கு அப்பால் வாழும் ஓர் **இறை உறவு**. என்னுள் ஆழமாகச் சென்று (அகப்பயணம்) நான் எந்த இறைசாயலில் படைக்கப்பட்டேனோ அந்தச் சாயலைத் தொடும் ஓர் உறவு. இறைவனின் அன்பிற்கு என்னை முழுமையாகத் திறந்து விடும் ஓர் ஆழமான ஆன்மீகம் (Indepth Spirituality) இந்த ஆன்மீகம் தன்னுள் சென்று தன்னலத்தில் புரள்வதல்ல. அன்றேல் காட்டுக்குப் போய் தவத்திலும் செபத்திலும் மூழ்குவதல்ல. முரணாக, ஆழச்செல்வும் இந்த அகப்பயணம், அகலவிரியும் ஒரு புறப்பயணமாகவும் மாறும். மனித எல்லைகளைக் கடந்து அனைவரையும், அனைத்தை யும் அரவணைக்கும் ஓர் ஆன்மீகம். வேரூன்ற, கிளைகள் விரிக்கும் ஓர் ஆன்மீகம். இப்படிப்பட்ட ஓர் ஆன்மீகத்தை அடித்தளமாகக் கொண்டு மலர்ந்து காய்த்துக் கனியும் ஆன்மீகக் கனிகள்தான் – விடுதலை, நீதி, சமாதானம், ஒப்புரவு. இப்படிப்பட்ட ஓர் ஆன்மீகந்தான் இனங்களை, மதங்களை, நாடுகளை ஒன்றாக்கும். இப்படிப்பட்ட ஓர் ஆன்மீகம் எங்கள் நாட்டின் எதிர்காலத்துக்கு அவசியந்தேவை. இன்று விரைவாகப் பரவிவரும் உலகளாவிய பண்பாட்டிற்கும் இப்படிப் பட்ட ஓர் ஆன்மீகம் அவசியந் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் நீநீடு வாழி!

ஓராண்டு நின்றாலே
பெரு வெற்றி !
நூறாண்டும் அதனுடைய
கால்சேர்ந்தும் பணிசெய்த
காவலன் நீ
நீடு வாழி!
இருமொழியில்
தொடங்கிய நீ
தமிழ்மொழியில்
தடம் பதித்து
பெரியவரும் சிறியவரும்
கற்றவரும் அற்றவரும்
எளிதில் உனைப் புரிய
எழுத்துக்களை வடித்தாய்.
கத்தோலிக்கம் –
அது உன் மூச்சு
உயிர் நிலையான பேச்சு
மெய்த்துடிப்பான வீச்சு
அதுவே உனது அடையாளம்.

திருமறையின் கருத்துநிலை
உனது வெளிப்பாடு
அது கொள்ளும்
தராசின் சார்பு நிலைகள்
உன் எதிரொலிகள்.
ஒரு வகையில்
காலத்தின் குழந்தை நீ!
உன் வரலாற்றின்
ஏணிப்படிகளில்
நீ தாண்டியவை –
இருப்பிற்கான காலம்
மறுமலர்ச்சிக் காலம்
நாம் உண்டு
நம் வாழ்வுண்டு
என்ற இடைக் காலம்
திருச்சங்க முழக்கத்தின்
எழுச்சிக்காலம்
இப்போதோ

மனித உரிமைகட்காய்
மனிதத்துக்காய்
குரல் எழுப்பும் காலம்!

இனி வரும் காலத்தில் –
கணணிப் புரட்சியில்
இணைவலைப் பாய்ச்சலில்
மின்அஞ்சல் வேகத்தில்
பின் நவீனத்துவத்தில்
உலக மயமாக்கலில் –
புதிய சவால்கள்
புதிய கேள்விகள்
புதிய சிக்கல்கள்
புதிய சிந்தனைகள்
இவற்றுக்கு
துணிவுடன் முன்னின்று
முகம் கொடுப்பது
உனது கடன்.
வாழ்வுடன் தொடர்புண்ட
புரட்சிக் கருத்துக்கள்
பூகோளம் தழுவிய வடிவங்கள்
வதிவிடச் சூழல்
தகவமைந்த இலக்கியங்கள்,
இவை
உன்னகத்தே
ஊற்றெடுத்து
உதயமாகில்
வாழ்வாங்கு வாழ்வாய்
இளமையுடன் வாழ்வாய்

இப்பணியில்
நீ வளர
தளத் திருச்சபை
அதனால் மிளிர
நெஞ்சார்ந்து
கரம் கூப்பி
வாழ்த்துகின்றேன்.

*நீ. மரிய சேவியர் அடிகள்*
திருமறைக்கலாமன்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சக ஆசிரியப் பணியில் சில வருடங்கள்

அருட்திரு அன்ரன் மத்தாயஸ்

மன்னார் உயிலங்குளம் பங்கிலே பணியாற்றிக் கொண்டிருந்த காலம் அது. மன்னாரும் யாழ் மறை மாவட்டத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்கள் நானாட்டான் கட்டைக்காட்டுக்கு குரு திருநிலைப்படுத்தலுக்கு வந்திருந்தார். அன்று யூலை 19ம் நாள் 1979. வழி பாடு முடிந்த பின் ஆயர் எனது பணிமாற்றம் பற்றி எனக்குக் கூறினார். அந்த வயதிலேயே மூன்று 'சுமைகள்' அச்சக முகாமையாளர், பாதுகாவலனின் ஆசிரியர், மாட்டீனார் குருமட அதிபர். எத்தனையோ காரணங்களைக் கூறி இப்பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்க முயற்சித்தேன். "எனக்குத் தமிழ் எழுதத் தெரியாது" என்றுகூடக் கூறியும் சரிவரவில்லை. அவர் ஆயர் தியோகுப்பிள்ளை! எனவே, இப் பணிகளை ஏற்க நிர்ப்பந்திக்கப்பட்டேன்.

ஓகஸ்ட் 29ம் நாள் நடுக்கத்தோடு யாழ் வந்தடைந்து, குருமடத்தில் தங்கினேன். இந்த மூன்று பொறுப்புக்களையும் சிறப்பாகச் செய்து கொண்டிருந்தவர் அருள்திரு G. E. மேரி ஜோசப் அவர்கள். புனித மாட்டீனார் குருமடத்தில் எனது அதிபராகவும் அவர் இருந்தவர். கடின உழைப்பிற்கும், நேர்மையான செயற்பாடுகளுக்கும் முன்மாதிரியானவர். அவர் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியைத் தொடர்வதானால்......? அத்துடன் அவர் மேற்படிப்பிற்காக உரோமை நகருக்குச் செல்ல ஆயத்தமாயிருந்தார்.

அச்சகத்தினுள் நுழைந்தேன். நூறு ஆண்டுகளைக் கண்ட நிறுவனத்தை இயக்குவது – அதன் பாரம்பரியங்கள்.... நற்செய்திப் பணியைத் தொடருவது எங்கனம்? இத் தொழிலில் எவ்விதமான அனுபவமும் எனக்கிருக்கவில்லை. அத்தோடு பொருளாதாரப் பிரச்சினையும் நிறைய இருந்தது. யாழ்ப்பாணத்தை விட்டுச் செல்லுமுன் அருள்திரு மேரியோசப் எனக்கு ஓர் ஆலோசனை தந்தார்: வெளியுதவி பெற்றால் மட்டுமே அச்சக – பாதுகாவலன் பணியைத் தொடரக் கூடியதாயிருக்கும்.

எத்தனையோ இடர்கள் மத்தியில் பணிகளை ஆரம்பித்தேன். திருவாளர்கள் நீக்கிலஸ், ஜேம்ஸ், கிறிஸ்பின், இம்மானுவேல் போன்றோர் எனக்கு உதவியாக இருந்தனர். வாராவாரம் பாதுகாவலன் பிரசுரிக்க அயல் அச்சகத்திடமிருந்து அச்சுத்தாள் (News print paper) கடனாக வாங்கிய காலமது.

அச்சகப் பணிகளை முன்னேற்ற வழிகளைத் தேடினேன். சில நண்பர்களின் உதவியோடு கொழும்பில் இயங்கும் சில அச்சகங்களைப் பார்வையிட்டது மட்டுமல்ல, அவர்களின் நிர்வாகத்தையும் படித்தேன். எமது அச்சகத்தின் தேவைகளுக்கேற்ப, சில பல மாற்றங்களைப் புகுத்த முற்பட்டேன். அத்தோடு அரச திணைக்கள கணக்காளரின் உதவியோடு எமது கணக்கு வைக்கும் முறைகளையும் முன்னேற்ற முயற்சித்தேன்.

எமது பொருளாதார, சிக்கலைப் போக்க, உரோமை நற்செய்தி அறிவிக்கும் பேராயத்தின் உதவியை அவசரமாக நாடினோம். எமது நாட்டில் மறை அறிவிப்புப் பணிகளுக்குப் பொறுப்பாயிருந்த அருள்திரு (இப்போது ஆயர்) கிங்ஸ்லி சுவாம் பிள்ளையின் உதவியுடன், உரோமையில் அப்பேராயத்தின் செயலராகவிருந்த பேராயர் லூர்துசாமியின் உதவியோடு, வெகுவிரைவில் பண உதவித் தொகை கிடைத்தது. அதைக் கடன் கட்டுவதற்குப் பயன்படுத்துவதா, அன்றேல் அச்சகத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தி, பின்னர் உழைத்துக் கடன் கட்டுவதா என்ற கருத்து வேறுபாடு ஆயருடன் வந்தது. இறுதியில் அச்சக வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு, "மொனோரைப்" (Monotype) இயந்திரம் ஒன்றினைக் கொள்வனவு செய்து 1980ம் ஆண்டு மாசிமாதம் 2ஆம் திகதி ஆயர் தீயோகுப்பிள்ளையினால் அது ஆசீர்வதிக்கப்பட்டது. எமது இந்த முயற்சி அச்சக வளர்ச்சியின் முதற்கட்டமாக அமைந்தது. இந்நிலையில் அச்சக தொழில் முன்னேற்ற முயற்சிகளை முன்னெடுக்க எமக்குத் துணையாக இருக்க ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர் அ. யோண்பிள்ளை அவர்களை எம்மோடு இணைத்துக்கொண்டது ஒரு பெரிய வரப் பிரசாதமாக அமைந்தது. அத்துடன் எழுத்துப் பணியில் எமக்குக் கைகொடுக்க வந்தவர் காலஞ்சென்ற கவிஞர் யாழ் ஜெயம் அவர்கள். இவர்கள் இருவரும் நான் அதிபர் – ஆசிரியராக இருந்த காலத்தில் மட்டுமல்ல அதன் பின்னும் அச்சகத்தின் வளர்ச்சிக்காக மிகவும் பாடுபட்டவர்கள்.

அச்சகத்தில் இரு பணிகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருந்தன. ஒன்று; அச்சக நிர்வாகம், மற்றையது பாதுகாவலன் பத்திரிகை. அச்சகம் தொழில் ரீதியாக வளர்ந்து, ஊழியரின் நலன்களும் நிறைவடையும்போதுதான் பாதுகாவலன் பத்திரிகையும் வளர வாய்ப்புப் பிறக்கும். எந்தவொரு மதப்பத்திரிகையும் பிற உதவியின்றி பொருளாதார ரீதியில் நிமிர்ந்து நிற்க முடியாது என்பதனை யாவரும் ஏற்றுக்கொள்வர். எனவே அச்சகத்தின் வழியாக வரும் வருவாயின் உதவியே பாதுகாவலன் பத்திரிகையைப் பிரசுரிக்க உதவியாயிருந்தது.

1980 ஓகஸ்ட் மாதத்தில் அகில உலக பத்திரிகையாளர் (UCIP) சம்மேளனத்தின் இலங்கைக் கிளையின் உதவியோடு, பத்திரிகையாளருக்கான முதலாவது பயிற்சிக் கருத்தரங்கை யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்தோம். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பயிற்சியாளர் இதில் பங்குபற்றினர். பிரசித்தி பெற்ற பத்திரிகையாளர் மேவின் டி சில்வாவின் வழி நடத்தலின் கீழ் நடந்த இப்பயிற்சியில் பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி, திரு. சிவகுருநாதன் போன்றவர்களும் இன்னும் பலரும் கருத்துரைகள் வழங்கினர்.

எமது நாட்டின் அரசியற் பிரச்சனைகளும் வலுவடைந்த காலமது. அரசின் பலவிதமான போக்குகளும், காளான்களைப் போன்று முளைத்த இயக்கங்களும், ஆயதங்களின் பயன்பாடும் எமது வாழ்வுக்குப் புதியனவாக இருந்தன. பல்வேறு விதமான சிக்கல்களை எமது சமுதாயம் சந்தித்தது. அதற்கு அச்சகமும், பாதுகாவலனும் விதிவிலக்காக இருக்கவில்லை. எமது சிந்தனைகளையும், ஆசிரியர் தலையங்கங்களையும் எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள் என்று கூறுவதற்குமில்லை. எச்சரிக்கைக் கடிதங்களும் எம்மைத் தேடிவந்தன. எனினும், நல்லனவற்றைப் பாராட்டி, குறைகளைச் சாடியும் தொடர்ந்து எழுத முற்பட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலப்பகுதியிலேயே யாழ் நூலகம் எரிக்கப்பட்டது. 1983ஆம் ஆண்டுக் கலவரம்; ஜனாதிபதித் தேர்தலுக்குப் பதிலாக சர்வஜன வாக் கெடுப்பு (198..) இன்னும் எத்தனையோ நிகழ்வுகள் எமது பணிக்கு சவால்களாக மாறின. புதிய சூழல் களும், நிகழ்வுகளும் பல சந்தர்ப்பங்களில் புரியாப் புதிர்களாக இருந்தன. சில வேளைகளில் பாதை தெரியாது தத்தளித்தோம். வேறு சந்தர்ப்பங்களில் துணிவோடு எமது கருத்துக்களை எடுத்துக் கூறி னோம். உதாரணம்: ஜனாதிபதித் தேர்தலுக்குப் பதி லாக சர்வஜன வாக்கெடுப்பை, நடத்துவது பிழை யெனச் சுட்டிக்காட்டி, அதற்கு எதிராக வாக்குப் போடவும் ஊக்குவித்தோம்; இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் சில ஆணைக்குழுக்களாவது தமிழ் – சிங்கள மொழிவாரிக் குழுக்களாகப் பிரிந்து செயற்பட வேண்டுமென்று திட்டவட்டமாகப் பரிந்துரைத்தோம்.

எமது அச்சகத்தை முன்னேற்றவும், அதன் வழியாக எமது நற்செய்திப் பணியை முன்னெடுத்துச் செல்லவும் நீண்டகாலத்திட்டம் ஒன்றினை வகுத்து ஜேர்மன் நாட்டின் "மிஸ்ஸியோ" (Missio) நிறுவனத் தின் உதவியை நாடினோம். நீண்டகாலமாகப் பயன் படுத்தும் இயந்திரங்களுக்குப் பதிலாக வேறு இயந் திரங்களைக் கொள்வனவு செய்தல், ஏனைய இயந் திரங்களைத் திருத்துதல், மின்சார உபகரணங்களைச் சீர்செய்தல், பணிகளை விரிவுபடுத்தி, இளைஞர் யுவதிகளுக்கு வேலை பழக்குதல் போன்றவை அதில் அடங்கும். மிஸ்ஸியோ நிறுவனமும் எம்மிடம் பல வேறு விளக்கங்களைக் கேட்டறிந்தபின், எமக்கு உதவிசெய்ய முன்வந்தது ஒரு பெரிய ஆசீர்வாதமாக அமைந்தது.

எமது திட்டத்தின்படி செயற்பட்டு, அச்சகம் வளர்ச்சியுற்றது. முதல் முறையாக வடபகுதிக்கு "ஓவ்செற்" (Offset) அச்சு இயந்திரம் வருவிக்கப்பட் டதே எமது நிறுவனத்துக்கே. அத்துடன் இலங்கை Apparentice Bord உடன் இணைந்து ஒவ்வொரு வருடமும் சில இளைஞர், யுவதிகளை அச்சகத்தின் பல்வேறு வேலைகளிற் பயிற்சி கொடுத்து, அதன்பின் எமது நிறுவனத்திலேயே வேலைகொடுத்ததன் பயனாக இளைஞர் – யுவதிகள் பலரும் வேலை செய்யும் நிறு வனமாக எமது அச்சகம் மாறியது.

இவ்விதமான முன்னேற்றப் பணிகளை மேற் கொண்டபோதிலும், அரசியற் சிக்கல்களின் காரண மாக பல்வேறு இடர்களையும் நாம் சந்திக்க நேர்ந் தது. சீரில்லாத மின்சார விநியோகம், பொருட்களைக் கொண்டுவருவதில் தடங்கல்கள், அச்சிட்டவற்றை அனுப்புவதில் சிக்கல்கள், இத் தடைகளால் கிளி நொச்சி, முல்லைத்தீவு, மன்னார்ப் பகுதிகளிலிருந்து அச்சகத்திற்கு வேலை கிடைக்காமை போன்றவை எமது முன்னேற்றத்திற்குச் சவால்களாக அமைந்தன.

தமிழ் மக்களின் பிரச்சனைகளை வெளியுலகிற் குக் காட்டவேண்டும் என்ற நோக்கோடு "சற்றடே றிவியூ" (Saturday Review) என்ற பத்திரிகையைச் சிலர் ஆரம்பித்தபோது, அதை அச்சிடும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டது சிலருக்கு வியப்பாக இருந் தது. சில கஷ்டங்களையும் நாம் எதிர்நோக்கினோம். அப்பத்திரிகையின் எதிரிகளால் அச்சிடுவோர் என்ற ரீதியில் எமக்கு எதிராகவும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டபோது, பத்திரிகையின் நிர்வாகிகளில் ஒருவரான (காலஞ்சென்ற) சட்டத்தரணி கந்தசாமி அவர்களே எமது சார்பாக ஆவன செய்தார். அப் பத்திரிகையின் ஆசிரியரான (காலஞ்சென்ற) திரு. காமினி நவரட்ண அவர்கள் எம்முடன் தொடர்பு வைத்திருந்தது எமக்கும் என்றும் உதவியாக அமைந் தது. அத்துடன் இயக்கங்களின் செயற்பாடுகள் அதிகரித்தமையும், இராணுவத்தின் கெடுபிடிகளும் பல்வேறு சிக்கல்களைக் கொணர்ந்தன.

1984ஆம் ஆண்டில் நாம் அச்சிட்டுக் கொண்டிருந்த ஒரு நூலின் காரணமாக, இராணுவத் திடமிருந்து எமக்குச் சிக்கல் வரலாம் என நினைத்து, Saturday Review ஆசிரியரும் நானும் எம் ஆயரு டன் கலந்துரையாடிக் கொண்டிருந்த சமயம், பெருந் தொகையான இராணுவத்தினர் அச்சகத்தைச் சூழ்ந்து கொண்டனர். பின் அங்கு பணியாற்றிய அனைவரை யும் அழைத்துச் சென்றனர். அவர்களோடு ஆயரும், திரு. நவரட்ணவும் நானும் உரையாட முற்பட்ட போது, சிங்களவர் ஒருவருக்கு அங்கு என்ன வேலை என்ற பாணியில் பேசிய இராணுவத்தினர், திரு நவரட்ணவையும் ஏனைய ஊழியருடன் அழைத்துச் சென்றது எமக்குத் துணையாக மாறியது.

இராணுவ நிலையத்திற்கு அழைத்துச் செல்லப் பட்ட எம் ஊழியருடன் திரு. நவரட்ணவைச் சந்தித்த இராணுவ அதிகாரி, உண்மையை அறிந்ததும், எல் லோரையும் அன்று மாலையே விடுவித்தார். அழைத் துச் செல்லப்பட்ட நேரத்திற்கும், விடுதலை செய்யப் பட்ட நேரத்துக்குமிடையிருந்த இரண்டு மணித்தியா லங்கள் மிகவும் நீண்ட காலமாக இருந்தது மட்டு மல்ல, அச்சக அதிபர் என்ற ரீதியில் ஒன்றும் செய்ய முடியாது ஒரு பாரிய வெறுமையை அனுபவித்த நேரமாயிருந்தது. அத்துடன் ஓடோடி வந்த ஊழியரின் குடும்பத்தினருக்கு என்ன பதில்கொடுப்பது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாது திகைத்த வேளையது. என்னைச் சந்திக்க இராணுவ அதிகாரி விரும்பியதால் அடுத்தநாள் திரு. நவரட்ணவுடன் சென்று நிலமையைச் சமாளித்தோம்.

அச்சக வேலை என்னவென்று தெரியாது உட் பிரவேசித்த நான், படிப்படியாக வேலைகளைப் பழகிக்கொண்டது. மட்டுமல்ல, புதிய நிர்வாக முறை களையும் பலரிடமிருந்து கற்று, வேலைகளை இலகு வாக்கிக்கொள்ள முற்பட்டேன். 1983 வரை புனித மாட்டீனார் குருமட அதிபர் பணியோடு அச்சகப் பணியைச் செய்த நான், அதன்பின் 1986 வரை யாழ் பல்கலைக்கழக கற்பித்தல் - மாணவர் ஆன்மீகப் பணிகளோடு இதனை இணைக்கவேண்டி யிருந்தது. எனினும் எனது கற்பித்தற் பணி பாதுகாவ லனின் ஆசிரியர் பணியை சிறிது இலகுவாக்கியதை உணர்ந்தேன். இவை எல்லாவற்றிலும் மேலாக அச்சகத்தில் பணியாற்றிய அனைத்து ஊழியரினதும் அன்பும் ஒத்துழைப்பும் படிப்படியாக வளர்ந்து, எமது அச்சகப் பணிக்கு உறுதுணையாக அமைந்தது. காலப்போக்கில் இளைஞரும், யுவதிகளும் அச்சகத்தில் பணிபுரிய வந்தபோது நல்லுறவுகள் மேலும் வளர்ச்சி யடைந்தன. ஊழியரின் நன்மை தீமைகளில் எல் லோரும் பங்கு பற்றினோம். வெவ்வேறு நிகழ்வு களைக் கொண்டாட்டங்களாக மாற்றினோம். வருடா வருடம் சுற்றுலாவுக்குச் சென்றதும் (மடுவுக்கும் ஒரு முறை சென்றோம்) எம்மத்தியில் நல்லுறவுகளையும், புரிந்துணர்வு, ஒத்துழைப்பையும் வளர்த்து எமது பணிகளும் வேலைகளும் முன்னேற பெரிதும் பயன் பட்டது. அத்துடன் அச்சக வளர்ச்சியால் அவர்களது வாழ்வும் வளம்பெறும் என்ற நம்பிக்கையும் பிறந்தது. வடபகுதியிலே மிகவும் சிறந்த அச்சகமாக புனித வளனார் அச்சகம் விளங்கிற்று என்று துணிவோடு நாம் கூறலாம். சில சந்தர்ப்பங்களில் கொழும்பிலுள்ள அரச அச்சகம் (Government Press) எம்மிடமிருந்து சில பொருட்களைக் கடனாக வாங்கியுள்ளது. அந்தளவிற்கு எமது அச்சகம் சிறப்போடு இயங்கிய காலமுண்டு.

அச்சக - ஆசிரியப் பணியின் வழியாக நானும் நிறைய அனுபவங்களைப் பெற்றேன். பலரை வெவ்வேறு நிலையிலுள்ளோர், வயதினர், மதத்தின ரைச் சந்திக்கவும் தொடர்புகொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தது. எழுத்துவேலை, நிர்வாகம், பொருளாதாரம், தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைய அச்சகம் வழி சமைத்தது. அத்துடன் முதல் முறையாக யாழ்ப்பாணத்திலிருந்து நான் அகில உலக கத்தோலிக்க பத்திரிகையாளர் சம்மேளனத்தின் (UCIP) உலக மாநாட்டுக்கு 1983ல் அழைக்கப் பட்டேன். அயர்லாந்தின் தலைநகராகிய டப்ளினில் நடைபெற்ற இந்த மகாநாட்டில் பங்குபற்றியது பல்வேறுபட்ட அனுபவங்களைப் பெறவும் வாய்ப்பாக அமைந்தது. பலரைச் சந்திக்கவும் வசதியாக இருந் தது. இச்சந்திப்புகள் எமது அச்சகத்திற்கு நன்மை பயப்பவையாகவும் அமைந்தன. தொடர்ந்து வந்த பாதுகாவலன் ஆசிரியர்களும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இம்மகாநாட்டிற்கு இப்போது அழைக்கப்படுகின்றனர்.

பாதுகாவலனில் நான் எழுதிய ஆசிரிய தலை யங்கங்களும் (எம் கருத்து) கட்டுரைகளும் சிலருக்கு ஏற்றுக்கொள்ள முடியாதிருந்திருக்கிறது. இதனால் முரண்பாடுகள் எழுந்துள்ளன. பத்திரிகையிலேயே கருத்து முரண்பாடுகளுக்கும் கருத்து மோதல்களுக்கும் நான் இடம் கொடுத்ததே சிலரால் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாக அமைந்தது.

## நிறைவுரை

இன்று எனது அச்சக ஆசிரியர் பணியைப் பின்நோக்கிப் பார்க்கும் போது அங்கு பணி செய்த காலம் (செப்.1979 - ஒக்ரோபர் 1986; யூன் 1996 ஒக்ரோபர் 1997) சவால்கள் நிறைந்த காலமானாலும் கூட, மகிழ்ச்சியான காலமாகவே நாம் பார்க்கிறேன் பலவற்றைக் கற்றுள்ளேன்; பல்வேறுபட்ட அனுப வங்கள் கிடைத்துள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாகப் பலரின் உதவியும் வழிநடத்தலும் கிடைத்துள்ளன. இவர்களில் அச்சகத்தில் என்னுடன் பணியாற்றியோர் முதலிடத்தைப் பெறுகின்றனர்.

**நல்ல நண்பர்களுக்கு அடுத்தபடியாக நீ ஈட்டிய பொருள் நல்ல புத்தகங்களாயிருக்க வேண்டும்.**

- கோல்டன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காவலன்" நீ வாழி பல்லாண்டு பல கோடி

வீறுநடை போட்டு விரைந்தே நடந்து வந்து
நூறுடன் இருபத்தைந்து அகவை காணும்
பேறு பெற்றாய் "பாதுகாவலனே" உனை வாழ்த்தும்
பேறு பெற்றேன் யானும் வாழி வாழி!
இலைமறை காய்போல எங்கோ இருந்தவளை
அறிமுகம் செய்து வைத்தே உன் இதழில்
நிலையான கவியாக்கி நீங்கா இடம் தந்தாய்
நிலைபெற்றே நீ என்றும் வாழி வாழி!
'எம் கருத்து' எனும் தலைப்பில் எழுதுகின்ற எழுதுகோலாய்
நம் கருத்தைக் தொட்டு நிற்கும் ஆசிரியர்
அவரோடு பணிபுரியும் குருக்கள் பணியாளர்
ஆக்கம் தருபவரும் வாழியவே!
ஆசிகளை உனக்கு அள்ளியே வழங்கிவரும்
ஆயரும் ப்ல்லாண்டு வாழியவே!
காவலன் உன்னைக் கையிலே ஏந்தி நிற்கும்
நேயரும் பயன்பெற்றே வாழியவே!
புனிதரின் கதைகளால் மனிதரின் மனங்கள் மாற
களம் அமைத்துக் கொடுக்கின்றாய் வாழி வாழி!
மனிதரின் உரிமைகள் நீதி சமாதானம்
இவைக்காயும் உழைக்கின்றாய் வாழி வாழி!
'விவிலிய ஏடுகளைப் புரட்டுவோம்' என அழைத்து
புரட்டாதவர் கையைப் புரட்ட வைத்தாய்
சிந்திக்க ஒரு கதை சிரிக்கவைத்த 'கிசுகிசு'
சந்திக்க வைத்தாய் நீ வாழி வாழி!
உள்நாட்டிலும் மட்டுமல்ல வெளிநாட்டிலும் செய்தி
ஊடகமாய் வளர்ந்துவிட்ட காவலனே!
நம் நாட்டின் பிரச்சனைகள் நீங்கி நாமெல்லாம்
நலம் காண உழைத்திடுவாய் வாழி வாழி!
இலங்கையில் வெளியாகும் முதல் தமிழ்க் கத்தோலிக்க
ஏடெனும் பெருமைதனைச் சூடிக் கொண்டாய்!
கலங்கிடும் இலங்கை மக்கள் கவலைகள் தொலைந்தே போக
தொடர்ந்திடும் உந்தன் சேவை துணை செய்ய வாழ்த்துகின்றேன்.

*நவாலியூர் நாயகி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநிலையினருடைய பார்வையில் பாதுகாவலின் பணியும் பயன்பாடும்

A. S. அகஸ்ரின்

வெளிச்சமும் இருளுமாய், கோடைகாலமும் குளிர் காலமுமாய் மாறி மாறி காலம் ஓடும் கலாச் சாரத்தின் சுழற்சிக்கு நிகராய், மானிட கூட்டம் அறிவையும், அற்புதங்களையும், படைத்தெழுப்பிக் கொண்டிருக்கும் இந்த கணனி உலகத்தின் முன்னால் கடந்த ஐந்து கால் நூற்றாண்டுகளாக, 'சிறு தீபம்' போல் நின்று இறை விழுமியங்களை உலகுக்கு வெளிச்சம் காட்டிக் கொண்டிருக்கும் 'பாதுகாவல னின்' பணி கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய தாகும். குறிப்பாக சாம்பல் படிந்த விளிம்புகளோடு வாழும் பொதுநிலையினருக்கு சிறிய விசுவாசத்தை யும், கிறிஸ்தவ விழுமியங்களையும், திருச்சபையின் கற்பித்தல்களையும் ஊட்டி, கிறிஸ்தவ உலகத்தில் நடப்பவற்றை படம் பிடித்துக் காட்டும் இப் பத்திரிகை யின் பணி சிறப்பானதும் போற்றத்தக்கதாகும். அந்த வகையில் திருச்சபையின் நற்செய்திப் பரம்பலின் வடிகாலாய் நின்று இப்பத்திரிகையின் பொது நிலை விசுவாசிகளுக்கு ஆற்றிய பன்முகம் சார்ந்த பணிகள் பற்றியும், பயன்பாடுகள் பற்றியும், உலக அரங்கின் தொடர்பு சாதனங்களின் ஒப்பீட்டு நோக்கில், பாது காவலனிடமிருந்து பொது நிலை விசுவாசிகளின் எதிர்பார்ப்புக்கள் பற்றியும் ஆய்வு செய்யும் எனது ஓர் சிறு முயற்சியே இது.

## பொதுநிலையினர்

கத்தோலிக்க திருச்சபையின் முழுநிலை உறுப் பினர்களாக இருந்தும் பல நூற்றாண்டுகளாக அதனை மறந்தவர்களாக மக்கள் வாழ்ந்து கொண்டுவந்திருக் கின்றனர். இப்போதும் அதே நிலை தான் எனின் மிகையாகாது.

திருச்சபையில் திருநிலையினர், **பொதுநிலை யினர்** என்ற இரு நிலையினரும் திருச்சபையின் ஒரே சமத்துவமான உறுப்பினர்கள் என்ற கருத்து வலு விழந்துவிட்டது. பொது நிலையினர் ஒதுக்கப்பட்டவர் களாக உணர்கின்றனர் அல்லது தாம் புறம்பான வர்கள் என்று கருதி ஒதுங்கிக் கொள்கின்றனர்.

திருச்சபையில் இவர்கள் யார்? இவர்களின் பங்கு என்ன? உரிமைகள் என்ன? என்பன இவர் களுக்கு உணர்த்தப்பட வேண்டும். அவர்கள் தாம் இழந்த நிலையை மீளவும் கண்டடைய வேண்டும். இது ஒரு புதிய கருத்து அல்ல. காலாகாலமாக இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து வலியுறுத்தப்பட்டபோதும் 2ம் வத்திக்கான சங்கமே இதனை மையப்படுத்தி ஒரு கருத்து நிறைந்த ஏடு ஒன்றினைத் தயாரித்து அதனைச் செயற்படுத் தவும் ஆணை விடுத்தது. எவ்வளவோ ஆயத்தத்துட னும் கடும் உழைப்புடனும் ஆக்கப்பட்ட இந்த ஏடு அச்சுருவம் பெற்று வெளிவந்தது. 16 ஏடுகளைக் கொண்ட ஒரு நூல் எல்லா மக்களையும் சென்றடை யும் என எதிர்பார்க்க முடியாது. எனவே அதன் செய்தியை கருத்தரங்குகள் மூலம் பரப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மீண்டும் அதே நிலை. பெற்றுக்கொண்ட கருத்துக்களும் மீள் வலியுறுத்தலின் மையால் எவ்வித தாக்கத்தையோ மாற்றத்தையோ கொண்டு வரவில்லை. எனவே இது மக்களை சென்ற டையக்கூடிய சகல உத்திகளையும் உபயோகிப் பதில் கிறிஸ்தவ பத்திரிகைத்துறை பெரும் பங்காற்ற வேண்டும்.

## சமூகத் தொடர்பு சாதனங்கள் - பத்திரிகைத் துறை

சமூகத்தொடர்பு சாதனங்கள் என்று தற்காலத் தில் பரவலாகப் பேசப்பட்டு வரும் ஊடகங்கள் சமூக வளர்ச்சிக்கும், மானிட முன்னேற்றத்திற்கும் இன்றி யமையாதனவாக அமைந்திருப்பது கண்கூடு.

தொழில் நுட்பங்கள் கடுகதியில் வளர்ந்து தொடர்பு சாதனங்களாகிய பத்திரிகை, வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, இணையம் என்பவற் றையும் வளர்த்து சமூகத்திலும் பாரிய தாக்கங்களை யும் ஏற்படுத்தி வருகின்றன. பொருளாதாரம், கலை, கலாச்சாரம், பண்பாடு என்பவற்றில் மட்டுமன்றி சமயம் சார்ந்தவற்றிலும் இவற்றின் ஆதிக்கம் சொல்லுந்தரமன்று.

குறிப்பிட்ட இவகை தொடர்புசாதனங்களிலும் பத்திரிகைத் துறைக்கு ஒரு தனி இடம் உண்டு. அதன் பணி சிறப்பானது. சகல தரத்திலுள்ள மக்க ளையும் இலகுவாகவும், மலிவாகவும் சென்றடைவ துடன் உடன் இருந்து செய்தியைச் சொல்லிக் கொண்டிருக்கும் ஆற்றலையும் கொண்டுள்ளது. பதத்திரிகைத்துறை ஏறத்தாழ மூன்று தசாப்த வரலாறு டையது. இக்காலத்தில் சிறப்பாக கடந்த சில தசாப் தங்களில் சமுதாய, பொருளாதார, தொழில்நுட்ப மாற்றங்களினால் இதுவும் பாரிய வளர்ச்சியை அடைந்துள்ள

நாட்டினதும் சமூகத்தினதும் தேவைகளுக் கேற்ப பல்வேறு விதமாக பொதுவாகவும் சிறப்பாகவும் பத்திரிகைகள் அவற்றின் பணியைத் தொடர்கின்றன. தினசரிகள், வார ஏடுகள், சஞ்சிகைகள் எனப் பல பன்மொழிகளும் வெளிவருகின்றன. மக்களின் தேவை களை இனங்கண்டு அவற்றை மூலதனமாக வைத்து பொருளாதாரத்தை வளம்படுத்துவோர் அநேகர். ஏனி னும் சில இக்கட்டான பொருளாதார நிலைப்பாட்டி லும் அவற்றின் பணியைத் தொடர்கின்றன அவை போற்றப்பட வேண்டியவை. ஆனால் பல மழைக்கு முளைத்த காளான்கள் போல் தோன்றி விரைவிலோ, நாளடைவிலோ மறைந்து விடுகின்றன. இது மிகவும் விசனத்திற்குரியது.

## பாதுகாவலனும் பொதுநிலையினரும்

பத்திரிகைகள், அவற்றின் நோக்கம் காலப் போக்கில் வளர்ச்சி கண்டு மாற்றமடைந்தது போல் காணப்படினும் ஆரம்ப காலத்திலிருந்தே சகல மக்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்ற அடிப்படை நோக்கை மையமாகக் கொண்டே செயற் படுகின்றன. மக்களின் வாழ்வில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவும் அதன் மூலம் சமுதாயம் வளர்ச்சி காணவும் அரும்பாடுபடுகின்றன. இவைகள் மக்களின் பணியாளர்கள், மக்களின் மகிழ்வான, அமைதியான, நீதியான, சமூகமான வாழ்வை பெற்றுக் கொடுக்க உழைப்பதே அவற்றின் தலையாய பணி. மேலும் மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்தவும் அவர் களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப கருத்துக்களை உரிய முறையில் வழங்கி நல்ல விழுமியங்களைக் கொண்ட பண்பான சமுதாயத்தை உருவாக்கவும் கடமைப்பட்டுள்ளன. சிறப்பான நோக்கங்களுக்காக வெளிவரும் பத்திரிகைகள் சஞ்சிகைகள் என்பனவும் இந்த அடிப்படையிலேயே உழைக்கின்றன. இவை வெற்றி பெற வழிமுறைகள் மாற்றப்படவும் புதுப்புது உத்திகள் மேற்கொள்ளப்படவும் வேண்டியுள்ளது. கருத்து வழங்குவோர் மாத்திரமன்றி கருத்து வழங்கப் படுவோரும் முன்னேற்றங்காண உதவுவதுமே அதன் பாரிய பொறுப்பாகும்.

எழுத்துலகம் மதிக்கப்பட வேண்டும். எழுத் தாளர்கள் போற்றப்பட வேண்டும். பத்திரிகைகள் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட வேண்டும். இவை ஒரு சிலரால் அல்ல. பெருந்தொகையினராகவுள்ள வாசகர் களாலேயே ஏற்படவேண்டும். மக்களுக்கு எது வேண்டும், எது வேண்டாம் என முடிவு செய்வோர் கொடுப்போரல்ல அதனைப் பெறுபவர்களே ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாதுகாவலன்' பத்திரிகையின் வளர்ச்சியை நோக்குங்கால் மக்கள் மத்தியில் அதன் வரவேற்பு எத்தகையதாக இருந்து வந்தது, இருக்கிறது என்பது புலனாகும். இதற்கு ஒரு சிறப்பான தேவை இருந்தது. கத்தோலிக்க மக்கள் தமது விசுவாசத்தில் தளம்பாது உறுதிப்படுத்த கத்தோலிக்க சமயப் பத்திரிகையின் அவசியம் உணரப்பட்டது. இது நிகழ்ந்தது. 18ம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் இப்பத்திரிகையின் முதல் வெளியீடு 1876ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதி சனிக்கிழமை "யாழ்ப்பாணக் கத்தோலிக்க பாது காவலன்" என்ற பெயருடன் வெளிவந்தது.

ஆங்கிலத்தில் கருத்துக்கள் வழங்குவது இலகுவாக இருந்தபோதும் பெருந்திரளான ஆங்கில அறிவற்ற மக்களின் நலன் கருதி தமிழிலும் ஆங்கி லத்திலும் வெளியிட்டதை நோக்கும்போது அதன் கொள்கை உறுதிப்பாடு புலனாகிறது.

படிப்படியாக இரு வாரபிரசுரம், வாராந்தப் பிரசுரம். தமிழிலும் ஆங்கிலத்திலும் கலந்த பிரசுரம், இரு பாஷைகளிலும் தனித்தனியான பிரசுரம் என வளர்ச்சிகண்டு இன்று 125 ஆண்டுகளின் பணி நிறைவை இப்பத்திரிகை கண்டுள்ளது.

## பொதுநிலையினர் வளர்ச்சியில் பாதுகாவலனின் பங்கு

பொதுநிலையினரின் எழுச்சி, வளர்ச்சி என அண்மைக் காலங்களிலும் தீவிர அக்கறை காட்டப் படுவதை அறிகிறோம். 2ம் வத்திக்கான் சங்கத்தினால் முடுக்கி விடப்பட்ட இந்த உணர்வு பத்திரிகைத் துறையினருக்கும் புதிய உற்சாகத்தையும் செயற்பாட் டில் ஒரு திருப்பத்தையும் ஏற்படுத்தும் காரண மாயிருந்தது.

நம் நாட்டுக் கத்தோலிக்க சமய ஏடாகிய பாதுகாவலன் அதன் சேவையில் 100 ஆண்டுகளை அண்மித்த காலங்களில் வத்திக்கான் சங்க நிகழ்வு கள் நடைபெற்றன. சங்கத்தின் நோக்கங்களைப் பிரதி பலிக்கும் பிரசுரமாக பாதுகாவலன் செயற்பட்டமை நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டியதொன்றாகும். இவ்வேளை கடந்த 25 ஆண்டுகளில் அதாவது சங்க ஏடுகளின் வெளியீட்டின் பின்னர் பாதுகாவல னின் செயற்பாடுகள் நுணுகி அவதானிக்கப்பட வேண்டியவை. இதனை சங்க ஏடுகளின் வெளிச் சத்தில் அறிந்து கொள்ளுதல் பயனுடையதாகும்.

சமூகத்தொடர்பு பற்றிய 2ம் வத்திக்கான சங்க ஏட்டில் தரப்பட்டவையாவன:

(1) "போதிக்கும் பணியோடு நெருங்கிய தொடர் புள்ள காரணத்தால் இத்துறையிலுள்ளோர் பொறுப்போடு செயற்பட வேண்டும்."

"இயன்ற வகையில் திருச்சபையின் மேய்ப்புப் பணியில் நேரடியாக உதவ வேண்டும்" (IM.13)

(2) "இவர்கள் தயாரிப்பவற்றை வாசிப்போரில் பெரும்பாலோர் இளைஞர்களேயாவர். நேர்மை யான விதத்தில் களிப்பூட்டி உள்ளங்களை மேம்பாட்டையச் செய்யும் வெளியீடுகள் அவர் களுக்குத் தேவை என்பதை இவர்கள் மறந்து விடக் கூடாது" (IM-11)

(3) "சமூகத்தொடர்புக் கலையைப் பயன்படுத்து வதால் மக்கள் தீமைக்குள்ளாகாமல் உலகுக்கு உப்பாகச் சுவையூட்டி, ஒளியாக ஒளிர்வார்கள்" மனித சமுதாயத்தின் எதிர்காலம் இத்துறையைச் சரியாகப் பயன்படுத்துவதில் அடங்கியுள்ளமை யால் மனித நலனுக்காகவே இதனைக் கையாளுமாறு நல் மனமுள்ள அனைவரையும் குறிப்பாக இத்துறையில் பொறுப்பேற்றிருப் போரையும் இச்சங்கம் அமைக்கிறது. (IM-24)

## பொதுநிலையினரின் எதிர்பார்ப்புகள்

சமுதாயம் வளர்ந்து கொண்டே அல்லது மாறிக்கொண்டே போகிறது. அதுவும் மிக விரைவாக மக்கள் எல்லாவற்றையும் கூர்ந்து அவதானிக்கி றார்கள். நிறைய வாசிக்கிறார்கள். ஒப்பு நோக்கு கிறார்கள். அறிவுப் பசியைத் தீர்க்கத் தவிக்கிறார்கள். இவர்களின் தேடல்களுக்கு விருந்தாக பலதரப்பட்ட வெளியீடுகள் பரவலாகக் கிடைக்கின்றன. இலகுவில் பணம் திரட்ட முயல்வோர் தம் கைவரிசையைக் காட்டி நேர்மையற்ற விதத்தில் களிப்பூட்டி கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளுக்கு மாறாக மக்கள் செல்ல துணை போகிறார்கள். இவற்றைக் கண்டும் காணாதவர்கள் போல் இருக்கலாமா? மக்கள் நலன் கருதி உழைக் கும் பத்திரிகைகளுக்கு இது ஒரு சவால். பணத்திற் காக நன்னெறி விலை போகலாமா? சவால்களை எதிர்த்து அவற்றை மேற்கொள்ளும் சாமர்த்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன், துணிவு என்பவற்றை வளர்த்துச் செயற்பட வேண்டியது பத்திரிகைத் தர்மமாகும்.

செய்திகளும் கருத்துக்களும் உகந்த முறையில் காலத்திற்கேற்ற பாணியில், எதிர்பார்ப்புக்களை ஈடு செய்யும் வகையில் வெளியிடப்படும் பொழுது நல்ல வரவேற்பும் ஆதரிப்பும் கிட்டாமல் இருக்க முடியாது. இதற்கு நல்ல ஆக்க பூர்வமான விமர்சனங்களும், கருத்துக் கணிப்புகளும் தேவை. பத்திரிகையைப் படிப்போரும், பிரசுரிப்போரும் கூட்டாகச் செயற்படும் போது தான் தேவைகள் நிறைவு செய்யப்படும்.

பல்லாயிரம் குடும்பங்கள் கொண்ட தமிழ் பேசும் பிரதேசத்தில் எத்தனை குடும்பங்களுக்கு பாது காவலன் கிடைக்கிறது? என்பது ஒரு பொருத்தமான கேள்வி. கத்தோலிக்க சமய வளர்ச்சியிலும், பாதுகாவ லனின் வளர்ச்சியிலும் அக்கறை கொண்ட எல்லோ ரும் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி இது? விடை என்ன? இதற்குப் பொறுப்பேற்க வேண்டிய வர்கள் வெளியீட்டாளர்களா? அல்லது பெருந்தொகை யாக உள்ளவர்களும் வாசகர்களாக இருக்க வேண்டி யவர்களுமாகிய பொது நிலையினரா?

பலவிதமான கண்டனக் குரல்கள் பல்வேறு மட்டங்களில் ஒலிக்கின்றன. கண்டிப்பதிலுள்ள சுவை காரணமாக விடாது கண்டித்துக் கொண்டே இருப் போர் பலர். கண்டனங்கள் விமர்சனங்களாக ஆக்க பூர்வமான செயற்பாட்டை தூண்டுவனவாக அமைய வேண்டுமே தவிர மற்றப்படி அல்ல. நமது பத்திரிகை நமதே ஆக வேண்டும். பொதுநிலையினர் தூர வைக்கப்படுவதும் தமது ஆற்றாமையின் விளைவாக எட்ட நின்று எட்டி உதைப்பதும் பத்திரிகையின் வளர்ச்சிக்கும் சமூக நலனுக்கும் மிகமிகப் பாதக மானவை. பொது நிலையினரும் தாமாக முன்வந்து தமது உரிமைச் சொத்தாக மதித்து நற்பயன் பெற உழைப்பதே விரும்பத்தக்கது.

## நிறைவாக

"பாதுகாவலனின்" வயதான 125 ஆண்டு களில் இறுதி 25 ஆண்டுகள் மிகவும் வேதனைக் குரியதும் பாதிப்புகள் நிறைந்ததாகவும் இருந்து யாவரும் அறிந்ததே. தொடர்ந்து கொண்டேயிருக்கும் போர், இடம் பெயர்வுகள் என்பவற்றின் தாக்கங்கள் மத்தியிலும் பாதுகாவலன் நிறைவான சேவையாற்ற வேண்டும் என்பதே எல்லோரதும் ஆவல். அறிவு படைத்தோர், அறிவில் குறைந்தோர், கத்தோலிக்கர், பிறசமயத்தர், சிறுவர், இளைஞர், முதியோர் எனப் பலருக்கும் விருந்தாக அமைவதே சாலச் சிறந்தது.

தடைகள், தாக்கங்களினால் பாதுகாவலன் சோர்வுறவில்லை. இளைஞர்களுக்கான மறைக்கல்வி பற்றிய தொடர் கட்டுரைகள், சிறுவர்களுக்கான கவிதைகள், கண்மணிப் பூங்கா என்பன க.பொ.த உயர்தரம், சாதாரணம் மாணவர்களுக்கு உதவியாக சமயபாடமுன் ஆயத்தங்கள், இன்னும் யார் யாருக்கு என்னென்ன தேவையோ அத்தனைக்கும் ஈடுகொடுத்து அதன் எல்லையை விசாலப்படுத்திக் கொண்டே வந் திருக்கிறது. மேலும் புதிய தொழில் நுட்பமும் அதன் வளர்ச்சிக்கு கைகொடுக்க வந்துள்ளது.

ஒரு நிறுவனத்தின் குறை நிறைகளை ஆராய்ந்து கண்டறியவும், வருங்காலம் எவ்வாறு செயற்பட வேண்டும் எனத் திட்டம் தீட்டவுமே யூபிலி விழா எடுக்கப்படுகிறது. இத்தருணத்தில் வத்திக்கான் சங்க ஏட்டில் குறிப்பிடப்பட்டவை மிகவும் பொருத்த மானதாகும்.

இருவேறு கோணங்களிலிருந்து பணியாற்று வதே பத்திரிகைத் துறையின் கடமையாகும்.

கத்தோலிக்க மக்களுக்குத் தேவையான கருத் துக்களைப் பரப்பி அவர்கள் கிறிஸ்தவக் கடமைகளை முறையாகச் செயற்படுத்தி கிறிஸ்துவுக்குச் சான்றாளர் களாகத் தூண்டுவது ஒரு வகைப் பயன்பாடு. கிறிஸ்துவைப் பற்றியும் அவரது நற்செய்தி பற்றியும் பிறருக்கு அறிவித்து கிறிஸ்தவக் கண்ணோட்டமும் கருத்துக்களும் உணர்வுகளும் உலகில் பரவ வழி செய்வது மற்றொன்றாகும். எனவே பாதுகாவலன் அதன் எந்தச் செயற்பாட்டிலும் இந்த அடிப்படைக் கருத்துக்களைத் தாங்கிப் பணிபுரியவும், வருங்காலத் தில் புதிய உணர்வுடனும் புதுப் பரிமாணங்களுடனும் வீரநடை போட வாழ்த்துகின்றனர் பொதுநிலையினர்.

கத்தோலிக்க பிரசுரங்கள் கடவுளின் வார்த்தைகள் மக்களின் இல்லங்களுக்கு ஏந்திச் செல்லும் சக்தி நிறைந்த சாதனங்களாக விளங்குகின்றன.

- 23ஆம் அருளப்பர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 முதல் 1962 வரை பாதுகாவலன் ஆசிரியராக இருந்த
அருள்திரு. வ. தியோகுப்பிள்ளை அவர்களின் பிரியாவிடை நிகழ்வு



அச்சக அதிபர் அருள்திரு ஏ. எஸ். சிங்கராயர் அவர்களின்
பிரியாவிடை நிகழ்வு.
28-01-1963



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைச் சட்டமும் பாதுகாவலனின் பங்களிப்பும்

அருட்கலாநிதி T.J. கிருபாகரன்

## சட்டத்தின் அவசியம்

திருச்சபை இறை வெளிப்பாட்டின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது. உலக அரசுகளுடனும் சமூகங்களுடனும் ஒப்புநோக்குமிடத்து, திருச்சபை இவற்றிலிருந்து அடிப்படையிலேயே வேறுபட்டிருக்கின்றது. இறை பிரசன்னத்தினால் நிறைந்துள்ள ஒரு மறை பொருளே திருச்சபை, அருள்வளங்கள் நிறைந்துள்ள தூய ஆவியின் ஆலயமே திருச்சபை இவ்வுலகில், கிறிஸ்துவின் மீட்புப் பணியின், காணக்கூடிய அடையாளமான அருள் சாதனமே திருச்சபை. விசுவாசம், அன்பு ஆகியவற்றின் அடிப்படையில் உறுப்பினர் களுக்கும் இறைவனுக்கும் இடையேயும், உறுப்பினர்களிடையேயும் தனித்துவமான உறவில் அமைந்த குழுமமே திருச்சபை. அதேவேளை, பலவீனமும் பாவ நாட்டமுமுள்ள மனித குழுமமே திருச்சபை அதேவ்வேளை, பலவீனமும் பாவ நாட்டமுள்ள மனித குழுமமே திருச்சபை, எனவே, திருச்சபையில் ஒழுங்கையும் (Church order) கட்டுப்பாட்டையும் (Church discipline) நிலைநாட்ட வேண்டிய தேவை எழுகிறது. திருச்சபையில் திருத்தந்தை, ஆயர்கள் போன்றவர்களின் தலைமைத்துவ அமைப்புக்கள், அருள்சாதனம் வழங்கும் முறைகள் போன்றவற்றுடன் தொடர்புள்ள சட்டங்கள் திருச்சபையில் ஒழுங்கை (Church order) ஏற்படுத்துகின்றன. உறுதிப்பூசுதல், திருமணம் போன்ற அருட்சாதனங்களுக்கு உரிய வயது, குருப்பட்டம் பெற வேண்டியவர் நிறைவேற்றவேண்டிய தேவைகள் போன்றவற்றுடன் தொடர்புள்ள சட்டங்கள் திருச்சபையில் கட்டுப்பாட்டை (Church discipline) ஏற்படுத்துகின்றன.

## பாதுகாவலனின் சாதனை

திருச்சபைச் சட்டம் பற்றிய விழிப்புணர்வை இறைமக்களின் மனங்களில் பதிக்க யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினால் வெளியிடப்படுகின்ற பாதுகாவலன் பத்திரிகை தனது பங்களிப்பை வழங்கியிருக்கின்றது. புனித வளன் அச்சகம் தனது 125 நீண்ட ஆண்டுகளின் சேவையின் நிறைவில் பெருமையுடன் மகிழ்ந்திருக்கும் இவ் வேளையில், திருச்சபைச் சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பாதுகாவலன் பத்திரிகை வழங்கிய பங்களிப்பு பாராட்டுதற்குரியது.

திருச்சபையில் தற்பொழுது நடைமுறையில் இருக்கின்ற சட்டக்கோவை 1983ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ந் திகதி திருத்தந்தை இரண்டாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளப்பர் சின்னப்பரினால் வெளியிடப்பட்டது. இவ் வெளியீடு தொடர்பான செய்தியைப் பாதுகாவலன் (28.01.1983) சுடச்சுட வெளியிட்டமை குறிப்பிடத்தக் கது. தொடர்ந்து தனது ஒக்டோபர் 1983 வெளியீடு களில் "திருச்சபையின் புதிய சட்டத்தொகுப்பு நூல்" என்ற தலைப்பிட்டு அருள்தந்தை A.J.V.X. சந்திர காந்தன் எழுதிய கட்டுரையை வெளிக்கொணர்ந்தது. பாதுகாவலனின் தற்போதைய ஆசிரியரும், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தின் இன்றைய முகாமை யாளருமான அருள்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை 1988,1989ம் ஆண்டுகளின் பாதுகாவலன் பத்திரிகை யில் எழுதிய "குடும்பம் ஒரு கதம்பம்" என்ற தொடர் கட்டுரையில் திருமணத்துடன் தொடர்புள்ள திருச்சபை யின் சட்டங்கள் வெளியிடப்பட்டன. திருச்சபையின் சட்டக்கோவை, அதன் சில உள்ளடக்கங்கள் பற்றிய விழிப்புணர்வை ஓரளவுக்காவது இறைமக்களின் மனங் களில் ஏற்படுத்த பாதுகாவலன் பத்திரிகை முயன்றிருப் பதை எவரும் மறுப்பதற்கில்லை. திருச்சபைச் சட்டத்தை இறைமக்களுக்கு அறிமுகப்படுத்த இத்தகைய சில ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப் பினும், இவ்விடயம் பற்றிய அறிவும் விழிப்புணர்வும் இன்னும் திருப்திகரமாக இல்லை என்றுதான் குறிப்பிட வேண்டும். இந்த அறிவையும் விழிப்புணர்வையும் இறைமக்கள் பெற்றிருக்க வேண்டியது அவர்களது உரிமையும் கடமையும் ஆகும் என்ற கருத்தில் பாது காவலன் தொடர்ந்தும் அக்கறையாகவும் உறுதியாக வும் இருக்கின்றதென்பது பாராட்டுக்குரிய விடய மாகும். எனவே, இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி திருச்சபைச் சட்டம் பற்றிய சில அடிப்படையான விடயங்கள் இங்கு பகிரப்படுகின்றன.

## பெயரும் ஆரம்பமும்

கத்தோலிக்க திருச்சபையின் சட்டங்களின் தொகுப்பு இலத்தீன் மொழியில் Codex Iuris Canonici என்றும் ஆங்கில மொழியில் பொதுவாக The code of Canon Law என்றும் தமிழ் மொழி யில் பொதுவாக திருச்சபையின் சட்டக்கோவை என் றும் அழைக்கப்படுகிறது. "சட்டம்" எமக்கு நன்கு வழங்கப்பட்ட சொல். அதன் கருத்தும் எமக்கு நன்கு தெரியும். அது ஒழுக்கத்தை அளவிடும் அல்லது நிலைநாட்டும் அளவுகோல் போன்றது. ஒரு செயலைச் செய்ய அல்லது செய்யாமல்விட சட்டம் பணிக்கிறது. அறிவின் அடிப்படையிலும் எழுந்த சட்டங்கள், திருச் சபையின் உறுப்பினர்களின் பொது நன்மை கருதித் தொகுக்கப்பட்டு, சட்டக் கோவையாகத் தரப் பட்டுள்ளது.

திருச்சபையானது விசுவாசிகளின் ஒருபெரிய பரந்தபட்ட குழுமம். முழு உலகிலும் ஏறக்குறைய ஆயிரம் கோடிக்கு மேற்பட்ட விசுவாசிகள் இதில் உறுப்பினர்களாக இருப்பதாக நம்பப்படுகின்றது. இது மிகவும் பழைமை வாய்ந்தது. இந்த யுகத்தின், முத லாம் நூற்றாண்டில், இயேசுவின் காலத்தில், இதன் ஆரம்பம் அமைகிறது. இயேசுவினுடையவும், அவ ரைத் தொடர்ந்து, திருத்தூதர்கள், சீடர்களினுடைய வும் படிப்பினைகளுடன் இது தொடர்புடையதாக உள்ளது. பல நூற்றாண்டுகளின் கால ஓட்டங்களி னூடாக திருச்சபை பல சட்டங்களை உள்வாங்கி உள்ளது.

## விவிலியப் பின்னணியில்

"Canon" என்ற சொல் ஆரம்ப காலத்தில் இருந்தே திருச்சபையின் சட்டங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. பொதுவாக இது நன்கு பயன்படுத்தப்படுகின்ற சொல் அல்ல, "Canon" என்ற சொல் "Kanon" என்ற கிரேக்க சொல்லி லிருந்து பிறக்கின்றது. அதன் அர்த்தம் அடிமட்டம் அல்லது அளவுகோல் என்பதாகும். தச்சன் அல்லது வரைஞன் பயன்படுத்துகின்ற அளவு கோலைக் குறிக்கக் கிரேக்கத்தில் இச்சொல் பயன்படுத்தப்பட் டது. இதனைப் பயன்படுத்தியே பொருட்கள் அளக் கப்பட்டன. கால ஓட்டத்தில் இது ஒழுங்குச் சட்டத் தைக் குறிப்பதாக வடிவெடுத்தது. இதே கருத்தில் இச்சொல்லின் பயன்பாட்டை புதிய ஏற்பாட்டிலும் காணக் கூடியதாக உள்ளது. "இந்தக் கொள்கையைப் பின்பற்றுவோருக்கும் கடவுளின் மக்களாகிய இஸ்ரா யேலருக்கும் அமைதியையும் இரக்கமும் உரித்தாகுக" (கலா.6:16).

ஒவ்வொரு மனித சமுதாயமும் தனக்கு உரிய செயற்பாட்டு வடிவங்களை உருவாக்குகின்றது. அவையே கால ஓட்டத்தில் சட்டங்கள் ஆகின்றன. ஆதித் திருச்சபைகள் ஒழுங்கமைப்புக்கள் இல்லாத அல்லது தாமாகவே உருவாகிய புதுவாழ்வுக் குழுக் களல்ல. அவை ஒழுங்கமைப்பும், வாழ்வின் செயற் பாட்டு வடிவமைப்பும் கொண்டிருந்தன. ஒழுங்காகவும் கிறிஸ்துவின் வழியிலும் வாழ அவை சட்டங்களை ஏற்படுத்தின. இத்தகைய ஆரம்பகாலச் சட்டங்களை உள்ளடக்கியதாக புதிய ஏற்பாட்டு நூல்கள் உள்ளன.

இன்றைய திருச்சபையைச் சட்டங்கள் பல இந்த ஆரம்பகால எழுத்துக்களில் தமது அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர்களைக் கொண்டுள்ளன. கீழே தரப்படுகின்ற சில உதாரணங்கள் ஆதிக் கிறிஸ்தவ திருச்சபைகளில் சட்டங்கள் உருவாகின அல்லது அவை சட்டங் களைப் பெற்றுக் கொண்டன என்ற உண்மைக்குச் சாட்சியம் பகரும்.

திருச்சபையில் சட்டத்தின் தேவைபற்றி திருத் தந்தை 6ம் சின்னப்பர் கூறும்போது, "அனைத்தும் பாங்காகவும் ஒழுங்காகவும் நடைபெற வேண்டும்" என்று புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய வார்த்தையைக் குறிப்பிடுகின்றார் (1கொரி.14:40). ஒவ் வொரு தலத் திருச்சபைக்குள்ளும் நிறுவனத்துவ அதி காரம் இருந்தது (தி.பா.20:17;1கொரி.12:28;எபே.4:11; பிலிப்.1:1). முக்கியமான விடயங்களில் கலந்தாலோசிக் கும் முறைகளைத் திருச்சபை கொண்டிருந்தது. (தி.பா.15; கலா.2) பொறுப்புக்களை ஏற்பவர்கள் சில தகமைகைகளைக் கொண்டிருக்கவேண்டும் (1தீமோ.3; தீத்து 1:7-9). பதவிகளுக்குரிய கடமைகளும் தரப் பட்டுள்ளன (1தீமோ.5). பணி தொடர்பான கடிதங் களில் மறையுரைத்தல், கற்பித்தல் பற்றிய விதிகள் தெளிவாகத் தரப்பட்டுள்ளன (1தீமோ.4; 2தீமோ.4).

குழுமங்களின் அருட்சாதனவாழ்வு வரையறுக் கப்பட்டுள்ளது. கிறிஸ்துவுடன் ஒன்றிப்பதற்கு நீரினால் திருமுழுக்கு அவசியம் (மத்.28:19; யோவா.3:5; தி.பா.2:38; 1பேதுரு.3:20,21). ஆண்டவரின் இரவு ணவு கொண்டாட்டத்தின் ஒழுங்கு தரப்பட்டுள்ளது (1கொரி.11). காட்டும் அதிகாரமும் பாவத்திலிருந்து விடுவிக்கும் அதிகாரமும் அறிவிக்கப்பட்டுள்ளன (மத்.18:18; யோவா.20:23). நோயில்பூசுதல் அருட் சாதன ஒழுங்கு தரப்பட்டுள்ளது (யாக்:5:13-16). பொறுப்பு வழங்கும்போது அல்லது பணிக்கு அனுப்பும் போது தலை மேல் கைகளைப் பதிப்பதுபற்றிக் கூறப் படுகின்றது (1தீமோ.4:14). திருமணம் தொடர்பான ஒழுங்குகள், விவாகரத்தின்மை பற்றியும் கூறப்படுகின் றது(எபே.5:21-23; மத்.5:31; மத்.19:9; லூக்.16:18).

## வத்திக்கான் சங்க ஏடுகளின் பின்னணியில்

திருத்தந்தை 23ம் அருளப்பர் இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூடுவதன் அவசியத்தை முதன் முதலில் வெளியிட்டபொழுது, 1917ம் ஆண்டு வெளி யிடப்பட்டு, நடைமுறையிலிருந்த திருச்சபையின் சட் டக் கோவையும் புதுப்பிக்கப்பட வேண்டியதன் அவ சியத்தையும் வலியுறுத்தினார். உலகம் பல நிலைகளில் மாற்றம் கண்டு வளர்ந்துள்ளது. இத்தகைய மாற்றங் களுக்கும் வளர்ச்சிகளுக்கும் இசைவாக, சட்டக் கோவை புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற எண்ணக் கருவை திருத்தந்தை அப்போது வெளிப்படுத்தினார். இரண்டாம் வத்திக்கான் சங்கம் நிறைவுற்ற பின்னரே இப்புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே திருத்தந்தையின் விருப்பமாக இருந்தது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முதலாவது அமர்வின்பின் திருத்தந்தை 23ம் அருளப்பர் இறந்தார். திருச்சபை யின் தலைமைத்துவத்தைத் தொடர்ந்து ஏற்ற திருத் தந்தை 6ம் சின்னப்பர், திருச்சபையின் வாழ்வில் சட்டக்கோவை நல்லதொரு கருவியாக அமைய வேண்டும் என்று கூறினார். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளைப் பின்னணியாகக் கொண்டு திருச்சபைச் சட்டக்கோவை புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை இவரும் வலியுறுத்தினார்.

புதுப்பித்து அமைக்கப்பட்ட திருச்சபைச் சட்டக் கோவையை திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் 1983ம் ஆண்டு ஜனவரி 25ல் வெளி யிட்டுவைத்த பொழுது, திருச்சபையானது இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் தன்மைகளுக்கேற்ப தன்னைப் புதுப்பித்து நிறைவுபடுத்தும் முயற்சியில் திருச்சபைச் சட்டக்கோவை சிறப்பானதொரு கருவியாக அமையும் என்று கூறினார். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருச்சபைபற்றிய கொள்கைத் திரட்டு திருச்சபை இயல் பற்றி வெளிப்படுத்துவதுடன் திருச்சபைச் சட்டக்கோவை ஒத்திருப்பதாகவும், திருச்சபை இயல் பற்றிய படிப்பினைகள் சட்டமொழியில் திருச்சபைச் சட்டக்கோவையில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாக வும் திருத்தந்தை கூறுகிறார்.

## நம்பிக்கை வெளிப்பாடு

திருச்சபைச் சட்டக்கோவை, அதன் பின்னணி, அதன் உள்ளடக்கங்கள் பற்றிப் பகிர்ந்துகொள்வதற்கு இன்னும் பல விடயங்கள் உண்டு. இக்கட்டுரையில் பகிரப்பட்டவை ஆரம்ப முயற்சிகளின் தொடர்ச்சி எனலாம்.

### துணைநின்

திருவிவிலியம்

*The Code of Canon Law*

*John Paul ii , Sacrae Disciplinae Leges, Apostolic Constitution, 25 January 1983*

*Coriden, J.A. An Introduction to Cannon Law, Paulist Press, New York 1991.*

*Coriden, J.A. Others, Ed., The Code of Cannon Law, Text and Commentary, Paulist Press, New York 1985.*

*Pazhayampallil, T., A Commentary on the New Code of Cannon Law, K.J.C. Publications, Bangalore, 1985.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியில் எங்கும் பொங்கி நிற்கும்

பூமியில் எங்கும் பொங்கி நிற்கும்
புண்ணியப் பூவே! போற்றி! போற்றி!

மாமறை வாழும் மாதவக் கொழுந்தே!
பேர்புகழ் ஏந்தாப் பெரும்பணி நீயே!

திக்குகள் எங்கும் தேடித் திரிந்து
பக்தியை வளர்த்த பெருமையும் உனக்கே!

ஐயம் நீக்கும் அற்புதச் சுடரே!
வையம் போற்றும் வளர்மதி நீயே!

கடமை செய்து கண்ணியம் காத்து
மடமை நீக்கும் மருத்துவம் ஆனாய்

நித்திய வீட்டை நேரிலே காட்டும்
சத்திய வேந்தன்! சாட்சியாய் நின்றாய்

பிறர்நலம் பேணவும் இறைபுகழ் பாடவும்
உறவுகள் பகிரவும் உழைத்தாய் எங்கும்

நற்செய்தி வாக்கு நாடெங்கும் பரப்ப
அர்ப்பணம் செய்த ஆசான் நீயே!

அகதிகள் வாசலில் அடிமைகள் காவலில்
சுகபலம் அறிந்து சேதிகள் கூறும்

அழகுமறைத் தொண்டின் ஆற்றல் நீயே!
உளம்குளிர வைக்கும் உத்தமன் நீயே!

ஆனந்த யூபிலியின் அன்பருளை ஏந்தி
பூவுலகப் பூங்காவில் பூரித்து நிற்கும்

தெய்வீக இதழே! தேவனின் புகழே!
உய்திடும் வழிகளில் நல்லிதய வாழ்த்து.

ஞா. அரியமலர்
மிருசுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய வசனங்களை நித்திய வாழ்வுக்கு எமக்கு ஊட்டும் காவலன்

மோ. தார்சீசியஸ்

ஈழத் திருநாட்டின் ஒரேயொரு தமிழ் கத்தோலிக்க வார ஏடான சத்தியவேத பாதுகாவலன் தனது' வளர்ச்சியின், உயர்ச்சியின், உழைப்பின் 125 வருடாந்த நிறைவினைக் கொண்டாடும் இவ்வேளை யிலே, இதனையிட்டு மகிழாதார், மனதார வாழ்த்தா தார், வாயாரப் போற்றாதோர் எவரும் இல்லை என்றே கூறலாம்.

சத்திய வேதத்தின் நித்தியக் கருத்துக்களை தெள்ளு தமிழிலே, தேன் சிந்தும் தமிழிலே, தித்திக்கும் மொழியிலே அள்ளி அள்ளித்தந்த பத்திரிகை நம் சத்தியவேத பாதுகாவலனாகும். இறைமகன் யேசுவின் மணிமொழிகளை, தன் அணியாகக் கொண்டு மறை அறிவூட்டும் போதகனாக, எம்குறைகளை எமக்களிக் கும் தூதுவனாக மிளிர்ந்து, ஒளிர்ந்து, மலர்ந்து, பொலிந்து விளங்கினான். கடுகு சிறிது காரம்பெரிது என்பதுபோல சிறிய அளவு ஏடாக விளங்கிய போதும் பெரிய, அரிய செய்திகளை எமக்குத்தந்தான்.

வார ஏடாக மலர்ந்து நம் கத்தோலிக்க மக்க ளுக்கு நறுமணம் பரப்பி, இனிய இதய சுகந்தம் பரப்பி நம் கத்தோலிக்க உலகிலே, அனைத்துலகிலே நடைபெறும், நடைபெற்ற செய்திகளைச் சுடச்சுட தந்த பெருமை எம் பாதுகாவலனுக்கே உரியது.

"உலகின் எத்திசைக்கும் சென்று நற்செய்தி யினைப் பரப்புங்கள்'' என்ற இறைமகன் கட்டளைக் கொப்ப பாதுகாவலனும் தன் பணியினை அன்று தொட்டு இன்றுவரை பணிபுரிகின்றான். நிறுவுனரின் நோக்கம் இனிதாக நிறைவுறும் வகையில் மக்கள் மனங்களின் மறை அறிவு பரப்பும் சாதகமாக விளங்கி னான். நம் மக்களிடையே அன்றும், இன்றும் நிலவிய நிலவுகின்ற அச்சங்களை சந்தேகங்களை, இடைவெளி களைத் தன் நடையினாலே நீக்கி அவர்களை வாழச் செய்தான். அக்காலத்தில், வெள்ளி என்று வரும், பாதுகாவலன் என்று வரும் என மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் பத்திரிகையாக விளங்கியது என்றால் மிகையாகாது. சிறிய கூரையின் கீழே அரிய பெரிய சேவைகள் புரிந்தான். அதே போன்று பாரிய சவால் களையும் கண்டும், சந்தித்தும் எத்ரிநீச்சல் போட்டு வெற்றிகண்டான். "நாங்கள் எல்லாவகையிலும் வேத னையுறுகின்றோம். ஆனால் ஒடுங்கிப்போவதில்லை. மனக்கலக்கம் அடைகின்றோம். ஆயினும் இறைவ னால் கைவிடப்படுவதில்லை. இயேசுவின் வாழ்வு எங்கள் உடலில் வெளியாகும்படி போகுமிடமெல்லாம் கிறிஸ்துவின் மரணப்பாடுகளைத் தாங்கிச் செல்கின் றோம்" என்ற புனித சின்னப்பரின் திருவாக்குக்கு ஒப்ப தன் சேவைகளைத் தொடர்ந்தான். துணிந்து செல், நிமிர்ந்து நில் என்பதற்கொப்ப, வாரம் தவறாது தன் வெளியீடுகளை வெளிக்கொணர்ந்தான்.

ஆனால் எமது நாட்டின் இன்றைய தொடரும் போர்க்கால நிலையிலேயும் தன் பொற்காலப் பணி யினை அளிக்கத் தவறவில்லை. தொடர்ந்தான், நடந் தான், பணிகள் புரிந்தான், புரிகின்றான், போர்க்காலச் சூழலின் உச்சக் கட்டத்திலே எண்பதுகளின் கடைப் பகுதியில் இப்பணியகத்தில், பதிப்பகத்தில், இரவுப் பணிபுரிகையில் இந்திய அமைதிகாக்கும் படையினரின் அட்டகாசத்தில் அடக்குமுறையில் சிறைப்பிடிக்கப் பட்டோர், சித்திரைவதைப்படுத்தப்பட்டோர் அநேகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபட்டார், உதைபட்டார் இருந்தும் ஓடி ஒதுங்க வில்லை, தூர விலகவில்லை. பணிக்களம் மீண்டனர். பணிபுரிந்தனர் காவலனுக்கு காவலாக விளங்கி, பத்திரிகையை வெளிக்கொணர்வதில் மூச்சாய், பேச் சாய் உழைத்தனர். என்னே காவனின் சேவை! என்னே காவலனின் மதிப்பு! என்னே காவலனின் உதிப்பு!

பாதுகாவலன் எனும் போது என்மனதிலே நீங்காத இடம் பெறுபவர் பத்திராதிபர் ஞானப்பிர காசம். பாதுகாவலன் என்றால் பத்திராதிபர் ஞானப் பிரகாசம் பத்திராதிபர் ஞானப்பிரகாசம் என்றால் பாது காவலன் என்று கூறும் அளவுக்கு காவலனுக்காக காலமெல்லாம் உழைத்தார். இவன் சிறப்பிற்கும், மதிப்பிற்கும், சேவைக்கும் அவரது பணி போற்றத் தக்கதே. மெலிந்த உருவம், ஆனால் மலிந்த கருத் துக்கள், குனிந்த பார்வை ஆனால் துணிந்த பொரு ளடக்கம் இவைதான் அவரது சேவைக்கு பாராட்டும் தாலாட்டும் பாடின. அத்துடன் அவரது செபவாழ்வும் சேவை வாழ்வும் காவலன் உயர்வுக்கு ஊன்று கோல்கள் ஆகின.

அண்மைக் காலங்களில் இடம் பெற்ற இடப் பெயர்வுகளிலும் கூட காவலன் தன் சேவையினை முற்றாக நிறுத்தாது, கார்முகில் கூடி மழை பொழிந்து முடிய, ஞாயிறு தோன்றி ஒளி காணுவது போல காலப்போக்கைக் கருத்தில் கொண்டு, மக்கள் மன நிலைகளையும் மனதிற் கொண்டு தொடர்கிறான் தன் சேவையை, "துறை இருக்கும் கோணிகள் போகும்" என்பதற்கொப்ப காவலன் பிரசவத்திற்குப் பற்பல பொறுப்பாசிரியர்கள், பொறுப்பாளர்கள், முகாமையா ளர்கள், நடத்துனர்கள் வந்தார்கள். பணிகள் உவந் தார்கள். அவர்களது ஊக்குவிப்புக்களும், ஆக்குவிப் புக்களும் ஆலமரத்தினைதத்தாங்கும் விழுதுகள்போல செழிக்க, நிலைக்க அசையாத ஆதாரங்கள் ஆகின. ஆயர்களின் ஆசிகள், அரவணைப்புக்கள், வழிநடத் தல்கள் காவலனின் வளர்ச்சிக்குச் சான்றுகளாகும்.

காவலனின் சேவையினால் நம்மிடையே தோன் றிய கத்தோலிக்க எழுத்தாளர்கள், கவிஞர்கள், கதாசிரி யர்கள் பலராகும். இவர்களின் தோற்றத்திற்கும், ஏற்றத் திற்கும் காவலன் தான் காரணம் இவர்களது ஆக்க மும் ஊக்கமும் நோக்கமும் காவலன் புகழ் சிறக்க, பறக்கச்செய்தது.

இன்றைய காலகட்டத்திலே இதன் பொறுப் பாசிரியரின் சேவை பாராட்டத்தக்கது. இவர் குரு மாணவனாக இருந்த காலந்தொட்டே காவலனைத் தன் நெஞ்சத்திலே, அறிவு மஞ்சத்திலே கொண்டு இதன் சிறப்புக்குப் பணிபுரிந்தார். குருவாகித் திருவாகி நிறைவாகப் பணியாற்றும் காலத்தில் தான் இலங்கை ஊடகத் துறையினரால் காவலன் கௌரவிக்கப்பட் டான். இது எமது கத்தோலிக்க ஏட்டிற்கு அளிக்கப் பட்ட பெரும் கௌரவமாகும்.

அன்று காவலன் பணியும் சேவையும் உள் நாட்டு மட்டத்திலே இருந்தது. ஆனால் இன்றோ, உள்நாட்டு மட்டத்தையும் தாண்டி வெளிநாடுகள் பலவற்றிற்கும் தன் பணியையும் பங்களிப்பையும் அளிக்கின்றான். இது என் காவலனின் வளர்ச்சியை யும் உயர்ச்சியையும் எடுத்துக்காட்டுகின்றது.

"யாமறிந்த மொழிகளிலே இனிதாவது எங்கும் காணோம்" என்பது ஆன்றோர் வாக்கு. இதற்கொப்ப "யாமறிந்த திருமறை ஏட்டினிலே பாதுகாவலன் போல இனிதான ஏடு எங்கும் காணோம்" என்று துணிந்து புகழ்ந்து வியந்து மகிழ்ந்து கூறும் அளவுக்கு நம் காவலன் வளர்ந்துள்ளான், உயர்ந்துள்ளான்.

சத்திய வசனங்களை, நித்திய வாழ்வுக்கு எமக்கூட்டும் காவலன் பணி வளரட்டும். மனிதனின் மாசுபடிந்த வாழ்க்கையைத் தூய்மையாக்கி அவ னைப் புனிதனாக்கும் காவலன் பணி தொடரட்டும். சோதனை வேளைகளிலும் சாதனை புரிந்த காவலன் சேவை காலமெல்லாம் நிலைக்கட்டும். தடைகள் வந்த போதும் படைகள் குறுக்கிட்டபோதும் தளராது பணி புரிந்த காவலன் பணி என்றும் எங்கும் பரவட்டும்.

> "செய்தித்தாள் மக்களுக்கு செய்திகளை அறிவிக்கிறது... ஆனால்,
> கத்தோலிக்க செய்தித்தாள், செய்திகளைக் கொடுத்து மக்களின் மனதையும்
> பண்படுத்தவேண்டும். உயர்ந்தநோக்கோடு சம்பவங்களைப் பிரித்தறியும்
> மனப்பான்மையைத் தட்டி எழுப்பவேண்டும். மனிதனின் உள்ளுறை
> உண்மைக்கு- வாசகர்களுக்கு அறிவொளி வழங்கி, அவர்களுக்கு நல்வழி
> காட்டி, புனிதப்படுத்தும் உண்மைக்கு-அது பணிபுரியவேண்டும். இப்பணி
> உலகப்பணியல்ல, தெய்வப்பணி-புனிதப்பணியாகும்."
>
> - ஆம் சின்னப்பர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அறிந்த காவலன் ஆசிரியர்கள்

எஸ்.எம். ஜே.

யாழ் மறை மாவட்டத்திற்குள் மட்டுமல்ல இலங்கையில் உள்ள அனைத்து மறை மாவட்டங் களுக்கும் பணியாற்றிய ஒரே ஒரு கத்தோலிக்க வார ஏடு சத்தியவேத பாதுகாவலனேயாகும். சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் மறை மாவட்டங் களில் கத்தோலிக்க வாரஏடுகள் எதுவுமே இருக்க வில்லை. இலங்கை முழுவதற்குமான திருமறை வார இதழாக "The Catholic Messenger" ஆற்றிவரும் அரும்பணிகளைப்போல் சுமார் 125 ஆண்டுகளுக்கு மேலாக பாதுகாவலன் வியத்தகு மறைப்பணிகளை ஆற்றிவருகின்றது என்றால் அது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். குறிப்பாக இன்றைய போர்க் காலச் சூழ்நிலைகளின் மத்தியிலும் இன்னல்கள், இடர்ப்பாடுகளின் தாக்கங்களையும் எதிர்கொண்டு காவலன் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருப்பது மகத்தான சாதனையே.

காவலன் வளர்ந்து வந்தபாதையில் அதன் ஆசிரியர்களாகப் பலர் பணியாற்றி தம் அரும்பணி யால் அதனை வளர்த்தெடுத்து மக்கள் கரங்களில் தவழவிட்டுள்ளனர். பத்திரிகை ஆசிரியரே ஒரு பத்திரிகையின் முதுகெலும்பு. பத்திராதிபரின் ஆளுமை, ஆற்றல், அறிவு, அர்ப்பணிப்பான சேவை என்பன தான் பத்திரிகை வளம்பெறவும், மக்கள் அபிமானம் பெறவும், தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கவும் மூலகாரணமாகும். எனக்குத் தெரிந்த வரையில் 1950ம் ஆண்டுகளிலிருந்து அறிமுகமான காவலன் ஆசிரியர்கள் எண்மர் எனலாம். இவர்களுள் மிக நீண்டகாலம் பணியாற்றியவர் திரு. ஞானப்பிரகாசம் அவர்களே, முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர் காவலன் ஆசிரியராகப் பணியாற்றினார் எனத் தெரியவருகின்றது. யாழ்ப்பாணம் புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்தான் காவலன் பத்திரிகைக் காரியாலயமாக விளங்கியது. அவர் தன்னந்தனியே ஒரு சிறிய அறையில் அமர்ந்திருப்பார். அவரது வீடும் அச்சுக் கூட வீதியில் தான் அமைந்திருந்தது. சில சமயம் அவரை வீட்டிலும் சென்று பார்த்ததுண்டு. துணை ஆசிரியர்கள் எவருமே கிடையாது. ஆயர் இல்லமும் அதே சூழலில் ஒரு சுவருக்குள்தான் இருந்தது. ஆயரின் கடிதங்கள், செய்திகள், சுற்று நிருபங்கள், ஆயர் இல்லம் தொடர்பான செய்திகள், பக்திச் சபைகள் பற்றிய செய்திகளும், தவக்காலம், திரு வருகைக்காலம் பற்றிய கட்டுரைகள், குருக்கள், கன்னியர்களின் கட்டுரைகள் என்பன பிரசுரமாகும். தலைப்பில் "கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" என்ற விருதுவாக்கியம் இருந்தது இன்னும் ஞாபகம்.

மறைமாவட்டக் குருமார், பாடசாலைகள், ஆலய விழாக்கள், மற்றும் முக்கியமான சமாகமங் கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமாச் சாரங்கள் இடம்பெறத் தவறுவதில்லை. கடுமையான செந்தமிழ் நடை, பழம்போக்கான ஆகம விதிகளுக் கடங்கிய கட்டுரைகளையும், கட்டுரைத் தலைப்புக் களையும் காணலாம். அரசியல் சற்றும் கிடையாது.

பெரும்பாலும் அச்சக இயக்குநர் அவர்களின் கண்காணிப்பிலும் ஆயர் இல்லக் கண்காணிப்பிலும் பத்திரிகை இயங்கியது. வருமானத்தை இலக்காகக் கொண்டதாக அல்ல, மறைமாவட்ட ஆயரின் செய்தியை, தகவல்களை, நிகழ்வுகளை தெரியப் படுத்தும் வார சாரம்தான் அன்றைய பாதுகாவலன். சிறப்பு மலர்கள் எதுவும் வெளிவந்ததில்லை. ஆசிரியர் ஞானப்பிரகாசத்தின் ஓய்வை அடுத்து காலஞ்சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண. M. J. மரியாம்பிள்ளை அடிகளார் பாதுகாவலன் தொடர் பகுதி ஆசிரியராகக் பணியாற்றினார் M.J.M என்ற
பெயரில் அவருடைய கட்டுரைகள் அப்போது பிரசுரமாகி வந்தன. அவர்தான் சிறுவருக்கான பகுதியை ஆரம்பித்தவர் எனலாம். இளம் கத்தோலிக்க எழுத்தாளரை ஊக்கப்படுத்தியவராவர் என்று பெருமைப்படலாம். அவரால் ஊக்கப்படுத்தப்பட்ட ஒரு எழுத்தாளன் நான் என்பதை நன்றியோடு நினைவு கூருகின்றேன். வண. M. J. மரியாம்பிள்ளை அடிகளாரின் பின் பாதுகாவலனைப் பொறுப்பேற்று அதன் தொடர்பகுதி ஆசிரியராகச் சிலகாலம் பணியாற்றியவர் காலஞ் சென்ற வண. B. அல்பிறட் அடிகளாவர். அவருடன் பணியாற்றச் சிலகாலம் வாய்ப்புக் கிடைத்தது. நான் சிறுவர் பக்கத்தைப் பொறுப்பேற்று இளைஞருக்கான சிறுகதைப்போட்டி ஒன்றை 1959ம் ஆண்டு நடாத்தினோம். தற்போது மலையகத்தில் பிரபல எழுத்தாளராக விளங்கும் தெளிவத்தை யோசப் அவர்களும் பரிசினை வென்றவர்களுள் ஒருவர் என்பதை நினைவுகூர முடிகிறது.

அவரைத் தொடர்ந்து வண. B. தீயோகுப்பிள்ளை அடிகளார் (ஆயர் ஆவதற்கு முன்பு) கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபராக இருந்தபோது சில ஆண்டுகள் பாதுகாவலன் ஆசிரியராகப் பணியாற்றினார். அது பாடசாலைகளை அரசு பொறுப்பேற்க மும்முரமாக முயன்ற காலம். கத்தோலிக்க தனியார் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்கக் கூடாது என சகல மறைமாவட்டங்களிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், மறியல் போராட்டங்கள் நடைபெற்றபோது பத்திரிகைகளிலும் எதிர்ப்பு அலைகள் கிளம்பின. அவ்வேளை Catholic Messenger இல் வெளியான பல கட்டுரைகள், செய்திகள் பாதுகாவலனில் மிகச் சூடாக வெளிவந்தன. ஆங்கிலக் கட்டுரைகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. அப்போது நான் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்று கொண்டிருந்தேன். ஆயர் அவர்களுக்குக் கட்டுரைகளை மொழிபெயர்த்துக் கொடுப்பதிலும், பிரதிகள் தயாரிப்பதிலும் உதவிசெய்தது நினைவுக்கு வருகிறது. அக்கால கட்டத்தில் பாதுகாவலன் மிகப் பரபரப்பாக மக்களால் விரும்பிப் படிக்கப்பட்டது.

"சத்தியவேத பாதுகாவலன்" என்ற பழமை மிக்க பத்திரிகைப் பெயரை நவீனப்படுத்திய பெருமை அதன் ஆசிரியராகப் பொறுப்பேற்ற வண. அன்ரன் மத்தாயஸ் அடிகளாருக்கே உரியது. பாஸ்கா காலம், ஈஸ்ரர், கிறிஸ்மஸ் சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டதும் அப்போதுதான் என்று குறிப்பிடலாம். பல இளம் எழுத்தாளர்களின் ஆக்கங்கள், இளம்குருமாரின் சொல்லோவியங்கள், இளைஞர் பக்கம், சிறுவர் பக்கம், சிறுவர், இளைஞருக்கான கட்டுரைப் போட்டிகள், விவாதக் கட்டுரைகள் என்பன காவலனை அலங்கரித்தன. மறை உண்மைகள், திருச்சபை பற்றிய ஆய்வுகள், திருச்சபையின் யதார்த்தமான மாற்றங்கள், சகல மறைமாவட்ட கத்தோலிக்க மறை நிகழ்வுகள், கிறிஸ்தவ கலாச்சார, விழுமியங்கள், திருச்சபையின் மறுமலர்ச்சி என்பன வெளிக்கொணரப்பட்டது. வண. அன்ரன் மத்தாயஸ் அடிகள் பாதுகாவலன் ஆசிரியராகப் பொறுப்பேற்பதற்கு முன் பிரபல ஆங்கில எழுத்தாளரான காலஞ்சென்ற S.M.J லூயிஸ் அவர்கள் சிலகாலம் காவலன் பிரதம ஆசிரியராகப் பணியாற்றினார். 1960ம் ஆண்டளவில் அவர் காவலனைப் பொறுப்பேற்று 15 ஆண்டுகாலம் நற்பணியாற்றினார். அவ்வேளை நான் நுவரெலியாவில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். எனது கட்டுரைகள் காவலனில் பிரசுரமாகி வந்தன. நானும் என்.எம்.ஜே. என்ற பெயரில்தான் எழுதிவந்தேன். அச்சமயம் றோமாவில் இருந்த வண. குணசீலன் அடிகளார் எனது கட்டுரைகளைப் படித்துவிட்டு திரு லூயிஸ் அவர்களைப் பாராட்டி எழுதினார் என திரு. லூயிஸ் அவர்கள் சொன்னது நினைவிருக்கிறது. திரு. லூயிஸ் அவர்களும் அவரது முன்னோடியான ஞானப்பிரகாசம் அவர்களைப் போலவே தீவிரப் போக்கைக் கடைப்பிடிக்கவில்லை எனினும் திருச்சபைக்கு விசுவாசமாக இருந்து தம்மால் இயன்றவரை பத்திரிகையைத் தரங் குறையாது முன்னெடுத்துச் சென்றார்.

வண. அன்ரன் மத்தாயஸ் அடிகளாரைத் தொடர்ந்து காலஞ்சென்ற A. அருமைநாயகம் அடிகளார் காவலன் ஆசிரியராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார். அது யாழ் குடாநாட்டில் விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக திசைதிரும்பிய காலம். அந்தச் சூழ்நிலையிலும் காவலன் தன் பணியைச் சோரவிடவில்லை. புதிய மெருகுடன் பல புதிய அம்சங்களுடன் நீதியின் குரலாகவும் இறைவனின் குரலாகவும் வெளிவந்து கொண்டிருந்தது. மீண்டும் யாழ்குடா நாட்டில் அமைதியின்மை, இடம்பெயர்வுகள், போர்க்காலச் சூழ்நிலைகள் தொடர்ந்துகொண்டே இருந்தன. 1990களின் பின் காவலன் வெளியீடு மந்தகதியடைந்தது. எரிபொருட் தட்டுப்பாடு, மின்சாரத் தடை, பொருளாதார இடர்ப்பாடுகள், பாதுகாப்புக் காரணங்களுக்காக சிலகாலம் ஸ்தம்பித நிலை ஏற்பட்டது. 1995ம் ஆண்டுவரை மாதம் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு, மாதம் ஒரு வெளியீடு என்றிருந்த நிலைப் பாடு 1996ல் முற்றாகத் தடைப்பட்டது திருச்சபைத் தலைமையே தயங்கிக் கொண்டிருந்தது. 1997ல் மீண்டும் காவலன் வீறுநடைபோட ஆரம்பித்து விட் டான். வண. ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் துடிப்பான, துணிவான செயற்பாட்டால் காவலன் புதுப்பொலிவும், மெருகும், உத்வேகமும் பெற்று நல்ல தோர் மறைச் சஞ்சிகையாக – தரமான வார ஏடாகப் பரிணமித்து மலருகின்றது. பாண்டித்தியம் பெற்ற இளம் குருமார், குருமாணவர்கள், அருட்செல்விகள் பத்திரிகையைத் தம் எழுத்தாற்றலால், எழுதும் பாணியால், எழுத எடுத்துக்கொள்ளும் தலைப்புக் களால் நவீனமயப்படுத்தி பத்திரிகையின் தரத்தை மேம்படுத்தி வருவது பாராட்டுக்குரியது. கணணி வடிவமைப்பில் அவ்வப்போது எழுத்துப்பிழை போன்ற குறைபாடுகள் இருப்பினும் இன்று "காவலன்" தன் பணியை காலத்தின் தேவை அறிந்து நன்கு பணி ஆற்றுகின்றான். வண. ரூபன் மரியாம்பிள்ளை அடிக ளாருக்கு எமது பாராட்டுக்கள். Catholic Messanger இன் தரத்துக்கு வளர இடமுண்டு. முயன்றால் முடியும்.

# காவலனே வாழ்க வளர்க

யாழ் மண்ணின் செய்திகளையும்
யோக உணர்வுகளும் கொண்டு
வாழ்வாங்கு வாழ நினைத்து
வடிவமைத்த பாதுகாவலனே
ஆழ் புரிந்து நிற்கும் திருச்சபையில்
அரியணை நாயகனாக
திகழ் வெளிச்சம் போல் மானிட
திசையெங்கும் ஓங்குக!

நூற்றிருபத்தைந் தாண்டுகள் ஓடி
நுகம் திரும்பாமல் நிற்கும்
நாற்றினைப் போல் வளையாது
நிகழ்ச்சிகளை தன்னகத்தே கொண்டு
காற்றலையென எழும் காவலனே
கிழமைதோறும் வருகவென
ஊற்றினை அள்ளி வழங்கியும்
உயர்வு கொண்டு வாழ்க!

சிலை போல் உண்மைகளை
சாதுரியமாய் உள்ளடக்கி
விலை பேசும் மனிதாபிமானத்தை
விசாரணை செய்யும் காவலனே
தலையாய இறைமகன் துணையுடன்
தரணியெங்கும் வலம் வருக
மலைபோல் உயர்ந்து மானிடரிடையே
வளமாக வாழ்க வளர்க வாழ்த்துக்கள்

ஆ. சான் பெனடி
திராட்சையூர் இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்தமட்டில் இற்றைக்கு 130 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மொழிமூல கத்தோலிக்க பிரசுரங்களை புத்தகங்கள் அறிக்கைகளாக வழங்கும் பொதுசன ஊடக மத்தியஸ்தானமாக தென் இந்தியாவே விளங்கியது. இவற்றினூடாக கிறிஸ்தவர்களுக்கு ஞான அறிவும் சமூகக் கோட்பாடுகள், கட்டமைப்புக்கள் என்பனவும் போதிக்கப்பட்டு வந்தன.

அச்சகக் கட்டிடம் ஆயர் கி. பொஞ்சின் O.M.I அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு ஆயர் K. யூலன் O.M.I அவர்களின் காலத்தில் முற்றுப்பெற்றது குறிப்பிடத்தக்கது. காவலன் தொடக்ககாலம் முதல் பல ஆங்கிலேய, இந்திய, சுதேச ஆசிரியர்கள் முகாமையாளராகவும் கடமையாற்றியமையை வரலாறுகள் எடுத்தியம்புகிறது.

# பாதுகாவலன் ஆசிரியர்கள்

C.C. ஜோலிந்திரன்

இந்நிலையில் ஆயர் பொஞ்சினின் சிந்தனையில் சிறப்பானதொரு எண்ணம் கருக்கொண்டது. எமது பிரதேசத்தில் இப்பிரதேச மக்களின் தாய் மொழியிலான அச்சகம் நிறுவப்படவேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்தினார். அவரது எண்ணத்தின் செயற்பாடே 1871ல் கொழும்புத்துறையில் திருப்பாலத்துவ கத்தோலிக்க அச்சகம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அவ் அச்சகம் சஞ்சூசை மாமுனிவர் என்ற அச்சகம் என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டு 1873ல் தற்போதைய அச்சக வளவுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்தப் பதிப்பகம் கத்தோலிக்கத்துக்கு ஒரு தொடர்பணியை ஆற்ற விரும்பியது. அந்த ஆவல் 1876ம் ஆண்டு மாசிமாதம் 19ந்திகதி சனிக்கிழமை "கத்தோலிக்க பாதுகாவலன்" முதல் இதழ் யாழ் நகரில் வெளிவந்தபோது நிறைவேறியது. பின்பு "யாழ்ப்பாண கத்தோலிக்க பாதுகாவலன்", "சத்தியவேத பாதுகாவலன்" என்ற பெயர்களில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

ஆரம்பத்தில் ஆங்கிலம், தமிழ், ஆகிய இரு மொழி பத்திரிகையாகவும், 1894ம் ஆண்டுமுதல் ஆங்கிலம் தனியாகவும் தமிழ் வேறாகவும் பிரசுரமானது. 1912ஆம் ஆண்டில் சத்திய வேத பாதுகாவலன் வார இதழானது.

## ஆங்கில இதழ் ஆசிரியர்கள்

ஆங்கில வெளியீடான "Catholic Guardian" பத்திரிகையின் முதல் ஆசிரியராக அருள்தந்தை M. A. மேர்பி (Murphey) அவர்களும், உதவி ஆசிரியராக புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் திரு. ஜேம்ஸ் H. மார்ட்டீனும் பொறுப்பேற்று நடத்தினார்கள்.

தொடர்ந்து அருள்தந்தைகளான C. கொலின் (Collin), J.B. மியறி (Meary), P. டியூனி (Dunne), J. நெவிலி (Neville) ஆகியோர் கடமை புரிந்தார்கள். பின்னர் 1907ம் ஆண்டுவரை திரு ஜேம்ஸ் H. மார்ட்டீன் பிரதம ஆசிரியராகச் சிலகாலம் பணிபுரிந்தார்.

புனித பத்திரிசியார் கல்லூரியின் புகழ்பூத்த இசை ஆசிரியரான திரு. A. சவரிமுத்து 1914 வரையும் மீண்டும் அருள்தந்தை J. கொலின் (Collin) 1917 ம் ஆண்டுவரையும் அதனைத் தொடர்ந்து அருள்தந்தை K. செபஸ்தியன் அடிகளும் ஆங்கில ஏட்டின் ஆசிரியர்களாக விளங்கினர்.

## தமிழ்ப் பிரதியின் ஆசிரியர்கள்

தமிழ்ப் பத்திரிகையின் முதல் ஆசிரியராக தமிழில் பாண்டித்தியம் பெற்ற அருளப்பா முதலியார் இந்தியாவிலிருந்து வந்து பொறுப்பேற்று சிறப்புற நடாத்தினார். இவ் இதழின் முன்னோடிகளாக திரு. முருகப்பா, திரு. பிலிப்பையா ஆகியோர் விளங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 1972 முதல் பாதுகாவலன் ஆசிரியர்கள்



அருள்திரு G.E. மேரி
ஜோசேவ்
(1972-1979)



அருள்திரு அன்ரன்
மத்தாயஸ்
(1979-1986ஐப்பசி, 1996
யூன்-1997 ஐப்பசி)



அருள்திரு E.J.
அருமைநாயகம்
(1986 ஐப்பசி - 1992 யூலை)



அருள்திரு G.A. பிரான்சிஸ்
ஜோசேவ்
(1992 யூலை, 1996 யூன்)



அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
(1997 ஐப்பசி - இன்றுவரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1924ம் ஆண்டு தொடக்கம் தனது கண்பார்வையை இழக்கும் வரை திரு. V. பிரான்சீஸ் தம்பு அவர்கள் ஆசிரியராக அரும்பணி ஆற்றினார். இக்காலத்தில் இவருக்கு பக்கபலமாக தெல்லிப்பளையைச் சேர்ந்த திரு. ஜோண் சங்கரப்பிள்ளையும் உதவி புரிந்துள்ளார். பின்னர் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் இருபத்தைந் திற்கும் மேற்பட்ட ஆண்டுகளாக ஆசிரியப் பணியில் இணைந்து 1960ல் ஓய்வு பெற்றார். இவரது எழுத் துப் பணியைப் பாராட்டி For The Church And Pope (பாப்பரசருக்காகவும், திருச்சபைக்காகவும்) என்ற கௌரவ விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இளைப்பாறிய யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அருள்தந்தையாக இருந்தபோது 1960ல் காவலனின் நிர்வாக ஆசிரியரா னார். கல்லூரி அதிபராகவும், மறைக்கல்வி நூல்கள் தயாரிப்பாளராகவும் பல பொறுப்புக்களின் வேலைப் பழு காரணமாகத் தொடர்ந்து ஈடுபடுவது கடினமாக இருந்தது. எனவே 1962ல் S.M.J. லூயிஸ் அவர்கள் ஆயர் எமிலியானுஸ் அவர்களால் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் ஆயரின் அனுமதியுடன் ஆசிரியர் குழு ஒன்றை அமைத்து புதிய பல அம்சங் களை நடைமுறைப்படுத்தி பாதுகாவலனை மறு மலர்ச்சிப் பாதையில் 1972 வரை இட்டுச் சென்றார்.

## முகாமையாளர்கள் வரிசையில்

ஆரம்பகாலம் தொட்டு முகாமையாளர்களாகக் கடமையாற்றிய அருள்தந்தையர்கள் சிறப்புற நிர்வ கித்ததுடன் காவலனின் வளர்ச்சிப் பாதையிலும் முக் கிய கவனம் செலுத்தி வீறுநடை போட்டார்கள். இவர் களில் அமலமரித்தியாகிகள் சபைக் குருக்களின் பங்கு அளப்பரியது. அந்த வரிசையில் அருள்தந்தை மொறோ (Fr. Mauroit) 1896ம் ஆண்டு அவர் இறைவனடி சேரும் வரை கடமைபுரிந்தார்.

அவரது இடத்தை நிரப்ப அருள்தந்தை அல்பிரட் டெல்பெச் (Fr. Alfred Delpech) நியமனம் பெற்றார். இவரைத் தொடர்ந்து அருள்தந்தையர் களான பௌலியன் (Fr. Poulain), (B) போ , மங்கா ஆகியோர் முகாமையாளர்களாக வழிநடத்தினர். பின் னர் வந்த அருள்தந்தை சியேர்ப்கா 12 ஆண்டுகள் பணிபுரிந்தார். இவரின் பதவிக் காலத்திலேயே இயந் திரங்கள் நவீன மயப்படுத்தப்பட்டன.

இவர்களுக்குப் பின் அருள்தந்தையர்களான யோண், சிங்கராஜா, ஸ்ரனிஸ்லோஸ், ஸ்கூமன் வேத நாயகம், பஸ்ரியன் ஆகியோரும் நிர்வகித்து வந் தார்கள். இடையிடையே ஏற்பட்ட தற்காலிக இடை வெளிகளை அருள்திரு பிறோகான், அருள்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை (தற்போதைய திருமலை - மட்டுநகர் ஆயர் என்பவர்கள் நிரப்பியுள்ளனர்.

## ஆசிரியரே முகாமையாளர்

இக்கால கட்டத்தின் பிற்பாடு பாதுகாவலனின் ஆசிரியர், முகாமையாளர் ஆகிய இரு பொறுப்புக் களையும் ஒருவரே கவனித்து வந்தார்கள். இறை பணியாளர்களான மேரி யோசப் (1972 - 1979), அன்ரன் மத்தாயஸ் (1979-1986 Oct.), அருமை நாயகம் (1986 - 1992 July), பிரான்சிஸ் யோசவ் (1992-1996 June), அன்ரன் மத்தாயஸ் (1996-1997 Oct.) போன்றோர்கள், தமது ஆற்றல்களாலும் புதிய உத்திகளாலும் பத்திரிகையைச் சிறப்புற வெளி யிட்டு வந்தனர்.

1997ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை (2001-08-04) அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் இரு பொறுப்புக்களையும் ஏற்று வழிநடத்தி வருகிறார். இவரது காலத்தில் ஓவ்செற் முறையில் பாதுகாவலன் வெளிவந்ததும், சிறந்த வடிவமைப்புக் கான தேசியவிருது பெற்றமையும் பாராட்டுக்குரிய தாகும். மேலும் நிருபர்கள் குழுவை அமைத்து மாதாந்த ஒன்றுகூடல் மூலம் கருத்துக்களைப் பரிமாறி பாது காவலனை புதிய பாதையில் நகர்த்திச் செல்கிறார். பயிற்சிப் பட்டறைகள், ஒளிவிழா நிகழ்வுகள் என்பன வும் சிறப்புற நடைபெற்று வருகின்றன. இவ்வாறு பல்வேறு சவால்கள், தடைகளுக்கு முகங்கொடுத்து அன்றுதொட்டு இன்று வரை 125 ஆண்டுகள் பாது காவலன் மெருகூட்டி வளர்த்துவந்த ஆசிரியர்கள் முகாமையாளர்கள் அனைவருக்கும் கத்தோலிக்கர்கள் என்றும் நன்றிக் கடப்பாடு உடையவர்கள் என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது.

### *ஆதாரங்கள்:*


1) XXV Years of Progress (S. Gnanapragasar - p.437-450)
2) யாழ்ப்பாண திருச்சபை வரலாறு (ஆசிரியர் அருள் தந்தை J. E. ஜெயசீலன்)
3) யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க திருச்சபைச் சரித்திர சுருக்கம் (ஆசிரியர்கள் அருட்தந்தையர்கள் சா. ஞானப்பிரகாசர், ம. பாவிலுப்பிள்ளை அ.ம.தி)
4) பாதுகாவலன் நூற்றாண்டு மலர் (28-5-1976)
5) பாதுகாவலனில் நீண்டகாலம் பணிபுரிந்த பணியாளர் களான திரு M. தேவராஜா, திரு. பாக்கியநாதர், திரு. N. அன்ரனி என்போரின் தகவல்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருசோ பிறதர்

அருள்தந்தை நீக்கிலஸ் அமதி

இயூஜினஸ் குருசோ 1871ம் ஆண்டு வட பிரான்சில் பிறந்தவர். அவர் லாறேஸ்லே மறைவட்டத் தைச் சேர்ந்தவர். தனது நவசன்னியாச வாழ்வை 1888ல் இருந்து 1894 வரை அஞ்சேர்ஸ் என்ற நகரத்தில் பெற்றார்.

பிரான்சில் இருந்து யாழ்ப்பாணத் திருச்சபைக்கு நித்திய வாக்குத்தத்தத்தின் பின்னர் அனுப்பிவைக்கப் பட்ட அருட்சகோ. குருசோ தனது பணியை இம் மண்ணில் ஆரம்பித்தார். இளம் வயதிலேயே நன்கு பயிற்றப்பட்ட இவர் ஆசனக்கோவில் அலுவல்களில் நன்கு ஈடுபாடு காண்பித்தார்.

பக்திச் சபைகளை ஆரம்பித்து, அங்கத்தவர் களை ஒன்று கூட்டி கூட்டங்களை கிரமமாக ஒழுங்கு செய்தும், நடாத்தியும் செயற்பட்டார். அவரு டைய இந் நற்செயலை ஊக்குவிக்க, ஆயர் அவரை யாழ் நகரப் பங்குகளுக்கு இவ் பக்தி முயற்சிகளை விரிவுபடுத்தவும், பக்திச் சபைகளை வளர்க்கவும் ஒத் தாசை புரிந்தார். பக்திச்சபை அங்கத்தவர்கள் கூடு வதற்கும், கலந்துரையாடுவதற்கும் ஆசனக் கோவிலரு கில் ஒரு சிறிய மண்டபத்தை நிர்மாணித்தார்.

விசுவாசிகளின் வீடுகளைத் தரிசிப்பதிலும், விஷேசமாக நோயாளர்களை வீடுகளில் சென்று பார்வையிட்டு அவர்களுக்காக இறை வேண்டுதல் செய்வதிலும், சிறிய உதவிகள் புரிவதிலும் ஈடுபடு வதை வழக்கமாக்கிக்கொண்டார். முதியவர்கள் நோய் வாய்ப்பட்டோரை தனது அன்பு வார்த்தையால் தேற்றிக்கொள்வார்.

சிறு கைத்தொழில், குடிசைக் கைத்தொழில் புரி வோரை ஒன்றுதிரட்டி புத்திமதி சொல்வதிலும் அக் கறை செலுத்தினார். பத்திரிசியார் கல்லூரி மாணவர் களில் சிலரைத் தேர்ந்தெடுத்து இசைக்கருவி மீட்பதில் பயிற்சி கொடுத்து ஊக்கப்படுத்தினார். கல்லூரி சம்பந் தமாக பிற பங்குகளுக்குச் சென்று அங்கு விடயங் களை தெளிவுபடுத்தி கலந்தாலோசித்து வருவார்.

இளைஞரின் உற்சாகத்தை மேலும் ஊக்கப் படுத்துவதற்கு உதைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களை மாலைப் பொழுதில் பயிற்றுவித்து பொழுதுபோக்கை ஏற்படுத்தினார்.

வறியவர், ஏழைகள், செல்வந்தர்களுடன் நன் றாகப் பழகுவார். அவர்களின் வாழ்வில் அக்கறை காட்டுவார். கொழும்புத்துறையில் இருந்த கத்தோலிக்க அச்சகத்தை யாழ் பிரதான வீதியில் நிறுவ முயற்சி எடுத்தார். இதனால் "கத்தோலிக்க அச்சகம்" இன்று இவ்விடத்தில் மக்களுக்கு பல உதவியைப் புரிகின்றது.

அருட்சகோ. இயூஜினஸ் குருசோ அவர்கள் 1948ம் ஆண்டு இறைவனை சென்றடைந்தார். நித்தியத்திற்கும் அவர் அமைதியை பெற நாம் வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத பாதுகாவலன்

THE JAFFNA

# Catholic Guardian.

PUBLISHED ON EVERY ALTERNATE SATURDAY.

"NISI DOMINUS CUSTODIERIT CIVITATEM FRUSTRA VIGILAT QUI CUSTODIT EAM"

VOL. I. JAFFNA, SATURDAY, MARCH 4th. 1876. NO. 2.

---

...l. No. 26. JAFFNA, FRIDAY, JULY 10, 1942. PRICE: 10 CENTS.

SUPPLEMENT TO THE CATHOLIC GUARDIAN.

# சத்தியவேத பாதுகாவலன்

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

Telegram: "GUARDIAN" JAFFNA. Telephone: No. 100.

வெள்ளிக்கிழமைதோறும் பிரசுரமாகும்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

...ம் புத்தகம் 35-ம் இல. யாழ்ப்பாணம் 1947-ம் ஆண்டு புரட்டாசி மாசம் 12-ந் திகதி வெள்ளிக்கிழமை—பிரதி சதம் 10

---

சத்திய வேத

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

...ம் புத்தகம் யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 7-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 39-ம் இலக்கம்

---

18—7—... ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS, JAFFNA.
Telephone: No. 100.

# பாசத்துதிசகாயவலவேலசன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு ஆடி மாதம் 15-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 27-ம் இலக்கம்

---

"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீணாகும்" .. ஸ்தாபகம்: 1876

சத்தியவேத

பாது

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 300

REGISTERED AT THE CEYLON G.P.O. AS A NEWSPAPER

...ம் புத். | யாழ்ப்பாணம், 1965-ம் ஆண்டு மாசி ... சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 6-ம் இல.

ஞானோபதேச நடுநிலையம்

மெத்திரசன இல்லம், யாழ்ப்பாணம்.

ஞானோபதேச கருத்தரங்கு

யாழ்ப்பாணம்

இடம்: சம்பத்திரிசியார் கல்லூரி

நாள்: 20-2-1965 சனிக்கிழமை.

காலம்: காலை 8-30 மணி

மாதிரிப் பாட உபகாரணங்கள்

| | |
|---|---|
| திருக்குடும்ப கன். மடம் | நம்பிக்கை |
| கொழும்புத்துறைப் பாட. | மெய்விவாகம் |
| பாஷையூர் .. | ஞானஸ்நானம் |
| சென் ரொக் .. | குருத்துவம் |
| டொன்பொஸ்கோ .. | தேவாத்கருணை |
| சென் ஜேம்ஸ் .. | உறுதிப்பூசுதல் |
| பரி. அடைக்கலமாதா பாட. | பாவசங்கீர்த்த. |
| குருக்கள் வித்தியாலயம் | அவ்டுச்சக்கரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால், அதைக்காக்கிறவன் கண்விழிப்பது விருதா" (தாபிதம் : 1876)

# உதயதாரகை

தந்தி : "அமெரிக்கன் மிஷன்," யாழ்ப்பாணம் — தொலைபேசி : 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

| 94-ம் புத். | யாழ்ப்பாணம், 1969-ம் ஜனவரி 18-ந் திகதி சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 2-ம் இல. |
|---|---|---|

சென்ற சில வருடங்களாக
கிறிஸ்தவ சபைகள் ஒற்றுமைவாரத்தைக் கொண்டாடி வருகின்றன
இதன்நோக்கம் பலசபைகளும்
வில் ஒன்றிக்கச் செய்யும்
வகைகளை விசேஷமுறையில்
சிப்பதுமே. இவ்வருடம் ஒற்றுமை
வாரம் இம்மாதம் 18-ம் திகதி
பமாகின்றது. உலகின் பலபாகங்
களிலும் இதுகொண்டாடப்படு
இவ்வருடம் இக்கொண்டாட்ட
லில் ஒரு விசேஷ நிகழ்ச்சிக்கு
அளிக்கப்படும். அது மனித உரி
...உண்மைச் சுதந்திரமும்
பதே: சமாதானத்துக்கு
யாக இருப்பது மனித உரிமை
அறியாதிருப்பதே என்பதை
...தை தமது புதுவருட
தன்று விடுத்தசெய்தியில் எடுத்

# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**காவலன்**

சந்தாதாரரின் கவனத்திற்கு :

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | ரூபா | 9-00 |
| 6 மாத | ,, | ,, | 4-50 |
| 3 மாத | ,, | ,, | 2-25 |

(தபாற்செலவு உட்பட)

| 94-ம் புத். | 1969-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 22-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 45-ம் இல. |
|---|---|---|

# பாதுகாவலன்

மலர் : 93. ※ 23—6—1973. ※ இதழ் : 24 [பிரதி சதம் 20

இந்த இதழில் .......



| | | பக்கம் |
|---|---|---|
| இறைவாக்கு வழிபாடு | ... | 2 |
| ஆண்டவரின் அருள்வாக்கு | ... | 2 |
| இறைபணியாளரின் அரங்கு | ... | 3 |
| இளைஞர் உலகு | ... | 4 |
| புனிதர்கள்காட்டிய வழி | ... | 5 |
| பேசும் பேனா | ... | 6 |

காவலன் வருடசந்தா
இலங்கை, வெளிநாடுகள்
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

"உண்மைத் திருமறை அன்பு பரம அன்புடன் ஒன்று கிறது."

— தி. பா. 48

| 94-ம் புத். | 1969-ம் ஆண்டு வைகாசி மாதம் 3-ந் திகதி சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 16-ம் இல. |
|---|---|---|

...செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது — கத்தோலிக்க வாரஏடு

# பாதுகாவலன்

9-5-...

மலர்: 1...

இதழ்:

பிரதி: 50 ச.

# பாதுகாவலன்

PATHUKAVALAN

"எழுந்து என்தந்தையிடம் செல்வேன்" (லூக். 15:18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் களஞ்சியத்தில் கண்டவை சில

எஸ் . யேசுதாஸ் - கொழும்புத்துறை

ஒரு பத்திரிகையானது மக்கள் மத்தியில் பெரு வரவேற்பையும் நல் ஆதரவையும் பெற்று தொடர்ந்து வெளி வருவதற்கு அப்பத்திரிகை தேர்ந்துகொண்ட பெயரும் வடிவமைப்பும் விலையும் முக்கிய காரணமாக அமைகிறது.

மேலும் அவ் இதழ் தான் சார்ந்து நிற்கும் மண்ணினதும் மக்களினதும் அரசியல், சமூக, ஆன்மீக, கலை, கலாச்சார விழுமியங்களை நடுநிலையுடன் வெளிக்கொணரும் ஒரு சிறந்த ஊடகமாகத் திகழும் போதுதான் நீண்டகாலம் வாசகர்களின் நெஞ்சத்தில் காத்திரமான இருப்பைப் பெறமுடியும்.

இந்த வகையில் இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க ஏடான "பாதுகாவலன்" தொடர்ந்து 125 ஆண்டுகள் நிறைபணியாற்றுவதற்குக் காரணம் மேற்கூறிய அம்சங்களை அனுசரித்து வருவதாகும். 'பாதுகாவலன்' என்னும் பதத்தின் பொருள் விளங்கும் வண்ணம் இன, மத, மொழி மீதான நெருக்கீடுகளுக்கு, உரிய முறையில் குரல்கொடுத்து வருவது அதன் முக்கிய சிறப்பம்சமாகும். இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தினால் 2000ம் ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான "தேசிய விருதைப்" பெற்றுள்ள இப்பத்திரிகை தன் ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை பாதுகாவலன் பெயரை மையப்படுத்தி பல்வேறு அச்சு எழுத்து வடிவங்களில் உலா வந்து கொண்டிருக்கின்றது.

அவற்றில் சிலவற்றை 125ஆவது ஆண்டு நிறைவு மலரில் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது மகிழ்வும், பயனும், பழமையை மீட்டிப் பார்க்கும் ரசனையும் கிட்டும் என நம்புகிறேன்.

1876ஆம் ஆண்டு மாசி மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு முதலில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆங்கிலத்தில் THE JAFFNA CATHOLIC GUARDIAN எனவும் தமிழ் வெளியீட்டில் 'சத்திய வேத பாதுகாவலன்' என்றும் தன் நாமத்தைச் சூடிக் கொண்டது. பின்னர் சில ஆண்டுகளில் ஆங்கிலப் பதிப்பில் 'CATHOLIC GUARDIAN' என்றவாறும் காண முடிகிறது.

இது தவிர அன்றைய நாட்களில் பத்திரிகையின் நீள அகலமும் இன்றைய பாதுகாவலின் இரு மடங்காக அமைந்திருந்துள்ளது. இவ்விருமொழி வெளியீடுகளும் இந்தியா, மற்றும் ஐரோப்பிய நாடுகள் அடங்கலாக விற்பனையாகியுள்ளன. முதல் அரைநூற்றாண்டு இதழ்களைப் புரட்டிப் பார்க்கும்போது இந்திய, ஆங்கிலேய அருட்தந்தையர்கள், எழுத்தாளர்களின் ஆக்கங்களே அநேக இடங்களில் தடம் பதித்துள்ளன.

அச்சுக்கலையின் வளர்ச்சியாலும், தொழில் நுட்பத்தினாலும் வெவ்வேறு எழுத்து வடிவங்களில் கவர்ச்சிகரமான மாதிரிகளில் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளதை இடைக்கால இதழ்கள் காட்டி நிற்கின்றன. ஒவ்வொரு ஆசிரியரும் காலத்துக் காலம் எழுத்தமைப்பில் மாற்றங்களை அறிமுகப்படுத்தியுள்ளனர். பாதுகாவலன் பத்திரிகைக் களஞ்சியத்தில் இருந்து எடுத்த பிரதிகள் சில இப்பகுதியில் இவற்றைப் புலப்படுத்துகின்றன. 1968 வரை "சத்தியவேத பாதுகாவலன்" எனவும், 1969 தொடக்கம் "காவலன்" ஆகவும் கைகளில் தவழ்ந்தது. 1980இல் இருந்து இன்றுவரை "பாதுகாவலன்" ஆகப் பவனி வருகிறது. வீட்டுக்கொரு காவலன் விசுவாசத்தின் பாதுகாவலனாக இவ்வார ஏடு 1998ஆம் ஆண்டு ஆனிமாதம் "ஓவ்செற்" கணணி முறையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணத்தில் முதன்முதலில் கணணி அமைப்பில் வெளியான பத்திரிகை என்ற பெருமையும் இதனைச் சாரும்.

மேலும் இக்காலப் பகுதியில் பாதுகாவலன் இலச்சினையும் தயாரிக்கப்பட்டது. **எமது பிரதேசத்தின் மக்கள், வளங்கள், கல்வி, ஆன்மீகம் என்பவற்றுடன் இணைந்து பாதுகாவலன் சுடர்விட்டு கிறிஸ்துவின் ஒளியை உலகெங்கும் பரப்ப உழைப்போம். பணியும், வாழ்வும், உண்மையுமே எமது முனைப்பான முன்னெடுப்பாக அமைந்துள்ளது** எனவும் இச்சின்னம் எடுத்து இயம்புகிறது. இதே இலக்கில் தொடர்ந்து தடம்பதித்து மேலும் பல நூற்றாண்டுகள் பாதுகாவலனின் பெயர் நிலைப்பது வாசக உள்ளங்களின் ஆதரவிலும் ஆலோசனையிலும் பங்களிப்பிலுமே தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் பாதுகாவலன்

இ. ம. ஜெயசீலன்
மறையாசிரியர்

இலங்கையின் தமிழ்க் கத்தோலிக்க முதலாவது வாரப் பத்திரிகையான 'பாதுகாவலன்' தனது 125 ஆவது அகவையை நிறைவுசெய்யும் இக்காலத்தில் அதன் அரிய பணியைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். தற்காலத்தில், பலவித மான சமயப்புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவருகின்றன ஆனால் முன்பு யாழ் திருச்சபை யில் ஏன் இலங்கை முழுவதிலுமே சமய அறிவை மக்கள் மத்தியில் பரப்பிட, திருச்சபையில் நடைபெறும் நிகழ்வுகளை மக்களுக்கு தெரிவித்திட அயராது உழைத்து மறைப்பணியாற்றிய அதாவது நற்செய்தி அறிவுப்பணி புரிந்த பெருமை பாதுகாவலனையே சாரும். இறைமக்கள் கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்ந் திட அவர்கள் தம் மறைபற்றி அறிந்து தெளிந்திட பாதுகாவலன் பங்களிப்புச் செய்துள்ளான். இலங் கைத் திருநாட்டில் பரம்பிய சத்திய வேதத்தைப் பாதுகாக்கும் காவலனாக 125 வருடங்களாக உழைத்து வருகின்றான். "சத்தியவேத பாதுகாவலன்" என்ற பெயரே இதற்குச் சான்று பகரும்.

பாதுகாவலன் தனது 125வது வருட நிறை வைக் கொண்டாடும் வேளையில் மலரும் சிறப் பிதழுக்கு "எனது பார்வையில் பாதுகாவலன்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையைப் பாதுகாவலன் ஆசிரி யர் கேட்டிருந்தார். எனவே நான் எனது பாதுகாவ லன் பத்திரிகை பற்றிய அனுபவத்தை எழுத முற்பட் டேன். நான் பன்னிரண்டு வயதுச் சிறுவனாக இருந்த போது மாதகல் பங்கின் பங்குத் தந்தையாகப் பணி புரிந்த அமரர் அருட்திரு வேண்டர்கோன் அடிகளார் பாதுகாவலன் பத்திரிகைகளை வீடுகளுக்குச் சென்று விற்றுவருமாறு எங்களை அழைத்தார். நானும் வேறு பீடப்பணியாளரும் வீடுவீடாகச் சென்று அப்பத்திரி கையை விற்றுவிட்டு மகிழ்ச்சியுடன் திரும்புவோம். விற்றுவிட்டு வரும்போது பங்குத்தந்தை எமக்கு மகிழம் பழம், மிட்டாய் தருவார். இப்படித்தான் எனது பார்வையில் முதலில் பாதுகாவலன் பத்திரிகை தெரிந்தது.

பல பாதுகாவலன் பத்திரிகை எனது கைகளி னால் விற்கப்படும். பத்திரிகையை ஒருநாளும் நான் படிக்கவில்லை. சில காலத்தின் பின் என்னுடன் பத்திரிகை விற்க வந்த மற்ற நண்பர்கள் விளையாட் டின் காரணமாக நின்றுவிட்டார்கள். எனவே நான் தனியனாக பத்திரிகை விற்கச்சென்றேன். அப்பொழுது தான் பத்திரி கையைப் படித்துப் பார்க்கத் தொடங்கி னேன். அதில் வரும் சிறுவர்பகுதி என்னைக் கவர்ந் தது. சில சமயம் புனிதர்கள் பற்றி எழுதப்பட்டிருக்கும் அவற்றைப் படிக்கத் தொடங்கினேன். படிப்படியாக பாதுகாவலன் பத்திரிகை முழுவதையும் வாசித்து விடுவேன். நான் மறையாசிரியர் பயிற்சிக்கு இந்தியா செல்லும் வரை பாதுகாவலன் விநியோகிப்பவனாகப் பணிபுரிந்தேன். பல விடயங்களை, சிறப்பாக 2ம் வத் திக்கான் சங்கம் பற்றிய விடயங்களை அச்சிறு வயதிலேயே அறியக் கூடியதாகவிருந்தது. பாதுகாவ லன் பத்திரிகை படித்த படியால்தான்.

மறையாசிரியராகப் பணியேற்று பங்குகளில் பணி புரிந்த காலங்களில் பாதுகாவலனுக்குச் சில கட்டு ரைகள் எழுதுவதுண்டு. 86ம் ஆண்டுக்குப்பின் அமரர் அருள்திரு அருமைநாயகம் அடிகளார் பாது காவலன் ஆசிரியராக இருந்த காலத்தில் இப் பத்திரிகை பல சிறப்பான அம்சங்களைத் தாங்கி வெளிவந்தது. அப்போது "அருள்வாக்கு அறிவோம்" என்ற பகுதி விவிலியத்திற்கு ஒதுக்கப்பட்டது. அதில் அறிந்து கொள்ளுங்கள் என்னும் பகுதியைப் பொறுப் பேற்றுப் பழைய ஏற்பாட்டுப் பின்னணியைத் தொடர்ச் சியாக எழுதி வந்தேன். அதிலிருந்து பாதுகாவலன் தொடர் எழுத்தாளனாக மாறிவிட்டேன். இவ்வேளை அமரர் அருமைநாயகம் அடிகளாரை நன்றியுடன் நினைவுகூர்ந்து அன்னாரின் ஆன்ம சாந்திக்காக மன்றாடுகின்றேன். தற்போதைய ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரும் என்னை உற் சாகப்படுத்தி ஆக்கங்கள் வரைய ஊக்கமூட்டுவார்.

பாதுகாவலன் தனது சிறப்பை எண்பிப்பதற்கு சான்று இப்பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றிய அருள்தந்தை அன்ரன் மத்தாயஸ் அடிகளாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தலையங்கங்களைத் தாங்கிய "இன்றைய உலகில் நாம்" என்ற நூல் ஆகும். பாதுகாவலன் பல விடயங்களைத் தாங்கி வெளிவந்தபோதும் அதனுடைய வாசகர்கள் தொகை பெருகவில்லை மிகக் குறைவு. எனவே அதற்கான காரணத்தை ஆய்ந்து அறிந்து தரமான தாக்கமான விடயங்களைச் சுடச் சுடத் தாங்கி வெளிவர செய்யவேண்டியது ஆசிரியர் குழாமின் கடமையாகும். இன்றைய மனித சமுதாயத்தின் முன்னேற்றம், அதன் உறுப்பினரிடையே உள்ள நெருங்கிய பிணைப்புக்கள் ஆகியவற்றின் காரணமாக, செய்தித்துறை மிகவும் பயனுள்ளதாகவும், இன்றியமையாததாகவும், மாறிவிட்டது..... மனிதர்கள் தனி ஆட்கள் என்ற முறையிலோ சமூக உறுப்பினர் என்ற முறையிலோ தம்மைத் தொடுகின்றவை பற்றிய செய்திகளைத் தத்தம் நிலைமைக்கு ஏற்றவாறு அறிகின்ற உரிமை சமுதாயத்திற்கு உரித்தானது. இந்த உரிமையைச் சரியான முறையில் செயல்படுத்துவதற்கு, அறிவிக்கப்படும் பொருளைப் பொறுத்த மட்டில் செய்தி எப்போதும் உண்மையானதாகவும், நீதியினின்றும், அன்பினின்றும் வழுவாத வகையில் முழுமையானதாகவும் இருக்கவேண்டும். ................. "செய்தியைத் திரட்டுவதிலும், பரப்புவதிலும், ஒழுக்க நெறிகளையும், தனிமனிதனின் முறையான உரிமைகளையும், ஒழுங்கு முறைகளையும் நுணுக்கமாகக் காக்கவேண்டும்." (சங்க ஏடு சமூகத் தொடர்புக் கருவிகள் இல.5) கூறுகிறது.

எனவே தற்கால போர்ச்சூழலில், விசுவாசத்துக்கான பல தாக்கங்கள் சபைகளுடாக ஏற்படும் இக்காலத்தில், எம் கத்தோலிக்க மக்களைக் காக்கும் காவலனாக இப்பத்திரிகை பல தரமான அம்சங்களைத் தாங்கி தீர்க்கநோக்குடன் கூடிய விதமாக செய்திகளை கட்டுரைகளைத் தாங்கி வெளிவர வேண்டும் என்பது பலரின் ஆசையாகும். தொழில் நுட்பக் கருவிகள் மலிந்த இக்காலத்தில் பாதுகாவலன் அவற்றைப் பயன்படுத்தி அழகான ஆழமான பலதரப்பட்ட மக்களும் விரும்பிப்படிக்கும் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரவேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

# பாதுகாவலன் - ஒரு நோக்கு

*திரு ம. யோகதாசன்*
*மறைஆசிரியர்*

யாழ். மண்ணில் ஒரே கத்தோலிக்க ஏடான பாதுகவாலன் கடந்த 125 ஆண்டுகளாக இந்த மண்ணின் கத்தோலிக்க வாசகர் மட்டத்தில் தன்னைப் பதிவு செய்துள்ளது. காலத்துக்காலம் பல விதமான கருத்துக்களைத் தாங்கி இறைமக்களின் ஆன்மீக வாழ்வுக்குப் புத்துயிர் அளித்துள்ளதை யாரும் மறுக்க முடியாது. ஒரு பத்திரிகைக்கு சிறந்த ஆசிரியரே (Editor) அடிநாதமாக விளங்குபவர். அவரின் கைகளில்தான் அப்பத்திரிகையின் தரம் பொலிவுற்றுத் திகழ்கின்றது. அந்தவகையில் பாதுகாவலன் பத்திரிகைக்குக் காலத்துக்காலம் திறமை வாய்ந்த குருக்கள் ஆசிரியர்களாகச் செயற்பட்டு இருக்கின்றார்கள். தங்களால் இயன்றவரை இப்பத்திரிகையின் உருவாக்கத்திற்காகப் பாடுபட்டிருக்கிறார்கள். சிறப்பாக ஆசிரியர் தலையங்கத்தைத் தாங்கி சமயவாழ்வு, சமூக நீதி, அரசியல் பொருளாதார மலர்ச்சி என்கின்ற பல பரிமாணங்கள் ஊடாகத் தன்னை வளர்த்து எடுத்திருக்கின்றது.

17.02.2000 அன்று அருள்பணி அன்ரன் மத்தாயஸ் அவர்கள் பாதுகாவலன் ஆசிரியராகப் பணிபுரிந்த காலங்களில் எழுதிய ஆசிரியர் தலையங்கங்களை "இன்றைய உலகில் நாம்" எனும் நூலாக வெளியிட்டார். இது மிகவும் பாராட்டப்பட்ட நிகழ்வாக அமைந்தது. இத்தலையங்கங்கள் சமூக, ஆன்மீக விழுமியங்களின் பரிமாணங்களைக் கொண்டதாக அமைந்தது.

கிறிஸ்துவும் தாம் வாழ்ந்த காலத்தில் அன்று வாழ்ந்த மக்கள் மத்தியில் சமூக - ஆன்மீக விழுமியங்களைக் கட்டியெழுப்பப் பாடுபட்டார். ஆன்மீக குருட்டுத்தனங்களைக் கண்டித்தவேளை சமூகத்தில் புரையோடிப்போய் இருந்த அநீதிகள் - அடாவடித்தனங்கள், ஏற்றத்தாழ்வுகள் அனைத்தையும் கண்டித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார். சொல்லவேண்டியவைகளை முகம்பாராது எந்த இடத்திலும் சுட்டிக்காட்டினார். சமூக அந்தஸ்தில் உயர்ந்து விளங்கிய பரிசேயர் ~ சதுசேயர், குருக்கள் முதலியோரும் இயேசுவின் கண்டனக் கணைகளி லிருந்து தப்ப முடியவில்லை. பத்திரிகைத்துறையும் இதைப்போன்ற ஒரு புனித பணியே. ஆயுதத்தைவிட வலிமையுடையது பேனாமுனை என்பர். இந்தப் பேனா முனை வரலாறுகளையே மாற்றி திருப்பு முனைகளை ஏற்படுத்தியதை ஏடுகள் பல எடுத்தியம்புகின்றன.

இப்பணியை பாதுகாவலன் வார இதழ் கடந்த 125ஆண்டுகளாக செய்து வருவது பாராட்டத்தக்க தாகும். அன்று குழந்தைகளாக தத்தித் தளர்நடை போட்ட காவலன் காலத்தின் வளர்ச்சிப் பாதையூடாக வளர்ந்து இன்று வரலாற்றில் தடம் பதித்திருக்கின் றான். ஒரு பத்திரிகை என்றால் பல்சுவை கொண்ட தாக அது அமைய வேண்டிய காலத்தின் தேவை ஒன்றுண்டு. ஒரு சனரஞ்சகமான பத்திரிகையைத்தான் வாசகர் தேடிப்படிப்பது வழக்கம். ஆன்மீகத்துறை சார்ந்த பத்திரிகை என்றால் 'இதில் என்ன இருக்கு' என்று ஒரு மூலையில் தூக்கிப் போடுகின்ற பண்பாடு இன்று மலிந்திருக்கின்றது கண்கூடு. ஒரு நூற்றாண் டைக் கடந்து நிற்கும் காவலனும் இத்தகைய நிலைக்கு பல சந்தர்ப்பங்களில் ஆளானதும் உண்டு. 'உதென்ன பேப்பர்' சும்மா இரண்டொரு ஆட்கள் மட்டும் பிரசங்கம் எழுதுகிற பேப்பர். உதில் என்ன சுவை இருக்கு என்று ஒரு சாரார் இதை எப்போதுமே ஒதுக்கி வந்தனர். இன்னும் சிலர் இதை மறை மாவட்ட ரீதியில் இன்னும் நன்றாக உருவாக்கலாமே என்ற அங்கலாய்ப்போடு மட்டும் நின்றுவிட்டனர். இதற்குரிய ஆலோசனைகளை வழங்கவோ அன்றேல் இதன் பரம்பலுக்கு உதவிசெய்யவோ முன்வரவில்லை. ஒரு கணிசமான தொகையினர் காவலன் இதழுக்கு கரம் கொடுத்து அதை வாங்கிப்படித்து பயன் கண்டனர்.

ஒரு பத்திரிகையின் வட்டம் விரிவடைவதற்கு அதன் தரம் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. கத்தோலிக்க பத்திரிகை என்றாலும் அது ஆன்மீகத் தோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. மாறாக சமூக பொருளாதார, அரசியல் விழுமியங்களையும் தன்ன கத்தே கொண்டு வளர்ச்சியடைவதே.

பத்திரிகை தொடங்கிய ஆரம்ப காலத்தில் இந்த இலக்கு எட்டப்படவில்லை என்பது உண் மையே. ஆனால் வத்திக்கான் சங்க எழுச்சிக்குப்பின் காவலன் பத்திரிகை பலதுறைகளில் முன்னேறி இன்று அபரிமிதமான வளர்ச்சி கண்டிருப்பதை மறுக்கமுடி யாது. இன்று காலத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு பல உள்ளீடுகளைக் கொண்டு விளங்கு கின்றது.

உலகெங்கும் இருந்து திரட்டப்படும் கத் தோலிக்க திருச்சபையின் செயற்பாடுகளை, அதற்கு ஏற்படும் இன்னல்களை, அதன் வளர்ச்சிப்படிகளை இங்கு வாழ் கத்தோலிக்க மக்கள் அறியும் வண்ணம் தருகின்றது. இன்னும் வேதாகமம், இறையியல், வழி பாடு, சிறுவர் பகுதி போன்ற பல்வேறு துறைகளின் ஆக்கங்களுடன் காவலன் இன்று ஒளிர்கின்றான். நாம் ஒன்றை நினைவில் கொள்ளவேண்டியது அவ சியம். இது ஒரு சஞ்சிகை அல்ல. மாறாக படித்தோர் ~ பாமரர் யாவரும் பேதமின்றிப் படிக்கும் பத்திரிகை. சிலர் இதில் ஆழமான இறையியல் பொதிந்த கட்டு ரைகள் வருவதில்லை என்பர். இது பலரும் படிக்கும் ஒரு பத்திரிகை என்பதை முதலில் நினைவில் கொண் டால் இவ்வித குறைகள் சொல்வதற்கு இடமிருக்காது.

எனவே எதிர்காலத்திலும் பாதுகாவலன் பணி கள் தொடர வாழ்த்துக்கள் கூறி நாமும் எமது பங்க ளிப்பைச் செய்வோம். இன்று தொழில்நுட்ப ரீதியான பத்திரிகைத்துறை பல படிகளில் முன்னேற்றம் கண்டுள் ளது. அந்த வகையில் காவலனும் முன்னேறினால் இன்னும் சிறப்பாக அமைவான்.


**நீங்கள் கத்தோலிக்க ஏடுகளை வாங்கிப் படித்து ஆதரிக்கும் பெரிய கடமையை நிறைவேற்றுங்கள். அவை வாழ்ந்து, வளர்ந்து உயர்ந்த இலட்சிய நோக்குடன் திடமான முடிவுகளை அளவோடு எடுத்துரைக்க ஆக்கம் தாருங்கள்.**

*- 12ஆம் பத்திநாதர் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்திரு. அன்ரன் மத்தாயஸ் அடிகளின் வரவும்,
அருள்திரு. மேரி யோசப் அடிகளின் பிரிவும்
07–09–1979



அருள்திரு. அருமைநாயகம் அடிகளின் வரவும்
அருள்திரு அன்ரன் மத்தாயஸ் அடிகளின் பிரிவும்,
02–10–1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் பாதுகாவலன்

*எஸ். ஏ. நாதர்*
*மறையாசிரியர் - வன்னி*

சத்தியவேத பாதுகாவலன் என்ற பெயரில் 125 ஆண்டுகளுக்கு முன்பு தொடக்கப்பட்ட இலங்கையின் முதல் கத்தோலிக்க பத்திரிகையாகிய (தமிழ்) காவலனை எண்ணிப் பார்க்கும்போது என்னையறியாமலே என் உள்ளம் சிலிர்க்கின்றது. காரணம் பல இலட்சக்கணக்கான கத்தோலிக்கர்களைக் கொண்ட தமிழ் நாட்டில் கூட அக்காலப் பகுதியிலே இப்படியொரு கத்தோலிக்க வார இதழ் தோன்றியிருக்குமோ? என்பது என்னால் கணிப்பிட்டுச் சொல்ல முடியாதிருக்கின்றது.

எனது அனுபவத்தின் படி கிட்டத்தட்ட 1965ஆம் ஆண்டில் இருந்து பாதுகாவலன் வாசகர்களில் நானும் ஒருவனானேன். காவலனில் விருது வாக்காக "கர்த்தர் நகரத்தைக் காக்காவிடில் அதைக் காப்பவன் கண் விழிப்பது வீண்" என்று எழுதியுள்ளதை பலமுறை எனக்குள்ளே சொல்லிப் பார்த்து, அதன் அர்த்தம் எதுவுமே புரியாத நிலையில் இருந்த என்னை 125 ஆண்டுகளுக்குப் பின் இவ் விருது வாக்கை நினைத்துப் பார்க்கும் போது எவ்வளவு தீர்க்க தரிசன உணர்வுடன் இதன் ஆரம்பகால எழுத்தாளர் சுட்டிக்காட்டி, இன்றைக்கு மட்டுமல்ல என்றென்றைக்குமே பொருந்தக்கூடிய விதத்தில் இறை வார்த்தையைச் சொருகியிருக்கிறார் என்னும் போது உள்ளம் பூரிக்கிறது.

இடைப்பட்ட காலங்களில் அருட்பணி சா. ம. செல்வரட்ணம் அடிகளார் தொடர்ச்சியாக எழுதிவந்த எண்ணியதை எண்ணியபடி எழுதுகின்றேன் என்ற கட்டுரை என் மனதை நிரம்பவே கவர்ந்துள்ளது. காரணம்? துணிச்சலுடன் சமகால நிகழ்வுகளை அலசி ஆராய்ந்து, சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டிய விதத்தில் சொல்லி வைத்து சமுதாயத்தை அம்பலத்துக்குக் கொண்டு வந்தார். அத்துடன் இளைய தலைமுறையினரை சீர்திருத்த வேண்டி "திரை விமர்சனம்" என்றொரு பகுதியை தொடக்கி வைத்து அஞ்சா நெஞ்சத்துடன் திரைப்படங்களின் பிழைகளைக் சுட்டிக்காட்டி கடைசிப் பந்தித் தொகுப்புரையில் நறுக்குத் தெறித்தாற் போல நாலுவரிகளில் கண்டித்தோ, பாராட்டியோ முடித்துவைப்பார். இவரது விமரிசனங்களைப் படித்து, தமது பிள்ளைகளை திரைப்படங்களுக்கு அனுப்பிவைத்த பெற்றோர் பலரை எனக்குத் தெரியும்.

கிட்டத்தட்ட 87-90ம் ஆண்டு காலப்பகுதிகளில் அமரர் அருட்பணி அருமைநாயகம் அடிகளாரின் நிர்வாகத்தின் கீழ் பாதுகாவலன் அலுவலகம் இயங்கிவந்த காலப்பகுதிகளில் பாதுகாவலன் ஒரு புதிய சகாப்தத்தைக் கொண்டுவந்தது என நினைக்கின்றேன். திருமணமானவர்களுக்கும் திருமண ஆயத்தம் செய்வோருக்கும் சொல்ல வேண்டியவைகளை "குடும்பம் ஒரு கதம்பம்" என்ற பகுதியிலும் சின்னஞ் சிறார்களை உருவாக்கி, நல் நாற்று மேடைகளாக அவர்களை வளர்த்தெடுக்க "காவலன் கண்மணிகள்" என்றொரு பகுதியையும் அனைத்துத் தரப்பினரும் திருவிவிலிய அறிவைப் பெற்றுக் கொள்ளவும் உயர்தர மாணவர்களின் அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் "அருள்வாக்கு அறிவோம்" என்றொரு பகுதியையும் தொடக்கி வைத்ததோடு இலங்கைத் திருச்சபை - உலகத் திருச்சபை பற்றிய உடனடித் செய்திகளைத் தந்துதவிய பெருமை ஒரு காலகட்டத்தில் இடம் பெற்றது.

95ம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வின்போது அனைத்து நிர்வாகங்களுமே ஸ்தம்பித்த நிலையில் இருந்தபோது, இப் பத்திரிகையின் தகவல்களைப் பெறமுடியாது ஏங்கித் தவித்த பல உள்நாட்டு வெளிநாட்டு வாசகர்களை நான் அறிவேன். ஆனால் மீளக்குடியமர அரசாங்கம் அனுமதித்தபோது, உடனடியாக எமது பத்திரிகை புதிய உத்வேகத்துடன் நவீன கணனி முறையில் அருட்பணி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் பொறுப்பில் வெளிவரத் தொடங்கியுள்ளது. அது மட்டுமல்லாமல் வாசகர் வட்டம், எழுத்தாளர் வட்டம் எனப் பணிகளையும் பொறுப்புக்களையும் விரிவாக்கியதோடு உலகின் பல்வேறு நாடுகளுக்கும் இடம் பெயர்ந்து வாழும் கத்தோலிக்க மக்களை ஒன்றிணைக்கும் ஒரு ஊடகமாகவும் அவர்களின் கருத்துக்களையும் விமர்சனங்களையும் பக்கச் சார்பின்றி நடு நோக்குடன் வெளியிட்டு வருவது வரவேற்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு, திருச்சபையின் உண்மை நிலைப் பாட்டை தமிழ் ஆயர்கள் வெளியிடும்போதெல்லாம் தணிக்கை காரணமாக ஏனைய பத்திரிகைகள் வெளியிடத் தயங்கும்போதெல்லாம் இதுவே எமது நிலைப் பாடு என்பதைத் துணிவோடு உரத்துக்கூறும் எங்கள் பாதுகாவலனை நாம் இருகரம் கூப்பி வரவேற்கத் தான் வேண்டும்.

குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் நடைபெறும் ஒடுக்குமுறைகளை அடிக்கடி நேரடியாக அவதானித்து வரும் யாழ் ஆயர், மன்னார் ஆயர் அவர்களது கண்டனங்களையும் அவர்களது உண்மை நிலைப் பாட்டையும் அரசிற்கு எடுத்துச் சொன்ன உண்மை நிலைமைகளையும் எவ்வித தயக்கமுமின்றி உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்திய துணிவு வேறெந்தப் பத்திரிகைக்கும் இல்லையென்றே நான் கூறுவேன். அழுத்தங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் பணியாது, உண்மைக்குச் சாட்சியம் கூறுவதே திருச்சபையின் பணி என்பதை காவலன் இன்று உரத்துக் கூறுகிறது.

மனவருத்தத்துக்குரிய ஒரு செய்தியையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வாரமலராக ஆரம் பத்தில் தோன்றிய இப்பத்திரிகை "இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு" என்று முகப்பிட்டு வரும் இப்பத்திரிகை மாத இதழாக வந்து கொண்டிருப்பது ஏன்? என்று வாசகர்களுக்கு தெளிவு படுத்தலாமே?

# எனது பார்வையில் பாதுகாவலன் பற்றிய விமர்சனங்கள் விளக்கங்கள்

*கி. சா. பங்கிராஸ்*
*மறையாசிரியர்*

இலங்கையின் முதல் தமிழ்க்கத்தோலிக்க கிறிஸ்தவ வார இதழான பாதுகாவலன் பத்திரிகை 125 ஆண்டுகள் எமது யாழ் மறைவாட்டத்தில் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருவது மகிழ்ச்சிக் குரியது. யாழ் மறைமாவட்டத்திலும், இலங்கையில் ஏனைய மறைமாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் தமிழ் பேசும் மக்களிடையே பல தலைமுறைகளாக அரும்பணியாற்றிவந்துள்ளமை பாராட்டுக்குரியது.

கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தைப் பாது காத்து வளர்ப்பதை நோக்காகக்கொண்டு பாதுகாவலன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. கிறிஸ்தவ மறை உண்மைகளை விளக்கிக் கட்டுரைகள், கவிதைகள், கதைகள் என்று பல அம்சங்களை உள்ளடக்கி வெளியிடப்பட்டது. அனுபவமிக்க அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள், வினாக்களுக்கு விடைகள், மூட நம்பிக்கைகளைத் தகர்க்கும் தர்க்க ரீதியான விளக்கங்களைக் கொண்டிருந்தது சிறம்பம்சமாகும்.

பாதுகாவலனில் வெளியிடப்பட்ட பல விடயங்கள் ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதற்கு ஆதாரமாகவும் இருந்துள்ளது. இவ்வாறு உயர்வு நிலையில் இருந்து பத்திரிகை இடைக்காலங்களில் தளர்வு நிலையை அடைந்தமை கவலைதரும் விடயமாகும். அநேக மக்களின் உள்ளங்கவர்ந்த பத்திரிகையாக இருந்த பாதுகாவலன் வாசகர்களின் எண்ணிக்கையில் குறைவடைந்தமை பத்திரிகையின் தளர்வுநிலையை வெளிக்காட்டுவதாக இருந்தது. ஏனைய பத்திரிகைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டிய நிலையை இழந்தமை கசப்பான உண்மையாகும்.

அண்மைக்காலங்களில் இப்பத்திரிகை புதுப் பொலிவுடன் கவர்ச்சிகரமாக வெளிவருவது மகிழ்ச்சி அளிப்பதாகும். இக்காலத்தில் வெளிவரும் பல பத்திரிகைகள் போன்று அழகிய கவர்ச்சிகரமானதாகப் பாதுகாவலனும் திகழவேண்டும் என்பதே எம் ஆவலாகும். புதுமையும் பொருள்செறிவும் கொண்டு வெளி வருவது இன்றியமையாததாகும்.

கத்தோலிக்க ஏடுகள் ஊக்குவிக்கப்பட்டு வளர்க்கப்படவேண்டும் என வத்திக்கான் சங்கம் "சமூகத் தொடர்புக் கருவிகள்" என்ற தீர்மானத் தொகுப்பில் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. கிறிஸ்தவ உணர்வில் வாசகர்களை வளரச்செய்ய உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான கத்தோலிக்க வெளியீடுகளை நிறுவி வளர்க்க வேண்டும். திருச்சபை அதிகாரிகளாகவோ, கத்தோலிக்க மக்களாலோ ஊக்குவிக்கப்பட்டும், அவர்களைச் சார்ந்துமிருக்கும் இவ்வெளியீடுகள், இயற்கைச் சட்டத்திற்கும் கத்தோலிக்க கோட்பாடுகளுக்கும், கட்டளைகளுக்கும் இயைந்தவாறு பொதுமக்களின் கருத்துக்களை உருவாக்கி, உறுதிப்படுத்தி வளர்ப்பதோடு, திருச்சபைச் செய்திகளைப் பரப்பி, அவற்றுக்கு ஏற்ற விளக்கம் தரவேண்டும். எல்லா நிகழ்ச்சிகளையும் கிறிஸ்தவக் கண்ணோட்டத்துடன் பார்த்து முடிவு செய்வதற்குக் கத்தோலிக்க வெளியீடுகளைப் படிப்பதும், பரப்புவதும் இன்றியமையாதவை என விசுவாசிகளுக்கு உணர்த்தவேண்டும். (ச.க. எண். 14)

நற்செய்திப் போதகப் பணியிலும், கத்தோலிக்க மக்களின் விசுவாச வாழ்வை ஊக்குவித்து வளர்ப்பதிலும் கத்தோலிக்க பத்திரிகை என்ற மட்டில் பாதுகாவலனுக்குப் பெரும் பொறுப்பு உண்டு. மக்களின் இன்றைய வாழ்க்கைப் பிரச்சனைகளில் தெளிந்த சிந்தனையுடன் பக்கபலமாக நின்று ஊக்கமளிப்பதும் பெரும் கடமையாகும். கிறிஸ்து எவ்வாறு முழுமனித நலனில் அக்கறைகொண்டு புதிய ஓர் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப பணிபுரிந்தாரோ அவர் வழிநின்று நற்சமுதாயத்தைக் கட்டியெழுப்பப் பாடுபடவேண்டும்.

எனவே காலத்தின் தேவைக்கேற்ப மக்கள் மயமாக்கப்பட்டதாக அவர்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளித்து, சமுதாயத்தின் எல்லாத்தராத்தினருக்கும் ஏற்றவாறு பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி வெளிவர எல்லோரும் இணைந்து பாடுபடுவோம். பத்திரிகை தரமுடனும் சிறப்புடனும் வெளிவர ஆசிரியர் குழு அமைவதும், எழுத்தாளர்கள் பயிற்றப்படுவதும், கூட்டுப்பொறுப்புடன் செயற்படுவதும் வேண்டப்படுவதாகும்.

# என் இதயத்தைக் கவர்ந்தவளே . . .

பாதுகாவலன் என்னும் பேரழகே – நீ
எம்மவளே அடி எம்மவளே
எம் இதயத்தைக் கவர்ந்தவளே
தங்கத்தமிழில் முதன்முதலில் உருப்பெற்று
தனித்துவத்துடன் தலை நிமிர்த்திய
கத்தோலிக்க வார இதழாம் பூங்குழலே

நீ குரல் கொடுத்தால் – அது
"யேசு" என்ற நற்செய்தி நறுமணத்தை
இதயங்களின் அடிநாதங்களில்
இலகுவாய்ப் பரப்பிடுமே
சொர்க்கத்துக்குச் செல்லும் பாதையை
சொகுசாய் வாரந்தோறும் காட்டிடும்
யாழ்த்திருச்சபையின் அழகுத்திருவுருவே
நூற்றிருபத்தைந்து அகவை காணும் நீ
நூறுகோடி சவால்களை முத்தமிட்ட வீரப்பெண்

உன் நவீன கோலம் கண்டு
உலகமின்று உவகையால் உருகுதடி
உள் உயிரிலும் உள்ளடக்கத்திலும்
நற்செய்தி விழுமியங்கள் எனும்
நர்த்தனங்கள் அழகாய் என்றும் அரங்கேறுமே
இறையனுபவத்திற்கு எம்மையெல்லாம்
இலகுவாய் இழுத்துச்செல்லும்
பாதுகாவலிப் பெண்ணே!
"இணையத்திலும்" விரைவாய் இணைந்து
நற்செய்தி இதழ் பரப்பு.

பொன்னால் உனக்குத் தோரணங்கட்டி
பூந்தென்றலால் உனக்கு சாமரை வீசி
பனித்தூறலால் உனக்கு பன்னீர் தெளித்து
பல சந்தர்ப்பங்கள் என்னும் வண்ணங்களால்
உனக்குப் பொட்டிட்டு
அழகுமலர்களால் இணைந்த ஆரங்கள் பல
உனக்குச் சூட்டி
தீபாஞ்சலி, புஸ்பாஞ்சலி, தூபாஞ்சலி
என் கவிதாஞ்சலியால்
உன்னைக் கொஞ்சிக்குலாவி
மகிழ்வாய் வாழ்த்தும்
உன் காதலிகளில் ஒருத்தி.

*அருட்சகோதரி நெவிஸ் லடிஸ்லாஸ் H.C.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 125 ஆண்டில் வீறுநடை போடும் ஓர் ஏடு சத்தியவேத பாதுகாவலின் வரலாறு

*திரு. சாமுவேல் பெனடிக்ற்*

ஈழத்தின் முதற் தமிழ்ப்பத்திரிகை உதயதாரகை வட்டுக்கோட்டையைத் தலைமைப் பீடமாகக் கொண்டிருந்த கிறீஸ்தவ சபையொன்று அதனை வெளியிட்டது. Morning Star என ஆங்கிலத்திலும் உதய தாரகை எனத்தமிழிலும் ஒரே பத்திரிகையாக வெளி வந்தது.

இது வெளியிடப்பட்ட சில ஆண்டுகளின்பின் அனைத்து இலங்கைவாழ் தமிழ்க் கத்தோலிக்கரின் ஆன்மீக வளர்ச்சிக்கும் நல்வாசிப்புக்குமென 1876ல் யாழ். புனித வளன் கத்தோலிக்க (St. Joseph's Catholic Press, Jaffna) அச்சகத்திலிருந்து ஒரு சஞ்சிகை வெளியாயிற்று.

ஆரம்பத்தில் இச்சஞ்சிகை சத்தியவேத பாது காவலன் எனத் தமிழிலும் Catholic Guardian என ஆங்கிலத்திலும் ஒரே பத்திரிகையாக வெள்வந்தது. இரு வாரங்களுக்கொருமுறை பிரசுரமானபோதும் வாசகர்களின் பேராதரவைப் பெற்றதால் யாழ் கத்தோலிக்க தலைமைப்பீடம் பத்திரிகையில் பலமாறுதல்களையும் செய்து அதன் துரித வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தது.

1891லிருந்து இரு ஏடுகளும் தனித்தனியாக வெளியிடப்பட்டன. 1898ல் நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசரின் பங்களிப்பும் பாதுகாவலனுக்குக் கிடைத்தது. அவரது மறைபரப்புப்பணி, தமிழாராய்ச்சி, சமூகநலப் பணிகளுடன் பாதுகாவலன் ஆசிரியபீடத்திலும் தனது பங்களிப்பை மகிழ்ச்சியோடு அளித்தார். எனவே நல்லூர் சுவாமி அதுவரை தனியாக நடத்திவந்த அமலோற்பவ இராக்கினித்தூதன் பாதுகாவலனுடன் இணைக்கப்பட்டது.

1912 பாதுகாவலன் வார இதழாக்கப்பட்டது. ஆங்கில ஏட்டின் ஆசிரியர் உயர்திரு ஜேம்ஸ் மார்ட்டீன் பாதுகாவலின் காவலர் தமிழறிஞர் அருளப்பா முதலியார்.

கத்தோலிக்கத்துக்கெதிரான கண்டனங்கட்கு ஆணித்தரமான பதில்கள் அளித்தும், அனைத்துலக கத்தோலிக்க செய்திகளை சுடச்சுட வெளியிட்டும் ஆன்மீக எழுத்தோவியங்களையும் மற்றும் தரமான கதைகளையும் கட்டுரைகள் கவிதைகளையும் தாராளமாக வழங்கியும் காவலன் அன்று தொடக்கிய பணி இன்றுவரை தொடர்ந்துகொண்டே செல்கிறது. இதனால் கத்தோலிக்க விசுவாச விதைப்பில் நல்ல அறுவடை பெறப்பட்டது.

1930,40,50களில் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் பாதுகாவலனின் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பெரிய ஆசீர்வாதம், மரிசலின் அடிகளும் பரிமேலர் அருளானந்தம், பேராசிரியர் சவரிமுத்து, பண்டிதர் ஆசிநாதன், ஆசிரியர்கள் அடைக்கலமுத்து(அமுது) விக்ரர்(ஜெயம்) ஆகியோரின் ஆக்கங்கள் காவலனை அடிக்கடி அலங்கரித்தன.

பத்திராதிபர் ஞானப்பிரகாசம் பல இளம் எழுத்தாளர்களையும் ஊக்குவித்து பாதுகாவலன் மூலம் வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தினார். அவர்களுள் S. M. யோசவ், சாமுவேல் பெனடிக்ற் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பாதுகாவலின் மாறுதல்கள் தேவை. பழைய பாணி மாறி, புதிய முறைகள் புகுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. இவற்றை ஏற்றுக் கொண்ட ஆயர் எமில், இளங்கலாசான் தீயோகுப் பிள்ளை அடிகளை காவலன் நிர்வாகியாக நியமித் கல்லூரி அதிபராகவும், மறைக்கல்வி இயக்குனவும் பணியாற்றிக்கொண்டே காவலனில் முழுக் கவனத்தையும் செலுத்துவது தீயோகு அடிகளுக்கு வெகு சிரமமாயிருந்தது. எனினும் முழு ஆர்வத்தோடு சில புது முறைகளைப் புகுத்தினார்.

அடுத்த திரு.S.M.J. லூயிஸ் நிர்வாக ஆசிரியரானார். ஆயரின் அனுமதியோடு ஒரு ஆசிரிய குழுவை நியமித்து செயற்பட்டார். அக்குழுவில் சாமுவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெனடிக்ற் - ஆசிரிய தலையங்கம், இருளில் ஒளி உல்லாசவேளை, பேசும் பேனா, ஞான ஒளி பகுதி கட்கும், புதிய திருவழிபாட்டு முறைகளை விளக்கும் கட்டுரைகட்கும் பொறுப்பாயிருந்தார். இவ்வம்சங்களில் பேசும் பேனா, உல்லாசவேளை ஆகிய தொடர் அம்சங்கள் தியோகு அடிகள் நிர்வாகியாயிருந்த காலத்திலேயே தொடக்கப்பட்டு வாசகர்களால் நன்கு வரவேற்கப்பட்டிருந்தன.

செல்வி வயலற் இம்மானுவேல் செய்திகள், தகவல்கள், மொழிபெயர்ப்புக்கட்கு பொறுப்பாயிருந்த துடன் பல கட்டுரைகளையும் எழுதினார். திரு. அந்தோனிப்பிள்ளை சிறுவர் பகுதியைத் திறம்பட நடாத்தினார். மகளிர் மன்றம் செல்வி மேரிறோஸ் பிளசம் சாமுவேல் அவர்களால் நடாத்தப்பட்டது.

மகளிர் மன்றத்தை ஆடவரும் வாசித்துப் பயனடைகின்றோம் என் நீர்கொழும்பு மேயரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. டென்சில் பெர்னாண்டோ (பின்னர் கைத்தொழில் அமைச்சர்) அவர்கள் எழுதிய பாராட்டுரை மகளிர்மன்ற ஆறாவ தாண்டு சிறப்பிதழில் பிரசுரிக்கப்பட்டது.

அமுது, ஜெயம், ஆசிநாதர், எஸ். எம். ஜே, P. A. C. ஆனந்தராசா முதலிய பிரபல எழுத்தாளர் களின் கைவண்ணங்கள் காவலனை தொடர்ந்தும் அலங்கரித்தன. நாவண்ணன், பேர்ணாட் என்ற இளம் எழுத்தாளர்கள் இக்காலக் கட்டத்தில் அறிமுகப்படுத் தப்பட்டு பின்னர் பிரபல்யமடைந்தனர்.

நீ. மரியசேவியர், கரவையூர் செல்வம் என்ற இரு புகழ்மிக்க கலைஞர்களும் காவலன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டாரே ஆயினும் இவர்களின் கலையார்வம் கலைத்துறையில் அதிகமாக ஈடுபட வைத்தது. பாப்பரசர் முதன்முதல் இலங்கைவந்து விமானத்திடலில் நிகழ்த்திய திருப்பலி வர்ணனையால் மரியசேவியர் அடிகளார் புகழ்பெற்றார். அவர் முதலில் திருமறைக் கலாமன்றத்தால் அரங்கேற்றிய அன்பில் மலர்ந்த அமரகாவியம், அடிகளை கலைமூலம் இறை வனுக்கும், நாட்டுக்கும், தமிழ்மொழிக்கும் நிரந்தர கலைஞன் ஆக்கிவிட்டது.

பத்திரிகை உலகிலும் வானொலி அரங்கிலும் புதிய உலகம் படைத்தவர் கரவையூர்ச் செல்வம், காவலனையும் அவரது ஆக்கங்கள் அலங்கரித்தன. காவலன் இவ்விரு குரவர்களினதும் பொதுப்பணிகளை எண்ணி விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று.

பாப்பரசரின் முதலாவது இலங்கைவருகையை சிறப்பிக்க அடுத்தடுத்து அதிக பக்கங்களுடன் அரும் பெரும் எழுத்தோவியங்கள் வெளியிடப்பட்டன. வீர கேசரி வார வெளியீட்டு ஆசிரியர் உயர்திரு ராஜ கோபால் கூறியவை:- பாப்பு ஸ்தானம்பற்றிய நிறை வான அறிவை பாதுகாவலன் கட்டுரைகளால் நாம் பெற்றுக்கொண்டோம்.

ஆயர் எமிலின் மறைவின் பின் தியோகு ஆண்டகை, யாழ் மறைமாவட்ட ஆயராகப் பதவி யேற்றார். அவரது புரட்சிகர மாற்றங்களுள் ஒன்று "பாதுகாவலன்" ஆசிரிய பீடத்துக்கு முன்னாள் ஆயர்களால் விதிக்கப்பட்டிருந்த பல கட்டுப்பாடு களைத் தளர்த்தி, காவலன் ஆசிரிய பீடம் கூடி யளவு சுதந்திரமாக தொழிற்படச் செய்தமை" ஆகும்.

தொடர்ந்து அன்ரன் மத்தாயஸ் அடிகள் காவ லனின் ஆசிரிய பதவியை அலங்கரித்தார். அவர் செய்த சீர்திருத்தங்களுள் மிக முக்கியமானது பாது காவலன் எழுத்தாளர்களுக்காக பயிற்சிப் பாசறை ஒன்றை நடத்தியது ஆகும். இப்பாசறையில் அன்றைய பிரபல தமிழ் தினசரி, வாரப் பத்திரிகைகளின் (வீரகேசரி, தினகரன் உட்பட) பிரதம ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் (உயர்திரு. கைலாசபதி உட்பட) பிரபல தமிழ் எழுத்தாளர்கள் சமூகமளித்து எழுத்துத்துறையில் தங்கள் அனுபவங் களையும் பல அறிவுரைகளையும் வழங்கினார்கள்.

மைக்கல் யோசவ் அடிகளார் காவலன் ஆசிரியரான காலம் தமிழ்பேசும் சமூகத்தின் வர லாற்றில் இன்னல்களும் நெருக்கடிகளும் நிறைந்த காலமாகும். இவையும் தொடர்ந்து வந்த இடப்பெயர்வு களும் பாதுகாவலனையும் அச்சகத்தையும் பாதித்தன. இவற்றின் எதிரொலியாக பாதுகாவலனும் சிலகாலம் வெளிவரவில்லை.

பின் புலம் பெயர்ந்த நிலையிலும் பாதுகாவலன் இடையிடையே தன் நேயர்களை எட்டிப்பார்த்தான். தொடர்ந்து மக்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங் களுக்குச் செல்ல பாதுகாவலனும் தன் வழக்கமான பணியை ஆரம்பித்து நடத்துகின்றான். ரூபன் மரியாம் பிள்ளை அடிகள் காவலனின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றார். ஆர்வம் மிகுந்த சுறுசுறுப்பான இளைஞர் இவர். பாதுகாவனின் பழம்பெரும் எழுத்தாளர்களைச் சந்தித்து அவர்களது ஆலோசனைகளையும், ஆதர வையும் பெற்றும் இளைய தலைமுறை எழுத்தாளர் களை ஒருங்கிணைத்து அவர்களுதவியோடும் பாது காவலனைச் சிறப்பாக வெளியிட்டு வருகின்றார்.

125 ஆண்டுகளை - கத்தோலிக்க தமிழ் மொழிப் பணிகளில், பெருஞ்சிரமங்கள், பயங்கரங்கள் மத்தியில், சோதனைகள், வேதனைகளுடாக வெற்றி யுடன் தாண்டியுள்ள "சத்தியவேத பாதுகாவலன்" மென்மேலும் நற்பணியாற்ற இறையாசியை வேண்டி மங்களகர வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஆடிய தொட்டில்

புலவர் மணி - அமுது -
லண்டன்

பாதுகாவலன் நான் ஆடிய தொட்டில்., அடியேன் எழுத்துத் துறையில் ஆனா எழுதியது, தொட்டிலில் கிடந்த தடுக்கில்தான். காவலனே என்னை வளர்த்த அன்னை. காலமெல்லாம் அவளுக்குக் கடமைப்பட்டவன். காவலனே என்னைத் தோளில் வைத்துச் சிவ்வு வண்டியில் நடைபயிலச் செய்து அறிவூட்டி, ஆதரவளித்துத் தண்ணளி மிக்க தந்தையாயிருந்தது. யான் பயிற்சிக் கலாசாலையால் வெளிப்பட்டு ஆசியராயிருந்த ஆரம்ப காலத்தில் "எழுத்தாளருக்கு ஒரு தூது!" என்றொரு கட்டுரையை எழுதினேன். பாதுகாவனில் முதற்பக்கத்தில் அக் கட்டுரை வெளிவந்தது. அதைக்கண்டு ஆச்சரியத்தில் மிதந்தேன். வான மண்டலத்தில் சஞ்சரித்தேன். மரங்கள் தடிகள் எல்லாம் என்னைக் கண்டு தலை குனிந்தன. பலருக்கும் அதைக்காட்டிப் பெருமிதப்பட்டேன். அதை வாசித்த சுவாமி ஞானப்பிரகாசர், திருநெல்வேலியில் பத்துப் பதினைந்து ஆசிரியர்கள் மத்தியில் இளைஞனாகிய என்னைப் பாராட்டியபோது நான் அடைந்த ஆனந்தத்தை அளக்க ஒரு பாகைமானியும் இருக்கவில்லை.

நான் திருமணம் செய்தது, பிள்ளை பிறந்தது, பல்கலைக்கழகம் சென்றது, அங்கே "இளங்கதிர்" ஆசிரியராய் இருந்தது. நூல்கள் வெளியிட்டது, புலவர்மணி, தமிழ்க்கங்கை என்றெல்லாம் பட்டங்களைப் பெற்றது எல்லாவற்றுக்கும் முதல் வைத்த பொட்டு அந்தக் கட்டுரையே! என் வாழ்வின் திசையை அது திருப்பியது என்று சொல்லலாம். எனது முதற் கவிதையும் பாதுகாவலன் பண்ணையில்தான் முதல் மலராகப் பூத்தது. தமிழுலகில் சொற்கலைப் புலவர் என்றும் கத்தோலிக்க உலகில் பெரிய சுவாமி என்றும் பெயர் பெற்றிருந்த அறிஞரும், சிறந்த பேச்சாளரும், பன்மொழிப் பண்டிதரும், இரண்டாம் சாங்கோ பாங்க சுவாமியாருமாகிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் மறைந்தபோது (1947) அடியேன் காவலனில் "பூனை புலம்பல்" என்ற தலையங்கத்தில் சிலபாடல்களை எழுதியிருந்தேன். பூனையின் படம் ஒன்றையும் பக்கத்தில் போட்டு தடித்த எழுத்தில் எனது பாடல்கள் பிரசுரமாயின. அதைப் பார்த்து யான் பரவசமடைந்தேன்.

"பாலுஞ்சோறும் அள்ளித் தந்தவரே! - என்னைப்
பக்கத்தில் வைத்து வளர்த்தவரே!
மூலைக்குள்ளே நின்று கத்துகிறேன் - எந்தன்
முத்தமிழ் மன்னரே எங்குசென்றீர்!"

என்று புலம்பல் தொடங்குகின்றது. அந்தக் கவிதைகளையும் பலர் பாராட்டினார்கள். செவாலியர் அருளானந்தம் ஆசிரியர் ஒரு அற்புதமான கடிதம் எழுதி எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். அந் நாட்களில் யான் காவலூர் அந்தோனியார் கல்லூரியில் ஆசியராயிருந்தேன். திருநெல்வேலியில் சுவாமி ஞானப்பிரகாசரின் இடத்துக்கு நியமனமாயிருந்த பிலிப் அடிகளார், கல்லூரிக்கு வந்தார். என்னை அழைத்தார். அவரிடம் சென்றபோது "மாஸ்ரர் அந்தப் பூனை சாப்பிடாமல் கிடந்து செத்துப் போனது" என்றார். நான் திகைத்துப் போனேன். ஏனெனில் ஞானப்பிரகாசர் அன்பாக ஒரு பூனையை வளர்த்து வந்த செய்தியை நான் அறியேன். தொடர்ந்து பிலிப் சுவாமியார் "நீங்கள் பாட்டுக்களை எழுதுவதாயிருந்தால் தரித்திரத்தையும் சுமக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்" என்று சிரித்துக் கொண்டே சொன்னார். எப்படியிருந்தாலும் அவர் தமிழ்ப்பற்றில் ஆர்வமுடையவர்.

ஒரு புதுமுகத்தை அறிமுகப்படுத்தி அந்தத் திரைப்படம் ஒகோ என்று முன்னுக்கு வந்தால் அதன் இயக்குநர் எப்படி மகிழ்ச்சியடைவாரோ, முதற் பிரசவித்த குழந்தையைப்பார்த்து எப்படி ஒரு தாய் ஆனந்தமடைவாளோ அப்படியே எனது கட்டுரையும் கவிதையும் எனக்குப் பெரும் சந்தோஷத்தை அளித்தன.

யான் பல்வேறு இடங்களில் ஆசிரியராகப் பணியாற்றிய போதும் என் வாழ்க்கையில் காவலனே எனக்குக் கைத்துணையாயிற்று. நினைப்புக்கு எட்டிய காலம் முதல் பாதுகாவலனை நான் பெற்றுக்கொள்ளத் தவறவில்லை. இன்று லண்டனிலும் அதை வாசித்து வருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலனில் தொடர்ந்து கட்டுரைகள், கவிதைகள் எழுதிவந்தேன். காவலனுக்கு எழுதிய எந்தக் கட்டுரையாவது பிரசுரமாகாமல் விட்டதில்லை. இலங்கையில் வெளியாகும் ஏனைய பத்திரிகைகளுக் கும் எழுதிவந்தேன். எழுத்துத்துறையில் வாய்ப்புக்கள் மடியில் வந்து விழுவதில்லை. வாசிப்பும், சிந்தனை யும், ஆற்றலும் முன்னுக்குத் தள்ளிவிடும். "அமுது! என்ன 3, 4 கிழமையாக ஒன்றையும் காணவில் லையே!" என்று காவலன் ஆசிரியர் என்னைக் காணும் வேளையில் கூறி என்னை ஊக்கப்படுத்தி யதையும் நான் மறக்கவில்லை.

அக்காலத்தில் உதயதாரகை இந்துசாதனம், ஈழகேசரி என்று மூன்று பத்திரிகைகளும் வார இதழ்களாக வெளிவந்தன. உதயதாரகையே பத்திரிகை உலகில் மூத்த பத்திரிகை. சமயங்களுக்கிடையில் நல்லெண்ணமும் சகிப்புத் தன்மையும் மனிதநேயமும் இல்லாத அக்காலத்தில் இந்துசாதனமும் பாதுகாவல னும் எதிரிகளாக எழுத்தில் சத்தம் போடுவதுண்டு. அவற்றை ஆரவாரமாக நாங்கள் வாசிப்பதும் பதி லைக் காத்திருப்பதும் நல்ல பொழுதுபோக்கு. எஸ். ஏ. குரூஸ் என்று எழுதுகிறவருடைய வசன நடையும் கருத்துக்களும் மிகவும் சுவையுள்ளவை. அவர்தான் ஆசீர்வாதம் சுவாமியார். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அழகிய இலகுவான வசனநடையில் காவலனுக்கு அடிக்கடி எழுதுவார். பத்திரிகைத்துறை யின் வளர்ச்சியைப் பற்றித் தினகரன் ஆசிரியர் சிவ குமாரன் எழுதிய நூலில் யாழ்ப்பாணப் பத்திரிகை களாகிய பாதுகாவலன். இந்துசாதனம், உதயதாரகை, ஈழகேசரி என்பன பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். ஆதலின் அக்காலப் பத்திரிகைகளையிட்டு நான் இங்கு எழுத விரும்பவில்லை.

எனது காலப்பகுதியில் பல கவிதைகளை கவி மாமணி க.த. ஞானப்பிரகாசம் கவிஞர்கள் யுவன், ஜெயம் என்போர் எழுதியுள்ளனர். யான் "மாதா அஞ்சலி" என்று எழுதிய கவிதைகளை சந்தியோகுமை யோர் ஆலயத்தைச் சேர்ந்த ஓர் தமிழபிமானி நூலாக அச்சிட்டார். அதுவே எனது முதற்கவிதை நூல். ஆயினும் அந்நாட்களில் கவிதைகள் இடம்பெறுவது மிகக் குறைவாகவேயிருந்ததெனலாம்.

சிறுகதைகளைத் தொகுத்து ஒரு நூலாக்கலாம் என்று கருதி யாழ் மேற்றிராசன சங்க இலக்கிய மன்றம் முயன்றது. ஆயினும் சிறந்த கதைகள் வந்து சேராமையால் முயற்சி கைகூடவில்லை.

சில வேளைகளில் நல்ல சிறுகதைகள் காவல னில் தோன்றின. "நாலு நண்பர்கள்" என்றொரு சிறு கதையை அடியேன் காவலனில் எழுதியிருந்தேன். நண்பர்கள் தங்கள் கதைகளைச் சொல்லும் பாணியில் தொடர்புபடுத்தி அக்கதை எழுதப்பெற்றது. அதைக் கண்ணுற்ற சுவாமி சவுந்தரநாயகம் அவர்கள் (இப்போது யாழ் ஆயர்) அதைப்பாராட்டி எனக்கு எழுதியது பசுமையாக என் நினைவில் இருக்கிறது.

50 ஆண்டுகளுக்கு மேல் பாதுகாவலன் ஆசிரியராய் இருந்தவர் அமரர் அ. ஞானப்பிரகாசம் என்பவர். சிறந்த பண்பாளர் இலக்கணம் சுத்தமாக எழுதுவார் நல்ல பக்திமான் நாளாந்தம் தூர இடங் களிலுள்ள கோயில்களுக்கும் சென்று திரும்புவார். அவருக்குத் துணை ஆசிரியர்கள் இருந்ததில்லை. தட்டச்சு இருக்கவில்லை. லிகிதர் இல்லை. தன்னந் தனியாகக் காவலனை நடாத்தினார். அவருடைய சேவையைப் பாராட்டி வெள்ளிவிழா ஒன்று நடாத்தப் பட்டது. அமைதியும், அடக்கமும் இறையன்பும் நிரம்பிய அப்பத்திரிகை ஆசிரியர் எனக்குப் பொன் னாடை போர்த்துப் பட்டமளித்ததை நினைத்தால் கண்ணில் நீர் சுரக்கின்றது. அவருக்குப் பின்னர் பேனா பிடித்தவர் அமரர் லூயிஸ் என்பவர். ஆங்கில மும் தமிழும் கற்றவர். பத்திரிகை புதுச்சோபையுடன் வெளிவந்தது. பின்னர் காவலன் ஆசிரியர்களாகத் திருப்பணியாளர்களே பொறுப்பேற்றுக் கொண்டனர்.

125 ஆண்டுகாலம் ஒரு பத்திரிகை வெளி வருவது இலகுவான கருமம் அன்று. இந்த இலண்டன் நகரில் யான் வந்து 20 ஆண்டுகளில் எத்தனையோ பத்திரிகைகள் சிசுவிலேயே மரண மாயின. இரண்டொன்று நிலை நிற்கின்றன.

இப்போது காவலனில் புதிய கட்டுரைகள், புதுமையான செய்திகள் பலவேறு கவிதைகளக் கண்டுகளிப்படைகின்றேன். சமய வளர்ச்சியும் பாராட் டத்தக்கது. பாதுகாவலன் (ஈழத் திருச்சபையின் குரலொலி அதன் குரல் மங்காமல் பல்லாண்டு கேட்க வேண்டும்.) வருங்காலத்தில் சிறந்த எழுத்தாளர்கள் – கவிஞர்கள் – ஆய்வாளர்கள் நம்மத்தியில் தோன்ற வேண்டும். அதற்குக் காவலனே களம் அமைத்துக் கொடுக்கவேண்டும். சத்தியத்தின் குடைபிடித்துக் காவ லன் நீண்ட காலம் வாழுக என வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக அரசியல் பொருளாதாரத் தளங்களில் திருச்சபையின் நிலைப்பாடு

அருட்தந்தை C.G. ஜெயக்குமார்

## வரலாற்றுப் பார்வை

இலங்கையின் குடிசன எண்ணிக்கையில் கிறிஸ்தவர்கள் ஏனைய பல ஆசிய நாடுகளைப் போல சிறுபான்மையினராகவே உள்ளனர். 1981ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப் படையில் மொத்த 16.5 மில்லியன் மக்கள் தொகை யில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 1.3 மில்லியன் களாகும். இச்சிறுபான்மையினரில் அதிக எண்ணிக்கை யில் உள்ளவர்கள் அதாவது பெரும்பான்மையானோர் கத்தோலிக்கர்களாவர். இலங்கைத்தீவு சுதந்திரம் பெறு வதற்கு முன்பாகவும் (1948) அதற்கு பிற்பட்ட குறுகிய காலத்திலும் திருச்சபைகள் (கத்தோலிக்கர், புரட்டஸ்தாந்து) கல்வி, வைத்தியத் துறைகளில் ஆற்றிய பங்களிப்பு இந்நாட்டின் அபிவிருத்திக்குச் செய்த பெரும் பங்களிப்பாகும். கிறிஸ்தவர்கள் சிறு பான்மையினராக இருந்தபோதிலும், மேற்கூறிய கல்வி, வைத்தியத் துறைகளின் சேவையின் காரணமாக ஒருவித ஆதிக்க அதிகார நிலைகளில் இருந்தார்கள் என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். ஆனால் இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தில் திருச்சபைகளின் பங்கு அதாவது நிறுவன மயமாக் கப்பட்ட நிலையிலிருந்து இச்சபைகள் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பு என்று கூறிவிட முடியாது. எனினும் கிறிஸ்தவர்களில் சிலர் தனிப்பட்ட விதத்தில் சுதந்திரப் போராட்டம், அரசியலமைப்பு மாற்றம் போன்ற விடயங்களில் பங்களிப்பு செய்துள்ளமை இங்கு குறிப்பிடப்படல் வேண்டும். இவர்களில் கணிச மானோர் இடதுசாரிக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டு மாக்சிய சித்தாந்த அடிப்படையில் பங்களிப்பு செய்த மையினால் நிறுவனத் திருச்சபையின் அங்கீகாரமோ ஆசிகளோ இவர்கட்கு கிடைக்கவில்லை.

மேற்கூறிய நிலைப்பாடானது பெரும்பான்மை யான பௌத்த, இந்துக்களின் பார்வையில் "கிறிஸ்த வர்கள் எப்பொழுதும் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை யாளர்களின் அடிவருடிகள்", "ஏகாதிபத்தியத்தின் சலு கையினால் தங்கள் ஆதிக்க அதிகார நிலைப்பாட்டை வலுப்படுத்துகின்றவர்கள்" என்கின்ற ஒரு சந்தேக விமர்சனக் கண்ணோட்டத்துடனேயே நோக்கியமை இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும். இச்சந்தேக விமர்சனக் கண்ணோட்டமானது திருச்சபைகளின் சில செயற்பாடுகளினால் மேலும் இறுக்கமடைந்து திருச்சபையினால் நிர்வகிக்கப்பட்ட பாடசாலைகளில் பெரும்பான்மை மதத்தினரின் மதக் கல்வி போதிக்கும் சுதந்திரம் மறுக்கப்பட்டமை ஒரு உதாரணமாக இங்கே குறிப்பிடலாம். இப்படியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் கிறிஸ்தவர்கள் முழுத் தேசியத்தின் எதிராளிகளாக நோக்கத் தளமிட்டது. பெரும்பான்மைப் பிற மதத்தினரின் சந்தேகக் கண்ணோட்டமானது திருச் சபைக்கு பல சவால்களை தோற்றுவித்தது. இச் சவால்களில் முக்கியமானது 1961இல் பாடசாலைகள் அனைத்தும் தேசிய மயமாக்கப்பட்டு 45 பாடசாலை கள் மட்டுமே திருச்சபைகளின் முகாமைத்துவத்தின் கீழ் நிர்வகிக்க அனுமதிக்கப்பட்டமை. இப்பாடசாலை கள் அரசின் நிதியுதவியில்லாது தனியார் பாடசாலை களாக நன்கொடைகளின் அடிப்படையில் நிர்வகிக் கப்பட்டது. தனியார் பாடசாலைகளை தாமாகவே நிர்வகிக்க விடப்பட்டமையால் திருச்சபையின் பொரு ளாதாரத்தில் பெரும்பகுதி கல்விக்காக செலவிடப்பட வேண்டியிருந்தது. திருச்சபை சந்தித்த சவால்களில் இதுவும் ஒன்றாகும்.

இக் காலகட்டத்தில்தான் உரோமாபுரியில் இரண்டாம் வத்திக்கான் சங்க பொது அமர்வு நடை பெற்றுக்கொண்டிருந்தது. திருச்சபையின் வரலாற்றில் அதற்குப் புத்துயிர் அளித்து புதிய பாதையில் திருச் சபையை வழிநடத்திய ஒரு பொதுச் சங்கம் இவ் வத்திக்கான் சங்கமேயாகும். வத்திக்கான் சங்கத்தின் பின்பு கத்தோலிக்க திருச்சபை, தேசிய மேய்ப்புப் பணி மகாநாடு, ஆயர் சங்கம் (1966-1969) என்பவற் றைக் கூட்டி, எவ்வாறு திருச்சபை சமூகத்திற்கு, வேறு மதங்கட்கு மற்றும் மாக்சீய கொள்கைகட்கு தம்மை திறந்துவிட வேண்டும் என்று வத்திக்கான் சங்க பொது மொழியிலும் பேச ஆரம்பித்தது. எனினும் இப்படியான பேச்சுக்கள் பேச்சளவிலேயே இருந்ததேயன்றி, திருச்சபையின் தலைமைத்துவம் இவற்றிற்கு முழுமையான அங்கீகாரம் வழங்காமை யும் பெரும்பான்மைக் கத்தோலிக்கர்கள் வத்திக்கான் சங்கத்தின் முன்னைய நிலைப்பாட்டில் ஊறியிருந் தமையும் திருச்சபையைப் பொறுத்தமட்டில் பெரிய மாறுதல்களைக் கொண்டு வரவில்லை.

அறுபதுகளின் ஆரம்பத்தில் சிறு கிறிஸ்தவ குருக்கள் சமூக மையங்கள் அல்லது மைய நிறு வனங்களை (centres) அமைத்து வத்திக்கான் சங்கத்தின் கருத்துகளுக்கமைய செயல்பட ஆரம் பித்தன. இவைகள் கிறிஸ்தவர்கள் என்ற அடிப் படையில் திருச்சபையுடன் தொடர்புடையவர்களாக இருந்தாலும் நிறுவனத் திருச்சபையின் முழுமையான ஒத்துழைப்புடன் செயற்படவில்லை. இவற்றில் சில அரசியல் பொருளாதார விடயங்களிலும் வேறுசில மாணவர், பெண்கள், தொழிலாளர் வர்க்க விடயங் களிலும் மற்றும் சில மாக்சிய கொள்கையுடையவர் களோடு நெருங்கிய தொடர்பும் அவற்றோடு சம்பந்தப் பட்ட செயற்பாடுகளிலும் தம்மை அர்ப்பணித்திருந் தார்கள். திருச்சபையில் இதை 70, 80களில் ஏற்பட்ட இறையியல் சிந்தனைக்கு புதிய வடிவம் கொடுத்த வைகள் இம் மைய நிலையங்களின் சிந்தனையும் செயற்பாடுகளுமேயாகும். இக் காலகட்டத்தில்தான் திருச்சபை சமூகத்தின் அரசியல் சமூக பொருளாதார அம்சங்களில் ஈடுபாடு கொண்டு செயல்பட ஆரம் பித்தது. உருவாக்கப்பட்ட சமாதான அபிவிருத்தி ஆணைக்குழுக்கள், கிறிஸ்தவ மாணவர் அமைப்பு, கிறிஸ்தவ தொழிலாளர் அமைப்புக்கள், திருச்சபையின் சமூக அரசியல் பொருளாதார ஈடுபாட்டிற்கு உதார ணங்களாகும். மேற்குறிப்பிட்ட சமூக மைய நிறுவனங் களோடு திருச்சபையின் வெவ்வேறு அமைப்புக்களும் நெருங்கி செயல்படத் தொடங்கியது. திருச்சபைத் தலைமைப் பீடங்களும் இவ்வொருங்கிணைந்த செயல்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கியது.

## அரச கொள்கைத் திட்டங்களில் மாற்றம்

மாக்சீய சித்தாந்தங்களைக் கொண்ட அமைச் சர்களுடன் 70களில் பதவிக்கு வந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி புதிய கொள்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அதன் விளைவு உள்ளூர் வெளிநாட்டு, தோட்ட தனியார் உடமைகளை தேசிய மயமாக்கியமை நில உரிமைகளை தனிக் குடும்பத் திற்கு 85 ஏக்கர்களாகவும் பயிரிட்டுக் காணி உடமை களை 50 ஏக்கர்களாக மட்டுப்படுத்தியமை போன்ற வையாகும். எழுபதுகளில் ஏற்பட்ட பொருளாதார சமூக மறுசீரமைப்பிற்கு திருச்சபை எதுவித அழுத்தத் தையும் கொடுக்கவில்லை. ஆனால் மேற்கூறிய சமூக மையங்கள் முக்கிய கவனம் செலுத்தின. இவைகள் 70களில் ஏற்பட்ட அரசியலமைப்பு மாற் றம், அடிப்படை மனித உரிமைகள், பாராளுமன்றத் தேர்தல் போன்ற விடயங்களுக்கு அழுத்தம் கொடுத் தன. ஜனத்தா விமுக்தி பெரமுன (JVP) 1971இல் அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் குதித்தது. நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்பட் டவர்கட்காக இச்சமூக மையங்களே மனித உரிமை களை வலியுறுத்தியது.

தொடர்ந்து பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி "உலக மயமாக்கலை" அல்லது திறந்த பொரு ளாதாரச் சந்தை முறையை இந்நாட்டில் நடைமுறைப் படுத்தியது. முதலாளித்துவ பாதையூடாக பொருளா தார அபிவிருத்தியை ஏற்படுத்த முனைந்தது. அதன் விளைவு சுதந்திர வர்த்தக வலயங்கள், தாராள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயமாக்கல், அரச தலையீட்டுக் குறைப்பு போன்றவை நடைமுறைக்கு வந்தன. வெளியார் முதலீடுகட்கு குறிப்பாக பல்தேசியக் கம்பனிகளின் முதலீடுகட்கு அரசு பூரண ஒத்துழைப்பு வழங்கியது. அதற்காக அதிகாரம் குறிக்கப்பட்ட ஜனாதிபதியைக் கொண்ட அரசியலமைப்பு ஒன்றை அமுலுக்குக் கொண்டுவந்தது என்பதை இங்கு நாம் குறிப்பிடலாம். தூர நோக்கில் அதிகாரம் குவிக்கப்பட்ட ஜனாதிபதி முறைமை ஜனநாயக அமைப்பு முறைக்கு சவாலாகவே இருந்தது.

திருச்சபை மேற்கூறிய உலகமயமாக்கலை அவற்றிற்கேதுவாக அமைந்த அரசியல் மாற்றத்தைப் பற்றிப் பெரிதாக விமர்சிக்கவில்லை. எனினும் அவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள், பாதிக்கப்படுபவர்கள் பற்றி சில விடயங்களை வலியுறுத்தியது. ஆனால் மேற்குறிப்பிட்ட சமூக மையங்கள், அரசின் ஜனநாயக முரண்பாடுகள், மக்களை மையப்படுத்தாத முதலாளித்துவ நடைமுறைகட்கு எதிராகக் குரல்கொடுத்தன. உதாரணமாக 1978ல் அமுலாக்கப்பட்ட ஜனாதிபதி முறையிலான அரசியல் அமைப்பு மாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தது மட்டுமல்லாது, உலகமயமாக்கலின் அபீத விளைவுகளை தெளிவாக எடுத்துக் காட்டி பிரச்சாரமும் செய்தார்கள்.

எழுபத்தேழுகளில் நடைபெற்ற பொதுத்தேர்தலைத் தொடர்ந்து எழுந்த இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்கட்கு நிவாரண உதவிகளை வழங்குவதில் திருச்சபை மற்றைய சமூக-மத நிறுவனங்களை விட சாதி சமய இனவேறுபாடின்றி உழைத்தமை பலராலும் பாராட்டப்படதொன்றாகும். மற்றைய சமூக - மத நிறுவனங்கட்கு ஒரு மாதிரியாக இச் சேவை அர்ப்பணிப்பு அமைந்திருந்தது. இத்தகைய நிலைப்பாடு திருச்சபையானது "நற்கிரிகை மாதிரியையிலிருந்து (Charity Model) பெரிதாக மாறவில்லை என்று இங்கு குறிப்பிடலாம். இலங்கை நாட்டை மீள் கட்டியெழுப்புதல்" (Towards the Rebuilking of the Sri Lankan Nation) என்னும் ஆயர்களின் மேய்ப்புப்பணி சுற்றுமடல் இக்காலக்கட்டத்தில் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கவொரு விடயமாகும். இனப்பிரச்சினைகளில் சிறுபான்மை மக்கள் இன்மை நிலைக்கு தள்ளப்பட்டமை, அவற்றிற்கான தீர்வு அரசு சமாதான வழிகள் மூலம் தீர்க்கப்படவேண்டும் என்பன போன்ற அம்சங்களை திருச்சபை வலியுறுத்தியது பாராட்டப்படவேண்டியதொன்றாகும். திருச்சபை மீண்டும் இலங்கை அரசியல் சமூக பொருளாதார விடயங்களில் பங்குகொள்ள இம்மடல் வழிகோலியது. திருச்சபை இனப்பிரச்சனை விடயத்தில் முனைப்பாக செயல்பட ஆரம்பித்த காலமது என இக் காலக்கட்டத்தைக் கொள்ளலாம். பேச்சு வார்த்தையினால் மட்டுமேயன்றி இராணுவ ஆயுத பலத்தினால் எதையும் சாதிக்கமுடியாது என தூரநோக்கோடு திருச்சபை வலியுறுத்தியது. எண்பதுகளுக்குப்பின் குறிப்பாக தமிழ் பிரதேச திருச்சபைகள், மனித உரிமை மீறல்கள், நிவாரணப் பணி, அகிம்சைப் போராட்டங்களின் முன் நின்று உழைத்தார்கள். அதன் பரிசாக சில மதக் குருக்களையும் இழக்கவேண்டிய நிலைக்கு திருச்சபை தன்னை அர்ப்பணித்தது ஆயர்கள் மட்டத்தில் இப்படியான நடவடிக்கைகட்கு எதிர்ப்பு இருக்க வில்லை. ஆயர்கள் பலர் அரசியல் மத, வெளிநாட்டு தூதுவர்கட்கு கடிதங்கள் வரைந்து அத்துடன் நேரடியாக சந்தித்த மனித உரிமைகளை மீறல்கள், பேச்சு வார்த்தை மூலம் மட்டும்தான் தீர்வு என்பதைப்பற்றி விளக்கி திருச்சபைக்கு சமூகத்தின் மீதுள்ள அக்கறையை வெளிப்படுத்தியுள்ளனர் என்று இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். ஆயர்களின் பத்திரிகை அறிக்கைகள் பல சர்ச்சைகளையும் தூண்டி விட்டமையும் இங்கு குறிப்பிடப்படல் வேண்டும்.

## சமூக அரசியல் பொருளாதார விடயங்களில் கிறிஸ்தவ பதில்கள்

எண்பதுகளில்தான் திருச்சபையின் நீதி சமாதான அபிவிருத்தி ஆணைக்குழுக்கள் நிவாரணப் பணியோடு மட்டும் நின்றுவிடாது, மனித உரிமைகள் விடயங்களை மேம்படுத்துவதிலும், இனப்பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் கொடுக்கும் வழிகளில் மற்ற சமூக அமைப்புக்களுடனும் சமூகமையங்களுடனும் இணைந்து முனைப்பாகச் செயல்பட தொடங்கியது. தமிழ்ப் பிரதேசங்களில் பாராளுமன்ற பிரதிநிதிகளின் செயல்பாடுகள் முற்றாக செயல் இழந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் "மக்கள் குழுக்களை" அமைத்து பிரச்சனைகளை மனித உரிமைகள் மீறல்களை வெளிக்கொணர்வதற்கு திருச்சபை பெரிதும் உழைத்தது.

இது விடயமாக, திருச்சபை வடக்காகவும் தெற்காகவும் பிரிந்து இனரீதியாக செயல்பட தொடங்கியமை துர்அதிஸ்டமானதே. குறிப்பாக வடகிழக்கு திருச்சபைகள் விடுதலை இயக்கங்களின் அபிலாசைகளை பிரதிபலித்த ஒன்றாக, அதாவது வெளிப்படையாக இல்லாது விடினும் மறைமுகமாகத் தமிழீழக் கோரிக்கையை அங்கீகரித்தது எனலாம். (இது விடய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக பல கருத்து முரண்பாடுகள் இல்லை என்று கூறிவிட முடியாது.) வடகிழக்கின் நிறுவக திருச்சபை தமழீழம்தான் திருச்சபையின் நிலைப்பாடு என்று வெளிப்படையான நிலைப்பாடாக அங்கீகரிக்கப்படா விட்டாலும் குருக்கள் கத்தோலிக்கர் (எண்ணிக்கை யில் எவ்வளவு என்று கூறமுடியாது) தமீழழ அல்லது அதற்குச் சமமாகவுள்ள ஒரு நிலைப்பாட்டை கொண்டிருந்தனர். அதேபோன்று தெற்குத் திருச்சபை களிலும் அநேகர், தேசிய ஒருமைப்பாடு, "பயங்கர வாதத்தை ஒடுக்குதல்" போன்ற விடயங்களில் வட கிழக்கு திருச்சபையின் நிலைப்பாட்டிற்கு துருவ நிலைப்பாட்டையே கொண்டிருந்தனர். இதன் விளைவு இலங்கைத் திருச்சபை இனப்பிரச்சனை விடயமாக ஒரு தனித்துவமான கிறிஸ்தவ நிலைப்பாட்டிற்கு பதிலாக இனரீதியான, துருவ நிலையையே இரு பகுதியினரும் கொண்டிருந்தனர். இந்நிலைக்கு முக்கிய காரணிகளில் ஒன்று, இலங்கைத் திருச்சபையின் கிறிஸ்தவர்கள் இனரீதியாக சிந்திக்க முற்பட்டமையும், மொழிரீதியாக வரும் செய்தியூடகங்களின் வழிநடத்து தலில் தங்கள் செயல்பாடுகளை மையப்படுத்தியமையே எனலாம்.

இனப்பிரச்சனை விடயமாக 1984ல் நடை பெற்ற வட்டமேசை மகாநாட்டிலும் திருச்சபை தீர்வுக்கு மாவட்ட ரீதியான அதிகாரப் பரவலாக்க லையே வலியுறுத்தியது. இது முழுத்திருச்சபையின் நிலைப்பாடாக இருந்தது. இப்படியானதொரு நிலைப் பாட்டையே முஸ்லீம், இடதுசாரிக் கட்சிகள் மலை யகத் தொழிலாளர் கட்சிகள் கொண்டிருந்தமை இங்கு குறிப்பிட வேண்டியதொன்றாகும். திருச்சபை பல வழி களிலும் இறுக்கமாக துருவமயப்படுத்தப்பட்ட இரு இனங்களையும் ஒற்றுமைப்படுத்தும் ஒரு அலகாகவே இன்றும் செயல்படுகின்றது.

திருச்சபையின் நிலைப்பாடு தீவிர போக்குடைய சிங்களவராலோ, தமிழர்களாலோ முழுமையாகப் புரியப் படவில்லை. சில தீவிர சிங்களவர் தமிழ் கிறிஸ்தவர்கள் தங்களை தமிழர்களாகவே எண்ணுகின்றனர் என்றும் தமிழரில் சிலர் சிங்களக் கிறிஸ்தவர்கள் தங்களை சிங்களவராகவே எண்ணுகின்றனர் என்றும் மாறிமாறி விமர்சிப்பதை அவதானிக்கலாம். புலம் பெயர்ந்து வாழும் தமிழ் கிறிஸ்தவர்கள் (குருக்கள் உட்பட) சிங்களவர்கட்கும் இலங்கை அரசிற்கும் எதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்ததுமல்லாமல், ஆயுதப் போராட் டத்திற்கு நிதியுதவியும் செய்கின்றார்கள் என்பது சிங்களவர்களின் விவாதம். அதேவேளை தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் அரச பயங்கரவாத செயல் களை சிங்கள கிறிஸ்தவர்கள் கண்டிப்பதேயில்லை அல்லது அவர்கள் எடுக்கும் நிலைப்பாடு இறுக்கமான தாகவோ பலமுள்ளதாகவோ இல்லை என்று தமிழ்க் கிறிஸ்தவர்கள் குறைகூறுவதை இங்கு கவனத்தில் எடுக்கவேண்டும் எனினும் திருச்சபையின் நிலைப்பாடு ஒன்றுபட்ட இலங்கையின் கீழ் அதிகாரப் பரவலாக் கலில் இனப்பிரச்சனைக்குத் தீர்வு என்பதாகும்.

## மேய்ப்புப்பணி மடல்கள்

இனப்பிரச்சனை ஆரம்பித்தபின்பு 1984 ஆனி யில் வெளிவந்த "இலங்கை நாட்டை மீள் கட்டி யெழுப்புதல்" என்னும் மடல் சமகால சூழ்நிலை எமது வரலாற்று கடப்பாடு, தமிழ் சிங்கள உறவு இந்தியா வம்சாவழி பெருந்தோட்ட மக்கள், தமிழர்களின் பிரச் சனைகள் போன்ற பல அம்சங்களைப் பற்றி விளக்கி அறிவுறுத்தியுள்ளது. இதில் இனப்பிரச்சனை தீர்க்கப் பட வேண்டியதன் அவசியம் இல்லையே அதனால் வரும் பக்கவிளைவுகள் பற்றி தூரநோக்கோடு விளக்கி யிருப்பது திருச்சபையின் சமூக பொருளாதார அரசி யல் கருசனையை தெளிவாகக் காட்டுகின்றது.

முதல்முறையாக ஐப்பசி 1988ல் திருச்சபையின் ஆயர்கள் துறவற சபைகளின் முதல்வர்கள் பொது நிலையினரின் பிரதிநிதிகள் இனப்பிரச்சனை விடயமாக அறிக்கையொன்றை மக்கள் முன்பாக சமர்ப்பித்தனர். இவ்வறிக்கை நாட்டுப்பிரச்சனையை ஆராய்ந்து ஜன நாயக மனித உரிமைகள் சமூக நீதி, இனஒற்றுமை போன்ற விடயங்களில் சில பரிந்துரைகளைச் செய்த னர். இவ்வறிக்கை பொதுவானதாக இருந்தாலும் திருச் சபையின் ஏகோபித்த நிலைப்பாட்டை கோடிட்டு நிற்கின்றது.

இதனைத் தொடர்ந்து தேசிய மேய்ப்புப்பணி மகாநாடு சித்திரை 1995ல் பண்டாரநாயக்க மண்ட பத்தில் கூட்டப்பட்டது. இதில் ஆயர்கள் குரு, துறவற, பொதுநிலையினரின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி அர்த்தமுள்ள மறைபரப்பிற்கு புதுப்பித்தலும் புனிதத்து வமும் அவசியம் என்பதை வலியுறுத்தி, திருச்சபை யின் சமூக, அரசியல், பொருளாதார ஈடுபாடு புதுப்பித் தலிலே தங்கியுள்ளது என்பதையும் தெளிவுபடுத்தி னார். இம்மகாநாடு திருச்சபையின் பொதுவான மேய்ப் புப்பணி விடயங்கள் உள்ளடக்கி இருந்தாலும், இனப் பிரச்சனை விடயமாக திருச்சபையின் பங்களிப்பு, நிலைப்பாடு என்ன என்பதை விளக்கியது. மகாநாட் டில் இனப்பிரச்சனை விடயங்களில் பல கருத்து மோதல்கள் நடைபெற்றாலும் இறுதியில் அறிக்கை புத்தக வடிவில் வந்தபோது, திருச்சபையின் முன் னைய நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பொதுக் கருத்துக்களை வெளியிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக தைத்திங்கள் 6ம் நாள் "2001ல் ஆயர்கள் 2001 புதிய மிலேனியத்தில் பயணித்தல்" என்னும் மிலேனிய மேய்ப்புப்பணி மடல் வெளியிடப் பட்டது. இம்மடலிலும் பல மேய்ப்புப்பணி விடயங்கள் ஆராயப்பட்டாலும் சமூக அரசியல் பொருளாதார பிரச்சனைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று நாடு சந்திக்கும் முக்கிய சவால்களையே பலாத்கார கலாச் சாரம், வறுமை, ஜனநாயக அமைப்பின் சரிவுகள், மனித உரிமை மீறல்கள், ஊனங்கள், மதவிழுமியங் கள், சீரழிவுகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் சுரண்டல்கள், ஏழை பணக்கார ஏற்றத்தாழ்வுகள் பற்றி வெவ்வேறு அம்சங்களாக அறிவுறுத்தப்பட்டு ஆலோசனைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் முக்கிய பிரச்சனையாகிய இனப்பிரச் சனை விடயமாக திருச்சபையின் நிலைப்பாடு, அத்து டன் ஆலோசனைகளும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. ஆனால் அனைத்து மேய்ப்புப்பணி மடல்களும், திருச் சபையின் எத்தனை சதவீதத்தினர் வாசிக்கின்றனர் என்பது முதலில் குறிப்பிடப்பட வேண்டியதொன்றா கும். ஆனால் அவற்றின் தாக்க விளைவுகள் இல்லை யெனின் அவை வெளியிடப்படுவதும் வெளியிடப் படாது இருப்பதும் ஒன்றுதான். இவைகள் குறைந்தது குருக்கள் துறவியர் மட்டத்திலும் வாசிக்கப்பட்டு கலந் துரையாடப்பட்டதா என்பது கேள்விக்குறியே?

அடுத்து, திருச்சபை இனப்பிரச்சனை விடய மாக எடுக்கும் நிலைப்பாடு அரசியல் சார்புடையதாக இருக்கமுடியாது. முக்கியமான ஒன்றை எடுத்தால் "ஒன்றுபட்ட இலங்கையின் கீழ் என்பது அரசியல் சார்புடையது" இக்கருத்து நிலை அனைத்து இன மக்களின் நிலைப்பாட்டை உடையதா அன்றேல் ஒரு இனத்தின் அரசியல் நிலைப்பாடாக இருக்கின்றதா என்பவைகள் கருத்தில் கொள்ளப்படவில்லை. திருச் சபை, மனித உரிமைகள் ஒழுக்க நெறிமுறைகள் என்பன பற்றி பேசும்போது, அவை அரசியல் நிலைப் பாடு (Political Stand) அற்றவையாகவே இருக்கும். அதனை விடுத்து "ஒன்றுபட்ட இலங்கையின் கீழ்" என்ற நிலைப்பாடு அரசியல் நிலைப்பாடு, அப்படி யானதொரு அரசியல் நிலைப்பாடு மீண்டும் திருச் சபையினுள் புகுந்து கிடக்கும் துருவ நிலைப்பாட்டை வலுவடையச் செய்யும்.

மேலும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை தாயக் கோட்பாட்டு உரிமை போன்ற முக்கிய மனித உரிமை விடயங்கள் பற்றி திருச்சபையின் நிலைப்பாடு என்ன என்பது இன்னும் எந்த மடல்களிலும், தெளி வாக்கப்படவில்லை! மனித உரிமை விடயங்களில் திருச்சபை ஒரு பொதுவான நிலைப்பாட்டை எடுக்க லாம். எடுக்கவேண்டும். ஆனால் அரசியல் நிலைப் பாட்டின் ஒரு பொதுவான நிலைப்பாட்டை எடுக்க லாமா என்பது முக்கிய ஆலோசனைக்குரியது.

எனினும் இன்றைய திருச்சபை இந்த வத்திக் கான் சங்க ஒளியில் கொணர்ந்த மாற்றங்களின் படி தனக்குரிய சமய, சமூக, பொருளாதார கூறுகளின் நிலைப்பாடுகளை விடாமல் கட்டிக்காத்து வருகின்றது.

# பாதுகாவலனுக்குப் பா

சத்திய வேதத்தின் நித்திய காவலன்
பாதுகாவலனே!
எத்திசையும் பறந்தே எங்கும் மறைபரப்பும்
எங்களின் காவலனே!

புனிதரின் கதை சொல்லி மனிதரின் மனம் மாற
புத்துயிர் அளிப்பவனே!
"மனிதம்" இவ்வுலகில் வாழ்ந்திட முழுப்பலம்
அளிப்பவன் காவலனே!

காவலன் கண்மணிகள் ஆர்வமுடன் படிக்க
கதைகள் சொல்பவனே!
ஆவலுடன் ஆயர், திருத்தந்தையின் செய்தி
அள்ளியே தருபவனே!

ஆன்மீகத் தோடந்த அரசியல் இறையியல்
ஆழமாய் உணரவைத்தே
அமைதி, சுதந்திரம் அதற்காயும் உழைக்கும்
அன்பனும் காவலனே!

பொதுநிலையினர் பணி திருச்சபைப்பணி என
முழக்கமிடும் அவனே!
வழிபாடு வேறு வாழ்க்கை வேறல்ல
என்பவன் காவலனே!

நூறுடன் இருபத்து ஐந்து அகவை காணும்
பேறுபெற்றாய் வாழி!
மாறும் உலகம் தன்னில் மாறாமல் பல்லாண்டு
மாண்புடன் வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அடிகளின் வரவும,
அருள்திரு. அன்ரன் மத்தாயஸ் அடிகளின் பிரிவும்
(1997)



பாதுகாவலன் பத்திரிகையின் ஆதரவில் நடாத்தப்பட்ட ஊடகவியல்
பயிற்சிப் பட்டறையில் பயிற்சி பெற்றோர்
(23, 24-09-1995)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிப்புற்ற வேளையிலும் துணிந்து பணிசெய்த பாதுகாவலன்

## 1992 - 2000

செல்வி. மேரி வளோறன்ஸ்.ஞுசைதாஸ்

## முன்னுரை

"அவர்களது அறிக்கை உலகெங்கும் சென்றடைகின்றது, அவர்கள் கூறும் செய்தி உலகின் கடையெல்லைவரைக்கும் எட்டுகின்றது." (உரோ. 10:18) என்னும் மறைநூல் வாக்கிற்கு இணங்க, இலங்கை கத்தோலிக்க திருச்சபையில், குறிப்பாக யாழ் திருச்சபை வரலாற்றில் மங்காப்புகழ் பெற்று எங்கும் நற்செய்தி அறிவிப்பதில் முதன்மை பெற்றது, இலங்கையின் ஒரே ஒரு கத்தோலிக்க வார இதழாகத் திகழும் பத்திரிகைதான் எம் விசுவாசத்தின் காவலன் "பாதுகாவலன்." நற்செய்தி அறிவிப்புப்பணியின் வடிவங்கள் பலவாயினும் பத்திரிகையியல் என்னும் சமூகத்தொடர்பின் மூலம் இறைமகன் கிறிஸ்துவின் நற்செய்திப் பணியை உலகின் கடையெல்லை வரை எட்டச்செய்யும் பணியில் தன்னை இற்றைக்கு 125 ஆண்டுகளாக அர்ப்பணித்து அர்ச்சனை மலராக மலர்ந்த பூரிப்பில் மகிழ்வெய்துவதுதான் இப் பாது காவலன் பத்திரிகையாகும்.

யாழ் மண்ணில் உதித்த பத்திரிகைகளில் முதன்மையானதும், இலங்கையின் ஒரே கத்தோலிக்க தமிழ்ப் பத்திரிகை என்ற வகையில் இதன் சிறப்பிடம் விதந்துரைக்கத் தக்கது. இப்பத்திரிகையானது 125 ஆண்டுகளை தன் வாழ்நாளில் நிறைவெய்தி நிற்கும் இவ்வேளையில் இதன் முன்னைய வரலாறுகளை பல பெரியார்கள் பல உண்மைகள், ஆதாரங்கள், வரலாறுகள் மூலம் எழுத்துருக்கொடுத்து எடுத்தியம்பியுள்ளனர். பல காலப்பின்னணிகளை தன்னகத்தே கொண்டு விளங்கி பல முன்னேற்றங்களிலும், பின்னடைவுகளிலும் துணிந்து நின்று தொடர்ந்து சென்றமையினால், ஒன்றேகால் நூற்றாண்டினை தன் வாழ்வுச் சக்கரமாக்கிச் சுழன்று கொண்டிருக்கின்ற வேளையில் இதன் இறுதி பத்தாண்டிற்குட்பட்ட காலப்பகுதியான யாழ் மண்ணின் பாதிப்புக்கள் பல்லாயிரமாகப் பரிணமித்த காலத்தில் பாதுகாவலன் பணி எத்தன்மை வாய்ந்தது (1992-2000) என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமூகங்களுக்கிடையே முக்கியமான தொடர்பான உருவாக்கும் சாதனங்களில் சக்திமிக்கது பத்திரிகையாகும். ஏனெனில் கண்களால் காணும் காட்சிகளும், செவியால் செவிமடுக்கும் செய்திகளும் சில நொடிப் பொழுதுகளில் மறைந்துவிடும். மறந்துவிடும். ஆனால் பேனாமுனையில் எழுத்தாக்கம் பெறும் செய்திகளோ என்றும் மறைவதில்லை. இன்றைய நவீன தொழில் நுட்ப தகவல் யுகத்திலே பல வடிவங்களைக் கொண்ட பத்திரிகைகளை நாம் கண்ணுறுகின்றோம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்கின்றோம். ஆனால் அவை எவ்வளவிற்கு எமது வாழ்வை வளப்படுத்துகின்றன? ஆன்மாவை லயப்படுத்துகின்றன என்றால் அது கேள்விக்குறியே! ஆனால் இற்றைக்கு 125 ஆண்டுகளாக முற்றிலும் ஆன்மீகத்துறை சம்பந்தமான, கிறிஸ்தவ நெறி முறைகள், விழுமியங்களைத் தாங்கி இவ் இறுதி யாண்டிலும்,(2001) அகில இலங்கை ரீதியில் சிறந்த வடிவமைப்பிற்கான விருதினைப்பெற்றமை இதன் முதிர்ச்சியான அனுபவத்தையே காட்டுகின்றதென்பதில் ஐயமில்லை. எனவே இப்பத்திரிகை கத்தோலிக்க ஆன்மீகப் பத்திரிகை என்பதும் நோக்கற்பாலது.

## 1992ஆம் ஆண்டில் வெளியான பத்திரிகைகளிலிருந்து..

இலங்கையின் பன்நெடுங்காலமாகத் தொடரப் பட்டுக்கொண்டிருக்கும் பயங்கரப்போரின் விளைவால் அரசியல், சமய, சமூக, பொருளாதார, கலாச்சாரங் கள் மாற்றப்பட்டு சிதைக்கப்பட்டு, சிதறடிக்கப்பட்ட போதும் காலத்தின் கோலத்திற்கு ஏற்ப தம் மக்களை விசுவாச நெறிபுரளாது நெறிப்படுத்திய வலிமை விசு வாசத்தின் காவலான பாதுகாவலனுக்கு உண்டென்பது மறுக்க முடியாத உண்மையாகும். இக்காலத்தில் இலங்கை நாட்டில் மட்டுமல்ல யாழ் திருச்சபை வரலாற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டன என்பதை இக்காலப் பத்திரிகைகள் கோடிட்டுக்காட்டு கின்றன. மேலும் இவ்வாண்டில் ஜனவரி 24ல் வெளியிடப் பட்ட பத்திரிகையானது 1992ல் தமது குருத்துவ வாழ்வின் பொன்விழாவைக் கொண்டாடிய முன்னாள் ஆயர் பேரருட்திரு. வ. தியோகுப்பிள்ளை அவர் களுக்கு திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்ப ரிடமிருந்து அனுப்பப்பட்ட வாழ்த்துச்செய்தியுடன் இதழ்விரித்து நிற்கின்றது. அச்செய்தியில் "பல்லாண்டு காலமாக நற்செய்திப் பணியாளர் விதைத்த விதை யிலிருந்து சிறந்த அறுவடையைத் தரும் என்ற நம்பிக்கையை அளித்தது. இறைவனின் உதவியுடன் உங்கள் பற்றார்வமுள்ள விடாமுயற்சியின் பயன்தரக் கூடியதான வளம் பெற்று விளங்குகின்றதெனக் கருதுகின்றோம்" என திருத்தந்தை அவர்களின் வாழ்த்து ஆசிரிய தலையங்கத்தினூடாக செய்தியாகத் தொடர்கின்றது. மேலும் 25 வருட உலக சமாதான தினத்தையொட்டி பரிசுத்த திருத் தந்தை 01.01.1992 இல் விடுத்த "சமாதானச் செய்திமூலம் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் ஒன்றுபட்ட விசுவாசிகளாக விளங்கவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார் என்பது முக்கிய அம்சமாகத் திகழ்கின்றது. மேலும் இவ்வாண டின் பத்திரிகைகளை ஒட்டுமொத்தமாக நோக்குகை யில் "எம் கருத்துப் பகுதி" ஆசிரியர் தலைப்புக்களின் மையக்கருத்தினை விரித்துரைப்பதாகவும் அக்கருத்துக் களிலிருந்து மக்களின் உணர்வலைகளைத் தூண்டு வதாகவும் அமைகின்றது.

சின்னஞ்சிறார்களின் அறிவியல் ஞானத்தைத் தூண்டும் விதமாக "அன்புவிழி" யால் வழங்கப்படும் காவலன் கண்மணிகள் பகுதி பிரசுரமாகியுள்ளது. "சிந்தனைக்கு மருந்தும், விருந்தும்", "நல்வழி", "நம் வழி" குறும்புதிர் பகுதிகள் உண்மையில் சிறுவர்களின் ஆன்மீக எண்ணக்கருத்துக்களை உருவாக்கதாக விளங்குகின்றது. சிறுவர் பராயம் கடந்து பரிணமிப்பது இளமை. இப்பருவம் பக்குவமாகக் கையாளப்பட வேண்டும் என்பதற் ஒப்ப "இளைஞர் உலகம்" பகுதி இளையோருக்கு வழித்துணைபோன்று பலதரப்பட்ட கருத்துரைகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பகுதிகளில் வெளியான "வாழ்வின் முழுமை", "வாழ்க்கை ஒரு பாரச் சுமைதானா?" என்னும் கட்டு ரைகள் ஓர் இளைஞன் எவ்வாறு கிறிஸ்து என்னும் ஒளிதனை தன் கரங்களில் ஏந்தி வழிநடக்கும்போது வாழ்வின் முழுமையையும், அது பாரச் சுமை யாகும் போது அதனைத்தாங்கும் ஊன்றுகோலாக கிறிஸ்து இருப்பார் எனவும் எடுத்துரைத்து ஒவ்வொரு இளைய தலைமுறைவாழ்வும் கிறிஸ்துவை முன்னுதார ணமாகக் கொண்டு விளங்கவேண்டும் என எடுத் துரைக்கின்றன.

மேலும் இவ்வாண்டில் (1992) கொண்டாடப் பட்ட ஏழாவது உலக இளைஞர் தினத்திற்கான திருத்தந்தையின் செய்தியும் இப்பகுதிக்கு மெருகூட்டு கின்றது. 1992ல் ஏழாவது உலக இளைஞர் தினச் செய்தியின் சாராம்சங்களை பின்வருமாறு நோக்கலாம்.

- "உலகெங்கும்போய் நற்செய்தியை அறிவியுங்கள்."
- "இதோ இருக்கிறேன் என்னை அனுப்பும்"
- "தன்னியல்பிலேயே திருச்சபை ஓர் மறைபரப்பும் சமூகமாகும்"
- "கிறிஸ்துவின் சீடனாக இருப்பதென்பது ஒரு தனிப்பட்ட விடயமல்ல மாறாக விசுவாசம் என் னும் கொடையை பிறருடன் பகிர்ந்து கொள்ளப் படல் வேண்டும்."
- "இளைஞருக்கு கிறிஸ்துவைப்பற்றிப் பேசும் துணிவு வேண்டும்."
- "உண்மையான அப்போஸ்தலிக்க ஆர்வத்தால் தூண்டப் பெற்ற அநேக இளம் ஆண்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களும் திருச்சபையில் பெரும் பங்காற்ற வேண்டும் என்னும் அம்சங்கள் அச்செய்தியை அலங்கரிப்பதற்கு அர்த்தம் பொதிந்ததாகவும் விளங்குகின்றன."

இவற்றுடன் உலகச் செய்திகள், உள்ளூர்க் கிறிஸ்தவ செய்திகள் என்பனவும் பத்திரிகை அம்சத்திற்கு மெருகூட்டுவதுடன் மண்ணில் இருந்து விண்ணகம் சென்றோரின் நினைவஞ்சலிகளும் இடம் பெற்றுள்ளன. 15.05.1992 வெளியான பாதுகாவலனின் சிறப்பம்சத்தை நோக்கமிடத்து அ.ம.தி.கள் மகாநாடு பற்றி சிறப்புக்கட்டுரையின் மூலம் 1847-1992 வரை யாழ் திருச்சபையின் வரலாற்றில் ஓர் மைல்கல்லாக அமைந்த அ.ம.தி களின் பணி பற்றிய சிறப்பம்சங்களை அருள்தந்தை. போல் நட்சத்திரம் அ.ம.தி. அடிகளார் வடிவமைத்துள்ளார். அக்கட்டுரைத் தொகுப்பில் ஏன் இந்த மகாநாடு? என்னும் தலைப்பில் பிரசுரமான கட்டுரையை நோக்குகையில் தேவை எங்கே அங்கே சேவை என்பதை அவர்கள் கொள்கையாக எடுத்துக்காட்டி எளியவர்கள் வறியவர்கள், ஒடுக்கப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், அகதிகள், அநாதைகள், கைவிடப்பட்டோருக்குச் சிறப்பிடம் கொடுத்துப் பணியாற்றுவதன்மூலம் கிறிஸ்துவின் விழுமியங்களை தம்பணிவால் சமூகத்திற்கு எடுத்தியம்புவதும் அப்பணியில் கண்டுணர்ந்து அனுபவங்களை மீளாய்வு செய்வதும், தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய பண்புகளை ஆராய்வதும் நோக்கமாகக் கொண்டு அமைந்திருந்தது.

அடுத்து தமது பொதுநிலைப்பணிமூலம் யாழ் திருச்சபையில் மறைக்கல்விப்பணிபுரிந்த மறையாசிரியர்களான திரு. S. அந்தோனிப்பிள்ளை, திரு. M. யேசுதாசன் அவர்களின் 25வது ஆண்டு நிறைவு சிறப்பு மலர் அவர்களின் பணியை விதந்துரைத்து மலர்ந்துள்ளது. இவற்றோடு "கத்தோலிக்க திருச்சபையில் புனிதர்களின் வணக்கம்" என்னும் கட்டுரை பகுதியும் பிரசுரமாகி பாதுகாவலன் வளர்ச்சி மென்மேலும் மெருகூட்டுகின்றது.

## பாதுகாவலன் பணிக்குப் புதியதொரு சகாப்தம்

இதோ மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி 09.09.1992 இல் வெளியாயுள்ள பாதுகாவலன் விசேட பதிப்பு ஒன்று பிரசுரமாக்கப்பட்டதுடன் யாழ்ப்பாணம் மன்னார் மறைமாவட்டங்களுக்குப் புதிய ஆயர்கள் நியமனங்களைப் பிரகடனப்படுத்தி செய்திகள் வெளியாகியுள்ளன.

08.09.1992 திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பரால் அதிகாரபூர்வமான பிரகடனம் செய்யப்பட்ட ஆயர்கள் நியமனங்கள்; யாழ் ஆயராக பேரருள்திரு. இம்மானுவேல் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களையும் அருள்திரு. இராயப்பு ஞானானந்தன் ஜோசவ் அடிகளாரை மன்னார் ஆயராகவும் நியமித்த நிகழ்வு சிறப்பம்சம் பெறுகின்றது. இவற்றை "எம்கருத்துப் பகுதி" விபரிக்கையில் "மரியன்னையின் பிறப்புவிழாவில் புதிய ஆயர்களின் நியமனம் நம்பிக்கையில் ஒளியை எம்மிடையே ஒளிர்விக்கின்றது" என்ற கருத்தினையும், ஒரு தனிநாட்டிற்குத் தலைவர்களாவதைவிட ஒரு மறைமாவட்டத்திற்குத் தலைவர்களாவது மிகக்கடுமையானது என செய்தி வெளியிட்டுள்ளமை; ஆயர்களின் ஆழமான நேர்மையான சமயோசித அறிவுமிக்க ஆட்சித் திறனைத் தெளிவுபடுத்தியுள்ளது.

மேலும் "வரலாற்றுப் பின்னணியில் கத்தோலிக்க திருச்சபை" யின் யாழ் மறைமாவட்ட வரலாற்றினை ஆய்வுசெய்து கட்டுரையாக வடிவமைத்துள்ளார். அருள்திரு G. விக்ரர் பிலேந்திரன்அடிகளார் அவர். இது யாழ் கத்தோலிக்க வரலாற்றுப் பின்னணிக்கு முக்கிய சான்றாகவும், பேணவேண்டிய ஆவணமாகவும் திகழ்கின்றது. தொடர்ந்து அவ்விதழில் "சென்று வா திருமகனே!" என புதிய மன்னார் ஆயரை வாழ்த்தி அவரது வரலாற்று பற்றிய சிறப்புக் கட்டுரையை ஓர் அபிமானி வரைந்துள்ளார். உங்கள் வரவு நல்வரவாகுக! என யாழ் மறைமாவட்டத்தின் ஏழாவது ஆயராகப் பணியேற்கும் பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களை வரவேற்று அருள்திரு J. E. ஜெயசீலன் அவர்கள் கட்டுரை வரைந்துள்ளார். இவர் பாதுகாவலனின் நீண்டகால எழுத்தாளருமாவார்.

ஐயைந்தாண்டுகள் ஆயராக யாழ் திருச்சபையில் ஆயராகப் பணிபுரிந்த சேவையின் செம்மல் பேரருட்திரு வ. தீயோகுப்பிள்ளை அவர்களின் பணி வாழ்வை "நன்று நன்று நம்பிக்கைக்குரிய ஊழியனே!" "நீடுயர்ந்த நெஞ்சினைப்பாடுகின்ற நன்றி" என வாயாரப் புகழ்ந்து நன்றி நவிலல் கட்டுரையைப் புனைந்துள்ளார் அருள்திரு நீ. மரிய சேவியர் அடிகளார். அதுமட்டுமன்று "நிகரில்லா நீங்கா நினைவுகள்" என்ற கட்டுரையையும் யாழ் முன்னாள் ஆயர் பேரருள்திரு. வ. தீயோகுப்பிள்ளை அவர்களின் பணி வாழ்வில் யாழ் திருச்சபை அடைந்த உருவாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய கட்டுரையை உருவாக்கம் செய்துள்ளார் அருள்திரு R. H. சகாயநாயகம் அடிகள். தொடர்ந்து ஆயர்களின் பணிவாழ்வு பற்றிய கட்டுரைகளில் "காலத்துக்கேற்ற ஒரு கண்ணோட்டம்", "ஆயர் ஓர் உருவாக்குபவர்" [An Animator] என்னும் கட்டுரையை கரவையூர்ச் செல்வமும், "முப்பணிகளில் ஆயரின் பங்கு" நோக்கும் போக்கும் என்னும் கட்டுரையை அருட்சகோதரி லூமினா (தி.கு) அவர்களும் யாத்துள்ளார். இவர்கள் வேறுபல கட்டுரை வழியாகவும் பாதுகாவலனின் எழுத்தாளர்களாக விளங்குகின்றனர்.

## 1993ஆம் ஆண்டில் வெளியான பாதுகாவலனின் பணிப்போக்கு

இவ்வாண்டில் யாழ் மண்ணிலும் இலங்கையின் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் இடம்பெறும் யுத்தநிலமைகள் மாறி சமாதான சூழ்நிலை உருவாக்கம் பெறவேண்டும் என்ற நல்லெண்ணக் கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் இவற்றை முன்னிட்டு தலைவர் வே. பிரபாகரனுடன் கத்தோலிக்க, அங்கிலிக்கன், தென் இந்தியத் திருச்சபை ஆயர்கள் சந்தித்து சமாதானப் பேச்சு நடத்திய நிகழ்வுகள் பிரசுரமாகியுள்ளன. வருடாவரும் திருத்தந்தையால் விடுக்கப்படும் சமாதான தினச்செய்தி (ஜனவரி 01) இவற்றிற்கு மேலும் மெருகூட்டுகின்றன.

"இடம் பெயர்ந்த நம்மை விட்டு ஏற்றத்தாழ்வுகளும் வேறுபாடுகளும் இடம் பெயரட்டும்" என அருள்தந்தை T. E. தேவராஜன் அவர்களின் செய்தி இடம் பெயர்ந்த மக்களின் உள்ளங்களுக்குத் திருப்புமுனையாக அமைந்துள்ளது. மேலும் "கல்வி உருவாக்கம் கத்தோலிக்க விழுமியங்களால் உருவாக்கப்பட்டதாய் இருக்கின்றமையால் தொடர்ந்தும் கத்தோலிக்க நிறுவனங்களும், சமூகத்தொடர்பு சாதனங்களும் பெரும் பங்காற்ற வேண்டும்" என செய்திகள் வெளியாகியுள்ளன. மேலும் யாழ் திருவழிபாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் "திருமறை அறிவை வளர்ப்போம்" கிறிஸ்துவின் வருகைக்கு முன் இரட்சணிய வரலாறு என்னும் தொடர்பகுதி ஆரம்பமாகிப் பிரசுரிக்கப்பட்டுள்ளமை மக்களின் திருமறை அறிவிற்குப் பெரிதும் உதவியாக உள்ளது.

போர் அனர்த்தங்களும், அகதிவாழ்வுகளும் அன்றாடம் மனித வாழ்வின் தொடர்கதையாகிச் செல்கின்ற வேளையில் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையில் புதியதொரு மாற்றத்தை உருவாக்கும் பொருட்டு "மேய்ப்புப்பணி தேசிய மாநாடு" ஒன்றினை இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் சங்கம் நடாத்தியது. இம்மாநாடு பற்றிய திருமடலில் வெளியிடப்பட்ட முக்கிய பகுதிகளின் தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளமை எம் நாட்டுத் திருச்சபையில் களையப்படவேண்டிய பழமைகளையும், புகுத்தப்படவேண்டிய புதுமைகளையும் பற்றி விபரிக்கின்றது.

"தன்னைப் புதுப்பித்துப் பகிரும் ஒரு திருச்சபையை நோக்கி". . . என்றும் அதன் நோக்கை ஆராயும் பொருட்டு கிறிஸ்தவ சாட்சியத்தை விருத்தி செய்யவும், மீட்பின் நற்செய்தியை சகல மக்களுக்கும் போதிக்கவும், கிறிஸ்தவ சமூகமானது எத்தகைய அடையாளமாக இருக்கவேண்டுமென்று கிறிஸ்து விரும்பினாரோ அவ்வாறே வளர்ந்து வரும் ஒரு கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்கவும் இம் மாநாட்டின் மூலம் வழிவகுப்பதே அதன் நோக்கமும், அதுவே கிறிஸ்துவின் பணியுமாகும் என அப்பிரசுரிப்பு வெளியாகியுள்ளது.

## 1993 ஆண்டு பாஸ்கா சிறப்பு மலர்

"சத்தியத்திற்கு அவனே சாட்சி" என்னும் தலைப்புடன் வெளியாகியுள்ளது. இதன் எம் கருத்துப் பகுதி "கல்லறைகள் வெற்றியின் சின்னங்கள்" என்னும் கருத்தினை வலியுறுத்தி நிற்கின்றன. இக் காலத்தில் மக்களின் புலம்பெயர் அவலங்கள் பெரும் புலம்பல்களாகவே மாறிக் கொண்டிருந்த வேளையில் அருள்திரு T. E. தேவராஜன் அடிகளார் "இடம் பெயர்ந்த நம்மைவிட்டு ஏற்றத்தாழ்வுகள் வேறுபாடுகள் என்பனவும் இடம் பெயரட்டும்" என்ற தலைப்பில் காலத்திற்கேற்ற கட்டுரையினை வரைந்திருப்பது மக்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்வைத் தூண்டுவதாக அமைந்துள்ளது.

மேலும் "மரபுகளும் மாற்றங்களும்" என்னும் தலைப்பில் திரு. என். சண்முகலிங்கம் எழுதும் கட்டுரை தமிழ்ப்பாரம்பரியத்துடன் இணைந்து பங்காற்றும் கிறிஸ்தவ இறையியலின் தன்மை பற்றி தொடராக விபரித்துச் செல்வது மதக்கொள்கைகள் தமிழ் நாகரீகத்துடன் இரண்டறக் கலந்து மக்களை இறைவன்பால் இட்டுச்செல்வதற்கு ஓர் உந்து சக்தியாக அமைந்துள்ளமை விபரிக்கப்படுகின்றது. தொடர்ந்து இக்காலங்களில் வெளியான இளைஞர் உலகு, காவலன் கண்மணிகள், வெளிநாட்டு கிறிஸ்தவச் செய்திகள் என்ன மேலும் பத்திரிகையை வளர்ச்சியுறச் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டில் கொண்டாடப்பட்ட திருப்பாலத்துவ சபையின் 150ஆவது நிறைவின் சிறப்பிதழ் வெளியாகி அதன் தோற்றம் வளர்ச்சிப்போக்குகள் என்பன ஆராயப்பட்டுள்ளன. நற்கருணைவிழாவின் அர்த்தம் பற்றிய கட்டுரை ஒன்றினை அருட்சகோதரி லூமினா போல் ராஜ் அவர்கள்

(1) நற்கருணை கிறிஸ்துவின் அடையாள வாக்குறுதியின் சின்னம்
(2) நற்கருணை உடன்படிக்கையின் உறவு பாஸ்கா மறைபொருள்)
(3) நற்கருணை ஒன்றிப்பின் அன்பின் விருந்து
(4) நற்கருணை விண்ணக வாழ்வின் முன் அடையாளம்.
(5) நற்கருணை எம்மைப் புதிய வாழ்வுக்குப் புதிய உறவுக்கு அழைத்துச்செல்லும் உறவின் உணவு.

என்றும் உப தலைப்புக்களின் ஊடாக நற்கருணைப்பற்றி சிறந்த அறிவுத்தெளிவையும், அதன் உன்னதமான ஆனால் மனித புத்தியால் விளங்க முடியாத தன்மைகளை தத்துரூபமாக விபரித்து இருக்கின்றார் பாராட்டுக்குரியது.

இவ்வாண்டுப் பத்திரிகைகளைத் தொடர்ந்து நோக்குவோமாயின் திருக்குடும்பக் கன்னியர் சபை 2000 ஆண்டை நோக்கி என்னும் கட்டுரைத் தொடர் வழியாக இச்சபையின் தோற்றம் வளர்ச்சிப்பணிகள் விபரிக்கப்படுகின்றன. செல்வி. என். மீரா எழுதும் "மரியன்னை வழியில் பெண்ணின் பெருமை" என்னும் தொடர்கட்டுரையும், "தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் பற்றிய நினைவலைகள்" முதலாவது நினைவுப் பேருரை பற்றிய கட்டுரையும் பிரசுரமாகி உள்ளமை குறிப்பிடத்தக்கதும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமாகும். இக்கட்டுரையானது பேருட்திரு கலாநிதியும் முன்னாள் ஆயருமான வ. தீயோகுப்பிள்ளை அவர்களால் எழுத்துருப் பெற்றுள்ளது. "மறைபரப்புப் பணியில் பொதுநிலையினரின் பங்கு" பற்றிய கட்டுரைத் தொகுப்பு நிலையினரின்பங்கு பற்றிய கட்டுரைத் தொகுப்பு ஒன்றினை தஞ்சை ஆயர் மேதகு. இரா. சுந்தரம் அவர்கள் வடிவமைத்துத்தந்தமை ஊடாக ஆதித் திருச்சபையில் பொதுநிலையினரின் பணிகள் பற்றிய ஆய்வு விபரிக்கப்படுகின்றது.

அடுத்து "குருநகரின் இதயம் சிதறியது" என்னும் ஆசிரிய தலைப்புச் செய்தியுடன் யாழ். புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற கொடூரக் குண்டுவீச்சு சம்பவம் பற்றிய பரபரப்பான செய்திகள் உள்ளத்தை பதபதைக்க வைக்கின்றன. இவற்றுடன் வாசகர் கருத்துக்கள், குருக்களின் இறப்பு நினைவு நாட்கள் என்பனவும் காவலனின் நீண்டகால எழுத்தாளரான திரு. A. S அகஸ்ரின் என்பவரின் "பொதுநிலையினரின் கண்ணோட்டத்திலிருந்து குருக்கள் துறவியர்கள், குருமாணவர்கள் ஆகியோரின் வாழ்வுப் பணியும், உருவாக்கமும்" என்னும் கட்டுரைத் தொடரும் காவலனை அணிசெய்யும் வகையில் காவியம் பாடும் கவிதைத் தொகுப்புகளும் அவ்வப்போது இடம்பெற்றுள்ளமை போற்றப்பாலதே.

## 1994 ஆம் ஆண்டுக் காவலனிலிருந்து.......

"மானிட குடும்பத்தின் அமைதியைப் பிறப்பிக்கும் இடம் குடும்பம்" என்னும் தலைப்புடன் ஆசிரிய தலையங்கம் இடம்பெற்றுள்ள முதல் இதழில் திருமறை அறிவை வளர்ப்போம் காவலன் கண்மணிகள், அயல்நாட்டுப் பழமொழிகள் என்னும் அம்சங்களும் காவலனைத் தொடர்ந்து மெருகுறச் செய்கின்றன. யாழ் மறைமாவட்டத்தினைப் புதுப்பித்துப் பகிரும் திருச்சபையாக உருவாக்க 08.03.1994~15.03.1994 வரை இடம்பெற்ற யாழ் மேய்ப்புப்பணி மாநாட்டின் நிகழ்வுகள் பற்றிய தொடர் அறிக்கையை அருள்திரு S. J. இம்மானுவேல் அடிகளார் தொகுத்தளித்துள்ளமை இம் மாநாட்டின் பலாபலன்களை யாழ் திருச்சபைச் சமூகம் உய்த்துணரக் கூடியதாக இருக்கின்றது. காவலனின் காலக்குறிகளுக்கேற்ப கட்டுரை யார்க்கும் எழுத்தாளர் கரவையூர்ச்செல்வம் அவர்களின் "புதுப்பித்தல்" என்ற புத்தகமும் இங்கு குறிப்பிடத்தக்கது. "தபக்காலம் ஒரு ஜெபக்காலம்" என்னும் தலைப்பில் எஸ். ஏ. நாதர் அவர்கள் கிளிநொச்சி திருமறைப் பணியகத்திலிருந்து அனுப்பிய கட்டுரை வழியாக எல்லாவிதத்திலும் எம்மை சோதனை செய்து அலகையை முறியடிக்கும் காலமாக இக்காலம் விளங்குகின்றதென விபரிக்கின்றார்.

08.03.94 அன்று வெளியான சிறப்புமலரை நோக்குகையில் யாழ்ப்பாணக் கத்தோலிக்க திருச்சபையைப் புதுப்பிக்கும் முகமாக ஒழுங்கமைக்கப்பட்ட மேய்ப்புப்பணி மாநாடு பற்றிய செய்திகள் வெளியாகியுள்ளன. "புதுப்பித்துப் பகரும் திருச்சபையாக" என்னும் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகத்தின் செய்தி வழியாகவும் முன்னாள் பிரதம குருவாக இருந்த அருள்திரு S. J. இம்மானுவேல் அவர்களின் செய்தியாகிய "மனம் திரும்புதலின் நிகழ்வு" என்னும் தலைப்பில் மாநாடு பற்றிய விபரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை விபரித்துள்ளார். ஒட்டுமொத்தமாக இக்கருத்துக் களை நோக்குகையில், "திருச்சபையில் தூய ஆவி யானவரின் உயிரோட்டத்தினாலும் அவர் தம் அருள் ஒளியினாலும் நம் மண்ணில் திருச்சபை பரிபாலிக்கப் பெற்று காலத்திற்கேற்ப சிலவற்றைக் கழித்து, சூழலுக் கேற்ற புத்துயிர் பெறும் சமுதாயமாக, ஆயருடன் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் எல்லோரும் ஒன்றாக இணைந்து, துணிவுடன் கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றி சாட்சியமளித்து சமுதாயத்தில் ஒளி யாகத் துலங்கும் புதயுகமாக மாறிடுவோம்" என்னும் கருப்பொருளில் சிறப்பிதழ் விளங்குகின்றது. இவ் வாண்டின் பாஸ்கா சிறப்பிதழ் ஊடாக கிறிஸ்துவின் உயிர்தரும் ஒளியை முன்னுதாரணமாகக் கொண்டு எம் புதுப்பித்தல் அழைப்பு, பகிர்தல் வழியாக இயேசு வோடு உயிர்த்தெழத் தூண்டுகின்றது. மேலும் அருள் திரு பு. ஏ. புலேந்திரன் அடிகளாரின் "யாழ்மாவட்ட தோற்ற வளர்ச்சியில் சில முக்கிய கட்டங்கள்" என்னும் தலைப்பில் வரைந்த கட்டுரை போர்த்துக் கேயர் காலம் தொட்டு 1994 வரையிலான காலப் பகுதியைப் பின்நோக்கிப் பார்க்கக்கூடியதாக இருக் கின்றது.

இக்காலப் பத்திரிகைகளைத் தொடர்ந்து நோக்குகையில் "பொது விவிலிய நடை தமிழுக்கொரு கொடை" என்னும் கட்டுரையானது பேராசிரியர் சு. அந்தோனி குருசு என்பவரால் எழுதப்பட்டு இருபால் சமத்துவ நோக்கு நடை, மனித நேய நோக்கு நடை என்பன செப்பன விபரிக்கப்பட்டுள்ளன. இவற்றோடு இணைந்து குருசுமுத்து அன்னையின் கிசுகிசு, காவலன் கண்மணிகள் என்னும் பகுதிகள் தொடர்ந்து காவலனை மெருகூட்டிய வண்ணம் இருக்கின்றன.

எதிர்வரும் ஆண்டில் திருத்தந்தை மேற் கொள்ளவிருக்கும் இலங்கைக்கான திருப்பயணத்தை முன்னிட்டு இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்த திருமடல் அவரது நோக்கையும், இலங்கை யின் அப்போஸ்தலரான ஆசாரத்திற்குரிய ஜோசவ் வாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் கொடுக்கும் நிகழ்வுபற்றிய விடயங்களையும் உள்ள டக்கி இருக்கின்றது.

மடுத்திருப்பதி ஆலய அபிசேகத்தின் 50வது ஆண்டு நிறைவு விழா பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளமை வரலாற்றுச் சிறப்புமிக்க யாத்திரைத் தலங்களின் மேன்மையைக் கண்டுணரக் கூடியதாக உள்ளது. திருச்சபையின் வளர்ச்சிக்கு வேத சாட்சிகளின் இரத்தம் வித்தாக மாறியது என்பதற் கிணங்க "நமது மன்னார் மண் வேதசாட்சிகளின் இரத்தத்தில் தோய்ந்துள்ளது விசுவாசத்தைக் காக்க விழித்தெழுவோம்" என்னும் கருப்பொருளில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசவ் அவர்கள் சுற்றுமடலினைத் தந்திருக்கின்றார். இறுதியாக "வெண்புறாவாய் பறந்து அமைதியைக் கொண்டு வா" என்ற தலைப்பில் வெளியான கட்டுரை அமைப்பும் வர்ணிக்கத்தக்கது.

## 1995 ஆம் ஆண்டு பாதுகாவலன் பணிகள்

இவ்வாண்டு ஆரம்ப பத்திரிகைகளை நோக்கு மிடத்து இவ்வாண்டு இலங்கைக் கத்தோலிக்கரது வரலாற்றில் ஓர் பொற்காலம் என்றே கூறவேண்டும். அதாவது திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் இலங்கையின் அப்போஸ்தலராக விளங்கும் ஜோசவ் வாஸ் முனிவருக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் வழங்கும் வைபவம் தொடர்பான யாழ் ஆயர் அவர்களின் சிறப்புச்செய்திகள் வழியாக யாழ்ப்பாணத்திற்கு ஜோசவ்வாஸ் அவர்களின் வருகை பற்றியும் இதனால் திருத்தந்தையின் திருத்தூதுப் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங் குகின்றது எனவும் பல இனங்கள் மத்தியில் ஒற்று மையை வளர்த்து மறைவாழ்வில் புத்தாக்கம் பெறு வோராக வாழ அழைப்பு விடுக்கின்றார்.

யாழ் மண்ணில் சிதைவடைந்து சென்ற கத்தோலிக்க மதத்தை மீள் உயிர்பெறச் செய்த பெருமை யோசவ்வாஸ் அடிகளாரையே சாரும். இவரது அளப்பரிய தியாகம் நிறைந்த சேவையினை ஆராய்ந்து அகழ்ந்தெடுத்து சிறப்புக் கட்டுரையாக்கி யுள்ளார் முன்னாள் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள். இவற்றுடன் "ஜோசவ் வாஸ் அடிளின் பணிவாழ்வு இன்றைய மண்ணில் வாழ் மக்களுக்கு தரும் செய்தி" என்னும் தலைப்பில் தமிழ் நேசர் என்னும் எழுத்தாளரின் கட்டுரைவாயிலாக ஜோசவ்வாஸ் முனிவர் விட்டுச்சென்ற கிறிஸ்தவ விழுமியங்களை நாமும் எத்தகைய இடர்மிகுந்த சூழ்நிலையிலும் பின்பற்றி முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். ஈஸ்டர் சிறப்பிதழ் "விலங்கினை உடைத்திடவா வெற்றியின் நாயகனே" என்னும் தலைப்புடன் வெளியான செய்தியினூடாக மனித மாண்புகளை விலங்கிட்டு வைத்திருக்கும் அடிமைத்தளைகளை உடைத்தெறிவதாக அமைய வேண்டுமென பல செய்திகள் விபரிக்கின்றன.. "மனம் திறந்த மடல்" என்னும் சிறப்புக் கட்டுரை மசனெட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டாகிய இவ்வாண்டிலே வெளியாகி மசனெட் சபையினரின் பணிவாழ்வு விபரிக்கப்படுகின்றது. திருத் தந்தையின் அப்போஸ்தலிக்க கடிதத்தின் ஊடாக 2000 யூபிலி ஆண்டிற்கான உடனடி ஆயத்தம் பற்றிய விபரங்களும் இடம்பெற்றுள்ளன. திருச்சபை தொடர்பானதும், உலகின் சமாதானம் தொடர்பானதும் பணிகளுக்கு முழு அர்ப்பணிப்போடு தம்மை ஈடுபடுத்தி வரும் திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பரை "உலகின் ஒளிக்கீற்று" என விபரித்து அருள்திரு சாள்ஸ் கொலின்ஸ் கட்டுரை வரைந்துள்ளார்.

மேலும் இவ்வாண்டும் பத்திரிகைகளைத் தொடர்ந்து நோக்குகையில் அருள்திரு போல் மரியாம் பிள்ளை அவர்களின் நிஜங்களும் நிழல்களும் என்னும் தொடர்கட்டுரை வாயிலாக கத்தோலிக்கரது நாகரீக வரலாற்றுப் பின்னணியை ஆராய முடிகிறது. 23.06.95 அன்றைய காவலன் நவாலித் திருச்சபை மண்ணில் கொடூரக் குண்டுவீச்சினால் இடம்பெற்ற அனர்த்தங்கள் உள்ளத்தை நெருடும் செய்திகளாக வெளியாகியுள்ளமை ஓர் வரலாற்றுப்பதிவே! இவற் றுடன் உலக கத்தோலிக்க செய்திகளும் இளைஞர் அரங்கம், சிறுகதைகள் என்பனவும் யாழ் திருச்சபை வரலாறு பற்றி இ.ம. ஜெயசீலன் அவர்கள் யாத்த கட்டுரைகளும் காவலன் இதழ்களை அலங்கரிக் கின்றன.

மேலும் 1995 ஆம் ஆண்டு யாழ்மண்ணில் வரலாற்றுப்பின்னணியில் இணைந்து விட்ட இடப் பெயர்வினால் ஆறுமாத காலம் பாதுகாவலனின் பணிகள் தடைப்பட்ட போதும் மீண்டும் புத்தூக்கத் துடன் செயற்பட ஆரம்பித்தமை பாதிப்புற்ற வேளை யிலும் துணிந்து தனது பணியை முன்னெடுத்த வீரமுள்ள தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

## 1996ஆம் ஆண்டு பாதுகாவலன் புதுப்பொலிவுடன்

இழப்பின் இடம்பெயர்வின் துயரிலிருந்து மீண் டும் வாழ்வுக்கு என்னும் தலைப்புடன் 26.07.1996 காவலன் ஆசிரியத் தலைப்புடன் தன்னை வெளி யாக்கியுள்ளான். தொடர்ந்து வன்னிப்பகுதியில் வாழும் மக்களின் துயரங்களும் அலசி ஆராயப் பட்டுள்ளமை ஒட்டு மொத்தமாக எம் தமிழ் மக்களின் துன்பதுயரங்களை வெளிப்படுத்துவதாகவும் அதே வேளை மனித மனங்களை துன்பச் சுவடுகள் ஊடாக ஆற்றுப்படுத்துவதாகவும் அமைய வேண்டும். யாழ் திருச்சபை வரலாறு (16-17 ஆம் நூற்றாண்டு களில்) பற்றிய தொடர்கட்டுரை முன்னைய காலத் திருச்சபையைப் படம் பிடித்துக்காட்டுகின்றது. தொடரும் பல்சுவை அம்சங்கள் காலத்தின் விழுமி யங்களை கண்ணாடி போன்று வெளிக்கொணர்கிறது.

## 1997ஆம் ஆண்டு பாதுகாவலனை நோக்கும் வேளையில்

யாழ்ப்பாணக் கத்தோலிக்கரது விசுவாச வாழ் வையும், தமிழ்மொழிச் சிறப்பனையும் புதுப்பித்த பெருமை நல்லூர் சுவாமி என அனைவராலும் பெரு மையுடன் அழைக்கப்படும் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி. அமலபதமடைந்த 50வது ஆண்டு நினைவுச் சிறப்புமிக்க பணிவாழ்வும் குறிப்பாகத் தமிழுக்கு ஆற்றி தன்னிகரில்லாத் தொண்டு விபரிக்கப்படுகின்றது. அனைத்திலும் ஒட்டுமொத்தமாக பாதுகாவலனின் நீண்டகால எழுத்தாளரும் கவிஞருமான யாழ் ஜெயம் என்பவரின் மறவாது நெஞ்சம் என்னும் கவிதைத் தொகுப்பு மறக்கவே முடியாத அவரது திருப்பணியை விபரித்து நிற்கின்றது.

இவ்வாண்டில் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் அவர்கள் றோம் நகருக்கு மேற்கொண்ட விஜயம் பற்றிய அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் பேட்டி பிரசுரிக்கப்பட்டுள்ளது. இப்பேட்டி யினூடாக "யாழ் மக்களின் நிலையும், திருத்தந்தை யின் கருசனையும்" என்னும் கருப்பொருள் துல்லியப் படுத்தப்படுகின்றது. இதே பதிப்பிலேயே சுவாமி ஞானப்பிரகாசரின் நூல்கள் பற்றிய விபரமும் அருள் திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் "தமிழ் உல கில் முத்திரை பதித்தவர்" என்ற தலைப்பில் வெளியா கியுள்ள சுவாமி ஞானப்பிரகாசரின் கட்டுரைத் தொகுப்பு வரலாற்றுப் பதிவுகளாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 1998இல் வெளியான பாதுகாவலனை நோக்குகையில்

இடம்பெயர்வுகளாலும் இடைவிடா போர் நெருக்கடிகளாலும் எம் மக்களின் தொடர் கதையாகி விட்ட போதும், அவ்வப்போது மக்களின் வாழ்வை விசுவாச உச்சாரணத்தில் வளர்த்துக் காத்த பெருமை பாதுகாவலனையே சாரும். இத்தகைய இன்னல்களும் இரத்தக் கறைகளும் படிந்த மண்ணின் அவலங் களின் மத்தியிலும் அமலமரித் தியாகிகளின் சேவை யில் 150ஆவது ஆண்டு நிறைவில் சபைத் தலைவர் பேரருட்திரு மாசல்லோ சாகோ அவர்களின் யாழ் வருகை மகிழ்வு தரும் செய்தியாக வெளியாகியுள் ளது. அமலமரித் தியாகிகளும் திருக்குடும்ப கன்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யரும் என்ற கட்டுரைத் தொடரில் இலங்கையில் இவ்விரு சபையினரும் "ஏழைகளுக்கு நற்செய்தி" "இறைவனுக்கே மகிமை" என்னும் விருதுவாக்குகளை தம்மகத்தே கொண்டு பணியாற்றிய விபரத்தினை அருட்சகோதரி பொனவெஞ்சர் (தி.கு.ச) அவர்கள் எழுதியுள்ளமை வரவேற்பிற்கும் வரலாற்றுப் பதிவிற் கும் உரித்தானதாகும்.

இவ்வாண்டின் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத் தினை சிறப்பிக்கு முகமாக அருள்திரு ஜீவா போல் அடிகளார் எழுதிய "விவிலியமும் கிறிஸ்தவ ஒன்றிப் பும்" என்னும் கட்டுரை வாயிலாக எல்லோரும் ஒன் றாக இருப்பார்களாக என்னும் கருப்பொருள் எழுத் துருப் பெற்றிருப்பதை காண முடிகின்றது. இவற்றோடு நற்செய்தித் தூண்டுதல் போட்டி சிறுவர்களுக்கான தொடர் குறுநாவல் (எஸ். எம். ஜோசவ்) என்பனவும் காவலனின் வளர்ச்சிக்கு உரமூட்டுவதாக அமைகின் றது. இவ்வாண்டின் ஈஸ்டர் சிறப்பிதழ் "நியாயத் தீர்வும்" நிரந்தர அமைதியும் எம்மண்ணில் உதித்திட என்னும் ஏக்கம் மிகுந்த நோக்குடன் பல்சுவை அம்சங்களையும் கொண்டு மலர்ந்துள்ளது.

கத்தோலிக்க மக்களிடையே தேவ அழைத் தலை ஊக்குவிக்கும் பொருட்டு தேவ அழைத்தல் தினத்திலே யாழ் மாவட்டத்தில் இயங்கும் ஒவ்வொரு துறவற சபைகளின் வரலாற்று அம்சங்களை ஒன்றா கத் தொடுத்ததுடன் தேவ அழைத்தலுக்கான இயக்கு னர் ஏ. எப். பெனட் அடிகளின் சிறப்புச் செய்தியும் மலரை அலங்கரித்துள்ளது.

அடுத்து "விவிலிய ஏடுகளைப் புரட்டுவோம்" என்னும் தொடரினூடாக மக்களிடையே விவிலிய அறிவை வளர்ப்பதில் முன்நிற்கிறார் அருட்திரு பயஸ் அடிகள் இவ்வாண்டின் சிறப்பு நிகழ்வாக இடம் பெற்ற ஆசிய ஆயர்களுக்கான பேரவைச் சிறப் பிதழின் தமிழாக்கத்தினை பாதுகாவலன் நீண்டநாள் எழுத்தாளர் செல்வி. வயலட் இம்மானுவேல் சிறப்புற எழுதியுள்ளார். மேலும் இக்காலத்தில் "அர்ச்சனைப் பூக்கள்" என்னும் திருவெளிப்பாடுகள் தொடர்பான கட்டுரை அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர் களாலும் "விடுதலைப் பயணத்தில் இஸ்ராயேலரும் ஈழத் தமிழரும்" என்னும் தொடர்கட்டுரைப் பகுதி யினை அருள்சகோதரர் பா.பி. இராஜசிங்கம் அவர் களும் எழுதியுள்ளார். இத்தொடர் கட்டுரை வாயிலாக இஸ்ராயேல் மக்கள் அனுபவித்த துன்ப சுவடுகளை இன்று ஈழத்தமிழரும் எவ்வாறு தமது அனுபவ வாயி லாக அனுபவிக்கின்றனர் என்பதும், என்றோ ஒருநாள் மீட்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டெனவும் தெளிவுபடுத்துகிறார். "குடும்ப அரங்கம்" என்ற பகுதி யினூடாக குடும்ப வாழ்வுக்கான நெறி முறைகளையும் பகிர்ந்து வாழும் குடும்பம் பல்லாண்டு வாழும் என்னும் நெறிமுறைகளையும் கொண்டதாக இக் கட்டுரைத் தொடர் விளக்குகிறார்.

1998ஆம் ஆண்டு உலக மறைபரப்பு தினச் செய்தியூடாக திருத்தந்தை அவர்கள் 'கிறிஸ்துவின் சிலுவையிலிருந்து பிறந்த திருச்சபையில் இன்றும்கூட துன்புறுத்தல்களும் உயிர்த்தியாகங்களும் இருந்து வருவது நிஜமானதொன்றாகி விட்டபோதும், மறைபரப் பின் பொருட்டு மக்கள் இறை மீட்பில் நம்பிக்கை கொள்ளவும் ஆற்றல் மிகுந்த ஆன்மீக வாழ்வைக் கட்டி எழுப்பவும் சாதாரண விசுவாசிகளும் இயேசு வின் நாமத்தில் தமது உயிரை ஈந்து மறை வாழ் விற்கு சான்றாவதையும் தெளிவுபடுத்துகிறார். இதே சிறப் பிதழில் "பாரெங்கும் நற்செய்தி பரப்பிடுவோம்" என்னும் தலைப்பில் யாழ் மறைமாவட்ட இயக்குனர் அருள் திரு றெஜி ராஜேஸ்வரன் அவர்களின் சிறப்புச் செய்தி ஆழ்ந்த மறையியல் கருத்துக்களை கொண்டு விளங் குகின்றது.

## 1999இல் வெளியான காவலனில் இருந்து

இவ்வாண்டிலே யூபலி ஆண்டின் உச்ச நிறை வான பணிகள் விதந்துரைக்கப்படுகின்றன. முதன் முதலில் யாழ் ஆயர் அவர்களின் செய்தியில் "தனிப் பட்ட விருப்பு வெறுப்புக்களை மறந்து ஒன்று சேருங் கள்" என அழைப்பு விடுத்து புதுப்பித்தல் நிறைந்த யூபிலி ஆண்டு ஒற்றுமையின் ஆண்டாக மலர அழைப்பு விடுக்கின்றார்.

மனித மாண்புகள் சிதைக்கப்படும் இக்கால கட்டத்தில் "உரிமைகள் உரிமைகளுக்காக". என்னும் தொடர் கட்டுரையின் வாயிலாக ஒவ்வொரு தனி மனிதனும் தனது சுதந்திரத்தை தகுந்த முறையில் பயன்படுத்தி சுயநிர்ணய உரிமைகளுடன் வாழ்வது இறைத்திட்டம் என்பதைத்துணிவுடன் தெளிவுபடுத்து கின்றார். அருள்திரு A. J. பேர்ணாட் அவர்கள் மேலும் இவ்வாண்டில் இடம்பெற்ற 18வது சர்வதேச கத் தோலிக்க பத்திரிகையாளர் மகாநாட்டில் கலந்து கொண்ட பாதுகாவலன் ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் அனுபவப் பகிர்வு கத்தோலிக்க திருமறை வளர்ச்சிக்கு நவீன தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சி அவசியமானது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. யூபிலி ஆண்டினைச் சிறப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்கும் முகமாக யாழ் மறைமாவட்டத்தில் பல்வேறு பங்குத்தளங்களில் இடம்பெற்ற மகா ஞானொடுக்க நிகழ்வுகளின் விபரங்களும் விபரிக்கப்படுகின்றது. இவ்வாண்டு ஈஸ்டர் சிறப்பிதழ் "வேதனை தீர்த்து ஒரு சாதனை செய்ய வா" என்னும் தலைப்புச் செய்தியுடன் வெளியாகி இருப்பது இன்னும் யாழ் மண்ணில் தொடரும் அவலங்கள் அநீதிகளின் வேத னைத் தீ அணையாது இருப்பதன் வெளிப்பாடாக உள்ளது.

அடுத்து வானம்பாடி எழுதும் 'உணர்வுச் சித்திரம்', கிறிஸ்தவ உலகில் நடப்பவை, காவலனை அணிசெய்து மங்கா ஒளியுடன் துலங்கும் தாரகை யாக்குகின்றன. "மறைவாழ்வுக் கல்வியின் மலர்ச்சியும் தளர்ச்சியும் மறுமலர்ச்சியும்" என்னும் தலைப்பில் யாழ் மறைக்கல்வி நிலையப் பணிபற்றிய ஓர் ஆய் வினை மறைப்போதகர் திரு S. F சவுந்தரம் அவர்கள் மேற்கொண்டு கட்டுரையாகத் தொகுத்தமை இன்றைய மனித மனங்களில் மங்காத விசுவாசத்தினை வளர்க்க எவ்விதம் மறைவாழ்வுக் கல்வி சகலருக்கும் அவசிய மானது என்பதைச் சுட்டி நிற்கிறது.

மேலும் இக்காலத்தில் பாதுகாவலனின் பணி யைப் புதுப்பொலிவுடன் திகழச்செய்யும் பொருட்டு நிருபர்களுக்கு இடம் பெற்ற பயிற்சிப்பட்டறை, மற்றும் நிருபர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட களப்பயிற்சி கள் போன்றனவும், காவலனின் பணிக்கு உந்து சக்தி யாக உள்ளது. அத்துடன் எம் "திருவழிபாடுகளில் திரு இசையின் முக்கியத்துவத்தை உணர்த்தி அருள் திரு. பா. பி. இராஜசிங்கம் எழுதிய திருவழிபாட்டில் திரு இசை" என்னும் தொடர்கட்டுரைப் பகுதியும் காணப்படுகின்றது. யாழ்பாண மறைச்சாட்சிகள் என் னும் கட்டுரைப்பகுதி ஊடாக எம்முன்னோர் எவ்விதம் இரத்தம் சிந்தும் அளவிற்கு எம் திரு மறையை காத்தனர் என்பது வெட்ட வெளிச்சமாகின்றது.

1999ஆம் ஆண்டு – 2000 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் சிறப்பிதழ் "இயேசுக் கிறிஸ்து உலகின் ஒரே இரட்சகர்கள் புதிய வாழ்வின் அப்பம்" என்றும் கருப்பொருளினல் வெளிவந்த நற்கருணை ஆண்டகை விளக்கும் யூபிலி ஆண்டின் மகிமையைத் தெளிவு படுத்தி நிற்கின்றது. இச் சிறப்பிதழ் முற்றிலும் கணனி மயப்படுத்தப்பட்ட முறையில் வெளியிடப்பட்டிருப்பது யாழ் மாவட்டத்திலேயே முன்னோடியாக விளங்கும் பத்திரிகையான பாதுகவலன் இவ்விடத்திலும் தமது முதன்மைத்தன்மையைப் பிரதிபலித்திருப்பது பாராட்டிற் குரியது, நவீன தொழில் நுட்பத்துறையினூடாக திருச் சபைச் செயற்பாடுகள் வளர்க்கப்படுவதற்கும் சான்றா தாரமாக விளங்குகின்றது. யூபிலி ஆண்டில் நற்கருணை மயமான வாழ்விற்கு அழைப்புவிடுத்து இவ்வாண்டிதழ் நிறைவுறுகின்றது.

## 2000 யூபிலி ஆண்டில் மலர்ந்த பாதுகாவலன்....

எம் ஆண்டவர் கிறிஸ்துவில் உதயமாகும் மூன்றாவது மிலேனியம் சகல கிறிஸ்தவர்களுக் கிடையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது யூபிலி ஆண்டின் முக்கிய பணியாக இருக்க வேண்டும். புதுப்பித்தல் நிறைந்த இறைமக்கள் குலமாக நாம் உருவெடுக்க வேண்டும் என்னும் புத்தாக்க கருத் துக்களை இவ் யூபியாண்டுப் பத்திரிகை வெளிப்படுத்தி நிற்கின்றது.

அகில உலக அர்ப்பண வாழ்வினரின் யூபிலி தினங்களும் இவ் ஆண்டில் சிறப்பம்சமாக மிளிர் கின்றது. அத்துடன் சகலதுறவற சபைகளின் ஒன்று கூடல் நாம் ஒன்றிணைந்து இறைபணியாற்றும் குலமாக விளங்க வேண்டும் என்ற அர்த்தத்தினைத் தெளிவுபடுத்துகின்றன.

யூபிலியாண்டின் தவக்காலத்தை முன்னிட்டு எம் திருத்தத்தை அவர்கள் "உலக முடிவு வரை எந்நாளும் உங்களுடன் இருக்கின்றேன்." என்ற கிறிஸ்துவின் வார்த்தையை மையப்படுத்தி கிறிஸ்தவ உலகை கிறிஸ்துவுக்குள் உறுதிப்படுத்தி செய்தி வெளியிட்டிருப்பது உடைந்த உள்ளங்களுக்குப் புதுத்தென்பூட்டுவதாக அமைகிறது.

யூபிலி ஆண்டில் மலந்த உயிர்ப்பு விழாச் சிறப்பிதழ் ஊடாக தத்துவ ஞானம் புத்துயிர் பெற்றது யுத நிலத்திலே சத்திய வேதம் நின்று நிலைத்தது தரணி மீதினிலே என்றும் கவி வடிவில் பல்வேறுபட்ட புதுப்புது அம்சங்களுடன் செய்தி மலர்களை மலர்வித்துள்ளது.

மேலும் யூபிலி ஆண்டில் அனைத்து **மக்களும்** சுயநிர்ணய உரிமைகளுடன் நிரந்தர **அமைதியுடன்** வாழ வேண்டும் என்பதற்காக சர்வமதத் தலைவர் களின் தலைமையில் யாழ் நகரில் இடம் பெற்ற சமாதானப் பேரணியின் முக்கியத்துவம் விபரிக்கப் படுகிறது. "அர்த்தமுள்ள பேச்சுக்கள் மூலம் மூன்றாம் தரப்பு உதவியுடன் நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வர உதவுங்கள்" என்பது அனைத்து மதத்தவரின் ஒருமித்த குரலாக ஒலித்ததை காவலன்
மதத்தவரின் ஒருமித்த குரலாக ஒலித்ததை காவலன்
கண்ணியமாக எடுத்துரைத்துள்ளான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் யூபிலி ஆண்டிலே யாழ் நகரின் மேன்மை மிக்கதும் வரலாற்றுச் சிறப்புமிக்கதும், துறவற, மறை மாவட்ட குரு மாணவரின் பயிற்சிக் கல்லூரியாகவும் விளங்கும் புனித பத்திரிசியார் கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவும், முத்திரை வெளியீடும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என சான்று பகர்ந்துள்ளான் பாதுகாவலன். மேலும் இவ்வாண்டு நற்கருணை ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையால் முக்கிய யாத்திரத் தலங்களில் ஆவது நற்கருணைச் சிற்றாலயம் அமைத்து மக்கள் மத்தியில் நற்கருணையின் உன்னதத் தன்மையினை விழிப்புடன் புகட்ட வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

இவ் யூபிலி ஆண்டின் முக்கிய கருப்பொருளாக விளங்கும் "இயேசுக்கிறிஸ்துவே உலகின் ஒரே இரட்சகர்கள் புதிய வாழ்வின் அப்பம்" என்றும் விருதுவாக்கினை ஆழப்படுத்தியே இவ்வாண்டில் வெளியான செய்திகள் கட்டுரைகள் ஏனைய சிறப்பம்சங்கள் யாவும் திகழ்கின்றன. குறிப்பாக அருள்திரு. C. J. அன்ரனிபாலா அவர்கள் எழுதிய தொடர் கட்டுரையான "அன்பிய வாழ்வே நற்கருணை வாழ்வின் வெளிப்பாடாகும்" என்றும் கட்டுரை மக்களிடையே ஆதிக்கிறிஸ்தவ வாழ்வை வெளிப்படுத்தும் வகையில் அன்பிய வாழ்வை வாழ்விப்பதே, நற்கருணை வாழ்வு வாழப்படுவதற்குச் சான்றாகும் என்னும் கருப்பொருள் பட இக்கட்டுரையில் விபரித்துள்ளமை ஓர் சிறப்பம்சமாக உள்ளது.

2000ஆம் யூபிலி ஆண்டின் கிறிஸ்மஸ் செய்தியாக இக்காலம் இலங்கை மக்களின் சமாதானப் பேச்சு வார்த்தைக்குக்கிடைத்த ஓர் இறுதி சந்தர்ப்பம் இதுவெனவும் நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வினைக் காண இவ் ஆண்டு கிறிஸ்மஸ் விழா வழிவகுப்பதாக அமையவேண்டுமென யாழ் ஆயர் முதல் பலரும் வேண்டுகோள் விடுத்திருப்பதை செய்திகளும், ஆக்கங்களும் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

எனவே மேற்குறிப்பிடப்பட்ட 1992-2000 ஆண்டு வரையிலான காலப்பகுதியினை அதாவது யாழ்மண்ணின் ஏழாவது புதிய ஆயராகப் பதவி ஏற்ற மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின்காலப்பகுதியில் காவலனின் பணியினை இச்சிறியோனாகிய நான் பாதுகாவலனின் 125ஆவது ஆண்டுச் சிறப்பு மலருக்கு ஆய்வு செய்து அளித்துள்ளேன். என் அறிவிற்கு எட்டியவரை கூடுமான அளவிற்கு பாதுகாவலனின் பணிகளைத் துரவி ஆய்ந்து எவ்வகையில் இக்கத்தோலிக்க பத்திரிகையானது கத்தோலிக்க மக்களினதும் ஏனைய மக்களினதும் விசுவாச உறுதிப்பாடுள்ள வாழ்விற்குக் காவலாக விளங்கி இருக்கின்றது என்பது இதனால் அறிய முடிகிறது. மேலும் இக்காலப்பகுதியில் இப் பத்திரிகை பல இன்னல்களை, பின்னடைவுகளை எதிர்நோக்கிய போதும் இதன் நிர்வாகத்திறன் மிகுந்த ஆசிரியர் அருள்திரு ஞாபன் மரியாம்பிள்ளை அவர்களின் அயராத உழைப்பினாலும், அச்சக ஊழியர்களின் நவீனத்துவம் மிகுந்த தொழில் நுட்ப முயற்சியினாலும், நிருபர்களின் புத்தூக்க வளர்ச்சியினாலும் இன்றுவரை விசுவாசத்தின் காவலனாக விளங்கியமைக்குச் மிகவும் சான்றாதாரமாக இருக்கின்றது.

இது மட்டுமன்று இக்காலத்தில் யாழ்த் திருச்சபையின் தந்தையாக விளங்கும் யாழ் ஆயர் அவர்களின் புத்தூக்கமும் எதிர் நோக்கும் கொண்ட சிறந்த தலைமைத்துவமும் இப்பத்திரிகையின் பணிகளுக்கு மிகவும் உறுதிப்பாடாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவை மட்டுமன்று நவீன தொழில்நுட்ப வசதிகள் மேலோங்கி நிற்கும் இக்காலப்பகுதியில் பாதுகாவலனும் தன்னைப் புதுப்பித்து நவீன கணனி யுகத்தினூடாக பத்திரிகையை வடிவமைப்புச் செய்தமையும் அநேகமான புதிய எழுத்தாளர்கள் உருவாகி உள்ளமையும, யாழ் மறை மாவட்டப் பங்குகளில் உள்ள ஆலயங்களின் சிறப்பு நிகழ்வுகளைப் பிரசுரமாக்குவதன் மூலம் யாழ் கத்தோலிக்க திருச்சபையின் பணிகளை உலகிற்கு வெளிப்படுத்துவதிலும் எம் பாதுகாவலன் தன்னிகரற்ற பணியினைப் புரிந்து தனது தனித்துவமான தன்மையைத் திருச்சபையிலும் சமூகத் தொடர்பிலும் ஏன் கணனி உலகிலும் கொண்டு 125 ஆண்டுகளை 2001இல் தனது நிறைவுக் காலமாக்கி மங்காப் புகழுடன் மங்களகரமான இந்நாளில் வீரமுடன் திகழ்வது மூவொரு இறைவனின் பாதுகப்பே என்பது வெளிப்படையாகும். தொடரும் காலத்திலும் பாதுகாவலனின் சிறப்புமிக்க விசுவாச உண்மைமிக்க, நீதி சமாதானத்தை உருவாக்குகின்ற தணியாத பணியினால் மென்மேலும் சமூகத்தொடர்புத் துறையில் வளர்ச்சியுற்று சத்திய திருமறையின் காவலனாகத் திகழ வாழ்த்துக்கள் பல்லாயிரம் பயின்று நிடித்த நின் சேவையினை நெஞ்சுரகப் புகழ்ந்து என் ஆய்வினை நிறைவு செய்வதுடன் இவ் ஆய்வினை நான் மேற்கொள்வதற்கு உறுதுணை புரிந்த இறைவனுக்கும் பாதுகாவலன் ஆசிரியர், ஊழியர், நிருபர்கள் சமூகத்திற்கும் நன்றிகள் நவின்று நிற்கின்றேன்.

**சான்றாதாரம்:** 1992 - 2000 வரையும் வெளியான பாதுகாவலன் பத்திரிகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன் பத்திரிகையின் ஆதரவில் நடாத்தப்பட்ட ஊடகவியல் பயிற்சிப் பட்டறையில் பயிற்சி பெற்றோர்
(1999)



பாதுகாவலன் பத்திரிகையாளர் சங்கம்
(2000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலனின் பணிபற்றிய பல்நோக்கு . . .



அமலமரித் தியாகிகள் அமைப்பின் மாகாண முதல்வர் அருள் தந்தை ஜீவேந்திரா போல் உடனான நேர்காணலின்போது

**☞ பாதுகாவலன் பற்றி உங்கள் கருத்து என்ன?**

இன்றைய காலக்கட்டத்தில் பொது சனத் தொடர்பு சாதனங்கள் வளர்ச்சியடைந் தாலும் பத்திரிகையின் வாசிப்புத்தன்மை குறைய வில்லை. எனவே பாதுகாவலனின் பணியில் நம்பிக்கை குறையவில்லை. அதன் தேவையும் வாசகர்களுக்கு உண்டு. பாதுகாவலனுக்கு என்ற வாசகர்கள் நிரந்தரமாக இருக்கிறார்கள். வெளி நாடுகளிலும் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் ஈழத்து செய்தியை அறிய இப்பத்திரிகையை விரும்பி வாசிப்பதை அங்கு சென்றபோது என் னால் அவதானிக்க முடிந்தது.

**☞ பத்திரிகையின் தற்போதைய நிலை பற்றித் தங்கள் கருத்து என்ன?**

தற்போது பாதுகாவலன் ஏற்றுக்கொள் ளக்கூடியதாக, தரமாகப் பிரசுரிக்கப்படுகின்றது. கணணி முறைக்கு வளர்ச்சியடைந்திருக்கின்றது. எல்லா சபைகளையும் மறைமாவட்டங்களையும் உள்ளடக்கி வெளிவருகின்றது. சமய, சமூக பிரதேச வேறுபாடின்றியும் பாரபட்சமின்றியும் யாரையும் சாராமலும் நடுநிலைமையாக வெளி வருவது மெச்சக்கூடியதாகவுள்ளது.

**☞ இன்னும் எவ்வாறு முன்னேறலாம் என நினைக்கிறீர்கள்?**

ஒவ்வொரு வாரமும் பத்திரிகை வெளி வரவேண்டும் அதாவது செய்திகள் சுடச்சுட வர வேண்டும் செய்திகள் பழமை அடைந்தால் அப் பத்திரிகை மீதுள்ள ஆவல்குறையும். மேலும் பாதுகாவலன் பத்திரிகையுடன் மட்டும் நில்லாது ஏனைய வெளியீடுகளை (கலண்டர் டயறி) அச்ச கத்தின் வசதிகளைப்ப பயன்படுத்தி பலகோணங் களில் வெளியீடு செய்வதன் மூலம் பாதுகாவ லன் மக்கள் மனதில் வேரூன்ற முடியும்.

**☞ பத்திரிகையில் தங்களின் பங்களிப்பு எவ்வாறானது?**

பாதுகாவலன் பத்திரிகைக்கு பல ஆக் கங்கள் எழுதியுள்ளேன் 3 ஆண்டுகள் தேன் அருவி என்ற தொடரை எழுதியிருந்தேன் தொடர்ந்தும் எழுதவேண்டும் என்ற ஆவல் உண்டு ஆனால் நேரம் இல்லாமல் உள்ளது. பாதுகாவலன் பணி தொடர்ந்து வளர்ச்சிபெற்று செயற்பட வாழ்த்துகின்றேன்.

* * *



யாழ் போதனாவைத்தியசாலை ஆன்ம குருவான செ.அன்புராசா அடிகளாருடனான நேர்காணலின் போது

**☞ பாதுகாவலனை தொடர்ந்து படித்து வருகிறீர்களா?**

ஆம் 15 வருடங்களுக்கு மேலாக வாசித்து வருகிறேன். முன்னைய காலத்துடன் ஒப்பிடுகையில் தற்போது தரம் உயர்ந்துள்ளது. இக்கட்டான காலத்திலும் உறுதியுடன் தொடர்ந்து வெளிவருவது பாராட்டுக்குரியது.

**☞ எதிர்காலங்களில் எவ்வகையான மாற்றங்களை புகுத்தலாம்?**

சமூகமாற்றம் மற்றும் இளைய தலை முறையினரை தொடக்கூடிய வகையில் ஆழப் படுத்தப்படவேண்டும்.

**☞ எவ்வாறான பணியை காவலன் வழியாக எதிர்பார்க்கிறீர்கள்?**

இப் பத்திரிகையில் மக்களின் நம்பகத் தன்மை அதிகம் இருப்பதால் சமூகப் பிரச்சனை கள், அன்றாடப் பிரச்சனை புலப்படுத்தும் கண் ணாடி போல் துலங்குவதுடன் அவற்றை தீர்க்க வழியைக் காட்டி ஒளியின் பாதையில் சிந்திக்க வைப்பது இதன் கடமையாகும். மேலும், துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள் மூலம் சமகால மக் கள் பிரச்சனைக்கு முகம் கொடுக்கம் **வகையில்** வெளியிடலாம்.

**☞ தங்கள் சொந்த மாவட்டமான மன்னாரில் பாதுகாவலன் நிலை எப்படி?**

நான் அறிந்தவரையில் மன்னார் மறை மாவட்டத்தில் இப்போது 'மன்னா' இதழ் வெளி வந்தாலும் கணிசமான மக்கள் இன்னும் பாது காவலனை விரும்பிப் படிக்கிறார்கள். மன்னார் மறை மாவட்டமக்கள் சார்பாக 125 ஆவது ஆண்டு நிறைவு வாழ்த்துக்கள் கூறி நிற்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் மறை மாவட்ட இளம் குருவான அருட்தந்தை S. A. றொசான் அடிகள் பாதுகாவலன் தொடர்பாக எம்முடன் பகிர்ந்து கொண்ட தன் மனப்பதிவுகள்.

**☞ நீங்கள் காவலனுடன் நெருங்கிய தொடர்பு உடைய எழுத்தாளராக இருக்கிறீர்கள். உங்களது எழுத்தாற்றலுக்கு இவ் ஊடகத்தின் பங்களிப்பு எவ்வகையானது?**

நான் மத்திய கல்லூரியில் கல்வி பயிலும்போது 7ஆம் ஆண்டிலிருந்து காவலனைப் படித்தும், அதற்கு எழுதியும் வருகிறேன் அந் நாட்களில் ஆசிரியர் பிலிப்நேரி (தாவீதுதாசன்) காவலன் கண்மணிகள் பகுதியை அன்பு விழி என்ற பெயரில் நடாத்தி வந்தார். அவர் கொடுத்த தூண்டுதலினால் எழுத்துலகில் பிரவேசித்தேன். ஊடகவியல் மீதான எனது ஆர்வத்தை நிறைவேற்ற பாதுகாவலன் எனக்கு நல்ல களமாக அமைந்தது. ஒருவேளை எனது ஆன்மீகப் பாதையை வழிப்படுத்தி அழைத்தலுக்கு ஒரு உந்துசக்தியாகவும் பாதுகாவலன் அமைத்திருக்கலாம். காவலனுக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

**☞ இப்பத்திரிகையின் வளர்ச்சி, பற்றிய தங்கள் கருத்து என்ன?**

விஞ்ஞான தொழில்நுட்ப துரித மாற்றங்களுக்கு முகம்கொடுத்து முற்றிலும் கம்பியூட்டர் பதிப்பாக வெளிவருவது இதன் பெருவளர்ச்சியின் வெளிப்பாடே 'தேசிய விருது' பெற்றமை இதன் திறமைக்கு சான்றாகும். ஆசிரிய தலைப்பு, அறிவியல் அம்சங்கள், வெளிநாட்டு விநியோக விரிவு என்பன சிறப்பாகக் கையாளப்படுகிறது.

**☞ மேலும் எவ்வாறு சிறப்புற முன்னகர்த்திச் செல்லலாம்?**

இளைஞர் சிறுவர் பகுதிகள் சிறுகதைகள் தொடரவேண்டும். கிறிஸ்தவ செய்திகளைத் தரும் ஒரு ஊடகம் இதுவே எனவே உலக திருச்சபைச் செய்திகள் கூடிய அளவில் வாசகர்களை அடைய வழி சமைக்க வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் ஒரு பிரதி வாங்கிப் படிப்பதில் ஆர்வம் ஊட்டவேண்டும்.

* * *

**திருக்குடும்ப கன்னியர் சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ் அவர்களுடனான நேர்காணலின் போது**

**☞ காவலனின் அன்றைய இன்றைய நிலையிலுள்ள மாற்றங்கள் தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

அன்று கிறிஸ்தவ செய்திகளை அதிகமாகக் கொண்டிருந்தது இன்று பல கோணங்களில் அணுகுமுறையை விரிவுபடுத்தியுள்ளது. காலத்தோடு ஒட்டிய பொதுச் செய்திகளையும் வெளியிட்டுப்பல முனைகளில் பெருவளர்ச்சி கண்டுள்ளது. குறிப்பாக வெளிநாட்டுச்செய்திகள் மற்றும் முக்கிய நிகழ்வுகளின் படங்கள் வெளி வருவது பாராட்டுக்குரியதாகும். சில பதிப்புக்களில் எழுத்துக்கள் நெருக்கமாக அமைந்திருப்பது கவனிக்கப்படவேண்டும்.

**☞ எவ்வகையான ஆக்கங்கள் காவலனின் வரவேண்டும் என எதிர் பார்க்கின்றீர்கள்?**

முன்னைய காலங்களில் வெளிவந்தது போன்று இளைஞர் பக்கம், சிறுவர் பகுதி, குடும்பப்பகுதி, வினாவிடை என்பன இடையிடையே சேர்க்கப்படுவது மேலும் மெருகூட்டும்.

**☞ தற்போது விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது ஏன் என நினைக்கிறீர்கள்?**

உள்நாட்டு வெளிநாட்டு புலம் பெயர்வுகள், இளம் எழுத்தாளர்களின் பங்களிப்புப் போதாமை சில பங்குகளில் அக்கறையற்ற தன்மை என்பனவாகும்.

**☞ இந்த நிலைப்பாடு நீங்க நீங்கள் கூறும் மாற்றுவழி என்ன?**

முன்பெல்லாம் பாடசாலைகளில் வாரந்தோறும் விற்பனையாகியது. இச்செயற்பாடு மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும். அதற்கு கிறிஸ்தவ கல்விச்சாலைகளுக்குப் பொறுப்பானவர்கள் அர்ப்பணிப்புடன் கூடிய ஊக்கம் தரவேண்டும்.

* * *



அருட்சகோதரி சன்ரா (zhanta) (A.C) உடனான நேர்காணலின் போது

நான் 35 வருடங்களுக்கு மேலாக பாதுகாவலனை வாசித்த அனுபவத்தில் கூறுகின்றேன். ஆசிரிய தலையங்கங்களை விரும்பி வாசிப்பேன். இவற்றைவிட திருச்சபைச்செய்திகள் பங்குச் செய்திகளையும் வாசிப்பேன். முன்னைய காலத்தோடு ஒப்பிடுகையில் தற்போது நவீன காலத்துக்கேற்ப தன்னை மாற்றிக்கொண்டு வருவதால் வாசிப்பவர்களின் ஆர்வமும் குறையாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. இப்பத்திரிகை மேலும் மேலும் முன்னேற பொதுநிலையினராகிய எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இப்பத்திரிகையில் போற்றத்தக்கவிடயம் என்னவென்றால் நெருக்கடியான போர்ச்சூழல் மத்தியிலும் தவறாது குறைந்த விலையில் வெளிவருவதாகும். எனவே இதன் பணி தொடர்ந்து சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

* * *

புனித சவேரியார் குருமட மாணவன் அருட் சகோதரன் தா.நிரூபன் நிசானந் கூறுகிறார்

நான் 10 ஆண்டுகாளக புனிதர்கள், மற்றும் பங்குச் செய்திகள் குடும்பம் ஒரு கதம்பம் போன்ற பகுதிகளை விரும்பிப் படித்து வருகின்றேன். பாதுகாவலனில் மக்களுக்கு ஆர்வமூட்ட பங்குமட்டங்களில் வாசகர்வட்டம் அமைத்து மக்களின் விமர்சனங்களை அறிந்து அதற்கேற்ப மாற்றங்களை மேற்கொள்வது நல்லது. தற்போதைய பொதுசன தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியுடன் சேர்ந்து பயணிக்க பல மாற்றங்களின் வளர்ச்சியுடன் சேர்ந்து பயனிக்க பல மாற்றங்களை கையாள வேண்டும்.

* * *



திரு சாமுவேல் பெனடிக்ற் இடமிருந்து நேர்காணல்

☞ **முன்னைய பாதுகாவலனுக்கும் தற்போதைய பாதுகாவலனுக்குமுள்ள பரிணாம வளர்ச்சி பற்றி உங்கள் கருத்து என்ன?**

125வது வயதை எட்டிக்கொண்டிருக்கும் பாதுகாவலனின் 62 வருட வாசகன் என்பதில் பெருமிதம் அடைகின்றேன். இக்காலக் கட்டத்தில் அனைத்துலகிலும், ஈழத்திலும், வரலாற்றில் அரசியலில், பொருளாதாரம் முதலியவையுடன் மக்களது இரசனையிலும் பலமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. காவலனும் இவற்றுக்கெல்லாம் ஈடுகொடுத்து காலத்திற்கேற்ற மாற்றங்களுடன் தொடர்ச்சியாக வெளிவருவது பாராட்டு தற்குரியது. எனவே பாதுகாவலனின் பரிணாம வளர்ச்சியை விமர்சிப்பதற்கில்லை.

☞ **தற்போதைய எழுத்தாளர்களின் வளர்ச்சி தளர்ச்சி அவர்களின் முன்னேற்றத்திற்கு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி.?**

எழுத்தாளர்கள் நிருபர்கட்கு ஊக்குவிப்புப்பணம் வழங்கக்கூடிய நிலையில் பாதுகாவலனின் நிதிநிலமை ஆரோக்கியமானதல்ல. எம் கத்தோலிக்க இளைஞர், யுவதிகள் பத்திரிகை செய்தி ஊடகத்துறையில் பயிற்சி பெறுவது தம் எழுத்தாற்றலை வளம்படுத்தி நெறிப்படுத்த உதவும். எழுத்துத்தொழில் இலாபகரமானது அல்ல. சேவைமனப்பான்மையிலேயே செயற்படலாம். இத்துறையில் குறைந்த தொழில் வாய்ப்பும் மிகுந்த போட்டியுமுள்ளது.

* * *



பாதுகாவலன் செய்திகளின் மொழி பெயர்ப்பாளர் செல்வி வயலற் இம்மானுவேல் இடமிருந்து

பாதுகாவலனில் எழுத்து மொழி பெயர்ப்பு வேலைகளில் துணை புரியும் சந்தர்ப்பம் சில சமயங்களில் எனக்குக் கிடைத்துள்ளது. யாழ் கத்தோலிக்க மக்களுக்கு இது மிக அவசியமான ஒரு பத்திரிகை என நான் கருதுகின்றேன். செய்திகளைவிட கட்டுரைகள் மறை சார்ந்த விடயங்களுக்காகவே பாதுகாவலனைப் படிக்க விரும்புகின்றோம். ஆகவே அது இன்றைய கத்தோலிக்க உலகின் செய்திகளையும் சிந்தனைகளையும் தாங்கிவரவேண்டும். பிறவழிகளில் எல்லோரும் ஏற்கனவே அறிந்து கொண்ட விடயங்கள் காலம் தாழ்த்திய பாதுகாவலனில் வெளிவரும்போது பயனற்றதாகின்றன. முதியோர் மட்டுமல்லாமல் இளைஞரும் விரும்பி வாசிக்கக்கூடிய சுவாரசியமான பகுதிகள் ஒன்றிரண்டாவது இடம் பெறுவது நன்று.

* * *



நீக்கிலாப்பிள்ளை அன்ரனி முதன்மைப்பணியாளர் (போமன்) அவர்களிடமிருந்து

கடந்த 30 வருடங்களாக வேலை செய்கிறேன். தற்போது போமன் தரத்தில் உள்ளேன். அச்சக வேலைகள் ஆரம்ப காலத்தில் சிலின்டர் முறையிலான அச்சுப் பதிவுகள் ஈய எழுத்துக்களை உருவாக்கி கவி புருப் எடுத்து பின் இரண்டு பக்கங்கள் சேர்த்து 4 பக்கங்கள் கொண்ட கவி புருப் செய்து பிறின்டிங் செய்கிறோம். இயந்திரங்களோடு கூடிய மனித உழைப்பைக் கொண்டே பத்திரிகைகள் வெளிவந்தன. தற்போது நவீன மெசின்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் சுலபமாக தேவையான வடி வமைப்பில் அச்சு வேலைகள் மேற்கொள்ள முடி கிறது. மொத்தம் 33 ஊழியர்கள் ஒரு குடும்ப உணர்வுடன் தொழில் புரிகிறோம்.

* * *



**புனிதவளன் அச்சகப் பணி வாழ்வில் முதல் பெண்மணி திருமதி மேரி கொண்செப்ரா குணேந்திரன் அவர்களிடமிருந்து**

1980ல் பணியில் இணைந்து கொண்ட நான் தற்போது லிகிதராக கடமை யாற்றுகிறேன். தற்போது பாதுகாவலன் விற்பனை யில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 'வீட்டுக்கொரு பாது காவலன்' என்னும் விருது வாக்கை பொதுநிலை யினரும், பங்குத் தந்தையர்களும் உணர்ந்து செயற் படுத்தினால் முன்னைய நிலைக்கு கொண்டு வரலாம். கம்பியூட்டரின் நவீனத்தால் பத்திரிகை யின் தரம் உயர்ந்துள்ளது. மேலும் எமது அச்சக இயக்குனர் அருட்திரு ரூபன் மரி யாம்பிள்ளையின் உழைப்புக்கும், ஊழியர்களின் திறமைக்கும் சான்றாக தேசிய விருது கிடைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

* * *



**திரு. குருசுப்பிள்ளை யஸ்ரின் சிங்கராசா. (அச்சுக்கோப்பாளர்) அவர்களிடமிருந்து**

அச்சகத்தில் நான்கு பெரும் பகுதிகள் உண்டு அச்சுக் கோப் புப்பகுதி, அச்சடிக்கும் பகுதி, புத்தகம் கட்டும் பகுதி, விநியோகப்பகுதி என்பன. 1973ம் ஆண்டு பயிலுனராக இணைந்து கொண்ட நான் தற் போது அச்சுக் கோப்பாளராக கடமை ஆற்றுகி றேன். அனைத்து ஊழியர்களும் சகோதர உணர் வுடன் ஒற்றுமையாக பணிபுரிகிறோம். கணனி 'ஒப்செற்' போன்ற நவீன வசதிகளால் அச்சக வேலைகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின் றன. எமது உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைப் பதால் மகிழ்வுடன் வேலை செய்கிறோம்.

* * *



**பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் திரு பிரான்சீஸ் அவர்களிடம் இருந்து**

எனது தந்தை பாதுகாவலன் அபிமானி அவரது வழிகாட்டலில் சிறுவயதிலிருந்து படித்து வருகின்றேன். எனது விசுவாசத்தை வளர்க்க ஒரு தூண்டுகோலாக இப்பத்திரிகை இருந்துள்ளது. இப்போது பொது நிலையினர் ஆணைக்குழுச் செயலர் என்ற வகையில் மேலும் நெருக்கமான தொடர்பை வைத்துள்ளேன். திருச்சபைச் செய்திகளை அறியத்தரும் ஊடகமாக இப்பத்திரிகை மட்டுமே திகழ்கிறது. இதன்பணி யாழ் திருச்சபையின் வரலாற்றில் ஆழமாகப் பதிந்துள்ளது. இப் பத்திரிகையின் தற்போதைய நிலைபற்றி தங்கள் கருத்து என்ன என்று வினவியபோது, இதன் அமைப்பு கவர்ச்சியானதாகவும் எழுத்துக்கள் தெளிவாகவும் உள்ளது. பிற செய்தித்தாள் களின் தரத்தைவிட உயர்ந்து காணப்படுகிறது. ஆரம்பத்தில் இருந்தது போன்று கிறிஸ்தவ செய்திகளின் முக்கியத்துவம் தொடர்ந்தும் பேணப்படவேண்டும். பாதுகாவலனை அனைவரும் வாங்கி வாசிக்க முன்வரவேண்டும். பொதுநிலை யினர் வழங்கும் ஆதரவுதான் மேலும் பல நூற்றாண்டுகள் பயணிக்க உதவிடும் என்று கூறினார்.

* * *

**புனித பத்திரிசியார் கல்லூரி உயர்தர மாணவன் பேணாட் ஜீவரட்னத்தின் கருத்து.**

நான் 6 ஆண்டுகளாக காவலனை வாசிக்கிறேன். ஆயினும் இதுவரை எழுத வில்லை. பிற பத்திரிகைகளுக்கு எழுதியுள் ளேன். பாடசாலை மாணவர்களுக்கு எவ்வித படிமுறைகளில் காவலனுக்கு எழுத வேண்டும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும். பொது நிலையினரின் ஆக்கங்களே சமுதாயத்தை பிரதி பலிக்கும் என்று கூறியதுடன் பாட்சாலைகளில் ஆக்கங்களை சேகரிக்க ஒழுங்கு செய்வது மாணவர்களுக்குப் வாய்ப்பைக் கொடுக்கும் என்றார்.

* * *

**யாழ் கன்னியர் மடம் மகா வித்தியாலத்தில் கல்வி பயிலும் இ. ஜறின் சர்மிலா அவர்கள் தெரிவித்ததாவது**

நான் காவலனை வாசித்து வருகின் றேன். சில போட்டிகளுக்கு விடை எழுதியுள் ளேன். இப் பத்திரிகை யாழ் மக்களிற்கு ஒரு சிறந்த வரப்பிரசாதம். சமயம் தொடர்பான பரந்த அறிவைப் பெறுவதற்கு மாணவர்களுக்கு ஒரு சிறந்த ஊடகம் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி மிகவும் பயனுடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பேராலய பாதுகாவலன் விற்பனையாளர், எஸ். ஏ. மரியதாஸ் அவர்களுடனான நேர் காணலின் போது,

நான் கடந்த 15 வருடங்களாக பாதுகாவலன் பத்திரிகை விற்பனை செய்து வருகின்றேன். "பாதுகாவலன் இன்னும் வரவில்லையா? இன்னும் வரவில்லையா?" என்று பழைய வாசகர்கள் சிலர் பாதுகாவலனை எதிர்பார்த்து இருப்பதைக் காண முடிகின்றது. இளைய தலைமுறையினர் பாதுகாவலனை வாசிப்பதில் காட்டும் நாட்டம் போதாது. முன்பு நான்கு பத்திரிகைகள் வெளிவந்த போது இருந்த விற்பனையைவிட தற்போது விற்பனை வீழ்ச்சி கண்டுள்ளது. பொதுநிலையினரின் ஆர்வமும் ஆதரவுமே இவ்விதழை உறுதிமிக்க நிலைக்கு கொண்டுசெல்ல உதவும். இது கத்தோலிக்கருக்கே உரித்தான பத்திரிகை என்ற உணர்வு அனைவரிடமும் உதயமாக வேண்டும். அப்போதுதான் பாதுகாவலன் இன்னும் சிறப்பான ஓர் நிலைக்குச் செல்ல முடியும்.

நேர்கண்டவர்கள்:
திரு. எஸ். யேசுதாஸ்
திரு. சீ. சீ. கொலிந்திரன்
திரு. ஜே. கீதபொன்கலன்

# பாதுகாவலனை வாழ்த்தியோர்

பாதுகாவலன் விருது பெற்றுக்கொண்ட போது நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் கடிதம் மூலமாகவும் வாழ்த்துத் தெரிவித்தோர் பலர். கடிதம் மூலம் வந்த வாழ்த்துக்களில் சிலவற்றையும் பத்திரிகைகளில் வந்த வாழ்த்துக்கள் சிலவற்றையும் இங்கே தருகிறோம். இடப் பற்றாக்குறை காரணமாக அனைத்து வாழ்த்துக்களையும் பிரசுரிக்க முடியவில்லை.

– ஆசிரியர்.

சிறந்த வடிவமைப்புக் கொண்ட தமிழ்ப் பத்திரிகைக்கான தேசிய விருதினைப் பெற்றமைக்காக பெருமிதத்துடன் தங்களைப் பாராட்டுகின்றேன்.

தேசிய மட்டத்தில் விருதொன்றைப் பெறுவதென்றால் அது மாபெரும் சாதனையே. இச் சாதனையின் பெருமை குறிப்பாக தங்களையும், தங்களுடன் சேர்ந்து பணியாற்றுவோரையுமே சாரும்.

உலகுசார் பத்திரிகையியல், மறைவிடயங்கள் உட்பட, சகல நிகழ்வுகளையும் உலகுசார் நோக்கில் வைத்தே அணுகுகின்றது. கத்தோலிக்க பத்திரிகையோ, சகல நிகழ்வுகளையும் திருமறைப் பார்வையூடாகவே அணுக வேண்டும். இவ்வாறு, மக்கள் காலத்தின் அறிகுறிகளைப் புரிந்து, நிகழ்வுகளூடாகப் பேசும் இறைவனின் வார்த்தைகளைக் கேட்டுணர உதவ வேண்டும்.

இப் பணியில் "பாதுகாவலன்" வளர்ந்து, சிறந்த பத்திரிகையாக விளங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

மீண்டும் எனது பாராட்டுக்கள்.

அருள்திரு. அ. இ. பேனாட்
அதிபர்.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2000ஆம் ஆண்டுக்கான ஊடகத்துறை பரிசளிப்பு விழாவில் யாழ்ப்பாண மறைமாவட்டத்திலிருந்து வெளிவரும் முதல் தமிழ் கத்தோலிக்க வாராந்தப் பத்திரிகையான "பாதுகாவலன்" சிறந்த வடிவமைப்பினைக் கொண்ட பத்திரிகைக்கான விருதினைப் பெற்றுக் கொண்டது.

. . . . .இவ்வேளையில் இத்தகைய உயர்விருதினைப் பெற்றுக்கொண்ட பாதுகாவலன் பத்திரிகைக் குடும்பத்தினை, திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்ட வெளியீடாகிய வெட்டாப்பு மட்டற்ற மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றது.

"வெட்டாப்பு"
திருமலை, மட்டக்களப்பு
மறைமாவட்டப் பத்திரிகை,
ஒளி-8, 2001.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் யாழ் மறைமாவட்ட பத்திரிகையான **பாதுகாவலன்** சிறந்த வடிவமைப்புக்கான **(Best Designed)** தேசிய விருதை பெற்றுள்ளது. இலங்கையின் பத்திரிகையாளர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 2000ஆம் ஆண்டிற்கான சிறந்த பத்திரிகைத் துறைக்கான விருது வழங்கும் வைபவத்திலேயே இந்த விருது பாதுகாவலன் பத்திரிகைக்கு வழங்கப்பட்டது. . . பாதுகாவலனுக்கு மன்னாவின் மனம்நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

மன்னா,
மன்னார் மறைமாவட்டப் பத்திரிகை,
பொழிவு 14, ஆனி 2001.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் சிறந்த வடிவமைப்பிற்கான தேசிய விருதினை பெற்றுக் கொண்டுள்ளது பற்றி அறிந்து மனமகிழ்ந்தோம்.

கொழும்பு மறைமாவட்ட மாத ஏடான தாய் சஞ்சிகையும் பாதுகாவலனின் சகோதரப் பத்திரிகை என்றவகையில் பாதுகாவலன் அச்சகப் பணியாளர்கள் வாசக அன்பர்கள் அனைவருக்கும் எம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம்.

ஆனந்த பெனாண்டோ புள்ளே அடிகள்,
பிரதம ஆசிரியர்
தாய் - கொழும்பு மறைமாவட்ட ஏடு

125ஆவது ஆண்டு நிறைவில் பயணிக்கும் பாதுகாவலனுக்கு "திறமையான வடிவமைப்புக் கொண்ட பத்திரிகைக்கான தேசிய விருது" கிடைத்ததையிட்டு பாதுகாவலன் ஆசிரியர் அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறேன். காவலன் பத்திரிகைக் குடும்பத்தாரோடு எனது மகிழ்வினைப் பகிர்ந்து கொள்கிறேன். பணி தொடர எனது நல் வாழ்த்துக்கள்.

எஸ்.யேசுதாஸ்
பாதுகாவலன் நிருபர், கொழும்புத்துறை
உதயன், 18.05.2001

"பாதுகாவலன் விருது பெற்றது
விசுவாச வானின் விழிப்பு.
உங்கள் பணி தொடர என்றும்
இறைகரம் உரம் ஊட்டும்"

சில ஆண்டுகள் காவலன் கண்மணிகளுடன் உறவாடி, உரையாட எனக்குக் களம் தந்த காவலன், விருது பெற்றது எனக்கு மகிழ்வைத் தருகிறது. பாதுகாவலன் குடும்பத்தினருக்கு என் இதய நிறைந்த வாழ்த்துகள், பாராட்டுக்களை தெரிவியுங்கள்.

அன்பின், அன்புவிழி
உப்புவெளி, திருகோணமலை

பாதுகாவலன் பத்திரிகையின் சிறந்த வடிவமைப்பிற்கான சான்றிதழ் தங்கட்கு கிடைத்ததையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். தங்களை உளமார வாழ்த்துகின்றேன். தங்கள் பணி மென்மேலும் சிறக்க இறைவன் தங்களுடன் இருந்து தங்களை வழிநடத்துவாராக.

அருள்சகோதரி ஸ்ரனிஸ்லோஸ் மேரி **A.C.**
அக்கரைப்பற்று

அகில இலங்கை பத்திரிகையாளர் பரிசளிப்பு விழாவில் இலங்கையின் முதல் கத்தோலிக்க பத்திரிகையான, தாங்கள் ஆசிரியராகத் திகழும் சத்திய வேத பாதுகாவலன் பத்திரிகைக்கு 2000ஆம் ஆண்டுக்கான விருது கிடைக்கப் பெற்றமை அறிந்து பேருவகை கொள்கிறோம்.

. . . தங்களின் திடசித்தம், திட்டமிடல் காலத்துக்கேற்ற முறையில் அழகுபடுத்தல் விடயங்களை அழகான முறையில் தொகுத்தளித்தல் என்பவைகளை வாயாரப் பாராட்டுகிறோம். வாழ்த்துகிறோம். தங்கள் பணி எல்லாத் துறைகளிலும் சிறக்க போற்றுகிறோம், வாழ்த்துகிறோம். இறைவனை வேண்டுகிறோம்.

செல்வம், பாதுகாவலன் வாசகர்
கொழும்பு.

பாதுகாவலன் பத்திரிகை சிறந்த வடிவமைப்புக்கான தேசிய விருதைப் பெற்ற செய்தியை Messenger இலும் வீரகேசரியிலும் பார்த்தேன். மகிழ்ந்தேன் இத்தால் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்து நிற்கிறேன். இது போன்ற பல சாதனைப் பதிவுகளை பாதுகாவலன் படைக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**Fr.** நேசன்
மன்னார்.

பாதுகாவலன் விருது பெற்றது பற்றி அறிந்தேன். வாழ்த்துக்கள்.

செ. அன்ரன்
வேம்படி வீதி, யாழ்ப்பாணம்

பாதுகாவலன் விருது பெறும் படம் வீரகேசரியில் பார்த்தோம். வாழ்த்துக்கள்.

திருமதி. எட்வேட் சந்திரா,
சுதந்திரபுரம், உடையார்கட்டு

பத்திரிகை ஊடகமானது எத்திசையும் எம்மக்களை சென்றடையும் இக்காலகட்டத்தில் சிறந்த வடிவமைப்பும் கருத்தாழமும் கொண்ட பத்திரிகைக்கான தேசிய விருதினைப் பெற்றமை யாழ் மறை மாவட்ட இலக்கியப் பணியின் வளர்ச்சியையும் எழுச்சியையும் காட்டுகிறது.

அருட்தந்தை.எ.எ.நவரெட்ணம்
ஆயர் இல்லம், மட்டக்களப்பு

பாதுகாவலன் 125ஆம் ஆண்டு மலருக்கு பழைய வாசகராகிய எனது வாழ்த்துக்கள். நான் 1937ஆம் ஆண்டு எனது ஏழாவது வயதிலிருந்து பாதுகாவலன் பத்திரிகையைப் படித்து வருகின்றேன். பாதுகாவலன் சிறுவர் பகுதியில் அன்பு, கதிரை பேசுகின்றது, இயேசு பிறந்தார் ஆகியன பிரசுரமாகி இருந்தன. போட்டிகளிலும் நான் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்றுள்ளேன்.

வி. பிரான்சீஸ்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001ஆம் ஆண்டு நடைபெற்ற பாது காவலன் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றி சான்றிதழை கொழும் புத்துறை நிருபர் திரு. எஸ். ஜேசு தாஸ், அமல மரித் தியாகிகளின் யாழ். மாகாண முதல்வர் ஜீவேந் திரா போல் அடிகளாரிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்






சிறந்த வடிவமைப்புக் கொண்ட பத்திரிகைக்கான தேசிய விரு தினை பாதுகாவலன் ஆசிரியர் பெற்றுக்கொள்ளும்போது

2001ஆம் ஆண்டு பாதுகாவலன் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டோர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



05.10.99 அன்று அச்சகப் பணியின் 50 ஆண்டுகள் நிறைவில் திரு. இராயப்பு அந்தோனிப்பிள்ளை அவர்களுக்கு விழா எடுத்தபோது



1999இல் பாதுகாவலன் பயிற்சிப் பாசறையில் பங்குபற்றி சான்றிதழை ஆயரிடமிருந்து பெற்றுக் கொள்கிறார் பாதுகாவலன் பத்திரிகையாளர் சங்க செயலர் திரு. சீ. சீ. கொலிந்திரன்



2000ஆம் ஆண்டுக்குரிய பாதுகாவலன் பயிற்சி பாசறையில் பயிற்சி பெற்ற அருள்சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் குடும்பம்



2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இதய நன்றிகள்

- ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும். (திருப்பாடல் 127:1) என்னும் விருது மொழிக்கேற்ப இம்மலர் சிறப்புடன் வெளிவர அருள்கூர்ந்து வழிநடத்திய இறைவனுக்கு முதற்கண் எமது இதய நன்றிகள்.

- பாதுகாவலனின் 125வது அகவை நிறைவு மலரினை வெளியீடு செய்யும் இப்பெருவிழா நிகழ்வில் தமது வேலைப்பழுக்கள், சிரமங்கள் மத்தியிலும் வருகை தந்திருக்கும் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கட்கும், எம் அழைப்பினை ஏற்று சிறப்பு விருந்தினராக வந்திருக்கும் தென்னிந்தியத் திருச்சபை ஆயர் மேதகு எஸ். ஜெபநேசன் ஆண்டகை அவர்கட்கும் குருமுதல்வர் ஜே.பி.இ. செல்வராஜா அடிகளார்க்கும், அனைத்து குருக்கள் துறவற சபைத் தலைவர்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் பெரியோர்களுக்கும்,

- நீண்ட கால வரலாற்றின் மூலம் திக்கெட்டும் எட்டாப் புகழ் பரப்பி வீறுநடைபோடும் பாதுகாவலனுக்கு வாழ்த்துச்செய்திகளையும், ஆசிச் செய்திகளையும் அள்ளி வழங்கிய ஆயர்கள், குருக்கள், துறவற சபைத் தலைவர்கள், பெரியோர்கள், பத்தராதிபர்கள் அனைவருக்கும்,

- நாம் கேட்டவுடனே இல்லையென்று சொல்லாது தமது வேலைப் பழுக்கள் மத்தியிலும் வருகை தந்து மலா் ஆய்வினைச் சிறப்புற நடாத்திய தென்னிந்தியத் திருச்சபை ஆயர் மேதகு எஸ். ஜேபநேசன் ஆண்டகை அவர்கட்கும்,

- பல சிரமங்கள் மத்தியிலும் உரிய நேரத்தில் ஆக்கங்களைத் தந்து உதவிய குருக்கள். பொதுநிலையினருக்கும்,

- இந் நூற்றாண்டு காலவரையிலும் காவலனின் புகழை மங்காது காக்க மடிந்துழைத்த அமரத்துவம் அடைந்த ஆயர்கள், குருக்கள், பொது நிலையினா, நலன்விரும்பிகள் அனைவருக்கும்,

- இம் மலர் வெளியீட்டிற்கு கிறிஸ்மஸ் வாழ்த்துமடல்கள், ஸ்ரிக்கர்கள் மூலம் நிதி சேர்த்துத் தந்த பாதுகாவலன் நிருபர் குழாமிற்கும், விசேட விதமாக செயலாளர் திரு. சி. சி. கொலிந்திரன் அவர்கட்கும்,

- விளம்பரங்கள் மூலம் நிதியுதவி புரிந்த அன்பு உள்ளங்களுக்கும்,

- இக்கட்டான சூழ்நிலையிலும் இம்மலர் விரிந்து மலராகும் வரையிலும் அரும்பணிகள் புரிந்து அழகிய மலராக மணங்கமழ வைத்த புனித வளன் கத்தோலிக்க அச்சக அதிபர், ஊழியர்களுக்கும், எம் நன்றியை தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

எம் இதயங்கனிந்த நன்றிகள்.

– மலர்க்குழு –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாதுகாவலனே உன்னை வாழ்த்துகின்றோம்!*

ஐந்து கால் நூற்றாண்டை தாண்டி நிற்கும்
அஞ்சாது உண்மை உரைக்கும் உத்தமனே
ஆன்மீகத்தை ஆழமாக அறிந்தவனே
ஆதாரத்தோடு அறிமுகம் செய்தவனே
காலத்தால் அழியாத கத்தோலிக்கம் காத்தவனே
காலத்தோடு அணைந்துகத்தோலிக்கம் வளர்த்தவனே
என்றும் உங்கள் பணி சிறக்க சேவை தொடர
வாழ்க வாழ்கவெனவாழ்த்தி நிற்கும்
மனித முன்னேற்ற நிலைய இயக்குனரும் பணியாளரும்

HUDEC

**மனித முன்னேற்ற நிலைய செயற்பாடுகள்**

- தனி மனித வாழ்வில் கூட்டுறவை உணரச் செய்து அதன் மூலம் சங்கங்கள் அமைத்து தனி மனிதனும் வளரச் செய்தமை பெருமைக் குரியது கடல் தொழில், கமத்தொழில் மற்றும் சகோதரப் பகிர்வு வாழ்வு சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.
- நடைபெற்றுக்கொண்டு இருக்கும் போரினால் பெற்றோரை இழந்து தொழில் வாய்ப்பின்றி வறுமையில் வாழும் குடும்பங்களில் உள்ள சிறார்களின் சத்துணவுக் குறைபாட்டை மேம்படுத்தும் திட்டங்கள் உருவாக்கப்பட்டது.
- சிக்கனமானது நீண்ட கால பாவனைக்கும் உரியதான கூரைத் தகடுகளும் பார்வைக்கு அழகானதும் சேவைக்கு உறுதியானதுமான கொங்கிறீற் கற்களும் விசேட பயிற்சியும் அனுபவமும் கொண்ட மேற்பார்வையாளரின் அனுசரணையுடன் தயாரிக்கப்படுகின்றது.

**இலங்கையின் முதல் கத்தோலிக்க ஏடான பாதுகாவலனை மேலும் துலங்குக பல்லாண்டுகள் என வாழ்த்துகின்றோம்!**

# புனித சவேரியார்
# கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

சக்கோட்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவழியில் மக்களை இணைத்துச் செல்லும்
இதழான பாதுகாவலனை பல்நூறு ஆண்டுகள் வாழ வாழ்த்துகின்றோம்!

# ASSOCIATED CONSTRUCTION

நவீன அமைப்புக்களுடன் கூடிய
அழகு கட்டட வேலைகளைச்
செய்து தருவதில் சிறந்து
விளங்குபவர்கள்.



ஜெயராஜா
2/1, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

அலுவலக முகவரி
242 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பாதுகாவலனே உன்னை என்றும் வளம் பெற
வாழ்த்துகின்றோம்!

# லைடன் புடவை நிலையம்



சகல வகையான
ஆடைகளுக்கும்
இன்றே நாடுங்கள்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P.No:-021-2381

125வது வருட நிறைவைப் பூர்த்தி
செய்யும் "பாதுகாவலனுக்கு" எமது
வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அது
தனது சேவையை சிறப்பாக மென்மேலும்
தொடர்வதற்கு இறை ஆசியை
வேண்டுகின்றோம்.

# PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES AND INDUSTRIAL



59, St. Patrick's Road,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ இருபத்தைந்து ஆண்டுகளை
ஜெயமுடனே வென்றுவிட்ட
காவலனுக்கு எம் உள்ளம் கனிந்த
நல்வாழ்த்துக்கள்!

**City Medicals**




487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No: 021-2198

125ஆவது அகவையை நிறைவுசெய்யும்
காவலனுக்கு எம் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!

**அழகு நிலா**
**தொலைத்தொடர்பகம்**

உள்ளூர்: 070-212532
வெளியூர்: 0094-07-212532



- அமைதியான சூழலில்
- தங்குமிட வசதி
- கவர்ச்சிகரமான கட்டணம்

இவற்றுடன் அழகுசாதனப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்
பெற்றுக்கொள்ளலாம்.

கல்லூரி வீதி,
இளவாலை.

சத்தியத்தின் வழி நின்று நித்தம் எமைக்
காத்துவரும் காவலனே உன்னை மனமார
வாழ்த்துகின்றோம்!

**திரேசா**
**தளபாட மாளிகை**




எக்காலத்திற்கும் உகந்த எழில் வடிவமைப்பில்,
உறுதி, உத்தரவாத்துடனான

**உங்கள் வீட்டுத் தளபாடங்களை**
**வாங்கிக் கொள்ள . . .**

155,157, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

நூறுடன் இருபத்தைந்து ஆண்டுகளையும்
வீறுடன் கடந்து காவலனே உன்னை
பாவாலே வாழ்த்தி நிற்கின்றோம்!

**BOSCO**



ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலனின் 125வது ஆண்டு
நிறைவில் எமது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்!

# இலங்கை வங்கி

## தேசத்தின் சிறார்களுக்கு இலங்கை வங்கி வழங்கும் விசேட "பொன் அரும்புக்கணக்கு"

உங்கள் பாசத்திற்குரிய குழந்தைகளின் சுபீட்சகரமான எதிர்காலத்திற்கு இலங்கை வங்கியுடன் "பொன் அரும்புக்" கணக்கொன்றினை ஆரம்பித்து விட்டீர்களா? இல்லையேல் உடனும் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

- சாதாரண சேமிப்புக் கணக்குக்குரிய வட்டியை விட ஒரு வீதம் (1%) மேலதிக வட்டி.
- குழந்தைக்காக கணக்கை ஆரம்பித்த பெற்றோர் / பாதுகாவலருக்கு ஏற்படுகின்ற ஆபத்துக்களின் போது ரூபா ஐந்து லட்சம் (ரூபா.500,000) உச்ச வரம்புக்குள் தீர்மானிக்கப்பட்ட காப்புறுதிக் கொடுப்பனவு.
- பெறுமதிமிக்க பரிசில்களை வென்றெடுக்க அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் கலந்து கொள்ளும் வாய்ப்பு.
- வளர்ந்து பெரியவராகியதும் இலங்கையின் முன்னோடியான வங்கியுடன் நீண்டகால வாடிக்கையாளர் என்ற பெருமை.
- சேமிப்பு பணத்திற்கு அரச வங்கியொன்றின் பூரண பாதுகாப்பு.

ஆகிய அனைத்து நன்மைகளையும் பெற்றுக் கொள்ள
உங்களை நேசக்கரம் நீட்டி அழைக்கிறது.
உங்கள் தேவைகளுக்காகவே இயங்கும்
இலங்கை வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதல் கத்தோலிக்க வார ஏடான
பாதுகாவலனின் 125வது நிறைவினை
வாழ்த்துகின்றோம்!

# SRI LANKA TELECOM



ஸ்ரீ லங்கா ரெலிகம்
நிறுவன முகாமையாளரும்
ஊழியர்களும்

ஸ்ரீ லங்கா ரெலிகம் லிமிடட்
யாழ்ப்பாணம்.

*With the Best Compliments from*

# COMMERCIAL BANK

*Our interest is in you*



**Progressive Saver Account**

Monthly Int on Daily Balance
With 30% Quarterly BONUS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய விருது பெற்று வீறுநடை போடும்
விசுவாசத்தின் காவலனை வாழ்த்துகின்றோம்!

# ஆசீர் வணிக நிலையம்

**மொத்த சில்லறை விற்பனையாளர்கள்**



- பாடசாலை உபகரணங்கள்
- அச்சக, காரியாலய பாவனைக்குரிய காகிதாதிகள், மை வகைகள்
- இறக்குமதி செய்யப்பட்ட திருமண, மற்றும் வைபவங்களுக்கான அழகிய அழைப்பிதழ்கள்
- பொலித்தீன், கலர் பொலித்தீன் சொப்பிங் பைகள், பிறவுண் பேப்பர் பைகள்

ஆசீர் வணிக நிலையம்,
202 A, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

---

*சத்திய மறையதை நித்தியம் காத்துவரும் காவலனின்*
*125ஆவது ஆண்டு நிறைவில் எமது இதய வாழ்த்துக்கள்!*

# நிஸன் ஸ்ரோர்ஸ்




தரமானதும் மலிவானதுமான பொருட்களைப்
பெற்றிட இன்றே நாடுங்கள்!



ம. நிக்சன்
அல்வாய் வ.மே,
சக்கோட்டை, பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை செல்வத்தை சேமிக்கும் நல்வழிதனைச் செப்பிடும் பாதுகாவலனே!
நின்பணி வாழ்க பல்லாண்டு.

மக்கள் வங்கி
40 ஆண்டுகள்

# மக்கள் வங்கி

ஒப்பற்ற

Jaya Sri
ஜய சிறி
வெற்றித்திட்டம்

மக்கள் வங்கி
வழங்குகின்றது



தினமும்
10 வர்ணத்
தொலைக்காட்சிகள்.

வாராந்தம்
01
புத்தம்புதிய கார்

இருவாரங்களுக்கு
ஒருமுறை
01 வீடு

மாதாந்தம்
04
பேருக்கு தலா 10
இலட்சம் ரூபாய்

மேலதிக விபரங்களுக்கு இன்றே முகாமையாளரைச் சந்தியுங்கள்

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள்
வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*St. Joseph's Catholic Press, Jaffna, Sri Lanka-2001 T.P.021-2378*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org